Koviloor Digital Library

ஒப்பியல் நோக்கு

VTN061

டாக்டர் வ. சுப. மாணிக்கம்
இயக்குநர், தமிழ்வளர்ச்சி உயர் ஆராய்ச்சி மையம்
காரைக்குடி

KARAIKUDI
மணிவாசகர் நூலகம்
சிதம்பரம்

Koviloor Digital Library

முதற் பதிப்பு: 1978 சனவரி

விலை ரூ. 6–00

ALAGAPPA COLLEGE LIBRARY
COLLEGE
227
KARAIKUDI-623 003.

அச்சிட்டோர்:
ஸ்ரீ விநாயகா பிரஸ்,
சிதம்பரம்.

Koviloor Digital Library

20560

முன்னுரை

ஒப்பியல் தமிழுக்குப் புதிய துறையோ எனின், இல்லவேயில்லை. தொல்காப்பியம் களவுக் கூட்டத்தினைக் கந்தருவ வழக்கத்தோடு ஒப்பிடக் காண்கிறோம். ஒலி நிலையில் அந்தணர் மறையோடும் சொல் நிலையில் வடமொழியோடும் தொல்காப்பியத்தில் சில ஒப்பிடல்கள் உள 'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' எனவும், 'யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை' எனவும் வரும் திருக்குறள்களில் ஒப்பியற்பார்வை முகிழ்க்கின்றது. எனினும் ஒப்பீடு அண்மைக் காலத்துத்தான் ஒரு பெருந் தனித்துறையாக வேரோடிக் கிளை விரித்து வருவதை அறிகின்றோம் இத்துறையிலும் நம் தமிழ் வளர்ச்சி பெறல் வேண்டும். அவ்வளர்ச்சி ஆழப் பரந்த அறிவுநிலையிலும் சூழச்செறிந்த ஆக்கநிலையிலும் வளருமாயின் தமிழ்ச் செல்வங்கள் உலகக் கண்ணிற்குப் புலப்படும்.

ஒரு புலவன் தன்னுள் ஒப்பு, புலவர் தம்முள் ஒப்பு, ஓர் இலக்கியந் தன்னுள் ஒப்பு, இலக்கியங்கள் தம்முள் ஒப்பு, ஒரு மொழி தன்னுள் ஒப்பு, மொழிகள் தம்முள் ஒப்பு, ஒருகாலந் தன்னுள் ஒப்பு, காலங்கள் தம்முள் ஒப்பு எனவாங்கு ஒப்பியல் நிலங்கள் பல வரப்புக்கள் உடையவை என்றாலும் புலமையுலகின் பொதுத் தடங்களையும் ஒவ்வொருவரின் தனிச் சுவடுகளையும் ஆறும் நீரும் போல எடுத்துக்காட்டுவதே ஒப்பியலின் முதற் பயனாகும்.

Koviloor Digital Library

ஒப்பியல் நோக்கு என்ற இந்நூலின்கண் உள்ள பதின்மூன்று கட்டுரைகளில் பெரும்பாலானவை ஒருபுடை ஒப்புமைப்பால் உடையவை. முழுதும் வேறு பட்டனவும், முற்றும் ஒற்றுமைப்பட்டனவும் ஒப்பீடு வட்டத்துக்குச் சாலாதன. எதனையும் எதனோடும் ஒப்பிடுவதற்கு அவற்றின்கண் ஒத்தகூறு, ஒவ்வாக்கூறு என்ற இரு தன்மையும் வேண்டும். வேற்றீட்டையும் உள்ளடக்கியது ஒப்பீடு என்ற குறியீடு. இவ்வொப்பியல் நெறிகள் இந்நூற் கட்டுரைகளில் தினையளவு விளக்கம் பெறுகின்றன.

மணிவாசகர் நூலகம் தமிழுக்கு அரிய உரிய பெரிய ஆக்க நூல்களை வெளியிடும் பெருமித மரபு கொண்டது. அதன் உறுதுணையாளர் திரு ச. மெய்யப்பன் மரபு குன்ரு ஆக்க நூல்களை வெளியிடும் ஊக்கப் பதிப்பாளர். அவர் தொண்டுக்கு நன்றி.

காரைக்குடி,
26—1—78.

வ. சுப. மாணிக்கம்

Koviloor Digital Library

பதிப்புரை

கனவாகத் தோன்றிய பதிப்பகம், நனவாக நடையிடுகின்றது. பதிப்புத் துறையில் பதினூண்டுகள் என்பது, சாதனைக்குரியது. பதினூண்டுகளிலும் பயன் மிக்க நூல்களையே வெளியிட்டுள்ளோம் என்னும்போது உவகை மிகுகின்றது.

சாதனைக்கும் உவகைக்கும் மூல முதல்வர்கள், எழுத்துலகச் சிற்பிகள். அவர்களே பண்பாட்டுத் தேயத்திற்கு நன்பாட்டை இலக்கியங்களைப் பெற்றுத் தந்த அறிவுத் தாயர்கள்; அவர்கள் பெற்ற குழந்தைகளுக்கு மணிவாசகர் நூலகம் செவிலித்தாய்.

எங்கள் பதிப்பகத்தின் இலக்கியத் தாயர்களில் டாக்டர் வ. சுப. மாணிக்கனுர் நாடு அறிந்த நல்ல தமிழ் வேந்தர்; சங்கத் தமிழனைய தூயர்; வள்ளுவம் காட்டிய வாழ்வினர்; அவர்கள் தந்த வள்ளுவம் – அநுபவத்திற்கு அறநூலைக் கொண்டு வருவது. அவர்கள் அளித்த தமிழ்க்காதல், ஆய்வுலகின் முதற்பெருங் காதல். இத்தகைய ஆய்வு நிதியங்களை வெளிக் கொணர்ந்த பேராசிரியர் அவர்கள், தம் நூல்களைத் தொடர்ந்து வெளியிடும் வாய்ப்பினை மணிவாசகர் நூலகத்திற்கு அளித்து வருகின்றார்கள்.

அவர்கள் ஆக்கிய ‘கம்பர்’ நூலினை வெளியிட்டோம். காப்பியப் பார்வையில் அந்நூல் தனித் தன்மையுடையது என அறிஞர் உலகு பாராட்டியது; அடுத்துச் சிந்தனைக்

Koviloor Digital Library

களங்கள். ஆராய்ச்சியாளர்களின் சிந்தனைக்குக் களங்கள் நல்கிய நூல். இப்போது ஒப்பியல் நோக்கு வருகின்றது; பேராசிரியர் அவர்களின் எப்பார்வையும் தமிழ்ப் பார்வை; மரபு மாருப் புதுப் பார்வை. தொல்காப்பியம் முதல் கவியரசு கண்ணதாசனின் தைப்பாவை வரை அவர்கள் நோக்கிய ஒப்புப் பார்வையே இந்நூல். ஒப்பியல் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதற்கு இஃதோர் ஒப்பற்ற நூல். இத்தகைய நூல்களை வழங்கி வரும் பேராசிரியர் அவர்களுக்கு எங்கள் நன்றி.

அருச்சுனன் இல்லாவிட்டால் கண்ணனின் கீதை பிறந்திருக்காது; எங்கள் நூலகப் பதிப்பாசிரியர் திரு. ச. மெய்யப்பன் அவர்கள் இல்லையேல் இத்தகைய நூல்களை நாங்கள் வெளியிடுதல் அரிது. அவர்களின் தமிழார்வம், பதிப்பார்வம் எங்கள் பதிப்பகத்தின் அடித்தளம். பதினும் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் மணிவாசகர் நூலகம், பதினுறு நூல்கள் கொண்டுவரத் திட்டம் தந்து செயற்படுத்திய அவர்களுக்கு எங்கள் நன்றி.

வாங்கிப் படிப்பவர்களே வளரும் பதிப்பகத்திற்கு உரம் ஆவார். எங்கள் பதிப்பகத்திற்கு உரம் தருவோர் ஏராளம். அவர்களுக்கும் நன்றி.

சிதம்பரம்,
21—1—78.

மெ. மீனுட்சிசோமசுந்தரம்

Koviloor Digital Library

உள்ளுறை

1.	திருக்குறள் உத்திகள்	9
2.	மிருச்சகடிகம் – சிலப்பதிகாரம்	21
3.	இருவகைச் சிலப்பதிகாரம்	32
4.	தைப்பாவை	48
5.	செய்யுளியல் - காரிகை	58
6.	தொல்காப்பிய நயம்	91
7.	தொல்காப்பிய உரைநயம்	106
8.	அவன் என்பது யார் ?	122
9.	பொருளே உவமம்	126
10.	துறையாசிரியர்களின் உரைநடை	131
11.	இராமாயணத்தின் பாடுபொருள்	154
12.	மறைமலையடிகளின் தூய தமிழியக்கம்	163
13.	என் ஆசிரியர்	175

Koviloor Digital Library

Koviloor Digital Library

LIBRARY U G C COLLEGE DEPT. PROG. KARAIKUDI-623 003.

1. திருக்குறள் உத்திகள்

திருக்குறட்கு இடைக்காலத்தில் பல முழுவுரைகள் தோன்றியன. இன்றுவரை முழுவுரைகளும் தனிக்குறளுரைகளும் தந்த வண்ணம் இருக்கின்றன. கட்டுரைகளிலும் மேடைப் பொழிவுகளிலும் புத்துரைகள் ஆங்காங்கே மின்மினி போல் ஒளி விடுகின்றன. யார் எங்கு குறளைப் பேசினாலும் எழுதினாலும் ஒரு புதுப்பொருள் — ஒரு புது விளக்கம் செய்ய முற்படுவதைப் பார்க்கின்றோம். நாம் இதுகாறும் திருக்குறளைச் செயலுக்குரியதாகப் பரப்பவில்லை — உரை செய்வதற்கு உரிய ஒரு பெரு நூல்; நினைத்தவர் நினைக்கும் கருத்தையெல்லாம் காட்டவல்ல ஒரு சுரங்க நூல் என்ற மனமையைத்தான் கல்வி நிலையங்களிலும், பொதுமேடைகளிலும், பரப்பியும் பாராட்டியும் வந்திருக்கின்றோம். எல்லாப் பொருளும் இதன் பாலுள பார்த்துக் கொள்ளுங்கள் என்று காட்டி வந்திருக்கின்றோம்.

உரைமோகம்

குறளுக்கு இவ்வளவு உரைமோகம் ஏன்? பலவுரைகள் எழுதுவதற்குக் குறள் இடங்கொடுக்கின்றதா? இடங்கொடாத போதும் பலர் வேண்டுமென்றே குறளை இழுத்து உரை வரைகின்றனரா? இத்துணை உரைமலிவுக்கு, உரைவளத்துக்கு, உரை வேற்றுமைக்குக் குறள் காரணமா? உரை செய்வார் அறிவு காரணமா? வள்ளுவரின் பெருமையும் அவர்பால் நாம் கொண்டுள்ள வழி வழி நன்மதிப்பும் திறக்குறள் காரணம்

Koviloor Digital Library

என்று சொல்ல இடந்தரா. உரையாளர் தாம் காரணர் என்று ஒரு மூச்சில் சொல்லி மகிழலாம் எனினும் அது முழுவுண்மை யாகாது. வள்ளுவரை முழுதும் விடுவித்து உரைசெய்வார் மேல் முழுப்பழியும் சுமத்தல் அறிவு நெறியாகாது. ஒரு குறளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிறவுரையெல்லாம் புலமை யின்றி, இலக்கணவறிவின்றி, விளங்குதலின்றி எழுதப் பட்டவையென்றோ, வேண்டுமென்றே திரித்தும் நுழைத்தும் எழுதப்பட்டவையென்றோ தலைமழிப்பது போலத் தள்ளிவிட முடியாது. வள்ளுவரும் பழிப்படாமல், உரை செய்தார் பலரும் பழியுறாமல் இவ்வளவு உரை பல்கக் காரணம் என்ன என்று சிந்திப்போமாக.

வேற்றுமைக் காரணங்கள்

திருக்குறள் உரை வேற்றுமை ஆசிரியர் தக்கார் சாரங்கபாணியின் கணக்கின்படி அறத்துப்பாலில் 217 குறள்களும் உரைவேறுபாடு உடையன. அண்மையில் வந்த உரைகளையும் உட்கொண்டால் இவ்வுரை வேறுபாடுகள் இன்னும் கூடுதலாகும். இலக்கணத்துக்குப் புறம்பாகவும், மரபுக்கு மாறாகவும், சொற்பொருள் அறியாமலும், வேண்டு மென்று திரித்தும், சின்னஞ்சிறு இலக்கிய நயம் கருதியும், சில பல உரைவேற்றுமைகள் தோன்றியுள்ளன என்பதை நானும் உடன்படுகின்றேன். ஆனால் இலக்கணத்தோடும் மரபோடும் பிற முறைகளோடும் எழுதப்பட்ட உரை வேற்றுமைகள் பலவுளவே. இவை எவ்வடிப்படையில் எழுந்தன என்று காண வேண்டும்.

நீயும் தவறிலை; நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறிலர்;
நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்னா
இறையே தவறுடை யான் (கலி. 56)

Koviloor Digital Library

என்று கபிலர் ஒரு காதற் சிக்கலைத் தீர்த்துவைத்ததுபோல, வள்ளுவரும் தவறிலர்; உரையாளர் பலரும் தவறிலர்; இறையனைய தமிழே தவறுடையது என்று உரை வேற்றுமைச் சிக்கலைத் தீர்த்து வைக்க எண்ணுகின்றேன்.

பாடபேதம்

'உடைமையுள் இன்மை விருந்தொரால்' (89)
'உடைமையுள் உண்மை விருந் தொரால்' (89)
'இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக' (539)
'இகழ்ச்சியிற் கெட்டாரை எண்ணுக' (539)
'கனங்குழை மாதர் கொல்' (1081)
'கணங்குழை மாதர் கொல்' (1081)

இவ்வாறு பாட வேற்றுமைகளால் வந்த உரை வேற்றுமைகள் பல. பாட வேற்றுமை என்பது காலத்தாய் பெற்றுவிட்ட கைக்கிளைக் குழவி. இவ்வகை வேற்றுமைகள் மனப்பாடத்தால் எழுந்தவை. சில எதுகை மோனையால் எழுந்தவை. ஆதலின் தவிர்க்க முடியாதவை.

புணர்ச்சி

விண்ணின்று பொய்ப்பின் (13)
விண் நின்று பொய்ப்பின்
விண் இன்று பொய்ப்பின்

செய்தவ மீண்டு முயலப்படும் (265)
செய்தவம் ஈண்டு முயலப்படும்
செய்தவம் மீண்டும் முயலப்படும்

அவை புணர்ச்சியொற்றுமையால் வந்த பிரிவு வேற்றுமைகள். இம்மொழியமைப்பு சில உரை வேற்றுமைகளுக்கு இடம் நல்கின. சந்தியினுல் வரும் உரைகளை எவ்வாறு தவிர்க்க முடியும்?

Koviloor Digital Library

இலக்கணம்

'அறனுக்கம்' (163) என்பதனை அறத்தினால் ஆகிய ஆக்கம் என வேற்றுமைத் தொகையாகவும், அறனும் ஆக்கமும் என உம்மைத் தொகையாகவும், 'வெகுளியிற் றீதே' (531) என்பதனை ஒப்புப் பொருளாகவும் உறழ் பொருளாகவும் 'மடியை மடியா ஒழுகல்' (692) என்ற விடத்துப் பல்வகை எச்சங்களாகவும், 'ஓம்பா மேக' (861) எனக்கொண்டு கூட்டாகவும் கொள்வதனாலும் வேற்றுரைகள் பிறக்கின்றன. செம்மையும் தெளிவும் தர வேண்டிய இலக்கணமே, உரைப்பன்மைக்கு ஏது ஆவதைப் பார்த்து மருள்கின்றோம்.

தொகை

நூல் எழுதுவோன் தன் நூலுள் ஒவ்வொன்றையும் விளக்கிச் சொல்ல முடியாது, அப்படிச் சொல்லப் புறப்படில் அது ஒரு கட்டுக் கோப்பான நூலும் ஆகாது. சில வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டுதான் கருத்துக்களை மேன்மேலும் சொல்ல வேண்டும், இயல்புடைய மூவர் (41) அறுதொழிலோர் (560) எழுமை எழுபிறப்பு, (107) ஐந்தவித்தான் (6) எண்குணத்தான் (9) ஈண்டு வரும் எண்ணுத் தொகைகள் எவற்றைக் குறிக்கின்றன என்று திருக்குறள் கூறவில்லை அவர் காலத்து அவை வழக்காருகத் தெரிந்தவை, இலக்கிய மரபுகளைக் கொண்டு இவற்றின் பொருளை அறியலாம் எனினும், உரையாசிரியர்கள் தொகை விளக்கத்தில் வேறுபடு கின்றனர். இயல்புடைய மூவர் என்பதற்குப் பிரமசரியன். வானப்பிரத்தன், துறவி என மணக்குடவர், பரிமேலழகர், பரிதி, காலிங்கர் முதலான பழைய உரையாசிரியர்கள் எழுதி யுள்ளனர். தாய் தந்தை தாரம் என வ. உ. சி.யும், ஊர் மன்றத்தலைவர் அல்லது மூவேந்தர் எனத் திரு. வி. க. வும், உறவினர் நண்பர் ஏழைகள் என நாமக்கல் கவிஞரும், அடுத்த

Koviloor Digital Library

குறளில் எண்ணப்படும் துறந்தார், துவ்வாதார், இறந்தார், எனப் புலவர் குழந்தையும், பார்ப்பார், அரசர், வணிகரெனப் பாவாணரும் விரித்துக் காட்டுவர். இத்தொகைச் சொற்கள் போலவே கற்க கசடறக் கற்பவை (391) போற்றின் அறியவை (693) இரங்குவ செய்யற்க (655) சொல்லின் தொகை (711) என்ற பன்மைப் பெயர்கட்குப் பொருள் கோடலிலும் உரைவேற்றுமைகள் எழுந்துள்ளன.

தனிச்சொல்

பல்வேறு உரைவேற்றுமைக்கு ஒரு பெருங்காரணம் தனிச்சொல்லின் பொருள் பற்றியது. ஒரு சொல்லுக்குப் பல பொருள் இருத்தலின், சில சொற்களுக்கு வரம்பான பொருள் இன்மையின், உரைகள் எண்ணிறந்த குறள்களுக்கு வேறு படுவவாயின. எச்சம், நயன், அன்பு, அறிவு, அளவு, சிறப்பு, ஒற்கம், அமைவு, குடி, மடி, எண், பதம், கலன், படி, குறை, அடுங்காலை, ஆறு, அலகு, சான்றோன், இறந்தார், ஆழி, அற்றார், மணி, கை, தக்கார், தார், ஊராண்மை, பொறி, இறை, வெளிறு, சிறுமை என வரும் நூற்றுக் கணக்கான தனிச்சொற்கள் ஒருபொருள் எல்லைக்கு இடங்கொடாது உரைப்பன்மையை உண்டாக்கின.

கவர்நடைத் தந்தை

பாடபேதங்கள் தொடர்ப் புணர்ச்சி நிலைகள், இலக்கணம், தொகைச்சொல் தனிக்கிளவிகள் என்ற காரணங்கள் மட்டுமல்ல உரை வேற்றுமைக்கு. இவற்றினும் சீரான, மேலான, சிக்கலான, மயக்கமான காரணங்கள் இன்னும் உள. அவை விரிந்த ஆய்வுக்கு உரியவை எனினும் இரண்டொன்றை இங்கே சுட்டுவன். திருவள்ளுவர் காலத்துத் தமிழ் மொழி நடையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. ஓரளவு அணிவகைகளும், தொடை நயங்களும் புகத் தொடங்கின. புல்வனது கல்விப் புலமையோடு மொழிப்

Accession No. 14848

Koviloor Digital Library

பயிற்சியைக் காட்டுவதும் புலமையின் ஒரு கூருயிற்று. மொழிக்கோவையில் ஆரவார நீர்மை ஓரளவு வேண்டியதாயிற்று. துகில் நிறம் பெற்றதுபோல இயல்பான நடையோடு வண்ணநடையும் கலந்தது. நிறத்தால் மயக்கம் ஏற்படுவதுபோல, வண்ண நடையில் பொருள் மயக்கம் வரலாயிற்று.

துப்பார்க்கும் துப்பாய துப்பாக்கி துப்பார்க்குத்
துப்பாய தூ உம் மழை (12)

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய் (359)

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் (671)

காணுதாற் காட்டுவான் தான்காணுன் காணுதான்
கண்டாணும் தான்கண்ட வாறு (849)

அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு (1182)

துப்பு, சார்பு, பொருள், காணுதல் என்ற சொற்களைச் சொற் பின்னிலை, பொருட் பின்னிலை, சொற்பொருட் பின்னிலை அணிகளில் வைத்துப் பாடியிருப்பதையும், இறுதிக் குறளில் அவர் தந்தார் இவர் தந்து எனத் தொடைநயத்திற்காகவே பாடியிருப்பதையும் சிந்திக்க வேண்டும். இவ்வாறு குறள்கள் ஒலிநயத்தில் ஒற்றுமை காட்டி உரைப்பொருளில் வேற்றுமைக்கு வித்திட்டுவிட்டன. ஒலிநயம் முடிவில் உரை நயமாய் வளர்ந்தது. வள்ளுவர் கூற்றிற்கு ஒப்பவே அவர் குறள் நவில்தொறும் நூல் நயமாய் விரிந்தது. நிறக் கவர்ச்சி உள்ளத்தை மறைப்பதுபோலப் பாட்டின் தொடைக்கவர்ச்சி புலவன் உள்ளத்தைப் புதைத்து விடுகின்றது. செவ்விய சங்க காலத்து இல்லாத மயக்க மொழிநடை திருவள்ளுவர் காலத்துப் பிறந்தது, முளைத்தது என்ற யாப்பியல் வர

Koviloor Digital Library

லாற்றைத் திருக்குறளால் அறிகின்றோம். கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப்பின் வந்த கவர்பொருள் தரும் தமிழ்க் கவிதை நடைக்கு வழிகாட்டியவர் வள்ளுவர். அதனால் அவரை யாப்புப் புரட்சிப் புலவர், கவர்நடைத் தந்தை, வண்ணமுன்னோடி என்று இக்கட்டுரையில் புகழ்மாலை தொடுக்க விரும்புகிறேன்.

குறளுத்திகள்

சுருங்கிய ஈரடியில் செறிவான முறையில் நுணுகிய பொருள்களை யாப்பு வேலியுள் அடைக்க முயன்றவர் ஆதலின் பல்வேறு எழுத்து உத்திகளை வகுத்துக் கொண்டு குறள்நூல் படைத்தார் வள்ளுவர். இவ்வுத்திகள் யாவை என ஆராய்வது தனிப்பொருளாயினும், ஒரு சிலவற்றை இக் கட்டுரையில் வெளிப்படுத்துவேன். நடை நிறைந்த ஒரு கருத்து நடை குறைந்த இன்னொரு கருத்தினைத் தெளிவாக்கும் என்பது ஒருத்தி.

> பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவ னடிசேரா தார் (10)

> உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
> கடையரே கல்லா தவர் (395)

இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்தார் என்றது நிறைநடை, நீந்துவர் என்பது குறைநடை. எனினும் அந்நிறை நடையிலிருந்து இறைவனடி சேர்ந்தார் என்பதனை நாம் கண்டுகொள்ள முடியும். கடையரே கல்லாதவர் என்பது நிறைநடை; கற்றார் என்பது குறைநடை. எனினும் நிறைநடையில், ஆற்றலால் கற்றார் தலையாயர் என்று நாம் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறு ஆசிரியர் அணியில் ஒரு மருங்குருவகம் போல நடையிலும் ஒரு மருங்குத் தொடர் படைத்துள்ளார் என்ற நடையுத்தியை உணர வேண்டும்.

Koviloor Digital Library

1330 குறள்களையும் தொகுத்து வகுத்து ஆராயுங்காலை அவை சில எழுத்துத்திகளில் அல்லது சில வாய்பாடுகளில் வடிவொருமை பெற்று அடங்கிவிடக் காணலாம். அப்போது எது பொருள் என்று மயக்கந் தரும் குறள்கட்கு அவ்வுத்திகள் தேற்று விதைகளாக, தெளிநீர்களாக உதவுகின்றன.

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு (20)

வான்சிறப்பு அதிகாரத்தில் உள்ள இக்குறளில் நீர், ஒழுக்கு இரு கிளவிகள் உரை வேற்றுமைக்குக் காரணமாவன. இச் சொற்கள் அருஞ்சொற்கள் அல்லவே. எனினும் ஏன் இவ்வளவு உரைமயக்கம்?

1. தண்ணீர் இல்லாமல் உலகியல் நடவாது; அத் தண்ணீரோ வானத்திருந்தல்லது பிற வகையாற் கிடைக்காது.

2. தண்ணீர் இன்றி இவ்வுலகம் நடவாது, மழையின்றி யார்க்கும் ஒழுக்கம் அமையாது.

3. பண்பின்றி உலகம் அமைதி பெறாது; அப்பண்புக்கு உரிய ஒழுக்கம் மழையின்றி உண்டாகாது.

சுருங்கச் சொல்லின் நீர்பெற மழை வேண்டும் என்பது ஓர் உரை. ஒழுக்கமாக இருக்க மழை வேண்டும் என்பது மற்றோர் உரை. இருவுரைகளும் கருத்தளவில் பிழையில்லை. ஆயின் இக்குறட்கு எது பொருள் என்று துணிய வேண்டும். அளவை முறையில் கருத்தினை நிறுவுவது ஒரு குறளுத்தி. பசி நீங்கவும், உழவர் உழவும், புல்லின் பசுந்தலை காணவும் கடல் புதுவளம் பெறவும், விழா நடைபெறவும், தானமொடு தவம், செய்யவும் இவ்வுலகிற்கு மழை வேண்டுமெனப் பல குறள்களால் வலியுறுத்திய வள்ளுவர் தருக்க முறையில்

Koviloor Digital Library

கேட்கின்ருர். இவ்வளவு உலகநலங்களும் நீரால் வரும், அதனுல் நீர் சிறப்புடையது என்ருல் அந்த நீரை உலகிற்குக் கொண்டு வருகின்ற வானத்திலிருந்து கீழே விழுகின்ற மழை வரவு சிறப்புடையதில்லையா என்பது அவர் தருக்கம். இந்த அளவையுத்தியை,

தினற் பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப் பொருட்டால் ஊன்தருவா ரில் (256)

என்ற அருமைத் திருக்குறளிலும் காண்கின்ருேம். ஆதலால் உலகிற்கு நீர் வேண்டும். நீருக்கு வாெனுழுக்கு வேண்டும் என்ற பொருளே—வான் சிறப்பினைத் துணிந்து முடிக்கும். இக் கருத்தே இக்குறளின் நேர்பொருளாகும். உரைமயக்கம் இவ் வுத்தியால் தெளிவு பெறுகின்றது.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடை (37)

என்பது கருத்து மயக்கத்துக்கும், கருத்துப் பூசலுக்கும் உரிய குறளாகும். பல்லக்கில் ஏறியிருப்பவன் அறஞ்செய்தவன் எனவும், அதனைச் சுமப்பவன் அறஞ் செய்யாத பாவி எனவும் பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, காளிங்கர், பாவாணர் முதலியோர் பொருள் காண்பர். பல்லக்கில் ஏறுதல், அதனைச் சுமத்தல் என்ற நிகழ்ச்சியை வைத்து அறத்தின் பயனை மதிப்பிட வேண்டா எனத் திரு. வி. க. வும், குழந்தையும், பாரதிதாசனும் பொருள் செய்வர். இச்சிக்கலை நான் இக் கட்டுரையில் புதிதாகக் கூறிய குறளுத்தி மூலம் தீர்க்கலாம். உலகத்தார் நடைமுறையில் கொண்டிருக்கும் கருத்தினை மறுப்பது ஒரு குறளுத்தி. அப்போது வேண்டா என்ற நடையை ஆளுவர் வள்ளுவர்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் (280)

Koviloor Digital Library

அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின் (497)

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும் (785)

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்திய து
அற்றது போற்றி யுணின் (942)

இக்குறள் எல்லாம் ஒருத்தியின் வடிவமைப்புடையவை. உலகம் மழித்தலும் நீட்டலும் ஆய புற வேடத்தைத் துறவாக மயங்குவதைப் பார்த்தும், அகத்தில் அஞ்சாமையைத் துணை யாகக் கொள்ளாது புறத்தில் ஆளைத் துணையாகக் கொள்வதைப் பார்த்தும், ஒத்த உணர்ச்சியை நட்பாகக் கொள்ளாது பலமுறை பழகுவதை நட்பென்று மயங்குவதைப் பார்த்தும், நடைமுறைப் பழக்க வழக்கமே உடல்நலத்திற்கு நல்வழி யாகும் என்பது அறியாது புறமருந்தை நம்பியிருப்பதைப் பார்த்தும் இவையெல்லாம் வேண்டாம் என்று மாசு படிந்த கருத்தினை மறுப்பர் திருவள்ளுவர். இந்நடையில் அமைந் ததுவே அறத்தாறிது வென வேண்டா என்ற குறளும். ஆதலின் இப்புறக்காட்சியை அறமென மயங்க வேண்டா என்று உலகத்தை இடித்துரைப்பதுதான் வள்ளுவரின் உத்தி யாகும். மனத்துக்கண் மாசில்லாமையே அறம் (34) எனவும் மேலிருந்தும் மேலல்லார் கீழிருந்தும் கீழல்லார் (973) எனவும் உடன்பாட்டாலும் எதிர் மறையாலும் மொழிந்த வள்ளுவப் பெருமகன் பல்லக்குக் காட்சியைப் பொருளாக மதித்துச் சொல்வாரா என்று நினைமின். அது அக்காலச் செல்வர் ஊர்ந்த ஒரு நாகரிகப் போக்குவரத்து அவ்வளவே.

ஐந்தவித்தான் ஆற்றல், அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி (25)

இதுவும் உரைவேற்றுமைக்கு இடம் தரும் ஒருகுறளாகும். இக் குறளமைப்பில் ஓர் உத்தியுண்டு. முதற்கண் ஒருதொடரில்

Koviloor Digital Library

அறம் கூறல், அடுத்து வரு தொடரில் அதற்குச் சான்று கூறல் (அறமும் சான்றும் முறைப்பட அமைப்பது இவ்வுத்தியாகும். இந்நடையில் ''அதற்கு'' என்ற இணைப்புச் சொல் மறைந்திருக்கும்.

அல்லல் அருளாள்வார்க்கில்லை, வளிவழங்கு
மல்லல்மா ஞாலம் கரி (245)

இரப்பான் வெகுளாமை வேண்டும், நிரப்பிடும்பை
தானேயும் சாலுங் கரி (1060)

இவ்வுத்தியின் அமைப்பை இவ்விரு குறள்களிலும் காணலாம். காணும்போது, சான்று எம்முறையில் அமைந்திருக்கின்றது என்ற தன்மையையும் தெரிந்து கொள்ள வேண்டும். அருளாளர்கட்குத் துன்பமில்லை என்பதற்கு அழியாமல் காற்றோடும் வளத்தொடும் உலகம் நிலையாக இருப்பதே சான்று. பிச்சைக்காரனுக்குச் சினம் வரக்கூடாது என்பதற்கு அவன் பசித்துன்பமே சான்று. வளிவழங்கு மல்லல் மா ஞாலம் எனவும், நிரப்பிடும்பை எனவும் அச்சான்றுகள் வெளிப்படையாகவே சொல்லப்பட்டுள்ளன. ஊகத்திற்கு இடமில்லை. அது போல் ஐந்தவித்தான் ஆற்றல் பெரிதென்பதற்கு அகல் விசும்புளார் கோமான் இந்திரன் சான்றுவான் என்றால் அந்த வெளிப்பட்ட சொற்களில் வைத்துப் பொருள் காண வேண்டும். அதுவே உத்தி. வெளிப்பட்ட சொல் இந்திரனைத் தேவருலகத் தலைவன் என்று போற்றுகின்றது. எனவே ஐந்தவித்தான் தேவருலகத் தலைமை போன்று உயர் நிலை பெறலாம் என்பது கருத்து. இவ்வாறு மதிப்பிடை பெற்ற இந்திரனுக்கு உயர்பொருள் கொள்ளாது முனிவனால் இந்திரன் சாபம் எய்தி அழிந்தான் என்று பரிமேலழகர் முதலானோர் குறிப்பிற் பொருள் கொள்வர். இவர்தம் மதிப்புக் குறைவான கருத்திற்குச் சாபம் எய்திய இந்திரனே சாலுங் கரி என்று வெளிப்படை நடையாக இருந்தாற்றான் பொருந்தும்.

Koviloor Digital Library

அங்ஙனம் இன்மையின் இக்குறிப்பு முறை கரி என்று வஃரும் குறளுத்திக்குப் பொருந்தாது.

இக்கட்டுரைக்கண் உரை வேற்றுமைகள் எவ்வாறு பல்கி மல்கின என்று சில அடிப்படைக் காரணங்களைத் தோற்றுவாய் செய்தேன். செய்தபின் பார்வைக்குப் பல குறள்கள் உரை மயக்கத்துக்கு இடந் தந்து நின்றாலும் அம்மயக்கம் களைந்து ஒரு பொருள் தெளிவுபெறுதற்கு வழி உண்டெனவும். திருவள்ளுவர் தமக்கெனச் சில உத்திகளைப் படைத்துக் கொண்டு நூல் யாத்தார் எனவும், 1330 குறள்களையும் சில உத்திக்குள் அடக்க முடியும் எனவும், அவ்வுத்திகளை உரை காணப் பயன்படுத்தினால் மயக்கமற்ற பொருள் மணல்நீர் போல் தோன்றும் எனவும், கட்டுரையின் பிற்பகுதியில் மூன்று எடுத்துக் காட்டுக்களால் புலப்படுத்தினேன். ஏனைக் குறள் களுக்கும் உரிய உத்தி நெறி கொண்டு தெளிபொருள் காணும் புதிய வேட்கையை இக்கட்டுரை தூண்டுமென நம்புகின்றேன்.

Koviloor Digital Library

2. மிருச்சகடிகம் - சிலப்பதிகாரம்

ஒரு பொருளை இன்னொரு பொருளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது மக்களிடை இயல்பாகக் காணப்படும் உலகியல். ஒரு பண்டத்தை வாங்கக் கடைக்குச் செல்லும் மாந்தர்கள் பார்த்தவுடன் அதனைப் பணம் கொடுத்து வாங்கிவிடுவதில்லை. ஒன்றோடும் பலவற்றோடும் பல கூறுகளையும் ஒரு முறையும் மறுமுறையும் ஒத்திட்டு விலைகளையும் சீர்தூக்கி வாங்கப் பார்க்கின்றோம். அங்ஙனம் ஒப்பீடு செய்யுங்கால், துணிவாங்குவார் துணியோடும், எழுதுகோல் வாங்குநர் எழுதுகோலோடும், பழம் வாங்குவோர் பழத்தோடும், மாடு வாங்குநர் மாட்டினொடும் ஒத்துக் கணிப்பரேயன்றிப் பிற பொருளோடு அவ்வாறு செய்வதில்லை. இதனால் நாம் அறிவது என்ன? ஒத்துப் பார்க்கும் பொருள்கள் இனமான பொருள்களாக இருக்க வேண்டும் என்பதே இது மட்டுமன்று. முழுதும் ஒப்புமையான பொருள்களை ஒத்திட்டுக் காண்பதிற் பயனுமில்லை; அறிவுமில்லை. அடிப்படையில் ஒற்றுமையும் கூறுபாட்டில் வேற்றுமையும் உடைய பொருள்களே ஒத்து உறழ்ந்து காணற்கு உரியவை என்று தெரிந்து கொள்ள வேண்டும். இந்த இலக்கணப்படி மிருச்சகடிகம் என்ற வடமொழி நூலையும் சிலப்பதிகாரம் என்ற தமிழ் நூலையும் உராய்ந்து காண்பாம்.

சிலப்பதிகாரம் என்ற தமிழ் நாடகக் காப்பியம் 1800 ஆண்டுகட்கு முன் சேரகுலத் தோன்றல் இளங்கோவடிகளால்

Koviloor Digital Library

இயற்றப் பெற்றது. மிருச்ச கடிகம் என்னும் வடமொழி நாடகம் 1500 ஆண்டுகட்கு முன்னர் சூத்திரகன் என்னும் அரசப் புலவரால் படைக்கப்பட்டது. வணிகர்கள் பரத்தையரோடு தொடர்பு கொண்டு இன்புற்றுத் துன்புற்ற நிலையும், கற்புடை நங்கையரின் பெருமையும், நல்லவர்க்குக் கொடியோர் செய்யும் இடையூறுகளும், துறவிகளின் சால்பும், கொடுங்கோல் மன்னர்தம் அழிவும், ஊழின் வலிமையும் இவ்விரு நூல்களிலும் நரம்புபோல் ஓடிக் கிடக்கும் பொதுக் கோட்பாடுகளாம். வணிகனாகிய கோவலன் போலச் சாருதத்தனும், கண்ணகி மானக் கற்புடை நங்கை தூதையும், மாதவி நிகர்ப்ப வசந்தசேனையும், பொற்கொல்லன் ஒப்பச் சகாரனும், சித்திராபதிபோல வசந்தசேனையின் தாயும், கவுந்திக்கு நிகராகத் துறவி சம்வாகனனும், மகள் மணிமேகலைக்கு ஒப்பாக மகன் உரோகசேனனும், தேவந்திபோல மதனிகையும், பாண்டியன் நெடுஞ்செழியன் இடத்துப் பாலகனும், ஊர்காப்பாளர்க்கு ஒத்தவராகச் சண்டாளர்களும் மண்ணியல் சிறுதேர் என்ற மிருச்சகடிகத்தில் சிலப்பதிகாரத்திற்கு நேரான நாடக மாந்தர்களாகக் கோடிட்டுக் காட்டலாம்.

இளங்கோ தம் நாடகக் காப்பியத்துக்குச் சில்ம்பு என்ற அணியின் பெயரை வைத்தார். மணிமேகலை, சகுந்தலை என்றாற்போலக் கதைமாந்தர்களின் பெயரை வைக்கவில்லை. சிலம்பினால் பெரிய காப்பிய நிகழ்ச்சிகள் இயங்குதலின், அப்பெயர் வைப்புப் பொருந்துவதாகும். ஆசிரியர் சூத்திரகனும் தம் நாடகத்துக்கு வசந்தசேனை என்றோ சாருதத்தன் என்றோ பெயர் சூட்டாமல் மிருச்ச கடிகம் அல்லது மண்ணியல் சிறுதேர் என்ற ஓர் ஊர்தியைப் பெயராகக் கொண்டார். செல்வ வணிகனை சாருதத்தன் கொடைசெய்து கொடை செய்து வறுமைப்பட்டதனால், முன்பு பொன்வண்டி ஓட்டி விளையாடிய அவன் மகன் உரோகசேனன் இப்போது மண் வண்டி ஓட்டும் தாழ்நிலைக்கு வந்திருக்கின்றான் என்பது கதை.

Koviloor Digital Library

இதனை நாடகத்தின் பெயராக வைத்த வடமொழியாசிரியரின் நோக்கம் என்ன? வசந்தசேனை பொருள் விழையும் கணிகையர் குலத்திற் பிறந்தவளாயினும், சாருதத்தனை அவன் வறுமைப் பட்டவன் என்று தெரிந்தே, அவனது குண நலங்கட்காகக் காதலிக்கிருள் என்பது இந்நாடகம் எங்கணும் காவிரி வாய்க்கால்போல் ஓடிக்கிடக்கும் புரட்சிக் கருத்தாகும். தந்தை வறுமையை மகன்மேல் வைத்துக் காட்டிய தலைப்பு இனிமையும் ஆழமும் உடையது.

சிலப்பதிகாரத் தொடக்கத்தில் இருப்பது இயற்கை வாழ்த்து; மிருச்ச கடிகத்தில் இருப்பதோ சிவ வாழ்த்து; என்ருலும் நூல்களின் உணர்ச்சிப் பொருள்கள் இவ்வாழ்த்துக் களில் உறைந்து கிடக்கின்றன. 'திங்களைப் போற்றுதும்' என்பதனுல் பூம்புகாரில் கண்ணகியின் மெல்லிய பண்புகளும், 'ஞாயிறு போற்றுதும்' என்பதனுல் மதுரையில் அவள்தன் வல்லிய செயல்களும், 'மாமழை போற்றுதும்' என்பதனுல் வஞ்சியில் சிலம்பணி காட்டுதல், வரந்தருதல், முதலான நல்லிய நிகழ்ச்சிகளும் குறிப்பிற் புலனுகின்றன. பண்டிதமணி எடுத்துக் காட்டியபடி, மிருச்ச கடிக வாழ்த்தில் சங்கரன் என்ற சொல் இன்பத்திற்குரிய வசந்த சேனையையும், சமாதி என்பது அவள் காதல் ஈடுபாட்டையும், செம்பொருள் என்ற கிளவி தூய காதலுடைய சாருதத்தனையும், சுற்றப்பட்ட பாம்பு என்ற கருத்து இருவர் காதலின் நெருக்கத்தையும் நுண்புலமாகக் காட்டுகின்றன.

மகளிர்க்கு இடக்கண் துடிப்பது நன்னிமித்தம்; ஆடவர்க்கு வலக்கண் துடிப்பது நன்னிமித்தம்; மாறித் துடிப்பது தீநிமித்தம் என்பது நம் பண்பாடு.

'கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன
விண்ணவர் கோமான் விழவுநாள் அகத்தென்'

Koviloor Digital Library

கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் திரும்பச் சேர்வான் என்பதனை முன்னமே அவ்விரு பெண்களின் கண் துடிப்புக்கள் புலப்படுத்துகின்றன என்று பாடுவர் இளங்கோ. காமுகனை சகாரனது வண்டியில் அறியாது ஏறுகின்ற வசந்த சேனை 'வலக்கண் துடிக்கின்றதே ஈதென்னை' என்று வருதுயர் அறிந்து முன்கூட்டியே மொழிகின்றாள்.

'வாட்படையும் பெற்றேன் வலத்தோள் துடிக்கின்றது
ஆட்படுத்துக் காத்தது அருந்தெய்வம்'

என்று வலக்கண் துடித்ததாக இடையன் ஆரியகன் சொல்லும் போது அவனுக்கு இனி நலம் வரும் என்பதனை சூத்திரகர் புலப்படுத்துகின்றார்.

புதிய மணப்பெண்ணை உவமையாகக் கூறுதல் என்பது இருநூலிலும் காணப்படும் ஒருமுறை.

'சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர் புனைந்து
மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பு'

என்று சித்திரப்போர்வையும் மலர்க்கொத்தும் அணியப்பெற்ற யாழின் அழகை முதல்நாள் மணப்பெண்ணோடு ஒப்பிடுவர் அடிகளார். புதிய மணப்பெண்ணின் கூந்தல் தொகுதிபோல என வடமொழி ஆசிரியர் உவமம் செய்யக் காண்கிறோம். விதூடகனாகிய மைத்திரேயன் 'தனக்கு உரிய இடத்தில் இருக்கின்ற நாயும் வன்மையுடையதாகும்' என்று இடவலி கூறும்போது,

'முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர்'

என உறையூர்க்கோழி யானையை வென்ற ஆற்றலை இளங்கோ புலப்படுத்துவது நமக்கு நினைவுக்கு வரும்.

Koviloor Digital Library

இளங்கோவும் சூத்திரகனும் அரச குலப்பிறப்பு, கதைக் கரு, நாடகமாந்தர், நூலின் தொடக்கம், நூற்பெயர், பண்பாடு, உவமை முதலான கூறுகளின் ஒப்புமையைச் சிலப்பதிகாரத்திலும், மிருச்சகடிகத்திலும் ஒருவாறு அறிந்தோம். எனினும் இரு நூல்களின் போக்கிடை அகலமான வேறுபாடுகள் உள.

சிலம்புக் கோவலனும், சிறுதேர்ச் சாருதத்தனும் கொடியவர்கள் அல்லர், நல்ல கொடையாளர்கள். சாருதத்தன் மாளிகைகள், பண்டசாலைகள், மடங்கள், சோலைகள்,கோயில்கள் எல்லாம் ஊரில் அமைத்துப் பொது நலஞ் செய்தவன். எந்த மலர்க்கொடியையும் வளைத்து மலர் பறிக்க அஞ்சும் பண்பாளன். கோவலனும் இன்னார் இனியார் என்று பாராமல் உடல், பொருள், உயிர் மூன்றினையும் வழங்கியவன்; 'கொடை கெழு தாதை' என்று மணிமேகலைச் சாத்தனாரால் பாராட்டப் பெற்றவன். இவ்விரு நாடகத் தலைவரும் இரக்க நெஞ்சினர், கொடையாளர். அதனால் வறுமை எய்தினர் என்றாலும், பரத்தமையை நாடியவர்கள் என்றாலும், இல்லற நெறியில் இரு வேறுபட்டவர் ஆவர். கோவலன் மாதவியை அவள் மணமனை சென்று இன்புற்றான். அவளைப் பரத்தைகுல நங்கையாகவே உள்ளத்தில் எண்ணியிருந்தான். தன் இல்லத்துக்கு ஒரு நாளும் அவளை அழைத்து வரவில்லை. கண்ணகியும் மாதவியும் நேராக ஒருவரையொருவர் கண்டு கொண்டதில்லை. கண்ணகிக்கு உரிய இல்லற மதிப்பை அவன் மாதவிக்கு அளித்ததேயில்லை; மாதவி நல்லாளும் அந்த ஒத்த மதிப்பை எதிர்பார்க்கவில்லை. 'குலப்பிறப்பாட்டி' எனக் கண்ணகியை மாதவி புகழ்வதையும் 'மாபெரும் பத்தினிமகள் மணிமேகலை' என்று உயர்த்துப் பாராட்டுவதையுமே பார்க்கின்றோம். மிருச்சகடிகத்திலோ எனின், கயவன் சகாரனுக்கு அஞ்சிய வசந்தசேனை என்ற கணிகை நங்கை, சாருதத்தன் வீட்டிற்குள் நுழைவதையும், கற்புடை மனையாள் தூதை இல்லத்து ஒரு புறம் இருக்கும்போதே மழைக்காலத்தில் விதூடகன்

Koviloor Digital Library

அங்கு அழைத்து வர வசந்தசேனையை இன்புற்றதையும் படிக்கின்றோம்.

ஆடவர் தம்மனை யடைந்த மங்கையர்
சாடிய மழையினால் நனைந்த தண்ணுடல்
பீடுறத் தழீஇக் கொளப் பெறுவ ரேலவர்
நாடிய வாழ்க்கையே நலத்தின் மிக்கதாம்

தம் இல்லம் தேடிவந்த மங்கையரைப் பெறுவதே பேறுஎன்று சாருதத்தன் நலம் புனைந்துரைக்கின்றான். அங்கு வந்தவள் வந்தவிடத்து, ஓர் இரத்தினமாலையைச் சாருதத்தன் மனைவிக்கு வழங்க முயல்வதும், தூதை மகன் உரோகசேனனை 'என் அருமை மகனே' என்று புகழ்வதும், அச்சிறுவனுக்குப் பொன் வண்டியளிப்பதும் என மிருச்ச கடிகத்திற் காணப்படுபவையெல் லாம் சிலம்புகாட்டும் இல்லறத் தமிழ்நெறிக்கு வேறானவை. சிலப்பதிகாரத்தில் மாதவி முதலிடம் பெறவில்லை. மிருச்ச கடிகத்தில் வசந்தசேனை முதலிடமேயன்றி முழுவிடமும் பெறுகின்றாள். சாருத்ததனது மனைவியை 'என் உடன் பிறந்த பெருமாட்டி' என்று உறவு பாராட்டுகின்றாள். மனைவி தூதை யும் வசந்தசேனையின் வரவைச் சிறிதும் வெறுக்காமல் பெரிதும் விருப்புற்று 'தெய்வ வயத்தால் உடன்பிறந்தாள் நலமுடையள் ஆயினள்' என்று உறவாக ஏற்றுக் கொள்வதையும், ஒருவரை யொருவர் தழுவிக் கொள்வதையும் பார்க்கின்றோம். சுருங்கச் சொல்லின் சிலப்பதிகாரம் கற்புடைக் கண்ணகியைத் தெய்வ மாக்குவது; மிருச்ச கடிகமோ கணிகைகுல வசந்தசேனையைக் கற்புடை நங்கையாக்குவது; குலமகளிராக உயர்த்துவது; தீய மரபிற் பிறந்தார்க்கு நன் மரபு தருவது. இறுதியில் வசந்தசேனை, புதிய அரசன் ஆரியகன் நற்கட்டளைப்படி, வதுவாகக் குலநங்கையாக உயர்த்தப்படுகின்றாள். இவ்வகை யில் பரத்தையர் குலத்து மாதவி போன்ற ஒருமனப் பெண்டிரைக் கடைசிவரை பரத்தையர் குலமாகவே பட்டஞ் சூட்டும் சிலப்பதிகாரத்தைக் காட்டிலும், பிறப்பின் அடிப்படை

Koviloor Digital Library

யிலன்றி ஒழுக்கத்தின் அடிப்படையில் வசந்தசேனையை மத மாற்றம் போலக் குலமாற்றம் செய்து காட்டிய மிருச்சகடிகம் இக்காலத்திற்கும் ஏற்ற ஒரு புரட்சி நாடகம் ஆகும்) ஆனால் மணமாகாத ஒருவனுக்கு வசந்தசேனையைக் குலமகளாக்கிக் காட்டியிருந்தால், இப்புரட்சி உலகியல்பாகவும், சிறப்பாகவும் இருந்திருக்கும். வசந்தசேனை உயர்த்தப்படும்போது, மணந்த கற்புடை நங்கை தூதை, வீட்டுப்பொம்மைபோல் கணவனது ஒழுக்கத்தில் ஊடலோ வருத்தமோ எதிர்ப்போ இன்றிப் பார்த்துக் கொண்டிருப்பதாகவும், அவன் புறவொழுக்கத் திற்குத் துணை செய்வதாகவும் மிருச்சகடிகம் காட்டுவது எவ் வுலகியலுக்கும் எப்பெண்ணின் மனத்திற்கும் என்னனும் பொருந்துவதன்று. வெளிப்படையாக எவரிடத்தும் வசந்த சேனையின் குணங்களையே சாருதத்தன் பாராட்டுவதும் நயமன்று, இந்நிலையில் 'ஒழுக்கம் தூய்த்தென விழுப்பம் உற்றுளேன்' என்று சாருதத்தன் நினைக்கும் ஒழுக்கம் இல்லற ஒழுக்கம் ஆகுமா?

கள்வனுக்கு உரியது கொலைத்தண்டனை என்ற முறையை இருநூல்களும் உடன்படுவன. ஆனால் ஒரு பெரிய வேற்றுமை உண்டு. வறுமைவாய்ப்பட்ட சாருதத்தன் வசந்தசேனையின் அணிகலன்களைக் களவாடும் நோக்கொடு அவள் கழுத்தை நெரித்துக் கொன்றான் எனச் சாருதத்தன் மேற் பழிசுமத்தும் போது,

'குற்றமிழைத் தானிவனே யாயினுமென் கொல்லுதற்கு
உற்ற மறையோன் உரியனல்லன்'

குற்றஞ்செய்தாலும் மறையோனுக்குக் கொலைத்தண்டனை யில்லை என்று நீதிபதியே சாதியடிப்படையில் தண்டனை விலக்கு அளிப்பக் காண்கின்றோம். சாருதத்தன் வாழ்வில் வணிகனாக இருப்பினும் பிறப்பால் பார்ப்பனன் ஆதலின், 'பார்ப்பனனும் எனைத் தகவறக் கொல்லுதி' என்று தன்

Koviloor Digital Library

சாதியுயர்வு காட்டி, அரசனைப் பழிக்கின்றான். நீதிபதி இவ்வாறு தண்டனை விலக்கு வழங்கினும் அரசன் பாலகன் முறை தவறாது சாருதத்தனுக்குக் கொலைத்தண்டம் தருவது 'கள்வனைக் கோறல் கடுங்கோலன்று' என்று பொதுவறம் கூறும் பாண்டியன் நெடுஞ்செழியன் கருத்தோடு ஒத்துள்ளது.

சிலம்பிற் கற்புடைக் கண்ணகி, மாதவிக்குக் கொடுப் பதற்குத் தன் சிலம்புகளைக் கழற்ற முன் வருகின்றாள். மிருச்ச கடிகத்தில் இல்லற நங்கை தூதை வசந்தசேனைமிடம் அளிப்பதற்குத் தன் இரத்தினமாலையைச் சாருதத்தனிடம் கொடுக்கின்றாள். கணவன் துயரத்தைத் தாங்கும் பொறுப்பில் இருவரும் ஒத்திருந்தாலும், கோவலனைக் கள்வன் என்று பொய்யாகக் குற்றம் ஏற்றிக் கொன்ற செய்தியைக் கேட்டதும் பொங்கி எழுந்து, விழுந்து புரண்டு, என் கணவன் கள்வ னல்லன்; பொய்ப்பழி துடைத்தல்லது நில்லேன் என்று வழக்குரைக்க ஓடுகின்றாள் கண்ணகி. அந்த மனநிலை தூதை யிடத்து இல்லை. வசந்தசேனையின் அணிகலன்களைக் கொன்று பறித்த கள்வன் எனப் பொய்ச்சாட்டுச் சுமத்தப்பட்டது தெரிந் தும் வீட்டிலிருந்து சிதைமூட்டி உயிர்விடத் துணிந்தனளே யன்றி அரசன் பாலகன் முன் வழக்காடப் புறப்படவில்லை. இவ்வாறு கண்ணகியை மறக்கற்பியாக இளங்கோவும், தூதையை அறக்கற்பியாகச் சூத்திரகரும் வேறுபடப் படைத் துள்ளனர்.

சிலப்பதிகாரத்திற் கொலைக்களக்காதையும் வழக்குரை காதையும் இலக்கியத்திறம் உடையனவாதல் போல, மிருச்ச கடிகத்தில் வழக்கினை நீதிபதி ஆராயும் ஒன்பதாம் அங்கமும் சாருதத்தன் வசந்தசேனை தூதை மூவரும் ஒன்றுபடும் பத்தாம் அங்கமும் நாடகச் சுவையனவாக உள. இப்பகுதிகள் இரு நூல்களின் ஒப்புக்கும் உறழ்வுக்கும் விருந்தளிப்பவை. கோப்பெருந்தேவியின் சிலம்பு கள்வன் கையில் இருந்தால் அவனைக் கொன்று கொண்டு வருக என்று ஊர்காப்பாளருக்கு

Koviloor Digital Library

ஆணையிடுகின்றன் நெடுஞ்செழிய பாண்டியன். இவர்களுள் சிலர் அறிவுடையவர்கள், 'சிலர் அறிவிலிகள், கொல்லத் துடிப்பவர்கள், உணர்ச்சிமிக்கவர்கள். பொற்கொல்லனின் சொல்லாரவாரத்தில் கிளர்ந்தெழுந்த ஒரு கல்லாக் களிமகன் ஏனை ஊர்காப்பாளரின் இசைவை எதிர்பாராமலே கோவலனைக் குறுக்கே வெட்டிவீழ்த்தினன். அரசன் எச்சப் படுத்தி மொழிந்த கொலைத்தண்டனையை உணர்ச்சி மீதூர்ந்து ஒரு நொடியில் செய்து முடித்தான். அதனுல் பல இல்லறக் குடும்பங்கள் பாழாயின. மண்ணக மடந்தை பெருந் துயருற்றனள். கோடாப் பாண்டியன் செங்கோல் சிறு கோலாயிற்று. வேண்டாத இவ்வுணர்ச்சிநிலை மிருச்சகடிகத்தில் இலது. சண்டாளர் எனப்படும் காவலர்கள் சாருதத்தனை நோக்கி, கொலைப்பட ஆயத்தமாக இரு என்று ஐந்துமுறை இடைவிட்டு இடைவிட்டு எச்சரிப்பதையும், அரசன் கட்டளையை நிறைவேற்றுவதே தங்கள் பணியாக இருந்தாலும் கொலையை மிக விரைவாகச் செய்யலாகாது என்று அஞ்சுவதையும், காலங்கடத்தினுல் மெய்யான உண்மை வேருென்றிருப்பின் வெளிப்படலாம் என்று நம்புவதையும் காண்கின்றோம். இந் நிலையில் ஒரு சண்டாளன் சொல்வது சான்றோன் சொல்வதாக, உயர்ந்த பண்பாக அமைந்துள்ளது.

'என் தந்தை இறக்கும் பொழுது என்னை நோக்கி, மகனே! வீரக! உனக்குக் கொலைத் தொழில் முறை வருமாயின் கொலைப்பட வேண்டியவனை விரைந்து கொன்று விடாதே. ஒரு சமயம் எவனுவது ஒரு நல்லோன் போதிய பொருளைக் கொடுத்து கொலைக்குரியானை விடுவிக்கவும் கூடும்; ஒருகால் அரசனுக்கு மகன் பிறக்க அதுபற்றி உண்டாம் பிறந்தநாட் கொண்டாட்டம் காரணமாகக் கொலைத்தண்டம் எய்திஞேரெல்லாம் விடுதலையடையவுங் கூடும்; ஒருவேளை யானை மதத்தாற் கட்டுத்தறியை முறித்துச் செல்ல அதுபற்றியுண்டாம்

Koviloor Digital Library

குழப்பத்தால் கொலைக்குரியான் விடப்பெறவுங் கூடும்; ஒருசமயம் அரசுநிலை மாறுதலால், கொலைத்தண்டனை எய்தினோரெல்லோர்க்கும் விடுதலை ஏற்படவுங்கூடும்'.

இச்சண்டாளச் சான்றோன் மொழிந்த அறிவுரை செங்கோலான நல்லாட்சிக்கு இன்றியமையாதது. காலங் கடத்தியமையால் குற்றமற்ற சாருதத்தன் பின்னர் விடுதலை பெறுகின்றான். பாண்டியன் ஊர் காவலர் கொலை செய்வதைச் சிறிதும் தாமதிக்கா வேகத்தால், மாசற்ற கோவலன் மடியவும், ஏவிய பாண்டியன் ஆவி பிரியவும், முடித்த கண்ணகி கூந்தல் விரியவும் எத்துணையோ தீய விளைவுகள் இத் தமிழ் மன்பதை யில் ஏற்பட்டுவிட்டன. இவ்வொப்பீட்டில் உச்சயினி நகரச் சண்டாளர்கள் நம் போற்றுதலுக்கு உரியோர் ஆகின்றனர்.

எல்லாம் ஊழால் நடப்பது என்பது இரு நூல்களுக்கும் உடன்பாடே. ஆனால் சிலப்பதிகாரம் முழுதும் ஊழின் அதிகாரம் தலைவிரித்தாடுகின்றது. கண்ணகி முதலான எல்லா மாந்தர்களும் ஊழ்வயப்படுகின்றனர். நல்வினை தீவினை என வினை இரண்டிருந்தாலும் நம் சிலப்பதிகாரம் உருத்து வந்து ஊட்டும் தீவினையையே — ஊழின் ஒரு பக்கத்தையே நமக்கு வலியுறுத்திச் செல்கின்றது. நல்வினை என்னும் ஒரு பாங்கும் உண்டு என்பதனை இளங்கோ கதையின் அடிப்படை யாகப் புலப்படுத்தவில்லை.

மிருச்சகடிகத்தில் தீயூழ் தலைதூக்கியாடவில்லை. வசந்த சேனை வண்டிமாறி ஏறுதல், கயவன் சகாரனால் கழுத்து நெறிக்கப்படல், சாருதத்தன் பழிபெறல், கொலைத்தண்டனை பெறல், தூதை நெருப்பிடைப் புகல் என்றின்ன தீவினைத் தாக்குகள் இருந்தாலும், கொடையறஞ் செய்த சாருதத்தனை நல்லூழ் தொடர்ந்து வந்து ஒவ்வொரு கட்டத்தும் உடனிருந்து காத்ததாகவே வடமொழி நாடக ஆசிரியர் சூத்திரகர் படிப்பவர் தம் உள்ளத்துக்குக் காட்டுகின்றார். நீர் இறை

Koviloor Digital Library

சால்கள் ஒன்று ஏற ஒன்று இறங்குவது போல நல்லூழும் தீயூழும் வாழ்வில் மாறி மாறி வரும் என்று இருபக்கத்தையும் ஒருங்கு புலப்படுத்தத் தவறவில்லை. (இங்ஙனம் இளங்கோ உருத்து வந்து ஊட்டும் தீயூழையே புனைவதற்கும், சூத்திரகர் உவந்து வந்து ஊட்டும் நல்லூழைப் பாராட்டுதற்கும் கதைத் தளமே வேறுபாடாகும்.) கொலைத்தண்டனை பெறுவதற்கு முன்னே சாருதத்தன் குற்றமில்லாதவன் என்ற உண்மை வெளியாகின்றது. உயிர் பிழைத்தலால் மிருச்சகடிகம் நல்லூழைப் புகழ்கின்றது. 'தீவினை முதிர்வலைச்சென்று பட்டிருந்த கோவலன்' என்றபடி முற்பிறப்புத் தீயூழ் கோவலனைக் குற்றமிருப்பினும் இல்லாதிருப்பினும் ஒரு சாக்கிட்டு அவனைக் கொன்றுவிடும் ஆதலின் தீயூழின் வலியை வலியுறுத்த வேண்டிய கடமை இளங்கோவிற்கு உரியதாயிற்று. இந்த அடித்தளம் இரு நூலுக்கும் வேற்றுமையாதலின் ஊழின் புனைவும் வேறுபடலாயின.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தோடு ஒத்தும் உறழ்ந்தும் பாராட்டத்தக்கதாய் அறிவையள்ளும் மிருச்சகடிகம் என்னும் இவ்வடமொழி நாடகத்தினை அரைநூற்றுண்டுக்குமுன் மேலைச் சிவபுரி சன்மார்க்கசபையின் வெளியீடாக மண்ணியல் சிறுதேர் என்ற தூய வண்ணத் தலைப்பில் பாட்டும் உரையும் விரவ மொழிபெயர்த்துத் தமிழாக்கம் செய்தருளிய எம் பேராசிரியர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசனுர் திருவடிகட்கு வணக்கம் கூறி இவ்வுரையை முடிக்கின்றேன்.

Koviloor Digital Library

3. இருவகைச் சிலப்பதிகாரம்

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று ஓர் ஆரம் படைத்த தமிழ் நாடு' என்றார் பாரதியார். இச்சிலப்பதிகாரம் இளங்கோ அடிகளால் 1800 ஆண்டுகட்குமுன் இயற்றப் பட்டது என நாம் அறிவோம். நாம் வாழும் இந்நாளில் 1968இல் இன்னொரு புதிய சிலப்பதிகாரம் தோன்றியிருக்கின்றது. இதனை 'நெஞ்சை வெல்லும் சிலப்பதிகாரம் என்று ஓர் நேர்மை படைத்த தமிழ்நாடு' என்று பாராட்டுவோம். இப்புதிய சிலம்பைப் படைத்தவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி. கலைஞர் 1953இல் திருச்சிராப்பள்ளிச் சிறையகத்துக் கடுங்காவலோடு வதிந்தகாலை, அஃதாவது தம் 29 ஆவது வயதில் இளங்கோவின் சிலப்பதிகாரத்தைக் கலையார்வத்தோடு திறனாய்ந்தார். உரைகளோடும் வரலாற்றோடும் வைத்து நிகழ்ச்சிகளை அலசிப் பார்த்தார். 15 ஆண்டுப் பார்வையின் விளைவே கலைஞரின் உரை நடைச் சிலப்பதிகாரம். பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த ஞான்று இப்படைப்பு வெளியாயிற்று. முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாதுரையின் முன்னுரைப் பதிகத்தைப் பெற்ற சிறப்புடையது இச்சிலப்பதிகாரம்.

'சேரமான் தம்பி தந்த சிலப்பதிகாரத்தை என் தம்பி கருணாநிதி தனது வளமிகு செழுந்தமிழ்ச் சொல் திறத்தால் நாடகமாகத் தருவது பொருத்தமானதே' எனவும் 'இந்நாடக நூலை வெளிக்கொணர்வதன் மூலம் தம்பி கருணாநிதி தமிழ்

Koviloor Digital Library

இலக்கியத்திற்கு நற்பணி ஆற்றியுள்ளார்' எனவும் அறிஞர் அண்ணா முன்னுரையில் தம்பியுறவு சொல்லிப் பாராட்டுவர். இவ்வுறவுணர்ச்சி இந்நாடகத்தை, எழுதும்போது கலைஞர்க்கும் உண்டு. இளங்கோ செங்குட்டுவனை 'அண்ணா, அண்ணா' என்று சொல்லும் போதெல்லாம் கலைஞர் தம் அண்ணாவையே காண்கின்றார். செங்குட்டுவனின் தேவியை அண்ணி என்று சுட்டும்போதெல்லாம் இராணி அண்ணியைக் காண்கின்றார் என்ற பாசம் நமக்குப் புலனாகின்றது.

கலைஞரின் பற்று

கலைஞரின் சிலப்பதிகாரப்பற்றும் பூம்புகார்ப் பற்றும் நற்றமிழ் நாடு அறிந்தவை. அத்தோன்றலிடம் காணப்படும் தமிழூற்றம், தமிழாழம், தமிழ்மறம் எல்லாம் சிலப்பதிகாரச் செய்யில் விளைந்தவை.

'பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய என்ப தல்லதை
ஒடுக்கங் கூறார் உயர்ந்தோர் உண்மையின்'

என இளங்கோவடிகள் புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினம் என்றும் நிலையான தலைநகர் எனவும், அதற்குக் காரணம் என்றும் உயர்ந்தோர் இருப்பது எனவும் பாடிச்சென்றுள்ளார். அங்ஙனம் பாடியது உண்மையே என்பார் போல் உயர்ந்த தமிழ் நெஞ்சம் வாய்ந்த நம் முதலமைச்சர் கருணாநிதி இன்று நம் கண்ணெதிரே பூம்புகார் நகரத்தைச் சிலப்பதிகாரக் குறிப்புக்களின்படி உருவாக்கி வருவதால் அறிந்து கொள் கின்றோம். அகக் கண்ணாற் கண்ட பூம்புகாரை முகக் கண்ணாலும் உலகத்தார் காண வேண்டும் என்று பெருந்திட்டம் கோலும் கலைஞரை நன்றியொடு வாழ்த்துகின்றோம்.

Koviloor Digital Library

'பூம்புகார் நகரத்துப் புகழும் பெயரும் யாராலும் மூழ்க அடிக்கப்பட முடியாதவை. சேர இளவல் செந்தமிழ் வித்தகர் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் உள்ளவரையில் பூம்புகாரின் புகழும் மதுரையின் மாண்பும் வஞ்சியின் வீரமும் பொதுவாகத் தமிழகத்தின் சிறப்பும் தாழாது தாழாது'

என்பது கலைஞரின் உள்ளத்துணிவு. அள்ள அள்ளக் குறையாது கூடும் இத்துணிபுணர்ச்சியைக் கலைஞரின் எண்ணம் சொல் செயலெங்கும் முரணின்றிக் காண்கின்றோம்.

பாராட்டு

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கலைஞர்க்கு அளித்த டாக்டர் பட்டத்தினைப் பாராட்டும் பொருட்டுச் சென்னைக் கலைவாணர் அரங்கில் 17—10—1971இல் நிகழ்ந்த பெருங் கூட்டத்தில் யானும் கலந்து கொண்டேன். அஞ்ஞான்று கலைஞரின் சொற்றிறம், புலமைநுணுக்கம், கவிதைப் படைப்பு முதலான பெற்றிகளை எடுத்துச் சொல்லிவருகையில், அவர் எழுதிய சிலப்பதிகார நாடகம் தனித்து ஆராய்வதற்குரிய இலக்கியத் தகுதியுடையது என்று குறிப்பிட்டேன். நான்கு ஆண்டுக்குமுன் சுட்டிய குறிப்பினை இன்று ஒருவாறு விரிந் துரைக்கும் வாய்ப்புப் பெற்றமைக்கு மகிழ்கின்றேன். ஒருவாறு என்று ஒருசொல் பெய்ததற்குக் காரணம் இந்நாடகத்தைப் பலவாறு ஆராயலாம் எனினும் இக்கட்டுரைக்கண் ஒரு கூறே இன்று என்னால் ஆராயப்படுவது என்று காட்டுதற்கு.

கலைஞர் இன்று வாழும் ஆசிரியர், பலகலைகளையும் திறனுய வல்லவர், செல்வாக்கு மிக்க எதிரான ஒரு கிழமையிதழ் பாராட் டியதுபோலத் தமிழ்ப் புலமை சான்றவர், ஆற்றலொடு விளங் கும் முதலமைச்சர். அவர் எழுதிய ஒரு நாடக நூலைத் திறன் செய்வது அருமை கலந்த பெருமையாகும். உண்மைத் திறனெறிகளை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பும் ஆகும்.

Koviloor Digital Library

இலக்கியப் பெருநோக்கில் இக்கட்டுரை வரையப்படுதலின், இதனைப் படிப்பவரும் இந்நோக்கோடு படிப்பாராக என்று கேட்டுக்கொள்கின்றேன். 'பாம்பு அறியும் பாம்பின் கால்' என்றபடி இந்தக் கட்டுரை மாணவ உலகிற்கு ஒரு விருந்தாகும் என்று நம்புகின்றேன்.

இலக்கிய ஆராய்வு என்பது படைத்த புலவன் உள்ளத்தை உள்ளபடி எடுத்துக்காட்டுவது. அதுமட்டுமன்று. புலவன் உள்ளம் பொருந்திய உள்ளந்தானா? என்று உள்ளத் தளத்தையும் அசைத்துப் பார்ப்பது. உள்ளபடி எடுத்துக் காட்டுவதால் எழுத்தாளனை மதிக்கின்றோம். உள்ளத்தை அசைத்துப்பார்ப்பதால் புலமையுரம் பெறுகின்றோம்.

கலைஞரின் சிலப்பதிகாரம் உரைநடையில் யாத்த ஒரு நாடக நூல்: இந்நூலில் 1. கலைஞரின் தமிழ் நடையை ஆராயலாம்; 2. நாடகவுத்திகளை விரிவாக ஆராயலாம்; 3. பாத்திரப் பண்புகளை ஆராயலாம்; 4. இளங்கோ சிலப்பதிகாரத்துக்கும், கலைஞர் சிலப்பதிகாரத்துக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைப் பலமுனைகளில் அலசலாம். எனது இக்கட்டுரை, இறுதியில் கூறிய ஒற்றுமை. வேற்றுமை களை வெளிக்காட்ட முற்படுகின்றது.

கலைஞரின் முன்னுரையில் ஒரு பகுதி

'மூலக்கதையின் ஆசிரியர் கொண்ட கருத்துக்கு மேலும் வலுவூட்டுவது போன்ற மாற்றங்களும் – அவரால் படைக்கப் பட்ட பாத்திரங்களின் பண்புகெடாமல் தரப்படுகின்ற உருவக மும் – மறுக்கத்தக்கன அல்ல. காலத்திற்கேற்ற சிலமாற்றங் களைக் கதையின் நோக்கம் கெடாதவாறு அமைப்பதும் தவறல்ல. மூலக்கதை ஆசிரியர் விட்ட கருத்துக்களையோ, காட்டத் தவறிய காரணங்களையோ அடிப்படைக்குக் குந்தக மின்றிப் புகுத்திடுவதும் குற்றமல்ல. இந்த நோக்கத்துடன்

Koviloor Digital Library

நான் சில மாறுதல்களைச் சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பிய மாக்கும் இந்தமுயற்சியில் கையாண்டிருக்கின்றேன்' சில மாறுதல்களையே செய்திருப்பதாக கூறும் கலைஞர்தம் முன்னுரை அடக்கமான முன்னுரை என்பது என் கருத்து. தொடக்கம், நடு, இறுதி என்ற நூலமைப்பிலும் பாத்திர வடிப்பிலும் கதை நிகழ்ச்சியிலும் உணர்ச்சியிலும் கட்டுமானப் பொருளிலும் கதைநோக்கிலும் தொட்ட தொட்ட இட மெல்லாங் கலைஞர் சிலப்பதிகாரம் இளங்கோ சிலப்பதிகாரத்தி லும் வேற்று வீற்றுப் பாங்கு உடையதாகவும் தனித்தன்மை யாகவுமே நான் காண்கின்றேன். இளங்கோ காப்பியம் மூல நூலாகவும் கலைஞர் நாடகம் அதன் வழித்தட நூலாகவும் எனக்குத் தோன்றவில்லை. இந் நாடக நூல் ஒரு மூல நன்னூலாகவே இலங்குகின்றது. இப்புதுக்கோட்பாட்டை நிறுவுவதற்குச் சான்றுகள் நிரம்பவுள.

நாடக நூலமைப்பு

இந்நூல் 38 காட்சிகள் கொண்டது. மேடையும் நடிப்பும் நோக்கிக் காட்சிகள் விறுவிறுப்பாக அமைக்கப்பட்டுள்ளன. காட்சி சேரநாட்டுத் தலைநகரான வஞ்சி மூதூரில் தொடங்கு கின்றது. அம்மூதூரிலே இறுதியில் முடிகின்றது. செங்குட்டு வனில் தொடங்கிச் சேரன் செங்குட்டுவன் வாழ்க என்றும் முடிகின்றது. சிலப்பதிகாரக்காப்பியத்தில் இளங்கோ துறவு இறுதிக் காதை இறுதியில் இடம் பெற்றிருப்ப, இந் நாடகத்தில் அது தொடக்க இடம் பெறுவதையும், செங்குட்டுவன் பிறந்தநாள் விழாவில் துறவுச் செயல் தோன்றுவதையும் காண்கின்றோம். கண்ணகியின் உரைசால் புகழுக்குச் செங்குட்டுவன் வடகற்சிலை எடுத்ததைக் காட்டிலும் இளங்கோ தென்றமிழ்க் காப்பியம் படைத்தது பெருங்காரணம் ஆதலின் ஆசிரியன் சிறப்பினை 'விழாவும் விளைவும்' 'இளங்கோ துறவு' என இரு காட்சிகளில் கலைஞர் வீறு

Koviloor Digital Library

பெறப் பேசுகின்றார். 'இளங்கோ. இளங்கோ அடிகளாக மாறி நிற்கிறான்' என்ற தொடராற்றல் கலைஞரின் தமிழாற்றலுக்கு ஒரு சான்று. காப்பியக் கடைசியில் ஒளிந்திருந்த இளங்கோவை ஒரு பாத்திரம் ஆக்கி நாடக நாயகனாக உயர்த்துவர் கலைஞர். சிலப்பதிகாரம் கண்ணகியின் மண மங்கலத்தில் தொடங்கி இளங்கோ துறவில் முடிந்திருப்ப, கலைஞரின் நாடகச் சிலம்போ இளங்கோ துறவில் தொடங்கி கண்ணகியின் கடவுள் மங்கலத்து முடிவதைப் பார்க்கின்றோம். இளங்கோவின் காதைப் பெயர்கள் வேறு. கலைஞரின் காட்சிப் பெயர்கள் வேறு. அவர் தலைப்புக்களை இவர் யாதும் பின்பற்றாமையினாலே, கலைஞரின் சிலப்பதிகாரம் மூலத்தன்மை யுடையது என்பது வெளிப்படை.

குன்றக் குறவர்கள் கண்ணகி கோவலனொடு வான்வழிச் சென்ற இறும்பூதான செய்தியைச் செங்குட்டுவனிடம் கூறும் போது உடனிருந்தவர்கள் யார் யார் என்று காண்பது சிலப்பதிகாரச் சிக்கல்களுள் ஒன்று. தண்டமிழ் ஆசான் சாத்தனார், இளங்கோவடிகள் இருவருமே அப்போது இருந் தனர் என்று கொள்வாரும் உண்டு. இளங்கோ அப்போது இருந்திலர் எனக்கொள்வாரும் உண்டு. இதனைச் சிலப்பதிகார மூலத்தோடும் உரைகளோடும் ஒட்டி ஆராய்ந்த கலைஞர் அதனைச் சிறிது வேறுபட நாடகப் பாங்கில் அமைத்துக் காட்டுவர். இளங்கோ மலைக்குறவர்களை எதிர்பாராது வழி யிடைக் கண்டார் எனவும், அவர்களையும் அழைத்துக் கொண்டு மலைவளம் காண முன்னரே வந்திருந்த அண்ணன் செங்குட்டு வனையும், அண்ணி வேண்மாளையும், ஆசான் சாத்தனாரையும் சென்று பார்த்தார் எனவும் இந்நால்வர் முன்னிலையில் மலைக் குறவர்கள் தாம் கண்ட கண்ணகி நிகழ்ச்சியைச் சொல்லினர் எனவும் கலைஞர் நூல் தெளிவு செய்யும். இதனால் 'இளங்கோ வேண்மாள் உடனிருந்தருளி' என்ற சிலம்பின் அடிக்குக் கலைஞர் துணிந்த உரைத்தெளிவு புலனாகும். சிலம்பின்

Koviloor Digital Library

தோற்றம் எனப்பெயரிய ஐந்தாங்காட்சி சிலப்பதிகாரக் காப்பியம் எழுதத் தொடங்கியதைக் குறிக்கின்றது. இதனால் கலைஞரின் சிலப்பதிகாரம் இளங்கோவையும் அவரின் சிலப்பதிகாரத்தையும் உள்ளடக்கியது என்பது போதரும்.

'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக'

என்ற பதிகத் தொடருக்கு இருபொருள் உரைப்பதை நாம் அறிவோம். எனினும் நாடகக் கலைஞர் நமக்கு ஒரு வழியே காட்டுகின்றார். 'முடியுடை மூவேந்தர்க்கும் இக்கதை உரியதாகையால் இளங்கோவடிகள் இதனை எழுதுவதே பொருத்தமாகும்' என்று சாத்தனார் தெளிவாகச் சொன்னார் எனவும் 'இளங்கோ அதற்கு இலக்கியம் படைப்பான்' 'என்ன தம்பி சரிதானே' என்று செங்குட்டுவன் இளங்கோ பக்கம் திரும்பிக் கேட்டான் எனவும் அண்ணன் சொல்லுக்கு உடன்படுவாராகி 'சரி அண்ணா' என்று இளங்கோ இசைந்தார் எனவும் இந் நாடகப் போக்கு அமைகின்றது.

காப்பியக் கதையும் நாடகக் கதையும்

இளங்கோவடிகட்கும் கலைஞர்க்கும் தமிழுணர்வில் தமிழ் நாகரிகத்தில் தமிழ்க் கலைகளில் தமிழகப் பற்றில் தமிழின மேன்மையில் வேறுபாடில்லை எனினும் சமுதாயக் கொள்கை பகுத்தறிவுக் கொள்கை சமயக் கொள்கை என்றின்னவற்றில் அடிப்படையான வேறுபாடு மிக்குள. அடிகள் சிலவற்றில் நம்பிக்கை கொண்டாரோ இல்லையோ, நிமித்தங்களையும், அப்பால் நிகழ்ச்சிகளையும், சமுதாயத்தில் பலர் கொண்ட கொள்கைகளையும், பழக்க வழக்கங்களையும் தம் காப்பியத்துக்குக் கட்டுமானப் பொருள்களாகத் தழுவிக் கொண்டுள்ளார் என்பது மறுக்க இயலா உண்மை. பெரியார் அண்ணா வழி வந்த கலைஞர் இவ்வகையில் இளங்கோ வழிப்

Koviloor Digital Library

புகார் என்பதும் வெளிப்படையான உண்மை. வேறுபட்ட இவ்வுண்மைகளின் விளைவு என்னும்? இளங்கோ மேற்கொண்ட கட்டுமானப் பொருள்கள் கலைஞர் நாடகத்து வெட்டுமானப் பொருள்கள் ஆகிவிடும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டியதே. மேலும் இவர் ஆளும் கட்டுப் பொருள்கள் புதியனவாக இருக்கும் என்பதனையும் நாம் எதிர்பார்க்க வேண்டும். இதனால் கதைச் செலவிலும் பாத்திரப் பண்பிலும் பெருமாற்றங்கள் ஆசிரியர்தம் கொள்கைகட்கு ஏற்பப் புகுகின்றன. கொள்கை வேறாகும்போது செல்கையும் வேறாகத்தானே இருக்கும்?

கலைஞர் தம் நாடக நூலில் மதிக்கு இடமுண்டேயன்றி விதிக்கும் நிமித்தத்துக்கும் இடமில்லை. 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பது சிலப்பதிகாரக் காப்பியத்து ஓர் உயிரான பரவலான கொள்கை. கோவலன் மாதவியைப் பிரியுமிடத்தும், அவன் கண்ணகியொடு மதுரைக்குப் புறப்படுமிடத்தும், கல்லாக் களிமகன் அவனை வெட்டுமிடத்தும் இன்னும் பல இடங்களிலும் ஊழ்வினைப் பேச்சைப் பார்க்கின்றோம். ஊழ்வினையைச் சுட்டாத பாத்திரம் இல்லை என்னும் அளவிற்குச் சிலப்பதிகாரம் ஊழதிகாரமாக மாறி நிற்கின்றது. கலைஞர் நாடகத்தில் ஊழ் ஒளிந்த இடம் தெரியவில்லை. இளங்கோவே நிமித்தத்தையும் ஊழையும்தந்தை சேரலாதன் முன் இகழ்வதாகக் கலைஞர் படைத்துக் காட்டுகின்றார். 'பொய்க்காது படைத்தவர்களுக்கு நிமித்திகர் வாக்குப் பொய்க்காது. இது உண்மைக்காது, அவர் ஆரூடம் கேட்டுக் கலங்காது' எனவும் 'விதிவிட்ட வழியில் நடப்போமென்று இருந்தால் வேதனைக் களமாகி விடும் தமிழ்நாடு' எனவும் வரும் இளங்கோ பேச்சு உண்மையில் கலைஞரின் பேச்சு'.

கீரியைக் கொன்ற மனைவியை விட்டுச் சென்றான் அந்தணக் கணவன். கருமக் கழி பலமாகிய வடமொழி

Koviloor Digital Library

ஏட்டினைப் பெரும் பொருள் கொடுத்து வாங்கிக் கானஞ் சென்ற கணவனைக் கூட்டி வைத்தான் கோவலன் என்று சிலப்பதிகாரம் கூறும். கலைஞரின் கோவலனோ வினைவழிச் செல்லவும் இல்லை, பொருள் கொடுக்கவும் இல்லை, விளக்கஞ் சொல்லி அந்தணனைத் திருத்துகின்றான்.

> 'அந்தணரே! பாம்பு குழந்தையைக் கடிக்குமா கடிக்காதா என்று தெரியாமலே கீரி அதைக் கொன்று விட்டது. அதுபோலவே கீரி குழந்தையைக் கடித்ததா, கடிக்கவில்லையா என்று தெரியாமலே உமது மனைவி அதைக் கொன்றுவிட்டார்கள். அதனால் சரிக்குச் சரி ஆகிவிட்டது. உமது மனைவியொடு வீட்டுக்குப் போவதே முறை'

என்பது மதி வழிப்பட்ட விளக்கம். கீரிக்கதையை சிலப்பதிகார மதுரைக் காண்டத்தில் மாடலன் கோவலனுக்கு முன் கண்ணகி கேட்கச் சொல்லுகின்றான்; கோவலன் இப்பிறப்பில் செய்தன வெல்லாம் நல்வினைகளே என்று காட்டுவதற்குச் சொல்லு கின்றான். கலைஞரின் நாடகத்தோ எனின் கீரி நிகழ்ச்சி புகார் நகரத்துக் கடற்கரையில் மாதவி கோவலன் அருகிருக்க நடப்பதாகக் காண்கின்றோம். பிரிந்த பார்ப்பனியை அவள் கணவனோடு சேர்த்துவைத்த கோவலனுக்குத் தான் விட்டுப் பிரிந்த கண்ணகியை நினைவூட்ட இக்கீரிக்கதை பயன் படுவதாகவும் காண்கின்றோம். அந்தணன் கானம் போனான் என்று இளங்கோ கூற, அவன் கடல் வழிப்போனான் என்று கலைஞர் கூறுவர். இந்த ஒரு சிறு கதையளவில் இரண்டு அதிகாரத்துக்கும் இத்துணைவேறுபாடு இருக்குமெனின், அம்மம்ம, கண்ணகிப் பெருங்கதையோட்டத்தில் எவ்வளவு எவ்வளவோ மாற்றம் இருக்கத்தானே செய்யும்? ஆதலின் விதிவழிச் சிலம்பும் மதிவழிச் சிலம்பும் தனிமூலங்கள் என்று கொள்வதே தெளிந்த ஆராய்ச்சி நெறியாகும்.

Koviloor Digital Library

இளங்கோவின் சிலப்பதிகாரக்கதை மிகச் சுருக்கமானது; பாத்திரங்களின் பேச்சும் சுருக்கமானது. முதற்காதையில் கண்ணகி கோவலன் மணவினை, இரண்டாம் காதையில் அவ் விருவர்தம் இன்ப இல்லறவுறவு, மூன்றும் காதையில் 16 அடிகளில் மாதவி கோவலன் உறவு. புகார்க் காண்டம் 1500 அடிகள் கொண்டிருந்தாலும் கதையும் பேச்சும் எல்லாம் 200 அடியளவில் சுருக்கமாக முடிந்துவிடுகின்றன. காப்பியச் சிலம்பு படைத்த இளங்கோவிற்கு வருணனை நாட்டமேயன்றிக் கதை நாட்டம் குறைவு. நாடகச் சிலம்பு எழுதிய கலைஞர்க்குக் கதை நாட்டமும், பாத்திரங்களின் உரைநாட்டமும் மிகுதி. அது காப்பிய இயல்பு; இது நாடக இயல்பு.

கலைஞர் சிலம்பில் கண்ணகி கோவலன் திருமணம் இடம் பெறவில்லை. வணிகத்தின் பொருட்டுக் கிரேக்க உரோமநாடு சென்று திரும்பிய கோவலனைக் கண்ணகி கடற்கரையில் வரவேற்கின்ருள். அலைகள் தழுவ இருவரும் தழுவி மகிழ்ப. கோவலனுடு ஒரு பெருஞ் செல்வன் 68 வயதுக் கிரேக்கக் கிழவனும் வருகிருன். அவன் கோவலனிடம் முத்தமிழில் இயலும் இசையும் கற்றவன். கூத்து மட்டும் தெரியாதவன். மாதவி நடனம் காணக் கோவலன், கண்ணகி, கிழவன் மூவரும் செல்கின்றனர். சோழவரசன் மாதவிக்குப் பரிசாக வழங்கிய 1008 கழஞ்சுப்பொன்மாலையை வாங்குகிறவன் மாதவிக்குக் காதலன் ஆகலாம் என்று கூனி அரசவையில் அறிவிக்கின்ருள். கிழவக் கிரேக்கன் அத்தொகையைக் கொடுக்க முன்வரவே, மாதவி திடுக்கிடுகின்ருள். வசந்தமாலை கிழவனுக்குக் கொடுக்க இசையவில்லை. சித்திராபதி கிழவன் பக்கம். சொன்னபடி மாலைக்குப் பணங்கொடுக்கிறேன்; சொன்ன சொல்லைக் காப்பாற்றுங்கள் என்று கிழவன் துடிதுடிக்கின்ருன். இப் போராட்டத்தில் அங்கிருந்த கண்ணகி 'ஐயோ பாவம் மாதவி... அத்தான், நீங்கள் தான் போய் அவளைக் காப்பாற்றுங்களேன்' என்று கோவலனை ஏவுகின்ருள். கிழவனை இளங்கிளி மணப்பது

Koviloor Digital Library

தமிழ்நாட்டுப் பண்பு அன்று என்ற தமிழ் நாகரிகத்தை நிலை நாட்டுவதற்காகவே கோவலன் உரியபொன் கொடுத்து மாதவியின் மாலையை வாங்கிக் கொண்டு கண்ணகியொடு தன் வீடு செல்கின்றான். மாதவி தன்னை மணந்துகொள்ள வேண்டும் என்று வசந்தமாலையைக் கோவலனிடம் தூதாக அனுப்ப, அவன் வரமுடியாது என்று மறுக்க அந்நிலையில், கண்ணகி கோவலனிடம் 'நீங்களே மாதவியிடம் நேரிற் சென்று நிலையை விளக்கிச் சொல்லுங்கள். அவள் மனத்துக்கு ஓர் அமைதி ஏற்படும்' என்று போகச் செய்கின்றாள் மாதவி இல்லம் சென்ற கோவலன் அங்கேயே இருந்த கோவலன் ஆனான். 'என் அக்காளாகிய கண்ணகி வாடிக் கொண்டிருப் பாள். எத்தனை முறை சொல்லுகிறேன் போய்ப் பார்த்து வாருங்கள்' என்று மாதவி கட்டாயப்படுத்தக் கோவலன் ஒவ்வொருகால் வேண்டா வெறுப்பாகக் கண்ணகியைப் பார்க்க வருவான்.

இளங்கோ இவ்வாறு கதை கூறவில்லை என்பது வெளிப்படை. கிழவன் என்ற ஒரு பாத்திரமோ, கண்ணகியும் மாதவி நடனம் பார்த்தலோ, மாதவி வீட்டுக்குக் கண்ணகியே கோவலனைப் போகச் சொல்லுதலோ இல்லவே இல்லை. எனினும் கலைஞர் இவ்வாறு அறவே கதை மாற்றம் செய்வதன் நோக்கம்யாது? நாட்டில் நிகழும் கிழவன் மணத்தைத் தடுக்க வேண்டும் என்ற சீர்திருத்தக் கொள்கையுடையவர் கலைஞர். அதற்குக் கிரேக்கப் பாத்திரம் வாய்ப்பாயிற்று. கோவலனை நல்ல வணிகனாக, நல்ல அறிஞனாக, நல்ல முயற்சியாளனாக இளங்கோ படைக்கவில்லை. கண்ட இளம் பெண்கள் ஆசைப்படும் அழகனாகவும், அவனும் அப்பெண்களைக் காமுற்றுத் திரியும் ஊர்க் காமுகனாகவும், சிலம்பைக்கூட விற்க அறியா வணிகப் பேதையாகவும், எந்நிகழ்ச்சியிலும் தக்க மறுமொழி கூறமாட்டா வாய்மூடியாகவும் இளங்கோ சிலம்பில் கோவலன் இருக்கின்றான். இப்படைப்பு கலைஞருக்குப் பொருத்த

Koviloor Digital Library

மாகப் பட்டிலது. கண்ணகியின் கணவன் என்ற பார்வையில் கோவலனை ஆற்றல் படைத்தவனாகக் காட்டுகின்றார். மாதவியைக் கோவலன் விழையவில்லை. ஒவ்வா மணத்தைத் தடுக்கவே, அதுவும் கண்ணகி சொல்ல மாதவியின் மாலையை வாங்கினான். மீண்டும் அவள் சொல்ல மாதவி வீடு சென்றான். முடிவில் மாதவி இறந்தால் நாட்டியக்கலை தமிழகத்தில் இறந்து ஒழியும் என்ற உணர்ச்சியால் அவளை அணைத்தான். கலைஞர் நாடகத்தில் கோவலன் தொடக்க முதலே குற்ற மற்றவன் என்று காண்கின்றோம். அதுபோல் இளங்கோ வடித்த கண்ணகியும் கலைஞர் படைக்கும் கண்ணகியும் வேறு. மண்மகள் அறியா வண்ணச் சீறடியளாக, கலையறியாப் பேதையாக, யாதும் அறியா ஏழையாகக் காப்பியக் கண்ணகி இருக்கின்றாள். நாடகக் கண்ணகியோ, கோவலனை எதிர் பார்த்துக் கடலலையில் குதித்து விளையாடுவதையும், மாதவி நடனம் பார்க்கச் செல்வதையும், கோவலனுக்கு அறிவுரை கூறுவதையும், ஊடலாடி உரையாடல் நிகழ்த்துவதையும் அமைதிப் பெண்ணாக இன்றி இருபதாம் நூற்றாண்டுப் பாரதியின் புதுமைப் பெண்ணாக இலங்குவதையும் காண் கின்றோம்.

கதைத் திருத்தம்

'கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்
காவலன் உள்ளம் கவர்ந்தன என்றுதன்
ஊடல் உள்ளம் உள்கரந் தொளித்துத்
தலைநோய் வருத்தம் தன்மே லிட்டுக்
குலமுதல் தேவி கூடாது ஏக,

என்ற சிலப்பதிகாரத்தில் பாண்டியன் தேவி அரசவையில் ஊடிக்கொண்டு போனாள் என்று அறிகின்றோம். இது நாகரிகமாகப் படவில்லை. பொற்கொல்லன் தேவியின் சிலம்பை எவ்வாறு எவ்விடத்துத் திருடினான் என்று இக்காப்பியத்துக்

Koviloor Digital Library

குறிப்பில்லை. மேலும் ஒரு பொற்கொல்லன் திருடினுன் என்பதற்காக அவ்வினத்தில் ஆயிரம் பொற்கொல்லரைக் கொன்று களவேள்வி செய்ததும் அரசுமுறையாகச் செங் கோலாகத் தோன்றவில்லை. தமிழ்ச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையை ஆளும் பாண்டியன் தமிழ்ப்புலமை யுடையவனுகக் காட்டப்படவில்லை. இவற்றையெல்லாம் உள்ளிப் பார்த்தார் கலைஞர். பாண்டிமாதேவியின் ஒரு சிலம்பு பழுதுபட்டது எனவும், அதனைப் பொற்கொல்லனிடம் செம்மை செய்யக் கொண்டுசென்ற அதிகாரியே திருடினுன் எனவும், சிலம்பு செப்பனிட்டு உடனே வாராமையால் தேவி ஊடல் கொண்டு அரசவை வர மறுத்தாள் எனவும் பாண்டியன் நெடுஞ்செழியன் சிலம்பையும் மனைவியின் ஊடலையும் பொருட் படுத்தாது கல்வியின் பெருமை காட்ட ' உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், என்ற தமிழ்க் கவிதையை ஓலையில் எழுதிக் கொண்டிருந்தான் எனவும் கலைஞர் கதையோட்டத்தை முற்றும் மாற்றியமைப்பர். மாற்றி யமைத்துப் பொற்கொல் லினத்தை வழிவழி வந்த பழியினின்று காத்துப் போற்றினுர். மனைவியின் ஊடலாயினும் அது வீட்டளவில் இருக்க வேண்டுமேயன்றி நாட்டவையில் தோன்றக் கூடாது என்று அடக்கம் காட்டினுர். புறநானூற்றில் நெடுஞ்செழியன் பாடியிருந்த ஒரே ஒரு செய்யுளை நினைவுகொண்டு வாய்ப்பாகப் பயன்படுத்தித் தன்மனைவி ஊடலிலும் தமிழ்ப்பாடல் இனிது என மொழிப்பற்று ஊட்டினுர். 'செவிக்குத் தேனென இராகவன் புகழைத் திருத்திய கவிக்கு நாயகன் ' என்ற கம்பர் பாராட்டு நம் முதலமைச்சர் கலைஞர்க்கும் பொருந்துவதாகும்.

பகுத்தறிவுக் கதை

இருநூலிலும் மதுரை எரிபடுகின்றது சிலம்புக் காப்பி யத்தில் நெருப்புவானவன் தோன்றி மதுரையைக் கொளுத்து கின்றுன். சிலம்பு நாடகத்தில் கணவன் கொலைப்பட்டான் என்பது கேட்டுக் கண்ணகி மயங்கி ஓடும்போது குத்து

Koviloor Digital Library

விளக்குச் சாய்கிறது. குடிசை எரிகிறது. பெருங் குழப்பத்தில் அணைப்பவரின்றித் தீ பரவுகின்றது. சிலம்புக் காப்பியத்தில் தேவர்கள் கோவலனொடு சேரநாடு வந்து கண்ணகியை வானவூர்தியில் வானுலகு அழைத்துச் செல்கின்றனர். சிலம்பு நாடகமோ, கணவன் வருவான் வருவான் என்று கண்கலங்கி வேங்கை மரநிழலில் கண்ணகி பலநாள் நின்று கொண்டிருந்தாள்; திடீரென ஒருநாள் அவளைக் காணவில்லை என்று நிறுத்துகின்றது. சிலம்புக் காப்பியம் கண்ணகி கோயிலுள் வழிபடு தெய்வமாகவும் பார்ப்பனத் தேவந்தி பெண் பூசாரியாகவும் முடிக்கின்றது. சிலம்பு நாடகம் கற்புக் கண்ணகிக்குச் சிலைக்கல் இமயத்திலிருந்து கனகவிசயர் தலைமேல் தூக்கிவைத்துக் கொணர்ந்த மன்னனை வீரர்கள் 'சேரன் செங்குட்டுவன் வாழ்க' என்று வாழ்த்துவதோடு முடிகின்றது. கண்ணகியின் எதிர்காலம் குறிக்கும் சாலினியும், பாண்டியன் பழம் பெருமை புகலும் மதுரைத் தெய்வமும், கோவலன் முன்னோனை கடலினின்று காப்பாற்றிய மணிமேகலைத் தெய்வக் கதையும், செங்குட்டுவன் வானத்துச் சிலம்புக் காட்சியும், கோவலன் பழவினைக் கதையும் இன்னபிற அப்பால் நிகழ்ச்சிகளும் கலைஞர் தம் நாடகச் சிலம்பில் கடுகளவும் புக இடங்கொடுக்கவில்லை. அவர்தம் பகுத்தறிவுக் கோட்பாடே இதற்கெல்லாம் காரணமாம். அப்பால் நிகழ்ச்சிகளை ஒழித்து, தமிழ், தமிழ்ச்சால்பு, தமிழிலக்கியம், தமிழ்க்கலை, தமிழர் மானம், தமிழின் ஒற்றுமை, தமிழகப் பெருமை என்ற தமிழ்மைக்கு எல்லா இடத்தும் முதன்மை கொடுத்துப் பற்றினைத் தூண்டியுள்ளார் என்பதனை நான் அழுத்தமாகச் சொல்ல விரும்புகின்றேன்.

தமிழ் மயம்

துறவு பூண்டாலும், 'இன்பத் தமிழகத்தை விட்டு எங்கும் போய்விடமாட்டேன்' என்று இளங்கோ நாட்டுப்பற்றுக் காட்டுகின்றார். 'வாழ்க செந்தமிழர் தாயகம்' என்று முரசு

முழங்குகின்றது. தமிழ் கற்றுத் தமிழிலே எல்லாரோடும் பேசுகின்ருன் கிரேக்கக் கிழவன். 'பழத்துக்குள் இருக்கின்ற சுளேபோலச் சுவையேறும் செந்தமிழே' என்று அமுதுற மொழி கின்ருன் கோவலன். 'எல்லாம் தமிழ் மறை தந்த பழக்கம்' என அந்தணன் அறிந்துகொள்கின்ருன். 'தமிழரல்லவா தேவந்தி' என்று கண்ணகி தமிழின மறத்தைப் பாராட்டு கின்ருள். 'குழலேயும் யாழையும் வெல்லுகின்ற குறளேயும் வெல்லும் உன் குறுஞ்சிரிப்பு' என்று குழந்தை மணிமேகலே சீராட்டப் பெறுகின்ருள். 'மானம் காக்கும் தமிழச்சி நீ மனம் தளரலாமா' என்று தேவந்தி ஆறுதல் கூறுகின்ருள். 'தாய்மேல் ஆணையாக – தமிழ்மேல் ஆணையாக – தாயகத்து மக்கள்மேல் ஆணையாகத் தீர்ப்புக் கூறுவீர் என்று துடிக்கின்ருள் கண்ணகி. என் தமிழையல்லவா இகழ்ந்தார்கள்; முரசு தட்டுங்கள்; இமயத்தை முட்டுங்கள்; தமிழன் தோற்றதில்லே என்று முழங்குகின்ருன் செங்குட்டுவன். கலேஞர் கன்னித் தமிழ்க் கொள்கையர் ஆதலின், தமிழ்ப்பரப்பு இன்று கொள்ள வேண்டிய கோட்பாடு ஆதலின், இளங்கோ சிலம்பில் இல்லாத தமிழாட்சி கலேஞர் நாடக நூலில் வீற்றிருக்கக் காண்கின்ருேம்.

புதிய சிலப்பதிகாரம்

இளங்கோ சிலப்பதிகாரத்தின் வழி வந்தது தன் சிலப்பதிகாரம் என்று கலேஞர் ஒப்பியிருந்தாலும், கதை மாற்றத்தாலும், பாத்திரப் பண்பாலும், ஊழுக்கு இடங் கொடாமையாலும், தெய்வக்கூறு இன்மையாலும், பகுத்தறிவு நோக்காலும், சீர்திருத்தப் பாங்காலும், தமிழ்க்குறிக்கோளாலும் கலேஞர் சிலப்பதிகாரம் இருபதாம் நூற்ருண்டில் நல்லுரை நடையில் எழுந்த தனிமுலத் தன்மை வாய்ந்த புதுச் சிலப்பதி காரமே என்பது என் துணிபு. இளங்கோ சிலப்பதிகாரம், கலேஞர் சிலப்பதிகாரம், பாவேந்தர் பாரதிதாசன் கண்ணகி புரட்சிக்காப்பியம் என்ற மூன்றையும் ஒப்பீட்டுப் பொருளாக

Koviloor Digital Library

மேற்கொண்டு ஓர் ஆய்வாளன் திறன் தெரிந்தால் படைப்பிலக்கியங்கள் காலக்கண்ணோட்டத்தில் எத்தகைய மாற்றுருப் பெறுகின்றன என்று படைப்புக் கோட்பாடுகளை நெறிப்படுத்த முடியும். ஆசிரியனுடைய சமய, இன அரசியற் கொள்கை வேறுபாடுகளால் பழங்கதைகள் எவ்வாறெல்லாம் புத்தம் புது வடிவெடுக்கின்றன என்ற அடிப்படைகளை வெளிப்படுத்த முடியும். இளங்கோவிற்கும் கலைஞர்க்கும் கொள்கை வேற்றுமைகள் பலப்பல. அதனால் இருவர்தம் சிலப்பதிகாரம் மேலே காட்டியபடி வேறுபடுதல் இயல்பே. கலைஞர்க்கும் பாவேந்தர்க்குமோ கொள்கை ஒற்றுமைகளே பல. அப்படியிருந்தும் இருவர் படைப்புக்களிலும் நுனித்தகு வேற்றுமைகள் உள. இவையெல்லாம் எதிர்கால ஆய்ஞருக்குத் தக்க புலமை விருந்துகள், நுழைபுலத்தார்க்குத் தக்க ஆய்வுக்களங்கள். கலைஞரின் சிலப்பதிகாரம் இன்னும் ஓரிரு புதிய சிலப்பதிகாரங்களுக்கு அடிகோலினாலும் அது வியப்புக்கு உரியதில்லை. கண்ணகி கற்பும் சிலம்பொலியும் தமிழாற்றலும் எத்துணை இலக்கியப் படைப்புக்கும் விரிந்து இடங்கொடுக்க வல்லது அல்லவா? 'பழைய இதிகாசங்களைக் காட்டி விதியை நிலை நிறுத்த எண்ணாதீர்! இதோ நான் படைக்கின்றேன் புதிய இதிகாசம்' என்பது கலைஞர் படைத்த சிலப்பதிகாரத்தில் இளங்கோ கூறும் வாய்மொழி. பாத்திரம் புலவனின் படைப்பு-அவன் எண்ணப்படி பாத்திரம் நினைக்கும், சொல்லும், செய்யும். கலைஞரின் நாடகத்தில் இளங்கோவும் ஒரு பாத்திரம் ஆகிவிட்டார். பாத்திர இளங்கோ கலைஞரின் சிந்தனைகளை வெளியிடுகின்றார். தன் கருத்துச் சொல்லியாக யாரையும் பாத்திரப்படுத்துவதுதானே அன்று முதல் இன்றுவரை புலவனுக்கு உள்ள தனியுரிமை. இவ்வுரிமை கலைஞர்க்கு மட்டும் விலக்காகுமா?

UGC ... 227 ... KUDI-623 003.

Koviloor Digital Library

4. தைப்பாவை

'இன்னும் எழுத எண்ணங்கள் அதிகம்
எதிர்காலத்தில் இறைவன் அருளுவான்'

என்பது கண்ணதாசன் வேண்டுகோள். பொன்னுண்டு எய்திய கவிஞர் கண்ணதாசனுக்கு நாமும் இறைவனிடத்து விடுக்கும் வேண்டுகோள் இதுவே. பாரதியார், பாரதிதாசன், கண்ண தாசன் மூவரும் இந்நூற்ருண்டில் தோன்றிய மக்கட் பெருங் கவிஞர்கள். உரைநடை வெள்ளம் பரந்து சாடிக் கவிதைக் கரையை இடித்துத் தகர்க்கும் இந்நூற்ருண்டில் தமிழினத்தின் கவிதையுள்ளம் உடையாமல் ஊறுபடாமல் காத்துத் தந்த பெருமை இம் மூவர்க்கும் உண்டு. இம் மூவருள் இன்று நம்மொடு வாழும் கண்ணதாசனுர் கவிதை வாழக் கால மெல்லாம் வாழ்க.

கங்கைநீர் காவிரிநீர் போலப் பெருங்கவிஞர்கள் பால் ஒவ்வொரு தனிநீர்மையுண்டு. தனிநீர்மை அல்லது தனித் தன்மை என்பது பிறர் பின்பற்ற முடியாததாய் ஒருவரிடத்தே இலங்கிக் கிடக்கும் தனியுயிர்ப்பண்பாகும். பிறரும் பின்பற்றக் கூடியதாக இருந்தால் அப்புலமைக் கூறு புகழுக்குரிய கூருகாது. ''கவிஞனின் பயணமோ தனிமை தனிமை'' என்பது கண்ணதாசம். கண்ணதாசன் பாடிய திரைப்பாடல் முதலான எவ்வகைப் பாடல்களிலும் ஒரு தனியோட்டம் உண்டு. யாப்பிலக்கணத்தை நினைவு கொள்ளாமல் ஓசையினுலேயே

Koviloor Digital Library

யாப்பமைதி விழும் வண்ணம் பாடவல்ல இயல்பான திறமையை இவரிடம் காணலாம். அதற்குக் காரணம் எப்போதும் கவிதை யாத்திரை. 'ஆய தமிழோசை வரப் பாடுவதில் ஆசைவர ஆனவரை பாடுகின்றேன்' என்று அவரே உணர்ந்து கூறுவர். ஓசை வழிப்பாடுவதில் இடைக் காலப் புலவரோடு கண்ணதாசன் ஒத்திருந்தாலும் அப் புலவர்கள்பால் இருந்த, பொருளோட்டத்திற்குத் தடையான யமகம் மடக்கு திரிபு என்ற யாப்பு விளையாட்டுக்கள் இவர்பால் இல்லை. வாழும் மனிதரை வாழ்த்தியும், வைதும், நெஞ்சு திறந்து பாடும் சங்கச் சான்றோர்களின் செம்மை இயற்கையுள்ளம் மீண்டும் கண்ணதாசன் கவிதைகளில் மறுமை யெய்தியுள்ளது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் சங்க இலக்கியக் கொள்கை, இருபதாம் நூற்றாண்டில் இக்கவிஞரின் பாடல்களில் தலையெடுத்திருப்பது என்றுமுள தென்தமிழ் என்பதற்கு எடுத்துக்காட்டு.

'பாப்புக்கு முறையின்றிப் பணிவின்றிப் பொருளின்றிப்
பாடுவார் வளர்வ துண்டோ'

எனவே நல்ல பாடற்கு முறையும் பணிவும் பொருளும் வேண்டும் என்பது கண்ணதாசம். இவர்தம் கவிதைகளை ஆராய்வார் இம்முத்தடத்தில் நின்று ஆராயலாமே.

கண்ணதாசன் காலத்தின் மேடுகளிலும், பள்ளங்களிலும் வேகமாக ஓடிவிளையாடிய கவிஞன்; சங்கப் பரணர் கபிலர் போல அரசியலில் வாடையையும் தென்றலையும் கண்டவர்; தம் உணர்ச்சிக்கு மூடியும், பூட்டும் போடாதவர்; தம் அறிவுக்குச் சுவரும் கதவும் செய்யாதவர்; அரசு, சமயம், சமுதாயம் எத்துறையிலும் காலந்தோறும் கருத்து வளர்ச்சி பெற்றவர்; தன்னியல்பைத் தானறிந்த கவிவலவர் அவர்.

'கொள்கைகளில் மாறுபட்ட காரணத்தால் கவிதைகளில் முரண்பாடுகளும் காணப்படுகின்றன. ஒவ்வொன்றும்

Koviloor Digital Library

அன்றாட உணர்ச்சிகளில் விளைந்த கவிதைகளாதலின் பலவகையான உணர்ச்சிகள் கொழுந்து விடுகின்றன. வாழும் மனிதர்களைப் பற்றிய கவிதைகள் அதிகம் என்பதால் முரண்பாடுகள் இயற்கையாகவே எழுந்துவிட்டன'

என்பது கண்ணதாசன் தன் கவிதைகட்குத் தானே வழிகாட்டும் வரலாற்றுப் பதிகம். இவர் எழுத்துக்களில் தலைவர்கள் வரலாறும், நாட்டு வரலாறும், கட்சி வரலாறும், தன் வரலாறும் நரம்புபோல் பின்னிக் கிடக்கின்றன. இவ்வளவு வரலாற்றுக் குறிப்புப் பொதுளப்பாடிய தற்காலக் கவிஞர்கள் கண்ணதாசனைப் போல் யாருமிலர். வரலாறு எழுதும் எதிர் காலத்தினர்க்கு இவர் தம்பாடல்கள் குறிப்புப்பால் நிரம்பச் சுரக்கும்.

கண்ணதாசனின் சில பாடற்றொகுதிகளில் இப்பாட்டு இன்ன காலத்து இவ்விடத்துப் பாடப் பெற்றது என்ற குறிப்புத் தரப்பட்டுள்ளது. இக்குறிப்பு எழுதாத பாடல்களும் பலவுள. ஒவ்வொரு பாட்டுக்கும் காலக் குறிப்புக் கொடுத்தால் மட்டும் போதாது. பாட்டுக்கள் பாடிய காலமுறைப்படி அடைவு செய்யப்பட்ட வரிசைத் தொகுதிகளும் வரல் வேண்டும். அப்போதுதான் கவிஞனின் வாழ்வு நோக்கங்களும் கொள்கை வளர்ச்சிகளும் அவற்றிற்கேற்பத் தோன்றிய கவிதைப் படைப்புகளும் காரணம்படப் புலனாகும். உண்மைக்கும் ஆய்வுக்கும் உரிய கால நிரற் பதிப்பு கண்ணதாசன் அனைய கவிப்பெரு மக்கட்கு இல்லாவிட்டால் அவர்தம் சிறப்பினை வருங்கால இளைஞர்கள் உணரமாட்டார்கள். பொருள் முரண் காட்டிக் கவிதை வளத்தைப் பருகமாட்டார்கள். ஆதலின் கண்ணதாசனாரின் இனிவரும் கவிதைத் தொகுதிகள் காலச் செம்பதிப்பாக வருக என்பது என் வேண்டுகோள்.

Koviloor Digital Library

காலப்பொருள் மேல் எண்ணிறந்த பாடல்கள் பாடிய கண்ணதாசன், காலத்தொடு சாரா நிலைப்பொருள் மேல் யாத்த தனிப்பாடல்களும் கவிதை நூல்களும் பலவுள. அவற்றுள் ஒன்று தைப்பாவை என்பது. இப்பாவையை மணிவாசகரின் திருவெம்பாவையொடும் ஆண்டாளின் திருப் பாவையொடும் ஒத்திட்டு ஓரளவு காண்போம். ஒப்பீடு என்பது ஏற்றத் தாழ்வு கூறுவதன்று. பெருமை சிறுமைப்பட முடிப்பதன்று. ஓரினப் பட்ட நூல்களில் வேறுபட்ட இயல்பு களைச் சுட்டிக் காட்டுவதே ஒப்பின் நோக்கம்.

முன்னிரு பாவைகளைத் தழுவித் தைப்பாவை இயற்றப் பட்டிருத்தலின். கண்ணதாசன் மரபு வழிப்பட்ட கவிஞர் என் பது அறியப்படும், மரபு, புரட்சி என்ற இரு சொற்கள் கலை யுலகில் மிகவும் எடுத்தாளப்படுகின்றன. ஒன்றுக்கொன்று முரண் எனப் பலர் கருதி வருப. நன்மை தீமை, இரவு பகல், பழிபுகழ் என்பன முரண்பட்டவை. மரபும் புரட்சியும் இவை போல்வன அல்ல. புதுச்சாலை மிதிக்க மிதிக்கப் பழந் தடம் ஆவதுபோல இன்று புரட்சி நாளை மரபாய்க் கலந்து விடும். முகத்தினுள் கண்துடி போலவும், நீரோட்டத்திற் சுழி போலவும், கண்விழியில் காதற்கூறு போலவும், புரட்சியும் மரபினுள் ஒரு பகுதி என்பதனை இலக்கியத்திறனிகள் உணர வேண்டும். ஆதலின் கண்ணதாசன் மரபுக்கவி என்னும் போது புரட்சியையும் உள்ளடக்கியே கூறுகின்றேன்.

திருவெம்பாவை 20 செய்யுட்கள்; திருப்பாவை 30 செய்யுட்கள், ஆண்டாள் பாவை போலத் தைப்பாவையும் 30 செய்யுட்கள். யாப்பு வகையில் முப்பாவையும் பார்வைக்கு எட்டடியுடையன என்று தோன்றினும் முன்னிரு பாவை களும் முழுதும் வெண்டளைப் பட்டவை. தைப்பாவை ஒரு சில பாடல்களே வெண்டளை கொண்டவை. சந்த வேறுபாடான பாடல்கள் பலவுள.

Koviloor Digital Library

(அ) மெய்வாய்கண் மூக்குச்
செவியாய் விளந்திருக்கும்
ஐவாயி லுள்ளும்
அருமைத் திருமகளே

(ஆ) வாவென்றன இமைகள்
மண் நோக்கின விழிகள்
தா வென்றன இதழ்கள்
தழுவென்றது மேனி

(இ) அம்பொன் மணிமாடத்
தரசிருந்தான் எங்கோமான்
தம்பொற் பதம் வருடித்
தடங்கண்ணாள் துணையிருந்தாள்

இவ்வாறு பாவையாப்பில் வெண்டளையும், பிறதளையும் விரவப் புதிய சந்தக் கலப்புக் கண்டவர் கண்ணதாசனார். ஓரிரு முறை படித்தாலே பள்ளத்துள் நீர்போல உள்ளத்துள் கவிதைகளை விழச் செய்யும் ஓசைப் பாடல்கள் இக்கவிஞர்பால் நிரம்பவுள. அதனாலன்றோ இவர்தம் பாடல்களை மதலைச் சிறு குதலைகள் விரைந்து பாடிப்பாடிக் களிப்பூட்டக் காண்கின்றோம். இத்தைப்பாவையில் ஓர் ஓசைப்பாட்டு:

காளை மணியோசை களத்துமணி நெல்லோசை
வாழை யிலையோசை வஞ்சியர்கை வளையோசை
தாழை மடலோசை தாயர்தயிர் மத்தோசை
கோழிக் குரலோசை குழவியர்வாய்த் தேனோசை
ஆழி யலையோசை அத்தனையும் மங்கலமாய்
வாழிய பண்பாடும் மாயமொழி கேட்டிலையோ!
தோழியர் கைதாங்கத் தூக்கியபொன் னடிநோக
மேழியர்தம் இல்லத்து மேலெழுவாய் தைப்பாவாய்

ஆ என்ற தொடக்க நெட்டொலி அடுத்து ழகரத் தமிழொலி இறுதியில் ஓ என்ற நெட்டொலி என்று ஊஞ்சல் போன்ற

Koviloor Digital Library

சந்தக் கிடப்பில் வரும் இச் செய்யுள் தைப்பாவைக்குத் தாலாட்டுப் பாவாய் அமைந்திருப்பதை உணரலாம். பட்டுப் போல் நெல் விளையும் பாடிவரும் காவேரி என்பர் கவிஞர். இவர்தம் செய்யுட்களும் அணைதிறந்து மடைதிறந்த காவேரி நடப்புப் போலச் செல்வதை செவி களுக நுகர்கின்ருேம்.

'ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்'

(திருவெம்பாவை)

'ஆலின் இலையாய் அருளேலோர் எம்பாவாய்'

(திருப்பாவை)

முன்னிருபாவைகளும் பாடல்தோறும் 'எம்பாவாய்' என முடிகின்றன. அப்பாடலைப்பாடும் மகளிர் தம் கூற்ருகப் பாடுதலின் 'எம்' என்ற அடைபொருந்துவதாகும். மேலும் இங்கு வரும் பாவையைப் பெண்பாவை எனவும் நோன்பு எனவும் பொருள் கொள்வர். கண்ணதாசனின் தைப்பாவை கவிக்கூற்று, தோழி கூற்று, தாய்கூற்று, மக்கள் கூற்று எனப் பாடல்தோறும் வேறுபடக் கொள்ளும் நிலையில் செல்கின்றது.

மார்கழிக்குப் பெண்ணுக
மாசிக்குத் தாயாகப்
பேர்கொழிக்க வந்த
பெட்டகமே தைப்பாவாய்

என்று விளித்தலின், தைத்திங்களையே ஒரு பாவையாகக் கண்ணதாசனுர் உருவகப்படுத்துவது தெளிவு. ஏலோர் ஏலோர் என முன்னிரு பாவைகளிலும் இறுதியில் வரும் பொருளற்ற அசைச் சொற்கள் இவர்தம் தைப்பாவையில் இடம் பெறவில்லை. இச்சொற்கள் முன்னிரு பாவைகளிலுங் கூடத் தெளிவுக்கு இடையூருக இருந்தன என்ற கருத்தினை,

'ஏல் ஓர் என்ற இரண்டு சொற்களும் திருவெம்பாவை இருபது பாட்டிலும் திருப்பாவை கடைசிப்பாடல் ஒழிந்த

Koviloor Digital Library

இருபத்தொன்பதிலும் ஈற்றடியில் வருகின்றன ஏல் என்பதற்கு ஏற்றுக் கொள் என்றும், ஓர் என்பதற்கு ஆராய்ந்து பார் எனவும் சில பாடல்களில் பொருள் படுகின்றது. மற்றும் சில பாட்டுக்களில் அவ்வாறு பொருள் கொள்ள முடியவில்லை. அங்கு இவற்றைப் பொருள் தராது நிற்கும் அசைச் சொற்களாகவே கொள்ள வேண்டுவதாகிறது'

எனவரும் தமிழ்க்கடல் இராய. சொ. வின் விளக்கத்தால் தெளியலாம். அசைச்சொற்களை விட்டது தைப்பாவையின் ஒரு புரட்சிக் கூறுகும்.

திருப்பாவை திருவெம்பாவைக்கும் தைப்பாவைக்கும் பாட மேற்கொண்ட பொருளில் முழுதும் வேற்றுமையுண்டு; முன்னிரு பாவைகளும் சமயப் பாவைகள். ஒன்று வைணவப் பாவை; மற்றொன்று சைவப்பாவை. கண்ணனையும், சிவனையும் முதற் பொருளாகக் கொண்டு அவர்தம் பெருமைக்குரிய கதைகளை அமைத்துக் கன்னியர்கள் நோன்பு நோற்று நீராடி வைகறையில் துயில் எழுப்பும் பொருட் போக்குடையவை. இவ்விரு சமயப் பாவைக்குள் சில வேற்றுமைகள் இருப்பினும் பொதுப் பொருள் நோக்கில் வாய்க்காலின் இருகரைபோல் நெருங்கியவை. அதனலன்றோ பாவை மாநாடுகள் இணைந்து நடைபெறுகின்றன.

அன்பர் கண்ணதாசனின் தைப்பாவை ஒரு தமிழ்ப்பாவை. இவ்வுண்மையைக் கவிஞரின் வாழ்த்துப்பா வெளிப்படப் பகர்கின்றது.

எந்தமிழர் கோட்டத் திருப்பார் உயிர்வரி
எந்தமிழர் உள்ளத் தினிமைப் பொருள்மலர
எந்தமிழர் கைவேல் இடுவெங் களஞ்சிவக்க
எந்தமிழர் நாவாழ் இளமைத் தமிழ் செழிக்க
எந்தமிழர் இல்லத் திலங்கும் ஒளிவிளங்க

Koviloor Digital Library

முந்துதமிழ்ப் பாவாய் முன்னேற்றந் தான்தருவாய்
தந்தருள்வாய் பாவாய் தைவடிவத் திருப்பாவாய்
வந்தருள்வாய் கண்ணுல் வாழ்த்துரைப்பாய் தைப்பாவாய்

வாழ்த்துப்பாவில் வரும் கொள்கைக் கேற்பவே தைப்பாவைப் பாடல்கள் பெரும்பாலும் அகப்பொருள்மேல் அமைந்துள. தைத் திருமணம் தமிழர் விரும்பும் திருமணம் ஆதலின் களவு வழி ஒழுகும் காதலர்கட்கு அவனேடு அவள் சேர இத்தைத் திங்களில் ஓர் நாள் எடுத்துக் கொடுக்க மாட்டாயா தைப்பாவை என்று ஒரு பாட்டு கேட்கின்றது. (தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது ஒரு பழமொழி). ஆதலின் கணவனைப் பிரிந்து துயில் கொள்ளாது தனி நெஞ்சே துணையாகக் கையே போர்வையாகத் தலையணையிற் கண்மூடி இரவு போகாதோ? அவன் வரும் நாள் வாராதோ? இத்தைத் திங்களில் வழி பிறவாதோ? என்று நம்பியிருக்கும் மனைவியர்க்கு அவனை வரச்செய்து உறக்கம் நல்குவாய் தைப்பாவாய் என்று ஒரு பாட்டு அறிவுறுத்துகின்றது. பிரிந்து வருந்துவாளிடம் தூது செல்; காதலுக்கு இது காலம் என்று இயம்பு; குழந்தை அழுகின்ற நிலையிலும் மனைவியைக் கைச்சிறையில் வைத்த கணவனைத் தள்ளியிருக்கச் சொல்; ஊருலகம் காணத் திருமணத்துக்கு உதவுவாய்; வாடை தவிர்க்க வருவாய்; பொற்றுலி காட்டி முடிப்பாய்; மெத்தை விரித்த நங்கைபாற் சென்று தேற்றுய் என்று பல பாடல்கள் களவு நிலையிலும் கற்பு நிலையிலும் தைப்பாவையை விளித்து வருகின்றன. இன்பத்துறை பற்றிப் பாடுவது முன்னிருசமயப் பாவைகட்கு முரணில்லை. அப்பாவை பாடும் பெண்கள் ‘அன்னவரே எங்கணவர் ஆவார்’ எனவும், ‘நீ உன் மணாளனை எத்தனை போதும் துயிலெழ வொட்டாய் காண்’ எனவும் இல்லறம் பற்றிக் கூறும் கருத்துக்களை ஒப்பிடுக.

எத்துணையோ ஆட்சிகள் வந்து போகினும் எக்காலத்தும் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டிய நாடுகளாக வைத்துப்

Koviloor Digital Library

பாடுவது ஒரு வழக்கு. 'தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கன் வரக்கூவாய்' என்று திருவாசகக் குயிற் பத்து பாடுகின்றது. இம் மரபுக்கு நம் கவிஞரும் விலக்கல்லர்.

'அம்பனைய கண்ணாள் அருள்விளங்க மீனாளும்
தென்மதுரை மண்ணில் திரண்டெழுவாய் தைப்பாவாய்'

'கட்டான மேனியொடும் களம்போந் துயர்ந்த நிலம்
பட்டாளத் தஞ்சையிலும் பாடாயோ தைப்பாவாய்'

'தருஞ்சேரன் பெற்றறியான் தழைக்குங்கோன் வஞ்சியிலும்
நிறையாயோ உலவாயோ நிலவாயோ தைப்பாவாய்'

இப்பாவை சமயப் பாவையாக இன்றித் தமிழ்ப்பாவையாக இருந்தாலும் தமிழும் ஒரு தெய்வப்பாவையல்லவா? ஆதலின்,

அன்னங்கேள் ஞானம் அருள்வானை முன்னிறுத்தி
முன்னங்கால் சேர்த்து முழந்தாளில் மண்டியிட்டு
தன்னங்கை கூப்பித் தலைசாய்த்து யான்வணங்க
என்னங்கேள் ஈசன் எனக்களித்தான் மெய்ஞ்ஞானம்

எனவரும் அரிய தைப்பாவை நல்ல ஒரு மெய்ப்பாவையாகும்.

கவிஞர் கண்ணதாசன் அரசியல் போலும் துறைகளில் மாறுபட்டு மாறுபட்டுச் செல்லினும் தமிழ் என்ற தாய்த் துறையில் என்றும் நெறிபிறழாத் தவ மகனாகக் கவிமகனாக விளங்கி வருகின்றார். 'தருமத்தில் வந்ததால் தாயாரின் ஆசையால் தமிழில் நான் வாழுகின்றேன்' என்று தன் வாழ்க்கை தமிழ் சார்ந்தது என்பதனைக் கவிஞர் பெருமிதத் தோடு பாடியிருக்கின்றார். கணவன் மேற்கொண்ட கற்புடை நங்கையின் பற்று என்றும் ஒரு சீராக இருப்பதுபோலத் தமிழன்னைபாற் கொண்ட கவிஞரின் பற்று சூழ்நிலையால் கூடியது குறைந்தது என்பதற்கு இடமின்றி என்றும்

Koviloor Digital Library

குறைவிலா நிறைவாக இருப்பதை நாம் உணர்கின்றோம். 'சொல்லுக்குச் சொல்லோர் சுவையிருக்கும் செந்தமிழ்' எனவும், 'தாயானே தமிழானே' எனவும், 'தனைபுகழத் தன்னிடத்தோர் சொல்லில்லாத தமிழ்' எனவும் எண்ணிறந்த தமிழ்மாலை கவிஞரின் இயற்கைத் தமிழன்புக்குத் தனிச் சான்றுகள். திருவெம்பாவை பாடுவற்குச். சிவன் தானே வந்து ஆட்கொண்ட மணிவாசகர் தகுதியுடையவர்; திருப் பாவை பாடுவதற்குச் சூடிக்கொடுத்த ஆண்டாள் தகுதி யுடையவர்; அதுபோல் தைப்பாவை என்னும் தமிழ்ப்பாவை பாடுவதற்குத் தமிழே நினைந்து தமிழால் வாழும் கவிஞர் கண்ணதாசனார் தகுதியுடையவர் என்பது என் ஒப்பீட்டின் முடிவு.

'நிறைவாக இன்னுமோர் பதினாயிரம் பாடல்
நெய்க என் ஏழை மனமே"

என்பது கவிஞரின் ஆசை. பைந்தமிழ்ப்பின் சென்ற பசுங்கொண்டலுக்கு அடிமையான இக்கண்ணதாசனின் ஆசை நிறைவேறத் தமிழ்த்தெய்வம் நல்ல நெடிய இனிய உடல்நலம் அருளுக.

Koviloor Digital Library

Alagappa University
Central Library
20568

5. செய்யுளியல் - காரிகை

தொல்காப்பியரின் செய்யுளியலேயும், அமிதசாகரனரின் யாப்பருங்கலக் காரிகையையும் ஒப்பிடுங்காலே, நாம் கொள்ள வேண்டிய சிலவுணர்வுகளும், கருத வேண்டிய சில முறைகளும் உள. இரு நூல்களும் தத்தம் காலச் சூழ்நிலேக்கு ஏற்பப் பிறந்து தங் காலத்தேவையை ஈடு செய்தன என்ற நல்லுணர்வு நமக்குத் தோன்ற வேண்டும். வேற்றுமைகளே யும், வேற்றுமைக்குரிய காலச் சூழல்களேயும் அறிந்து கொள்வதே ஒப்பீட்டின் பயன். ஏற்றத் தாழ்வு கூறுதல் ஒப்பீடு ஆகாது.

செய்யுளியலுக்கு இளம்பூரணம், பேராசிரியம், நச்சினர்க் கினியம் என்ற மூன்றுரைகள் உள. இளம்பூரணம் பட்டாங்கு கூறிச் செல்வது. பேராசிரியம் அகலமாகவும், ஆழமாகவும் உறழ்ந்து விரித்துச் செல்வது. நச்சினர்க்கினியம், பேரா சிரியத்தைப் பெரிதும் தழுவிக் கற்பவருக்குச் செய்யுளியலே எளிமை படுத்தித் தருவது. காரிகை குணசாகரர் எழுதிய ஓர் உரையே உடையது, நூற்பாக்களில் உள்ள யாப்பிலக் கணங்களேக் காட்டிலும் பல யாப்புக்குறிப்புக்கள் உரை களிற்ருன் மலிந்து கிடக்கின்றன. யாப்பருங்கலம் ஒருபெருஞ் சான்று. எழுத்து முதலான ஏனேயதிகாரங்கள் அவ்வளவு உரைகளே நம்பிக் கிடக்கவில்லே, செய்யுளியலும் காரிகையும்

Koviloor Digital Library

மெய்யான தெளிவுக்கு உரைகளினின்று பிரிக்க முடியாதவை. எனவே ஒப்பு என்பது உரை தழுவிய ஒப்பு எனக் கொள்ள வேண்டும்.

இருவகை நூல்களின் அமைப்பும், நோக்கமும் — ஒப்பீடு

தொல்காப்பியத்துச் செய்யுள் என்ற சொல் மொழியால் செறிவாகச் செய்யப்பட்ட எழுத்திலக்கியத்தையும், வாய்மொழி இலக்கியத்தையும் குறிக்கும். 'தெரிந்து மொழிச் செய்தி' என ஆறும் வேற்றுமை நூற்பாவிற் கூறுவர் தொல்காப்பியர். அதன்படி பாட்டு, உரை. நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என எழுநிலச் செய்யுட்கள் இவ்வியலில் இடம் பெற்றுள்ளன. இவற்றை, அடிவரையறையுடையது பாட்டு எனவும், ஏனையாறும் அடிவரையறையில்லன எனவும் தொல் காப்பியம் இருபாற் படுக்கும். காரிகை பாட்டு ஒன்றினையே செய்யுள் என மேற்கொண்டதாதலின் செய்யுளியல் என இரண்டாவது இயலுக்குப் பெயரிட்டது அதற்குச் சான்றும் ஆதலின், அடிவரையறையற்ற ஆறினையும் பற்றி அமுத சாகரர் கூறாதது இயல்பே.

செய்யுளியல் பொருளதிகாரத்தின் ஒரு பகுதி. ஆதலின் ஏனை எட்டியல்களோடும் இவ்வியலுக்கு ஓராற்றான் தொடர் புண்டு. 'மேலுணர்த்தப்பட்ட பொருண்மை எல்லாவற்றிற்கும் இஃது இடமாதலின் அவற்றின் பிற்கூறப்பட்டது' என்று இளம்பூரணம் எடுத்துக்காட்டும். எனவே பிறவியல்களிற் கூறிய அகப்பொருள் புறப்பொருள்களையும் சுட்டிக்காட்டி இன்ன பொருள் இன்ன பாவில் வருமென இயைத்துக் கூறும் கடப்பாடு தொல்காப்பியர்க்கு உரியதாகும். "பாடல் சான்ற புலனெறி வழக்கம் கலியே பரிபாட்டு ஆயிரு மருங்கினும் உரியது" என அகத்திணையியலிலும் "செந்துறை வண்ணப் பகுதி வரைவின் றுங்கே" எனப் புறத்திணையியலிலும் பொருளோடு செய்யுளை மறவாது தொடுத்துச் சொல்லும்

Koviloor Digital Library

முறையிலிருந்து செய்யுளியலின் இணைநோக்கம் பெறப்படும். இந்நோக்கத்தால் அன்றோ, இவ்வியாப்பால் இப்பொருளை இன்னவாறு செய்க எனவும், இப்பொருள் இவ்வியாப்புக்கு உரித்து எனவும், உரித்தன்று எனவும் கூறும் நூற்பாக்கள் செய்யுளியலில் பரந்தோடிக் கிடக்கின்றன. காரிகையாரின் நோக்கு பொருள் நோக்காச் செய்யுள் நோக்கு என்ற வேறுபாட்டை நாம் உணரவேண்டும். அவர் காலத்து ஒவ்வோர் இலக்கணத்துக்கும் தனி நூல் விரிந்தமையின் யாப்பளவில் கொண்ட நோக்கம் கால நோக்கமேயாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் பெரும்பகுதி அகப்பொருள் மேற்று. ஆதலின், செய்யுளியலின் முதல் நூற்பாவில் எண்ணப்பட்ட திணை கைகோள் கூற்று கேட்போர் களம் காலம் பயன் மெய்ப்பாடு முதலானவை காரிகையின் உறுப்பியலில் இடம்பெறுதற்கில்லை.

தொல்காப்பியர்காலத்து கட்டளையடி என்பது கால வழக்காக இருந்தது. அதனால் தொடைநயங்களும் விரிந்து கிடந்தன. தொல்காப்பியஞ் செய்த காலத்து தலைச் சங்கத்தாரும் இடைச் சங்கத்தாரும் கட்டளையடியால் மிகச் செய்யுள் செய்தார் என்பது பேராசிரியரின் விளக்கம் சங்க காலத்திற் கட்டளையடி அரிதாகிச் சீர்வகையடி பயில வந்தது எனப்பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் உடன்படுவர். ஆதலின் காரிகையாசிரியர் பழையன கழிந்த கட்டளையடிப் படையை அறவே விட்டுவிட்டுப் பெருகிப் பயின்ற சீரடிப் படைக்கு இலக்கணங் கூறியதும் கால வழக்கேயாகும். எனினும் கட்டளையடிக்கு இடைக்காலத்தும் நன்மதிப்பு இருந்தது என்பதற்குக் காரிகையாசிரியரே நூற்பாவை மேற்கொள்ளாது புதிய கட்டளைக் கலித்துறையை மேற்கொண்டது ஒரு பெருங் கரி என்க.

Koviloor Digital Library

தொல்காப்பியர் காலத்து எண்ணிறந்த செய்யுள்வகைகள் இருந்திருந்தபோதும் அவற்றையெல்லாம் பா என்ற ஒரு வகைக்குள் அடக்கினர். பாவினம் என்ற ஒரு தனிப்பிரிவு கொள்ளவில்லையேயொழிய இன்று இனமாகக் கருதப்படும் பல்வகைச் செய்யுட்கள் அன்றும் இருந்தன. கொச்சக ஒருபோகின் பல பிரிவுகளில் அவை அடக்கிச் சொல்லப் பட்டன என்ற கருத்து உரைகளால் தெளிவாகும். எனினும் பாவினம் என்ற பிற்காலப் பிரிவு வளர்ச்சியின் ஒரு பகுதி என்பதில் ஐயமில்லை. பிற்கால யாப்பியலார் இனங்கட்குக் கூறும் இலக்கணங்கள் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் எதிர்மொழிந்தபடி மிகையும் குறையும் உடையவை. செப்பத் திற்கு இடமானவை. ஆயினும் பிற்கால யாப்புக் கல்விக்கு யாப்பருங்கலக் காரிகைபோல் வேறொரு நூல் துணையான தில்லை. முறையானும், அடக்கத்தானும், சுருக்கத்தானும் காரிகைப்புகழ் நிலையானது. மாணவர்க்கு யாப்பு கற்பிக்கும் ஒரு நோக்கத்தோடு இயற்றப்பட்ட பாடநூல் இது. அதனா லன்றோ இலக்கணக் காரிகைகளோடு இலக்கிய முதனினைப்புக் காரிகைகளும் சேர்ந்துள.

செய்யுளியலையும், காரிகையையும் சீர்தூக்கிப் பார்ப்பின் முன்னது செய்யுட் கடல்; பின்னது யாப்பு வாய்க்கால். முன்னது இலக்கியம் படைக்கும் புலவரை நோக்கியது. பின்னது படைத்த இலக்கியத்தைக் கற்கப் புகும் மாணவரை நோக்கியது. முதற்கண் செய்யுளியலைப் படிக்கப் புகுவார் குன்று முட்டிய குருவி போல்வர். முதற்கண் காரிகையைப் படிக்கப் புகுவார் கன்று முட்டிய காராப்போல்வர்.

தொல்காப்பியச் செய்யுளியல் – யாப்பருங்கலக்காரிகை ஒப்பீட்டு விளக்கம்

தொல்காப்பியச்செய்யுளியலில் உள்ளவை; காரிகையில் இல்லாதவை என்ற பகுதியை அட்டவணை 3, 5 இலும்,

Koviloor Digital Library

காரிகையில் உள்ளவை; செய்யுளியலில் இல்லாதவை என்ற பகுதியை அட்டவணை 4, 6இலும் காணலாம். இரு நூல்களுள் ஒன்றில் மட்டும் காணப்படும் விதிகள் ஒப்பீட்டாய்வுக்கு உரியனவல்ல. இருநூலிலும் இருப்பவைதாம் அத்தகு ஆய்வுக்கு உரியவை. ஆதலின் இனி செய்யுளியலிலும், காரிகையிலும் காணப்படுவனவற்றுள் குறிப்பிடத்தக்க ஒற்றுமை வேற்றுமைகளை மட்டும் இங்கு விளக்குவாம்.

1 உறுப்புக்கள்

1. குறில்
2. நெடில்
3. உயிர்
4. குற்றியலிகரம்
5. குற்றியலுகரம்
6. ஐகாரக்குறுக்கம்
7. ஆய்தம்
8. மெய்
9. வல்லினம்
10. மெல்லினம்
11. இடையினம்
12. உயிர்மெய்
13. அளபெடை

என்று 13 எழுத்துக்களைக் காரிகை கூறும். அளபெடையில் உயிரளபெடையும் ஒற்றளபெடையும் அடங்கும் ஆதலின் காரிகை கூறும் எழுத்துக்கள் 14 எனலாம். தொல்காப்பியர் எழுத்ததிகாரம் இயற்றியவராதலின் இத்துணையெனச் செய்யுளியலில் வரையறுத்துக் கூருது 'எழுத்தியல்வகையும் மேற்கிளந்தன்ன' என்று சுட்டியமைவர். இளம்பூரணர் எழுத்ததிகாரத்திற் கூறப்பட்ட உயிரெழுத்து, மெய்யெழுத்து, சார்பெழுத்து, மூவினம், பல்வகைக் குறுக்கங்கள், உயிர்மெய்யெழுத்து எல்லாவற்றையும் திரும்பக் கூறுவர். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எழுத்ததிகாரத்திற் சொல்லிய முப்பத்து மூன்றினை 15 என்று வகைப்படுத்திக் காட்டுவர். இவற்றை ஒப்பிடுங்கால் ஔகாரக் குறுக்கம் ஒன்று மட்டும் காரிகையில் இல்லை. எனினும் இவ்வாசிரியர் இயற்றிய மற்றொரு நூலான யாப்பருங்கலத்தில் ஔகாரக் குறுக்கமும், மகரக் குறுக்கமும்

Koviloor Digital Library

இடம்பெற்றுள. 'மகரக் குறுக்கத்தினையும் கூட்டிப் பதினாறு எழுத்து என்பாருமுளர்' என்ற பேராசிரியர் குறிப்பு யாப்பருங்கலத்தைக் குறிக்கும் போலும்.

2 அசைகள்

தொல்காப்பியம் நேர் நிரை, நேர்பு, நிரைபு என நான்கு அசைகள் கூறும். முதலிரண்டும் இயலசை எனவும், பின்னிரண்டும் உரியசை எனவும் பெயர் பெறும். காரிகையோ நேர் நிரை என இரண்டசையே கூறும். இது மிகப் பெரிய அடிப்படை வேறுபாடு.

		தொல். படி	காரிகையின்படி
1.	வண்டு, நாடு, மின்னு, நாணு	நேர்பு	நேர் நேர்
2.	வரகு, குரங்கு, இரவு, புணர்வு	நிரைபு	நிரை நேர்
3.	சேற்றுக்கால்	நேர்புநேர்	நேர் நேர் நேர்
4.	களிற்றுத்தாள்	நிரைபுநேர்	நிரைநேர்நேர்
5.	மாபோகுசுரம்	நேர்நேர்பு நிரை	நேர்நேர் நிரைநேர்

இதனால் தொல்காப்பியத்தின்படி ஓரசை, ஈரசை, மூவசை யாவன காரிகையின்படி முறையே ஈரசை, மூவசை, நாலசை யாதல் காணலாம். நேர்பு நிரைபு என்ற அசை வகைகளைக் கொள்ளாமையினால் காரிகையார் பொதுவொரு நாலசை கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. தொல்காப்பியர் மூவசைக்கு மேல் கொண்டிலர் என்பது நினையத்தகும். களிறு வழங்கு சுரம் என்பது நிரைபு நிரைபு நிரை என மூவசைச் சீராம். இதுவே களி றுவ ழங் குசு ரம் என அலகு பெற்றுக் காரிகையின்படி ஐயசையாகின்றமை காண்க.

Koviloor Digital Library

நேர்பு, நிரைபு என்ற உரியசைகள் வேண்டுமா? என்பது பற்றிய ஆய்வினைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் நிகழ்த்தாமல் இல்லை. பொதுவாகப் பின்வந்த யாப்பு மாற்றங்களைத் தழுவிச் செல்லும் போக்குடைய இளம்பூரணர் கூறுகின்றார்:

"அஃதேல் நேர்பசை நிரைபசையெனக் காக்கை பாடினியார் முதலாகிய ஒருசாராசிரியர் கொண்டிலரா லெனின், அவர் அதனை இரண்டசையாக்கியுரைத்தாரா யினும் அதனை முடிய நிறுத்தாது, வெண்பா ஈற்றின்கண் வந்த குற்றுகர நேரீற்றியற்சீரைத் தேமா புளிமா என்னும் உதாரணத்தான் ஓசையூட்டிற் செப்பலோசை குன்றும் என்றஞ்சி காசு பிறப்பு என உகரவீற்றான் உதாரணங் காட்டினமையானும், சீருந் தளையும் கெடுவழிக் குற்றிய லுகரம் அலகு பெறாது என்றமையானும், வெண்பா வீற்றினும் முற்றுகரம் சிறுபான்மை வருமென உடன் பட்டமையானும் நேர்பசை நிரைபசை யென்று வருதல் வலியுடைத்தென்று கொள்க" (செய்யுளியல் 4).

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் கருத்தின் வழியே இன்னும் சில ஏதுக்கள் தந்து தொல்காப்பிய இலக்கணத்தை வலியுறுத்துவர்.

தொல்காப்பியம் நேர்பு நிரைபு அசைகள் கொண்டதற்கு ஒரு பெருங்காரணம் சொற்களைப் பொருள் சிதைக்காது அலகு கூறல் வேண்டும் என்பதாம். 'தனிக்குறில் முதலசை மொழி சிதைத்தாகாது' (7) எனவும் "முற்றியலுகரமும் மொழி சிதைத்துக் கொளாஅ' (9) எனவும் கூறும் முறையால் அறியலாம். தமிழில் உகரவீற்றுச் சொற்கள் மிகுதியுண்டு என்பது குற்றியலுகரப் புணரியல் எனத் தனியியல் இருப்பதே சான்றாகும். வண்டு, வரகு, சேற்றுக்கால், களிறு வழங்கு சுரம் என்ற காட்டுக்களைத் தொல்காப்பிய நெறியாலும்

Koviloor Digital Library

காரிகை நெறியாலும் அலகு செய்யின், முன்னது பொருளருச் சொல்லுணர்ச்சியுடையது எனவும், பின்னது சொல்லறுத்த ஓசையுடையது எனவும் விளங்காமற் போகாது. நேர்பு நிரைபு என்பன இன்று வழக்கற்றுப் போயினும், அந்த ஈரசைகளையும் தொல்காப்பியர் கொண்டதற்குரிய காரணம் இன்றும் வலுவுடையது என்று கருத வேண்டும். எனினும் முற்றிய லுகரத்தைக் குற்றியலுகரத்திற்கு ஒப்பாகக் கொண்டு மின்னு, அரவு என்பனவற்றை நேர்பு நிரைபு அசைகளாகக் கொள்வதும், ஞாயிறு என்ற குற்றியலுகரத்தை நேர் நிரை எனக் கொள்வதும் அவ்வளவு பொருத்தமாகப் படவில்லை என்ற எதிர் கூற்றும் நினையத்தக்கவை. உரையாசிரியர்கள் இவற்றுக்கு அமைதி கூறியிருப்பினும் மனநிறைவளிப்பன வாக இல்லை.

3 சீர்கள்

நேர்பு நிரைபு என்ற உரியசை கொண்ட தொல் காப்பியத்துக்கும் அவ்வசை கொள்ளாத காரிகைக்கும் சீர் களிலும் வேறுபாடு இருத்தல் இயல்பேயாகும்.

காரிகை	ஓரசைச்சீர்	2
	ஈரசைச்சீர்	4
	மூவசைச்சீர் (காய்)	4
	மூவசைச்சீர் (கனி)	4
	நாலசைச்சீர்	16
	சீர்கள்	30

நாலசைச்சீருள் நேரீற்று எட்டும் காய்ச்சீர் போலவும், நிரையீற்று எட்டும் கனிச்சீர் போலவும் தளைக்குக் கொள்ளப் படும். புதிதாகக் கொண்ட இப்பொதுச்சீர் செய்யுளகத்தும்

Koviloor Digital Library

அருகியே வரும் என்பது 'நாலசைச்சீர் வந்தருகும்' என்ற காரிகைத் தொடராற் பெறப்படும்.

தொல்காப்பியம்	ஓரசைச்சீர்	4
	ஈரசைச்சீர் (இயற்சீர்)	10
	ஈரசைச்சீர் (ஆசிரியவுரிச்சீர்)	6
	மூவசைச்சீர் (காய்ச்சீர்)	4
	மூவசைச்சீர் (கனிச்சீர்)	60
	சீர்கள்	84

இச்சீர்கள் பெரும்பாலும் வருகின்ற பாவிற்கு ஏற்ப அகவற்சீர், வெண்சீர், வஞ்சிச்சீர் எனப்பெயர் பெறுதல் உண்டு. சீர்களுக்கு இருநூல்களிலும் வாய்பாடுகள் வேறு வேருகக் கூறப்படும். தொல்காப்பியம் வாய்பாடு ஏதும் கூறவில்லை. உரையாசிரியர்களே அவற்றை உரைக்கிடைக்காட்டுவர். காரிகையோஎனின்,

"தேமா புளிமா கருவிளங் கூவிளம் சீரகவற்கு
ஆமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந் தங்கனியாம்
வாமாண் கலையல்குல் மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த வசைச்சீர்க் குதாரணம் நாண்மலரே"

"தண்ணிழல் தண்பூ நறும்பூ நறுநிழல் தந்துறழ்ந்தால்
எண்ணிரு நாலசைச் சீர்வந் தருகும்"

Koviloor Digital Library

என நூலின் ஒரு பகுதியாகவே வாய்பாடு கூறும் அமைப்புடையது.

(அளபெடையை அசைநிலையாக்கிச் சீர் சொல்லும் முறையில் ஒரு வேறுபாடு உண்டு. அளபெடையில் வரும் குற்றெழுத்தின் ஓசையை முன்னும் பின்னும்கூட்டாது தனியாக நேர் எனக் கொள்ள வேண்டும் என்பர் காரிகையார் (காரிகை 39).) ஏஎர் என்பது நேர்நேர் ஆகும். எழாஅ அநின் என்பது நிரைநேர் நேர் ஆகும். இதனை, எழா அநின் எனக் குறிலிணையாக அலகிட்டு நிரைநிரை என்றல் கூடாது என்பது காரிகையின் கொள்கை. தொல்காப்பிய உரையாசிரியர்களோ ஆஅழி என்பதனை நேர்நிரை எனவும், படாஅகை என்பதனை நிரை நிரை எனவும் அளபெடையை வருமெழுத்தோடு இணைத்து அலகு காரியம் செய்வர்.

அடிகள்

அடியென்பது பாவிற்கு அடிப்படையான வரம்பு. பொதுவாக அடியென்பது நாற்சீர் கொண்ட அளவடியைக் குறிக்கும். தொடைகளும் தளைகளும் இவ்வடிக்கே உரியவை. ஆதலினன்றே தொல்காப்பியர்,

'நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே' (31)
'அடியுள் ளனவே தளையொடு தொடையே' (32)
'அடியிறந்து வருதல் இல்லென மொழிப' (33)
'அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே' (34)

என்று பல்வகையாலும் பாக்கட்டிடத்தின் அடித்தளத்தை அறுதியிட்டுரைப்பர். எனவே நாற்சீர் குறைந்தனவும், மிகுந்தனவும் கட்டளையடியெனப்படா எனவும், கட்டளையடியல்லாதவை சீரடி எனப் பெயர் பெறும் எனவும் வேற்றுமை தெளிய வேண்டும். தொல்காப்பியம் கட்டளையடி, சீரடி என

Koviloor Digital Library

இருவகையடியும் கூறும். கட்டளை என்பது எழுத்தெண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது. பிற்காலத்து எழுந்த கட்டளைக் கலிப்பாவும், கட்டளைக் கலித்துறையும் எழுத்தளவாற் பெற்ற பெயர்கள் என்பதை அறிவோம். சீரடி என்பது ஒரு பாட்டின்கண் எழுத்தளவு பாராது சீர்வரவை நோக்கிக் கூறும் தன்மையது. காரிகை சீரடி அமைப்பே கொண்டது.

கட்டளையடிகளின் நிலங்கள்

குறளடி	4-6	எழுத்துக்கள்
சிந்தடி	7–9	,,
நேரடி	10–14	,,
நெடிலடி	15–17	,,
கழிநெடிலடி	18–20	,,

தொல்காப்பியத்தின் இக்குறியீடுகளை மயக்கமின்றி உணர வேண்டும். அடி என்றதனாலேயே நாற்சீர் உண்டு என்பது தானேபோதரும். அதன் மேற் குறள் என்பது என்னை? பிற்காலத்தார் வழங்கியது போல இவ்விடத்து இரண்டு என்பது பொருளன்று. உள்ளவற்றுள் மிகச் சிறியது என்பது கருத்து. சிந்து என்றால் ஈண்டு மூன்று என்பது பொருளில்லை. மிகச் சிறிய குறளினும் ஓரளவு கூடுதல் என்பது கருத்து. இவ்வாறே நேர் என்பது நான்கினையோ, நெடில் என்பது ஐந்தினையோ கழிநெடில் என்பது ஐந்தினுக்கு மேற்பட்ட வற்றையோ குறிக்கவில்லை. ஒன்றின் ஒன்று கூடுதலான எழுத்தின் எண்ணிக்கையைக் குறிப்பன. ஒருபாட்டு குறளடியுடையது என்றால் நாற்சீர் கொண்ட அக்கட்டளையடியில் 4-6 வரை எழுத்துக்கள் உள என்பது இலக்கணம். இதன்கண் உயிரெழுத்துக்களே எண்ணப்பெறும். மெய்யெழுத்து, குற்றியலுகரம் முதலானவை எண்ணாது தள்ளப்படும்.

Koviloor Digital Library

பேர்ந்து பேர்ந்து சார்ந்து சார்ந்து — குறளடி 4 எழுத்து
மதியேர் நுண்டோ டொல்கி மாலே — சிந்தடி 9 எழுத்து
நன்மணங் கமழும் பன்னல் லூர — நேரடி 10 எழுத்து
மணிமருள் வார்குழல் வளரிளம் பிறைநுதல் — நெடிலடி 15 எழுத்து
கலனளவு கலனளவு நலனளவு நலனளவு — கழிநெடிலடி 20 எழுத்து

எனவே குறளடி முதலியன நாற்சீர்க்கண்ணவாகும் என்பதனையும், அவை மேற்கூறிய எழுத்து வரம்பைக் குறிப்பன என்பதனையும் மறத்தல் கூடா. மக்களுள் தீரக் குறியானைக் குறளன் என்றும், அவனிற் சிறிது நெடியானைச் சிந்தன் என்றும் ஒப்பவமைந்தானை அளவிற் பட்டான் என்றும் அவனிற் சிறிது நெடியானை நெடியான் என்றும், அவனின் மிக நெடியானைக் கழிய நெடியான் என்றும் கூறும் வழக்காற்றினைப் பேராசிரியர் இங்கு ஒப்பிட்டுக் காட்டுவர்.

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்ற இக்குறியீடுகளே இருசீர், முச்சீர், நாற்சீர், ஐஞ்சீர், அறுசீரின் மிக்க சீர் கொண்ட அடிகளையும் குறிப்பான் பிற்காலத்தாரால் ஆளப்படும். காரிகையில் இவ்வாட்சியைக் காணலாம்.

குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்
அறைதரு காலே யளவொடு நேரடி யையொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோட்
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே

1. மலைத்தலைய கடற்காவிரி — குறளடி
2. பகவன் முதற்றே யுலகு — சிந்தடி
3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் — அளவடி

Koviloor Digital Library

4. நின்ரு னடிக்கீழ்ப் பணிந்தார் வினை நீங்கி
நின்ருர் — நெடிலடி

5. கற்றவர் ஞான மின்றேற் காமத்தைக்
கடக்க லாமோ — கழிநெடிலடி

எனவே கட்டளையடிக்கும், சீர்வகையடிக்கும் அதே ஐந்து குறியீடுகள் ஆட்சிப்படுவதை மயக்கமின்றி உணரல் வேண்டும். தொல்காப்பியர் கட்டளையடிக்கே பெரிதும் இலக்கணம் மொழிபவராதலின், அந்த அடிக்கண் வருஞ் சீர்கள் இன்னபாவில் இத்தனை எழுத்துடையனவாக இருத்தல் வேண்டும் எனச் சீரில்வரும் எழுத்துக்கும் சிற்றெல்லை பேரெல்லை கூறுவர்.

சீர்நிலை தானே ஐந்தெழுத் திறவாது
நேர்நிரை வஞ்சிக் காறும் ஆகும் (40)
தன்சீர் எழுத்தின் சிறுமை மூன்றே (44)

என்ற நூற்பாக்கள் தொல்காப்பியத்தில் இடம் பெற்ற அடிப் படை கட்டளையடிக்கு உரியதாகும். ஐவகைப்பட்ட இக் கட்டளையடி 625 என்ப. காரிகையில் கட்டளையடியின்மையின் இவ்வெண்ணிக்கைக்கு இடமில்லை.

5 தளை

'பந்தம் அடிதொடை பாவினம் கூறுவன்' என்று காரிகை யாசிரியர் தளையைச் செய்யுளின் உறுப்பாகக் கொள்வர். தொல்காப்பியர் செய்யுளின் உறுப்புக்களையெல்லாம் எண்ணிய முதல்நூற்பாவில் தளை கூறப்படவில்லை. எனினும் தளை என்ற செய்யுட் செய்கையைத் தொல்காப்பியர் நன்கு அறிந்தவரே. ஆசிரியத்தளை, வெண்டளை, கலித்தளை எனத் தளை என்ற பெயர்ச்சொல்லோடு 'வந்துநிரை தட்டல்' என வினைச் சொல்லையும் ஆளுவர். தொல்காப்பியம் கூறும் தளை கட்டளை

Koviloor Digital Library

யடிக்கே என்பதனை உரையாசிரியர்கள் தெளிவுபடுத்துவர். 'தளையென்று ஓதுவனவெல்லாம் கட்டளையடியே நோக்கும் என்பது பெற்றும்' என்பர் பேராசிரியர்.

ஐவகை அடிகளை விரித்துரைத்தபின் தொல்காப்பியம் தளைவகைகளைக் கூறுவதால் தளை என்பது கட்டளையடிக்கே என்ற கொள்கை வலியுறும். '' இத்துணையும் அடியும் அடிக்குரிய எழுத்துக்களும் ஓதினர். இனி அவ்வடிக்கண் ஓசை வேறுபாடும் தளையிலக்கணமும் உணர்த்துவார். அத் தளைக்கண் வருவதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று '' (52) என்ற இளம்பூரணர் உரையால் அடிக்குமுன் தளையை வைக்கும் காரிகைபோலன்றி, அடிக்குப்பின் தளையை மொழியும் தொல்காப்பியர் வைப்புமுறை புலப்படும். தொல் காப்பிய நூற்பாவில் ஆசிரியத்தளை, வெண்டளை, கலித்தளை இவையே வெளிப்படக் கூறப்பட்டுள. 'தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா '' (52) என்பதனுல் ஏனைத்தளைகள் குறிப்பால் சுட்டப்படுகின்றன எனக் கொள்ளலாம். 'தண்சீர் தனதொன்றின் தன்தளையாம்' எனக் காரிகையும் இவ்வாறு கூறுதலை ஒப்புநோக்குக. தளை கட்டளைக்கு உரியதாதலின் இத்துணை எழுத்துக்கள் கொண்ட அடிகள்தாம் இன்னின்ன பாவில் வரும் என்று தொல்காப்பியம் பல நூற்பாக்களில் விழிப்பாக விரித்துக் கூறுகின்றது. சீருக்கே தளை கொண்டமை யின் இவ்விழிப்புக்குக் காரிகையில் இடமில்லை.

தொல்காப்பியம் தளையை ஓர் உறுப்பாகக் கொள்ளா மையை அறிந்த உரையாசிரியர்கள் அதற்கேற்ற காரணம் காட்ட முயல்ப. (1) தளை என்பது சீரது தொழிலேயன்றி வேறு பொருளன்று (2) எழுத்து அசை சீர் அடிபோல் வெளிப் பட்ட உறுப்பன்று (3) இருசீர் இணையும்போது தளை கொள்ளுகின்ருேம். அவ்விருசீர் குறளடி எனப்பெயர் பெறும் (4) குறளடி என்று சொல்லியபின் தளை என்று சொல்ல

Koviloor Digital Library

வேண்டுவதில்லை (5) இருசீர் கூடியதைத் தளை என்ற ஓர் உறுப்பாகக் கொள்ளின், நாற்சீரடி என்று கூறுவது பிழையாகும். (6) தளையால் அடி வகுப்பதில்லை (7) சீருக்குப்பின் தளையை ஓர் உறுப்பாகக் கொண்டால் சீரால் அடிவகுப்பது குற்றமாகிவிடும். இனையகாரணங்களால் கேவலம் தொழிலான தளையை உறுப்பாக எண்ண வேண்டா என்பது தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்து.

தளையை ஓர் உறுப்பாகக் கோடலால் தெளிவுண்டு என்பதில் ஐயமில்லை. தொல்காப்பியர் செய்யுளுறுப்பென முதனூற் பாவில் எண்ணுவன வெல்லாமே உருவ உறுப்புக்கள் அல்ல. யாப்பு, தூக்கு, நோக்கு என்றினைய வெல்லாம் தொழிற்றன்மையனவே. எழுத்தளவில் வரும் குறளடி என்ப தனைப் பின்னையோர் கைவிட்டனராதலின், தளையை ஓர் உறுப்பாகக் கொண்டனர், தொல்காப்பியர் அங்ஙனம் கொள்ளாமைக்கு அமைதி காணலாமேயன்றிப் பின்னையோர் கோள் குற்றப்பாட்டிற்கு உரியதன்று. தளையின் பயன் ஓரடியில் அல்லது ஒரு பாடலில் வரும் சீர்களையும் அவற்றின் தொடர்ச்சியையும் ஓசைக்கேற்பக் கட்டுப்படுத்துவது ஆதலின் அதன் மதிப்புப் பெறப்படும்.

தொடை

தொடை 43 எனக் காரிகை முடித்துக் காட்டும். தொல்காப்பியம் 13699 தொடை கூறுமென இளம்பூரணர் உரையால் அறியலாம். 'தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்' என்ற நூற்பாவால் தொடையின் அடங்காப் பெருக்கம் பெறப்படும். தொடையின் பல்லாயிரத்தைத் தொல்காப்பியர் ஒரு நூற்பாவால் சுட்டினரேயன்றி அக்கணக்கு எவ்வாறு வரும் என அடிக்குக் கூறியதுபோலக் கூறிற்றிலர். ஆதலின் தொடையின் விளக்கத்துக்கு உரைகளையே நாம் சார்ந்து நிற்கின்றோம்.

Koviloor Digital Library

மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என அடிதோறும் வரும் தொடை ஐந்தும். பொழிப்பு ஒரூஉ என அடிக்கண் வரும் தொடை இரண்டும், செந்தொடை நிரனிறை இரட்டையாப்பு என்ற மூன்றும் ஆக 10 தொடைகள் தொல் காப்பிய நூற்பாவில் வெளிப்படையாகவுள. இவற்றுள் நிர னிறை காரிகையில் இல்லை காரிகை கூறும் இணை, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று, அந்தாதி என்பனவும் முரண்தொடையில் வரும் கடை, கடையிணை முதலாயினவும் தொல்காப்பியத்தில் இல்லை. எனினும் இளம்பூரணர் பேரா சிரியர் நச்சினார்க்கினியர் மூவரும் தம் உரையில் பல்வேறு தொடை விகற்பங்களை - காரிகையில் இல்லாத பலவற்றை - எடுத்துக்காட்டுக்களோடு பரந்து விளக்கியுள்ளனர்.

மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற்
றொன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே

என்ற ஒரு நூற்பாவில் தொல்காப்பியர் தொடையென் ணிக்கை மட்டும் கூறி விரிவஞ்சி விடுத்தார் போலும். அதனால் அவர் காலத்து இவ்விரிவெல்லாம் நுவலும் தொடைநூல் வேறாக இருந்திருக்கும் எனக் கருத இடனுண்டு.

பாவகை

ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே

என நூற்பா கொள்வர் தொல்காப்பியர். இவற்றுள் வஞ்சி ஆசிரிய நடையை ஒக்கும் எனவும், கலி வெண்பா நடையாகும் எனவும் நாற்பாவை இருபாவினுள் அடக்குவர். நாற்பாக்களும் அறமுதலாகிய மும்முதற் பொருளிலும் வாழ்த்தியல் வகை யிலும் வரும். புறநிலைவாழ்த்து, வாயுறைவாழ்த்து, அவை

Koviloor Digital Library

யடக்கியல் மூன்றும் கலிப்பாவிலும் வஞ்சிப்பாவிலும் வாரா. வெண்பாவிலும், ஆசிரியப் பாவிலும், மருட்பாவிலும் வரும். காரிகையோ இவை மருட்பா வொன்றிலே வரும் எனக் கூறும்.

அ) ஆசிரியப்பா

ஆசிரியப்பா மண்டில யாப்பும் குட்டமும் பெறும். மண்டில யாப்பாவது எல்லாவடிக்கண்ணும் நான்குசீர் உடைமை. இதனைக் காரிகை நிலைமண்டில ஆசிரியப்பா எனவும், அடிமறி மண்டில ஆசிரியப்பா எனவும் இருவகைப்படுத்தும். குட்டம் என்பது இடையில் சீர்கள் குறைந்து வருதல். ஈற்றயலடி முச்சீரால் வருவதை நேரிசையாசிரியப்பா என்றும், இடையடிகள் பலசீர் குறைந்து வருவதை இணைக்குற ளாசிரியப்பா என்றும் காரிகை வகைப்படுத்தும். ஆசிரியப் பாவின் வகைகள் காரிகையில் தெளிவாகவுள.

ஆ) வெண்பா

வெண்பாவின் இலக்கணம் தொல்காப்பியம் கூறிற்றிலது. பஃறொடை வெண்பாவை நெடுவெண்பாட்டு எனவும், குறள்வெண்பா, சிந்தியல் வெண்பாக்களைக் குறுவெண்பாட்டு எனவும், கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச்செய்யுள் எல்லாம் வெண்பாயாப்பில் வரும் எனவும், கைக்கிளை, வெண்பாவும் ஆசிரியமும் இணைந்த மருட்பாவால் பாடப்பெறும் எனவும், இத் தொன்னூல் மொழியும். வெண்பாவின் வகைகள் காரிகையில் முறையாக எண்ணப்பட்டுள

இ) பரிபாடல்

பரிபாடல் வெண்பாவின் ஒரு பகுதி என்று காணப் படினும் அதன் உறுப்புக்களைத் தொல்காப்பியம் விரிவாக மொழியும். இதுபா என்று சொல்லமுடியாத பொது நிலை யுடையது எனவும், கொச்சகம், அராகம், சுரிதகம் என்ற

Koviloor Digital Library

உறுப்புக்கள் கொண்டது எனவும், காமப் பொருளாக வரும் எனவும் சொற்சீரடியும். முடுகியலடியும் பெறும் எனவும் பரிபாடலின் தனித்தன்மையை அறிகின்றோம். இத்துணைச் சிறப்புடைய இப்பாவைக் காரிகை அறவே நீக்கிவிட்டது பொருந்துமா? எட்டுத் தொகையுள் பரிபாடல் என ஓர் இலக்கியம் இருக்கும்போது, அதுபற்றி யாதுங்கூறாது விடுத்தற்குக் காரணம் வழக்கு வீழ்ந்த பா என்ற கருத்தாக இருக்கலாம்.

ஈ) கலிப்பா

கலிப்பா செய்யுளியலிலும் காரிகையிலும் விரிவாகக் கூறப்பட்டுள. தொல்காப்பியம்

ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே

என்று கலிப்பாவகை நான்கெனக் கூறும். இவற்றுள் ஒத்தா ழிசைக்கலி சில உட்பகுதிகள் உடையது. இப்பகுதிகளையும் எண்ணின் தொல்காப்பியம் மொழியும் கலிவகைகள் ஆவன.

தொல்காப்பியம் கூறும் கலி வகைகள்

1. அகநிலைவொத்தாழிசைக் கலி

இது ஒத்தாழிசைக்கலி எனவும் பெயர் பெறும். தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்ற நான்குறுப்புப் பெறும்.

2. வண்ணகவொத்தாழிசை

முன்னிலையில் தேவரைப் பராவி வரும். தேவபாணி எனப் பெயர் பெறும். தரவு, தாழிசை எண், தனிச்சொல் சுரிதகம் என்ற ஐந்துறுப்புப் பெறும்.

Koviloor Digital Library

3. கொச்சகவொருபோகு

முன்சொன்ன இருவகைக் கலிப்பாவுறுப்புக்கள் குறைந்தும் வேறுபாடுற்றும் பொருள் வேற்றுமை பெற்றும் வருவன. இது ஐவகைப்படும், பிற் காலத்தார் சொல்லும் பாவினங்கள் இவ்வொரு போகில் அடங்கும் என்பர் உரையாசிரியர்கள்.

4. அம்போதரங்கவொருபோகு

தரவு, கொச்சகம், அராகம், சிற்றெண், சுரிதகம் என்ற ஐந்து உறுப்பு உடையது. கொச்சகம் என்பது சிறியனவாகவும் பெரியனவாகவும் விரவி அடுக்கும் தாழிசை மடிப்புக்கள். அராகம் என்பது குற்றெழுத்துப் பயின்று வரும் முடுகோசை. சிற்றெண் என்பது ஈரசைச்சீர்கள். இதற்கு 60 அடிமேலெல்லை ; 30 அடி சிற்றெல்லை. இது காமப் பொருளாக வரும் என்பர் இளம்பூரணர்.

இந்நான்கும் ஒத்தாழிசைக்கலியின் பகுதிகளாக வருவன.

5. கலிவெண்பா

ஒரு பொருள் நுதலி வரும். வெண்டளை பெறும். பன்னிரண்டடியில் வரும். இது கட்டளையில் வரும் கலிவெண்பா எனப்படும். ஒரு பொருள் நுதலாது சீரும் தளையும்சிதைந்தும் அடி குறைந்தும் இகந்தும் திரிவுபடவருவனவெல் லாம் கலிவெண்பாவின்பாற் படும். இது சீர் நிலையில் வந்த கலிவெண்பாவாகும்.

Koviloor Digital Library

6. கொச்சகக் கலி

தரவும் சுரிதகமும் தனிச்சொல்லும் இடையிடையே வரும். ஐஞ்சீர் அறுசீர் பெற்று வரும். வெண்பாவின் இயல்புபெறும். இது யாப்பாலும் பொருளாலும் வேறுபடும். ஒத்தாழிசைக் கலிக்குத் தாழிசையுறுப்பு மிக்கு வருதல் போல இக்கலியில் வெண்பாவுறுப்பு மிக்கு வரும் என்பர் இளம்பூரணர். பின்னையோர் கூறும் பாவினங்களிற் சில இதன்பாற்படும்.

7. உறழ்கலி

கொச்சகக் கலியின் யாப்பியல்புகளைப் பெரும்பாலும் பெறும். சுரிதகம் என்பது இராது. வினவும் விடையும் என்ற முறையில் உரையாடலாக இருக்கும். இது நாடகவமைப்புடையது.

எனவே தொல்காப்பியம் எழுவகைக் கலி கூறுவது எனவும், ஒத்தாழிசைக்கலி இயல்பான நான்குறுப்புக்களை முறையாக உடையது எனவும், எண் என்ற ஓர் உறுப்புக் கூடும்போது வண்ணக ஒத்தாழிசையாம் எனவும், அராகம் என்ற உறுப்புக் கூடும்போது அம்போதரங்கவொருபோகு ஆகும் எனவும், ஒரு பொருள் நுதலிய நெடியவெண்பா கலிவெண்பா ஆம் எனவும், கூற்று-மாற்றம் என்ற நடை காரணத்தால் உறழ்கலியாம் எனவும், கலிக்குரிய சிலவுறுப்புக்கள் குறையுங்கால் கொச்சக வொருபோகு ஆகும் எனவும், இவ்வுறுப்புக்கள் மாறியும் சீர் கூடியும் வரும்போது கொச்சகக் கலியாம் எனவும், இவ் விலக்கணங்களை ஓரளவு உணரலாம். அடியெல்லைகளாலும், பொருளாலும், யாப்பாலும் வரும் நுண்ணிய வேற்றுமைகளை உரைகள் எடுத்துக் காட்டுகின்றன. இடைக்காலத்தார் மொழிந்த பாவினங்கள் கொச்சக வொருபோகிலும் கொச்சகக் கலியிலும் அடங்கும் என்பது உரைப்பெருமக்கள் கருத்து.

Koviloor Digital Library

யாப்பருங்கலக் காரிகை கூறும் கலி வகைகள்

ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக்கலி என்று கலிப்பா மூவகைப்படும். இவை ஒவ்வொன்றுக்கும் சில உட் பகுதிகள் உண்டு. அவற்றையும் ஒன்றுகூட்டினுல் காரிகை மொழியும் கலிப்பாக்கள் பின்வருமாறு.

1. நேரிசை ஒத்தாழிசைக் கலி

இது தொல்காப்பியர் கூறும் அகநிலை ஒத்தாழிசைக் கலியை ஒக்கும்.

2. அம்போதரங்க ஒத்தாழிசைக்கலி

இது தொல்காப்பியம் கூறும் வண்ணக ஒத்தாழிசையை ஒக்கும்.

3. வண்ணக ஒத்தாழிசைக்கலி

இது தொல்காப்பியத்து வரும் அம்போதரங்க வொருபோகினைப் பெரும்பாலும் ஒப்பது.

இவை மூன்றும் ஒத்தாழிசைக் கலியின் உட்பிரிவுகள். தொல்காப்பியம் எண் உறுப்புப் பெற்றதனை வண்ணகம் எனவும், அராகவுறுப்புப் பெற்றதனை அம்போதரங்கம் எனவும் கூறும். காரிகையில் இப்பெயர்கள் மாறியுள்ளன. கொச்சகம் என்ற உறுப்பு இப்பாக்களில் காரிகையில் இடம் பெறவில்லை.

4. கலிவெண்பா

இது தொல்காப்பியம் கூறும் கலிவெண்பாவை முற்றும் ஒக்கும்.

5. வெண்கலிப்பா

அயற்றளை விரவி வரும் வெண்பா ஆகும். 'ஒரு பொருள் நுதலிய' என்று தொடங்கும் தொல் காப்பியத்தில் வெண்கலிப்பா கொள்வதற்கும்

Koviloor Digital Library

குறிப்பில் இடம் உண்டு என்பர் உரையாசிரியர்கள்.

6. கொச்சகக்கலி

இது தரவு கொச்சகம், தரவிணைக் கொச்சகம், சிஃறாழிசைக் கொச்சகம், பஃறாழிசைக் கொச்சகம், மயங்கிசைக் கொச்சகம் என ஐவகைப்படும்.

இவை தொல்காப்பியம் கூறும் கொச்சகவொருபோகிலும் கொச்சகக்கலியிலும் பெரும்பாலும் அடங்கும்.

தொல்காப்பியம் சொல்லிய உறழ்கலி, யாப்பில் பிறவற்றோடு வேறுபாடின்மையின் காரிகை அதனைக் கூறவில்லை. கொச்சகவொருபோகினைக் காரிகை கொச்சகக் கலியுள் அடக்கிற்று. வண்ணகம், அம்போதரங்கம் என்ற கலிப்பாக்கள் உறுப்பளவிலன்றிப் பெயரளவில் மாறிக் கிடக்கின்றன.

உ) வஞ்சிப்பா

நிரையீற்றில் வரும் வஞ்சியுரிச்சீர் 60. வஞ்சிப்பாவில் ஏனைய சீர்களும் வரப்பெறும். நேரீற்றியற்சீர்கள் (தேமா புளிமா எனபன) இப்பாவின் அடியிறுதியில் வாரா. வஞ்சித் தளையுண்டு. கட்டளை வஞ்சியுரிச்சீர் மூன்றெழுத்திற் குறையாது ஆறெழுத்து வரை வரும். வஞ்சியடி இருசீராலும் முச்சீராலும் வரப்பெறும். இருசீரான் வருவது சமநிலை வஞ்சியெனவும், முச்சீரான் வருவது வியநிலை வஞ்சியெனவும் பெயர் பெறும். இவை அசையைக் கூனாகப் பெறும். வஞ்சி ஆசிரியமாகியசெந்தூக்கினை ஒக்கும் என்றமையால், வஞ்சியடியிறுதி நாற்சீர் பெறும் என்பதும், ஈற்றயல் முச்சீரும் நாற்சீரும் பெறும் என்பதும் போதரும். வஞ்சிப்பாவுக்கு நாற்சீர் கொண்ட அளவடியின்மையின், அளவடிக்குக் கூறப்படும் பல யாப்பியல்புகள் அதற்கு இல்லை. வஞ்சி அறமுதலாகிய பொருளிலும், வாழ்த்தியல் வகையிலும் ஏனைப்பாக்கள் போலப் பாடப்படும்.

Koviloor Digital Library

காரிகையில் வஞ்சிப்பா பற்றி இவ்வளவு விரிவான குறிப்பில்லை. குறளடி வஞ்சிப்பாவும், சிந்தடி வஞ்சிப்பாவும் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் இறும் என்று இலக்கணம் கூறப்படுகின்றது. தொல்காப்பியமோ வஞ்சிக்குச் சுரிதகம் சொல்லவில்லை.

மேலே இரு நூலிலும் காட்டப்பட்ட ஒப்பீடுகள் நூற் பாக்களோடு உரைகளையும் ஒருவாறு தழுவிச் செய்யப்பட்டன. ஒவ்வொரு பாவிற்கும் உரிய இலக்கணங்களைத் தொல் காப்பியமும் காரிகையும் நூற்பாக்களில் கூறவில்லை என்பதும் உரைகளே அவற்றிற்குரிய அசையும், சீரும், தளையும், அடியும் பற்றி விரிவாகத் தொகுத்துக் கூறுகின்றன எனவும், ஆதலின் உரைகளும் ஒப்பீட்டுக்குரியவை எனவும் அறிய வேண்டும். காரிகையைப் பொறுத்தவரை உரையொன்றே. தொல் காப்பியச் செய்யுளியலுக்கோ இளம்பூரணம், பேராசிரியம், நச்சினார்க்கினியம் என மூவுரைகள் உள. ஆதலின் ஒப்பீட் டாளர்க்கு மூன்றுரைகளையும் முதற்கண் ஒப்பிட்டுக் காணும் கடப்பாடு உண்டு. எனினும் இக்கட்டுரை விளக்கத்தில் பெரும்பாலும் இளம்பூரணமே தழுவப்பட்டுள்ளது.

அட்டவணை — 1

தொல்காப்பியச் செய்யுளியல் — சுருக்கம்

1. செய்யுள் உறுப்புக்கள் 34. அவை மாத்திரை முதலாக யாப்பு ஈருக 26. இவை தனிநிலைச் செய்யுட்கு உறுப்பாம். அம்மை முதலாக இழைபு ஈருக 8. இவை தொடர்நிலைச் செய்யுட்கு உறுப்பாம்.

2. மாத்திரையும் எழுத்தும் எழுத்ததிகாரத்திற் கூறப் பட்டவையே.

Koviloor Digital Library

3—9. அசைகள். நேர், நிரை, நேர்பு, நிரைபு என அசை வகை நான்கு. இவற்றுள் நேரும் நிரையும் இயலசை எனவும், நேர்பும் நிரைபும் உரியசை எனவும் படும்.

10. அசையும் சீரும் இசையொடு சேர்த்துப் பார்க்க வேண்டும்.

11—30. சீர்கள். ஈரசைச் சீர் மூவசைச்சீர் பற்றியன. இயற்சீர் 10. ஆசிரிய வுரிச்சீர் 6. வெண்பாவுரிச் சீர் 4. வஞ்சியுரிச்சீர் 60. ஓரசைச்சீர் 4. இவை இன்னின்ன பாக்களில் வரும் என்ற விதிகள் கூறப் பட்டுள. நேர் நிரை நேர்பு நிரைபு என்ற ஓரசைகளும் சீராகும் இடனுண்டு. அங்ஙனம் வருங்கால் இயற்சீர் போலத்தளைபெறும்.

31—51. அடிகளும் அடிக்குரிய எழுத்துக்களும். அடியென் பது பாட்டுக்கு இன்றியமையா அடிப்படையுறுப்பு. குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து அடிகள் எழுத்தெண்ணி வகுக்கப்படும். இவ்வெழுத்துக்கள் 4–20 வரையிருக்கும். உயிரும் உயிர் மெய்யுமே இவ்வெழுத்துக்களிற் கணக்கிடப் படும். ஒற்றும், குற்றுகரமும், குற்றியலுகரமும் ஆய்தமும் கணக்கிடப்படா. ஒரு சீர் 5 அல்லது 6 எழுத்துக்குமேல் இராது. அசைச்சீர், இயற்சீர், ஆசிரியவுரிச்சீர், வஞ்சியுரிச்சீர் என்ற ஐந்தினையும் ($5 \times 5 \times 5 \times 5$) நான்கு முறை தம்மில் உறழ அடிகள் 625 ஆகும் என்ப. எழுத்தடிகள் நான்கு பாவிலும் வரும் நிலைகள் கூறப்பட்டுள.

52—73. ஓசையும் தளையும் அடிகளும். தன் சீரே வரும் போது தளைவகை கூற வேண்டுவதில்லை. இயற்சீர் ஒப்பு ஆசிரியத்தளையாகும். அளவடியும் சிந்தடியும் வெண்பாவுக்கு வரும். அது இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை பெறும். கலிப்பா நெடிலடி

Koviloor Digital Library

யும், கழிநெடிலடியும் பெறும். வெண்பாவுரிச்சீர் முன் நிரைச்சீர் வரின் கலித்தளையாம். இயற்சீர் வெண்டளை ஆசிரியப்பாவிலும் வரும். ஆசிரியப்பாவில் ஐஞ்சீரடி, அறுசீறடி, எழு சீரடிகளும் வரப் பெறும். இவை முடுகியல் ஓசை பெறும். நான்கு பாவினுள் இறுதியிலும், ஈற்றயலிலும், இடையிலும் வரும் அடிமுறைகள் கூறப் பெற்றுள.

74—75. யாப்பு என்பது எழுத்து, அசை, சீர், அடி என்ற நிலையில் குறித்த பொருள் முடியுமாறு வேண்டும் சொற்பெய்தல். இவ்வியாப்பு பாட்டு முதலாக முது சொல் ஈருக எழுவகைப்படும்.

76. மரபு என்பது இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்ற நாற்சொல்லால் யாப்பு வழிச் செல்வது.

77—83. தூக்கு, நாற்பாவிற்கும் அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் ஓசைகளாம்.

84—99. தொடை, மோனை முதலான தொடைவகைகளும் தொடைவிரியும் 13699ஆம்.

100. நோக்கு என்பது ஒரு பொருளை முடிக்குந்துணையும் பிறிது நோக்காது எல்லாம் அதுதன்னையே நோக்கிச் செல்லும் நிலை.

101-156. பாவகைகளும் அளவியலும். ஆசிரியம், வெண்பா, வஞ்சி, கலி, பரிபாட்டு முதலான பாவகைகளும் அவை பாடும் பொருள்களும் அடியெல்லைகளும் விரிவாக இடம் பெற்றுள.

126—149 வரை நூற்பாக்கள் கலிப்பாவிற்கு உரியன. இதுகாறும் கூறியவை அடிவரையறையுடைய பாட்டிற்கேயாம்.

Koviloor Digital Library

157-172. அடிவரையறையில்லாத நூல், உரை, நொடி, பிசி, முதுமொழி, மந்திரம், குறிப்பு என்ற செய்யுள் வகைகள்.

173—176. பண்ணத்தியும் அளவியல் தொகையும்.

177. அகத்திணை ஏழு.

178—180. களவுக்கைகோளும் கற்புக்கைகோளும்.

181—191. களவிலும் கற்பிலும் கூற்றிற்குரியார்; அல்லாதார்

192. கேட்டற் பொருண்மை.

193—203. இடம், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள்வகை, துறை, மாட்டேறு.

204—226. பாவண்ணம் முதலாக முடுகு வண்ணம் ஈறாக 20 வண்ணங்கள்.

227—234. அம்மை முதல் இழைபு வரை 8 வனப்புக்கள்.

235. செய்யுட்புறநடை.

அட்டவணை — 2

யாப்பருங்கலக் காரிகை — சுருக்கம்

உறுப்பியல்

1 — 3. தற்சிறப்புப் பாயிரம்.

4. எழுத்துக்கள் 13.

5. நேரசை நிரையசை 2.

6 — 8. சீர்களும் வாய்பாடுகளும். ஈரசைச் சீர், நேரீற்று மூவசைச்சீர், நிரையீற்று மூவசைச்சீர், ஓரசைச்சீர், நாலசைச்சீர், இவற்றுக்குரிய வாய்பாடுகள்.

Koviloor Digital Library

9. உதாரண இலக்கிய முதனிலைப்புக் காரிகை — சீர்கட்கு உரியவை.

10. தளைகள் ஏழு.

11. உதாரண இலக்கிய முதனிலைப்புக் காரிகை — தளைகட்கு உரியவை.

12. ஐவகையடிகள். சீரடிப்படையில்; எழுத்தளவில் அல்ல.

13. உதாரண இலக்கிய முதனிலைப்புக் காரிகை — அடிகட்கு உரியவை.

14. நால்வகைப் பாக்கட்கும் உரிய அடியின் சிறுமை பெருமைகள்.

15. உதாரண இலக்கிய முதனிலைப்புக் காரிகை — அடியெல்லைக்கு உரியவை.

16—17. தொடைகள்: அடி, மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை.

18. உதாரண இலக்கிய முதனிலைவுக் காரிகை — தொடைகட்கு உரியவை.

19. இணைமோனை முதலான 35 தொடைவிகற்பங்கள்.

20. உதாரண இலக்கிய முதனிலைப்புக் காரிகை — தொடைவிகற்பங்கட்கு உரியவை.

21. உறுப்பியற் காரிகைகளின் முதனிலைப்புக் காரிகை — சூத்திரத் தொகுப்பு.

செய்யுளியல்

22. நான்கு பாவிற்கும் உரிய அடியும் ஓசையும்.

Koviloor Digital Library

23 உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை — அடிக்கும் ஓசைக்கும் உரியவை.

24—28. வெண்பா இலக்கணம், அதன் வகை, அதனினம்.

29—30. ஆசிரியப்பாவின் இலக்கணம், அதன் வகை, அதனினம்.

31—34. கலிப்பாவின் இலக்கணம், அதன் வகை, அதனினம்.

35. வஞ்சிப்பாவின் இலக்கணம், அதன்வகை, அதனினம்.

36. மருட்பாவும், பாடு பொருளும்.

37. செய்யுளியற் காரிகையின் முதனினைப்புக் காரிகை.

ஒழிபியல்

38. ஒருசார் எழுத்திற்குப் புறனடை.

39. ஒருசார் அசைகட்குப் புறனடை.

40. சீரும் தளையும் பற்றிய முறைமை.

41. அடிமயக்கம்.

42. ஒருசார் அடிக்கும் தொடைக்கும் இலக்கணம்.

43. ஒருசார் எதுகைக்கும் மோனைக்கும் இலக்கணம்.

44. தரவு தாழிசைகட்கு அடிவரையறை.

45. எல்லாப் பாக்கட்கும் பொதுவிலக்கணம். கூன், விகாரம், வகையுளி, வாழ்த்து, வசை, வனப்பு, பொருள், பொருள் கோள், குறிப்பிசை, செய்யுள் ஒப்புமை.

46. இந்நூலுள் வகுத்த பொருள் எல்லாம் தொகுப்பு.

47. ஒழிபியல் காரிகைகளின் முதனினைப்புக் காரிகை.

Koviloor Digital Library

அட்டவணை — 3

தொல்காப்பியச் செய்யுளியலில் உள்ளவை: காரிகையில் இல்லாதவை

அ) யாப்பு, மரபு, நோக்கு என்ற உறுப்புக்கள் காரிகையில் இல இவை நேரடியாகச் செய்யுளின் புறவடிவுக்குத் தொடர்புடையனவல்ல.

ஆ) தொல்காப்பியர் அகத்திணைக்கு முதன்மை கொடுப்பவ ராதலின், திணை, கைகோள், பொருள் வகை கேட்போர். களன், காலம். பயன், மெய்ப்பாடு எச்சம், முன்னம், பொருள், துறை என்றிவற்றைச் செய்யுள் உறுப்பாக மொழிந்தனர். இந்நோக்கம் காரிகையாசிரியர்க்கு இன்மையின் இவை இடம் பெருமை இயல்பே.

இ) மாட்டேறு பொருள்நிலை நோக்கிய தொடரியல் ஆதலின் காரிகையில் இல்லை.

ஈ) எழுத்தெண்ணி அடிவகுக்கும் கட்டளை முறையில்லை.

உ) தொல்காப்பியம், பாட்டு, உரை நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என எழுவகையாப்புக் கூறும். பாட்டு என்பது அடிவரையறையுடையது; ஏனைய ஆறும் அடிவரையறையில்லாதவை. இவ்வாறும் காரிகையில் இல.

ஊ) உறழ்கலி, பரிபாடல், பண்ணத்தி யில.

எ) அவையடக்கியல், அங்கதம் என்றிவையில.

ஏ) புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்பன மருட்பாவில் வரும் எனப் பொதுப்படக் காரிகை கூறுவதன்றித் தொல்காப்பியம் போல ஒவ்வொன்றையும் இலக்கணஞ் சுட்டிக் கூற வில்லை.

ஐ) வனப்பு எட்டு, வண்ணங்கள் நூறு எனக் காரிகை பொதுப்படக் கூறுவதன்றித் தொல்காப்பியம்போல ஒவ்வொன்றிற்கும் தனி நூற்பா கூறவில்லை.

Koviloor Digital Library

அட்டவணை — 4

காரிகையில் உள்ளவை :
தொல்காப்பியச் செய்யுளியலில் இல்லாதவை :

1. காரிகை தனி நூலாதலின் தற்சிறப்புப் பாயிரம் உண்டு.
2. நாலசைச்சீர் என்ற பொதுச்சீர் உண்டு.
3. எழுவகைத்தளைகள் செய்யுள் உறுப்பாகக் கூறப்படும். ''எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை பாவினங் கூறுவன்'' என்பது காரிகை.
4. நாற்பாவோடு பாவினம் என்ற பிரிவும் உண்டு. ஒவ்வொரு பாவும் தாழிசை, துறை, விருத்தம் என்ற இனம் பெறும்.
5. முரண் தொடைக்குக் கடை முதலாக ஐந்து தொடைகளும் இன்னும் சில தொடைவிகற்பங்களும் காரிகையில் உண்டு.
6. ''மருள்தீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசை வனப்புப் பொருள்கோள் குறிப்பிசை யொப்பு'' எனச் சிலவற்றைப் பொதுப்படச் சொல்லிச் செல்லும் காரிகை.

அட்டவணை — 5

தொல்காப்பியச் செய்யுளியலும் யாப்பருங்கலக் காரிகையும் ஒற்றுமை வேற்றுமை — ஒரு பார்வை

தொல்காப்பியச் செய்யுளியல்	காரிகை
1. மாத்திரை 2. எழுத்தியல் } எழுத்ததிகாரத்திற் சொல்லப் பட்டவை	1. 2. } எழுத்து வகை 13 இலக்கண நூல் சொல்லும் அளவு
3. அசை 4. நேர் நிரை, நேர்பு நிரைபு	3. அசை 2. நேர்பு, நிரைபு என்ற அசைகள் இல

Koviloor Digital Library

தொல்காப்பியச் செய்யுளியல்	காரிகை
4. சீர் 84.	4. சீர் 37. நாலசைச்சீர் உண்டு
5. அடி 625 கட்டளையடியும் சீரடியும் உண்டு	5. கட்டளையடிகள் இல. சீரடி வகையே உண்டு
6. யாப்பு	6. இல்லை
7. மரபு	7. இல்லை
8. தூக்கு	8. ஓசையென்ற பெயரால் உண்டு
9. தொடை 13699	9. தொடை 43
10. நோக்கு	10. இல்லை
11. பா	11. உறுப்பாக எண்ணப்பட வில்லை. அடிவரையறை யுடைய பாட்டு என்ற ஒரு வகையே உண்டு
12. அளவியல்	12. இல்லை
13. திணை	13. இல்லை
14. கைகோள்	14. இல்லை
15. பொருள்வகை	15. இல்லை
16. கேட்போர்	16. இல்லை
17. களன்	17. இல்லை
18. காலம்	18. இல்லை
19. பயன்	19. இல்லை
20. மெய்ப்பாடு	20. இல்லை
21. எச்சம்	21. இல்லை
22. முன்னம்	22. இல்லை
23. பொருள்	23. இல்லை
24. துறை	24. இல்லை
25. மாட்டு	25. இல்லை
26. வண்ணம் 20	26. வண்ணம் 100 மிகச் சுருக்கமாக உண்டு

Koviloor Digital Library

தொல்காப்பியச் செய்யுளியல்	காரிகை	
27. அம்மை	27.	வனப்பு எட்டெனச் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது
28. அழகு	28.	
29. தொன்மை	29.	
30. தோல்	30.	
31. விருந்து	31.	
32. இயைபு	32.	
33. புலன்	33.	
34. இழைபு	34.	

அட்டவணை — 6

ஒப்பீடு

யாப்பருங்கலக் காரிகை	தொல்காப்பியச் செய்யுளியல்	
1. நாலசைச்சீர்	1. இல்லை	
2. தளை எழுவகை; தளை ஓர் உறுப்பாகும்	2. ஓர் உறுப்பாக எண்ணப் படவில்லை	
3. வெண்பாவினம் தாழிசை துறைவிருத்தம்	3. இல்லை	இனங்களை யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைய கொச்சகவொரு போகில் அடக்கிக் கொள்ளலாம் என்பது பேராசிரியர் கருத்து
4. ஆசிரியப்பாவினம் துறைவிருத்தம்	4. இல்லை	
5. கலிப்பாவினம் துறைவிருத்தம்	5. இல்லை	
6. வஞ்சிப்பாவினம் துறைவிருத்தம்	6. இல்லை	
7. கடை முரண்கள் முதலானவை	7. இளம்பூரணர் உரையில் உண்டு	

Koviloor Digital Library

யாப்பருங்கலக் காரிகை	தொல்காப்பியச் செய்யுளியல்
8. வருக்கமோனை, நெடில் மோனை, இனமோனை முதலானவை	8. ஓரளவு உண்டு
9. அறுவகை விகாரம்	9. சொல்லதிகாரத்தில் உண்டு
10. வகையுளி	10. ஒருவகையால் உண்டு
11. வாழ்த்து	11. ஒருவகையால் உண்டு
12. வசை	12. ஒருவகையால் உண்டு
13. பொருளும் பொருள்கோளும்	13. சொல்லதிகாரத்திலும், பொருளதிகாரத்திலும் உண்டு
14. குறிப்பிசை	14. எழுத்ததிகாரத்தில் உண்டு
15. ஒப்பு	15. உண்டு. ஒப்பு என்ற குறியீடு இல்லை.

Koviloor Digital Library

6. தொல்காப்பிய நயம்

'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப
பழிதீர் செல்வ மொடு வழிவழி சிறந்து
பொலிமின்' (1367)

என்ற தொல்காப்பிய அடிகள் நாம் விரும்பிய தெய்வத்தை வழிபடும் உரிமையையும், இறைவன் காப்பான் நன்ருக வளமாக இம்மையில் வாழலாம் என்ற நம்பிக்கையையும் தருகின்றன. தெய்வத்துக்கு 'வழிபடு' என்ற அடையும், செல்வத்துக்குப் 'பழிதீர்' என்ற அடையும் வெல்லுஞ் சொல்லாக அமைந்துள்ளன. இங்ஙனம் வாழ்த்து வழங்கும் தொல்காப்பியத்திற்குன் இலக்கிய நெறிகளின்படி நயங்காட்ட முயல்கின்றேன்.

இலக்கியப் பார்வை

சிலப்பதிகார நயம், இராமாயண நயம், பெரியபுராண நயம் என்ற தொடர்களையே கேட்டுப் பழகியவர்கட்குத் தொல்காப்பிய நயம் என்ற தொடர் காய்ச்சிய நாராசத்தைக் காதில் ஊற்றுவது போலவும், கல்லில் நாருரிப்பது போலவும், வெங்காயத்தில் விதை தேடுவது போலவும் படும். பழகிய பழக்கந் தவிர்த்து முற்றும் திறந்த மனத்தோடு தொல்காப்பியத்துள் புகுங்கள். அங்கு ஒருவகை இலக்கிய வனப்பைக் கண்டு சுவையுங்கள் என்று சுட்டிக் காட்டுவதற்கே

Koviloor Digital Library

இவ்வாராய்ச்சியை எடுத்துக் கொண்டேன். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்ற இரண்டளவில் தொல்காப்பியம் முடிந் திருந்தால் இத்தலைப்புக்குப் பிறப்பு இராது. மக்கள் வாழ்வான அகம் புறம் பற்றி அழகுறத் தொடுக்கும் பொரு ளதிகாரம் என ஒன்று செம்பாகம் இருத்தலால் இலக்கியப் பார்வைக்கு இடந்தோன்றுகின்றது.

இலக்கிய ஆட்சிகள்

திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால்களைக் காட்டிலும் காமத்துப்பால் இலக்கியச்சுவை மிக்கது. அப்பாலுக்கும் தொல்காப்பியத்தில் உள்ள அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற இயல்களுக்கும் என்ன வேற்றுமை? 'பாடலுட் பயின்றவை நாடுங்காலை' என்றபடி சங்க அகப்பாடல்களில் முதல், கரு, உரி, என்ற மூன்றும் முறையாகப் புனையப்படுகின்றன. அத்தன்மை திருக்குறட் காமத்துப்பாலில் உண்டா? காமத்துப்பாற்குறள்கள் முதலும் கருவும் இல்லா உரிப்பொருளே கொண்டவை.

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல (கு. 1100)

என்ற குறள் நயம் பார்ப்பதற்கு உரியது எனின்,

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும் (தொ. 1042)

என்ற களவியல் நூற்பா உரியது ஆகாதாகி விடுமா? வள்ளுவர்க்கு இவ்வாறுபாட வழிகாட்டியவர் தொல்காப்பியர் தாமே.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (கு. 28)

Koviloor Digital Library

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப (தொ. 1435)

கடலன்ன காமம் உழந்தும் மடலேருப்
பெண்ணிற் பெருந்தக்க தில் (கு. 1137)

எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேற்
பொற்புடை நெறிமை யின்மையான (தொல். 980)

இவை ஒன்று குறள் வடிவு, ஒன்று நூற்பா வடிவு என்பது தவிர பொருள் நயத்திலும், சுவையிலும் வேறுபாடில்லை. 'பொற்புடை நெறிமை இன்மை' என்ற தொடரையே திருவள்ளுவர் 'பெருந்தக்கதில்' என்று வேறு சொற்களால் பாடுவர். 'எத்திணைமருங்கினும்' என்பதன் விளக்கமே 'கடலன்ன காமம் உழந்தும்' என்ற குறட்பகுதியாகும். நிறைமொழி மாந்தர் என்ற திருக்குறள் ஒருசீர் குறைந்த தொல்காப்பியம் இல்லையா? எனவே தழுவிக் கொண்ட குறள்கள் நயமாகுமெனின், தழுவக் கொடுத்த தொல் காப்பியம் நயமாகாதா? எண்ணிப் பார்க்க வேண்டும்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் நிறைந்த தொல் காப்பியச் சாயலுடையது. 'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல், சீர்த்தகு சிறப்பிற் பெரும் படைவாழ்த்தல்' என்ற புறத்திணை இரண்டு தொல்லடிகளின் விரிவே வஞ்சிக் காண்டம் என்பது வெளிப்படை. 'வடுநீங்கு சிறப்பிற் றன் மனையகம்' என்றார் இளங்கோ. அவருக்கு முன்பே தொல்காப்பியர் 'வடுநீங்கு சிறப்பின் முதலன' (1033) எனவும், 'வடுவறு சிறப்பிற் கற்பிற் றிரியாமை' (1092) எனவும் கூறியுள்ளார். 'கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணாய்' என்ற சிலம்படி 'கழிபெருஞ் சிறப்பிற்றுறை பதின்மூன்றே' என்ற தொல் காப்பியத்தின் மேற்கோளாகும்.

தொல்காப்பியத் தொடர்களும், பொருள்களும், தொடை நயங்களும், பின்னைப் பேரிலக்கியங்களிற் பெரிதும் பதிந்துள

Koviloor Digital Library

என்பதனை ஒப்பீட்டு முறையில் ஆராய்ந்தால் தெற்றென விளங்கும் ஓராட்சியைக் காண்போம்.

என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்புதலை யடுத்த வன்புறைக் கண்ணும் (தொல். 1059)

என்பன களவியலில் வரும் ஈரடிகள். என்பு, அன்பு என்பன தொடைநயங்களாக வந்துள. இவையெல்லாம் வள்ளுவர், சேக்கிழார், கம்பர் பெருமக்களை மிகவும் கவர்ந்தன. திருக்குறள் அன்புடைமை அருளுடைமை அதிகாரங்களில் தொல்காப்பியத்து வரும் அன்பு, அருள் பற்றிய கருத்துக்கள் பெரிதும் இடம் பெற்றிருக்கின்றன.

முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூரவள்ளலார்மலையை நோக்கி
என்பு நெக் குருகி உள்ளத் தெழுபெரு வேட்கை யோடும்

எனப் பெரியபுராணத்தில் கண்ணப்பதேவர், குடுமித்தேவர் காட்சியிலும்,

துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கித்
தென்புலத் தன்றி மீளா நெறி யுய்க்குந் தேவரோதாம்
என்பெனக் குருகு கின்ற திவர்கின்ற தளவில் காதல்
அன்பினுக் கவதியில்லை யடைவென் கொல்அறிதல் தேற்றேன்

என இராமாயணத்தில் அனுமன் இராமன் காட்சியிலும் இழையோடிக் கிடக்கின்றன. 'வாளினைத் தொழுவதல்லால் வணங்குதல் மகளிர் ஊடல் நாளினும் உளதோ' என்ற இரணியன் முழக்கத்தில் மனைவியுயர்வும், கிழவோன் பணிவும் நினையுங்காலைப் புலவியுள் உரிய என்ற அகப்பொருள் விதிக்கு மறுப்பினைக் காண்கின்றோம்.

Koviloor Digital Library

தொல்காப்பிய ஆட்சிப் பதிப்பு

திருக்குறளைச் சொல்லாலும், தொடராலும், பொருளாலும், நடையாலும் வழிவழி நூல்கள் எவ்வாறு எவ்விடங்களில் எடுத்தாண்டுள என்ற ஆய்வுகளும், ஆய்வுப் பதிப்புக்களும் வந்திருக்கின்றன. அதனால் தமிழிலக்கியத்தில் குறளின் செல்வாக்கை வெளிப்படையாகத் தெளிகின்றோம். தன்னைப் பலவிடங்களில் தழுவிக் கொண்டு வளம் பெற்ற வள்ளுவனுக்கு நடந்த இத்தகையதொரு பதிப்பு முயற்சி தனக்கில்லையே என்று உண்மையில் தொல்காப்பியர் ஆவி பொறுமைப் படாதா? தொல்காப்பியம் ஓர் இலக்கணம் என்ற அவப் பார்வையால் அறிஞருலகம் திருக்குறளுக்குக் கொடுத்து வரும் நன்மதிப்பினை இம் முதனூலுக்குக் கொடுக்கத் தவறி விட்டது. தொல்காப்பிய ஆட்சிப் பதிப்பு என ஒன்று வருமானால் நயம் பிலிற்றும் இலக்கியங்கட்கெல்லாம் நயம் ஊட்டிய தேனிறால் தொல்காப்பியம் என்பது உறுதிப்படும். ஆதலின் அதன்கண் சுவை காண்பது பழத்திற் சுவை காண்பதை ஒக்கும் என்று நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கே இத்துணைப் பீடிகை கூறவேண்டியதாயிற்று.

உரையில் நயங்கள்

தொல்காப்பிய உரையாசிரியர்கட்கு அந்நூலில் நயத் தன்மை உண்டு என்பதில் ஐயப்பாடில்லவேயில்லை. அன்னவர் உரைகளில் சுவைக்குறிப்புக்கள் பல உள என்பதனை அந்நோக்கொடு தொகுத்துப் பார்ப்பார்க்குப் புலனாகும். 'செங்கடுமொழியாற் சிதைவுடைத்தாயினும்' (1059) என்ற தோழி கூற்றில் மொழிக்குச் செம்மை கடுமை என்ற இரண்டு அடைமொழிகள் வந்துள்ளன. வாயாற் கடுமொழி, மனத்தினான் இனிய மொழி என்று நயம் உரைப்பர் இளம்பூரணர். 'மாயப்பரத்தை உள்ளிய வழியும்' (1092) என்ற தலைவி கூற்றில் மாயம் என்பது பரத்தைக்குப் பண்பாகி இனஞ்

Koviloor Digital Library

சுட்டாது வந்தது என இலக்கண விளக்கந்தந்து நுண்மை காட்டுவர். 'எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்' (1180) என்ற பொருளியல் நூற்பாவில் 'எண்ணரும் பாசறை' என்னும் தொடருக்கு மாற்ருரை வெல்லும் குறிக்கோள் கொண்ட தலைவன் தலைமகளை நினைக்க மாட்டான் என்று குறிக்கோளை வெளிப்படுத்துவர்.

வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கிற் றவிர்தல் இல்லை (1139)

என்ற நூற்பாவுக்கு வினைமுடித்தவுடனே இடையிலே தங்காது இரவும் பகலுமாக விரைந்து வீட்டுக்கு வருவான் எனவும், இடையே சிலநாள் தங்கித் தங்கி வருமாயின் மனைவியிடத்து மிக்க அன்பு இல்லை என்று படும் எனவும் கருத்துரைப்பர். இத்துணையும் உரையாசிரியர் சுட்டிய உரைநயங்கள்.

தொல்காப்பியத்து நான்கு இயல்களுக்கே பேராசிரியர் உரைகிடைத்திருந்தாலும் அவ்வுரைகளில் நிரம்பிய நயக் குறிப்புக்கள் உள. உள்ளப்பட்டநகை (1197), விளிவில் கொள்கையழுகை (1198), யாப்புற வந்த இளிவரல் (1199), மதிமைசாலா மருட்கை (1200), பிணங்கல் சாலா அச்சம் (1201), சொல்லப்பட்ட பெருமிதம் (1202), வெறுப்ப வந்த வெகுளி (1203), அல்லல் நீத்த உவகை (1204), என எட்டு மெய்ப் பாட்டின் நூற்பாக்களில் வரும் அடைகட்கெல்லாம் பொருள் நுணுக்கம் செய்வர். இவ்வடைகள் இலக்கிய வனப்பின் என்பதை எவரும் உடன்படுவர். 'உள்ளப்பட்டநகை என்றத ஞன் உள்ளத்தொடு பிறவாத நகையும் உண்டு எனவும்' வறிது அகத்தெழுந்த வாயல் முறுவள் என்ற கண்ணகியின் சிரிப்பு எடுத்துக்காட்டாகும் எனவும் விளக்கந்தருவர். அல்லல் நீத்த உவகை என்ற அடைக்குப் பிறர் துன்பங் கண்டு வரும் உவகை எனப்படாது எனவும் அடிப்படையை வெளிப் படுத்துவர்.

Koviloor Digital Library

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும் (1594)

இந்நூற்பாவில் இறைவன் ஒரு காலத்து வினையுடையவனாக இருந்தவன் போலவும், பின் அது நீங்கினான் போலவும் அறிகின்றோம். வினையீட்டியவன் முனைவன் ஆக முடியுமா? என்ற எதிர்ப்புணர்வு நமக்கு இயல்பாக எழுகின்றது. இதனை எண்ணுகின்றார் பேராசிரியர். அவர் விளக்கம் பின்வருமாறு.

'வினையின் என்ற வேற்றுமை நிற்பதன் நிலையும் நீங்குவதன் நீக்கமும் கூறுமாகலின் ஒரு காலத்து வினையின் கண்ணின்று ஒரு காலத்து நீங்கினான் போலக் கூறிய தென்னை யெனின் அற்றன்று: வினைப்பயந் தொடரற்ப்பாற்று உள்ளம் இலன் என்பதன்றி அவர்க்குச் சில செய்கை யுள என்பது பல்லோர்க்கும் உடம்பாடாகலின், அவ்வினைக் கணின்றே போகமும் பாவமும் மெய்யுணர்வும் புற்றித் தெறப்பட்ட வித்துப்போலப், பிறப்பில் பெற்றியனாகி நீங்குமாதலின் அவ்வாறு கூறல் அமையும் என்பது'

இது மேலைத் தொல்காப்பிய நடைக்குப் பேராசிரியர் நுண்ணிதின் வரைந்த மெய்ப்பொருள் விளக்கமாகும். தெறப்பட்ட வித்துப் போலப் பிறப்பில் பெற்றியன் என்ற உரைவிளக்கம் நினைத்தற்குரியது. இத்துணையும் பேராசிரியர் உரைநயங்கள்.

நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டுக்கும், சீவகசிந்தாமணிக்கும், கலித்தொகைக்கும் இலக்கியவுரை எழுதிய பெற்றியர் ஆதலின் தொல்காப்பியத்துக்கும் இலக்கியப் பார்வையில் உரை எழுதியுள்ளார். உடன்போகும் தலைவனையும் தலைவியையும் இடைச்சுரத்து கண்டவர்கள் போக வேண்டிய ஊரையும் நெறியையும் 'ஆர்வநெஞ்சமொடு' (985) மொழிந்தனர் என்பது தொல்காப்பியம். மகளைப் பெற்ற இல்லறத்தார்க்கு

Koviloor Digital Library

இத்தலைவியைப் பார்த்ததும் அருள் உண்டாதலின் 'ஆர்வ நெஞ்சம்' என்றார் ஆசிரியர் என உணர்வடிப்படையில் புலப்படுத்துவர்.

தானை யானை குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலை ... (1017)

என்ற நூற்பாவில் முப்படையின் வரிசையைக் காணலாம். காலாட்படை துறக்கப் புகும் வேட்கையுடையது ஆதலின் முதலாவதாகவும், யானைப்படை மதமும் கதமும் மிக்குப் போரில்தானே ஈடுபடும் ஆதலின் இரண்டாவதாகவும் மதமும், கதமும் குறைந்த குதிரைகள் மூன்றாவதாகவும் நிரல்பட்டன எனவும், குதிரையானன்றித் தேர்தானே செல்லாமையின், தன்னளவில் மறமின்மையின் அதனைத் தனிப்படையாக எண்ணவில்லை எனவும் விளக்குவர்.

தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனான்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும் (1092)

தந்தையின் புறவொழுக்கத்திற்கு மகனை ஏன் பழிக்க வேண்டும் என்ற ஒரு பிரிவை எழுப்பிக் கொண்டு, பிற்காலத்து அவனும் தந்தைபோற் குணமுடையவனாகி விடக்கூடாது என்பதற்காகத் தலைவனைப் பழித்தென்றது மகப்பழித்து என்றாராம். இவையெல்லாம் நச்சினார்க்கினியரின் உரைநயங்கள்.

சேனாவரையரும், தெய்வச்சிலையாரும் சொல்லதிகாரத்துக்கு மட்டும் உரை வரைந்தனர் எனினும் அவர்தம் உரையிலும் சில நயக்குறிப்புக்கள் இல்லாமல் இல்லை. 'எப்பொருளாயினும் கொள்ளா மதுவே' (558) என்ற கருத்தினை விளக்கும் சேனாவரையர் மாணாக்கர்க்கு அறிவு கொடுத்தான் என்ற நிலையில் அறிவு உடையவனிடத்து நீறு பெறுபவனிடத்துச் செல்வதில்லை எனவும், இங்ஙனம் தன்னிடத்து நீங்காத பொருளையும் உட்படுத்த 'எப்பொருளாயினும்' என்ற சொல்

Koviloor Digital Library

லாட்சி செய்யப்பட்டது எனவும் தெளிவுபடுத்துவர். எட்டு வேற்றுமையின் வரிசைக்குத் தெய்வச்சிலையார் கூறுங்காரணங் களும் அவை தருகின்ற ஒருவன் ஒரு பொருளைக் கொடுப்புழி அப்பொருள் உடையவன் கையினின்று நீங்கு நிலை ஐந்தாம் வேற்றுமையாம்: நீங்கின பொருள் உடனே பெற்றவன் உடைமையாகும் நிலை ஆரும் வேற்றுமையாம் என மொழியும் நயம் உள்ளந் தொடுவதாம். எனவே தொல்காப்பியத்தின் சொல் அடை நடைகளுக்கெல்லாம் குறிப்பும், பல்லிடங்களில் உரையாசிரியர்கள் எழுதியிருப்பதிலிருந்தும் அந்நூலில் நயம் காண்பது பழைய மரபே என்பது மேலும் வலியுறும். அம் மரபுக்கால் சில நூற்ருண்டாக மரத்துப் போயிற்று. அம்மரத் தன்மையை ஓரளவேனும் அகற்றுவதே இக்கட்டுரையின் முயற்சி.

இலக்கியக் கொள்கைகள்

பொதுவான சில இலக்கியக் கொள்கைகளை முதலில் நினைவு கொள்வோம். ஓரிலக்கியத்தைத் திறன் காண்பதற் குரிய விதிகளைத் தன்னிடத்திருந்தே வடித்துக் கொள்ள வேண்டும். ஓரிலக்கியத்தின் அளவு விதி மற்ருேர் இலக்கியத் தினை அளக்கப் பெரிதும் பயன்படாது. இலக்கியத்தின் பொருள் வாழ்வாகும். அதன் சுவை உணர்ச்சியாகும். புலவன் தன் கருத்தினைக் கற்பார் மனத்திற் பதியவைப்பதற்குக் கற்பனை மனம் வேண்டும். கற்பனையினுல் கவர்ச்சி உண்டாம்; கவர்ச்சியினுல் உணர்ச்சி உண்டாம்; உணர்ச்சியினுல் உள்ளம் தொடும். கட்டுக்கோப்புடைய யாப்பு வேண்டும். யாப்பில் ஒலிநயத்துக்குச் சிறப்பு உண்டு. தன் கருத்தினைப் பிறர் உணருமாறு செய்வதற்கு இலக்கிய முறைகள் பல. கற்பனை, ஒலி, உவமை, ஓவியவுரு, நடை என்றினையவற்றைத் திறனிகள் பகர்வர். இக்கூறுகள் எல்லாம் நெல்லிப்பழச்சுவை போல் இருக்க வேண்டுமளவு தொல்காப்பியத்தில் உள. சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், இராமாயணம், பெரியபுராணம்

 Koviloor Digital Library

போல தொல்காப்பியம் பல நயங்களும் மிக்கது என்று நான் கூற வரவில்லை. அங்ஙனம் கூறுவது என்னும் ஒவ்வாது. மாம்பழம், பலாப்பழம், பர்மாவில் உள்ள தொரியாள் பழம் போல சுவை திராட்சையில் இல்லை என்பதற்காகத் திராட்சை யைப் பழவினத்தினின்று தள்ளிவிடலாகாது. யானையும் விலங்குதான்; பூனையும் விலங்குதான். ஆதலின் தொல் காப்பியல் தன்னளவில் உடைய சில இலக்கியப் பாங்குகளை ஈண்டு எடுத்துக் காட்டுவல்.

தொல்காப்பியம் அகம், புறம் பற்றிக் கூறுவது என மேலோட்டமாக இருவகைப்படுத்தினாலும் அது கூறும் சமுதாயங்களும், வாழ்க்கைக் கூறுகளும், எண்ணங்களும் பலப்பல. அகம் என்ற ஒரு வட்டத்திற்குள் பல்வேறு காதல் ஒழுகலாறுகளும், மெல்லிய வல்லிய உணர்ச்சிகளும், எதிர் குதிரான உரையாடல்களும் இடம் பெற்றுள. புறம் என்ற ஏனைவட்டத்தில் சுருங்கியவளவில் உலகமே எதிரொலிக் கின்றது. வாகைத்திணையில் பலவேறு சமுதாயத்தின் தாவில் கொள்கைகளும், மெய்ப்பொருள்களும், பாடாண்டிணையில் வேறுபட்டகாமங்களும், அரசியல்களும், கலைகளும் சுட்டப் பெறுகின்றன. ஆதலின் மக்களையே நுதல எடுத்துக்கொண்ட தொல்காப்பியத்தில் சொல்லப்படுவனவெல்லாம் மக்கள் வாழ்க்கையே என்போதரும். பொருளதிகாரம் போன்று எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வாழ்வுப் பொருளுடையன வல்ல எனினும் இலக்கிய நடை உடையனவாகக் காண் கின்றேன்.

ஒலிநயங்கள்

நூற்பாக்களைக் குன்றாத ஒலி நயத்தோடு நூற்பிக்கும் நோக்கம் தொல்காப்பியர்பால் நிரம்ப உண்டு. இதனை மூன்று அதிகாரங்களிலும் காணலாம். 13708 தொல் விகற்பம் விரித்துரைத்த ஆசிரியர் தம் நூலை ஒலிநயம்

Koviloor Digital Library

பொதுளப் பாடியிருப்பது வியப்பேரியல்பேயாம். இத்தொடை நயம் ஓரடியுள்ளும் பலவடியுள்ளும் பரந்து காணப்படும்.

1. ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப (1275)
2. வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய (1279)
3. ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே (72)
4. எண்ணரும் பாசறை பெண்ணொடு புணரார் (1180)

இந்த ஓரடி நூற்பாக்களில் பொழிப்பெதுகைகள் அமைந்துள.

1. மன்னுஞ் சின்னும் ஆனும் ஈனும்
பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர் (333)

2. நெல்லுஞ் செல்லும் கொல்லுஞ் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல (371)

3. மின்னும் பின்னும் பன்னும் கன்னும்
அந்நாற் சொல்லும் தொழிற்பெயர் இயல (345)

4. தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி
மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தலென்
றன்ன பிறவும் அவற்றொடு சிவணி (981)

என்ற நூற்பாக்களில் முற்றெதுகைகள் அடியெதுகைகள் நிரம்பி வழிகின்றன. தொடைநயம் வேண்டுமென்றே ஆசிரியர் அசைச்சொல்லும் சொல்மாறும் ஒலித்திரிபும் செய்த இடங்கள் உள.

1. ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்
தாம் பிரி விலவே தொகைவரு காலை (580)

2. கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறு பெயர்க்காகும் இயற்கைய வென்ப (552)

Koviloor Digital Library

3. ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும் (491)

தாம் என்பது தொடைநயஞ் செய்ய வந்த அசைச்சொல் என்க. பெயர்க்கு ஈறு ஆகும் என்று சொல்ல வேண்டிய தொடரை ஈறு பெயர் எனத் தொடைக்காகவே மாற்றி யமைத்தார் ஆசிரியர். குற்றியலுகரம் என்ற வல்லொற்றொலி ஒலி நயத்துக்கென்றே குன்றியலுகரம் ஆயிற்று.

1. படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே (1003)

2. இயங்குபடை யரவம் எரிபரந் தெடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை (1008)

வெட்சித்துறையான படையியங்கு அரவமும், வஞ்சித்துறை யான இயங்குபடையரவமும் பொருளால் வேறுபாடுடையன அல்ல எனினும் படையியங்கு, இயங்குபடையென சொல்மாறி நிற்பதற்குத் தொடைநயங்களே ஏதுவாம்.

1. ஆகார இறுதி அகர வியற்றே (221)
2. ஈகார இறுதி ஆகார வியற்றே (249)
3. உகர இறுதி அகர வியற்றே (254)
4. ஊகார இறுதி ஆகார வியற்றே (264)
5. ஏகார இறுதி ஊகார வியற்றே (274)

அகரத்தின் புணர்ச்சி யிலக்கணமே ஆகார, ஈகார, உகர, ஊகார, ஏகாரங்கள் எல்லாம் பெற்றிருந்தும், தொடையின்பம் ஒன்றே கருதி, மாட்டேறு குற்றெழுத்துக்குக் குற்றெழுத்தும், நெட்டெழுத்துக்கு நெட்டெழுத்துமாகக் கிடப்பதை உணர்ந்தால், தொல்காப்பியரின் ஒலிவேட்கை நம்மை வியப்பில் ஆழ்த்தும்.

Koviloor Digital Library

முரண்நடை

ஒலியவாக் கொண்ட தமிழ் முதல்வர் தொல்காப்பியர். முரண்பட்ட சொற்களை அடுத்துஅடுத்துத் தொடுக்கும் நடையினராகவும் உள்ளார். இவ்வேட்கையும் மூன்றதிகாரங்களிலும் ஓடிக் கிடக்கின்றன.

1. மழையென் கிளவி வளியியல் நிலையும் (287)
2. வெயிலென் கிளவி மழையியல் நிலையும் (377)
3. இருளென் கிளவி வெயிலியல் நிலையும் (402)

எழுத்ததிகாரத்தில் ..வரும் இப்பூதமுரண்கள் பலரால் அறிந்தவை. ஆணும் பெண்ணும் (303) இளமை மூப்பே (539) உயிரே உடம்பே, ஞாயிறு திங்கள் (540) புகழிற் பழியின், பெறலின் இழவின், காதலின் வெகுளியின், செறலின் உவத்தலின், அறுத்தலிற் குறைத்தலின், தொகுத்தலிற் பிரித்தலின் (555) நட்பிற்பகையின் (559) தண்மை செம்மை, நன்மை தீமை, சிறுமை பெருமை, வன்மை மென்மை, முதுமை இளமை, சிறுத்தல் இழித்தல். புதுமை பழமை, இன்மை உடைமை, பன்மை சின்மை, (561) கண்கால், புறம் அகம், உள்உழை. கீழ்மேல், முன்இடை, கடை தலை, வலம் இடம் (565) இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல் (1215) இல்லது காய்தல் உள்ளது உவர்த்தல் (1217) என எண்ணிறந்த இடங்களில் தொடையழகு நோக்கி எதிர்ச் சொற்களை இணைசொற்களாகக் கூட்டுறவுக் காட்சிகளை இலக்கணம் என்ற பெயருடைய தொல்காப்பியத்தில் நிரம்பக் காணலாம்.

'ஒன்றுத் தமரினும் பருவத்தும் சுரத்தும்' (986) எனத் தலைவன் கூற்றுகத் தொடங்கும் 24 அடி கொண்ட நூற்பா முழுவிலக்கிய வனப்புடையது. நாளது சின்மை இளமைய

Koviloor Digital Library

தருமை என வரூஉம் கருத்து மனநிலைகள் பாலைக்கலிக்கு வளம் பயந்த இலக்கிய நாற்றுக்கள்.

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின் (1001)

என்ற அடிமுரணைக் கருதுங்கால், அகம், புறம் என்ற முரணயத்தில் ஈடுபட்டுத்தான் நம் தொல்காப்பியர் பொருளதிகாரம் பாட விழைந்தாரோ என்று கருதலாம்.

சுவைகள் அல்லது உணர்ச்சிகள்

உடலுக்குக் குருதியோட்டம் போலவும், உயிருக்கு உணர்ச்சி யோட்டம் போலவும், இலக்கியத்துக்குச் சுவை நாட்டம் ஒருவந்தம் வேண்டற்பாற்று. சுவையற்றது இலக்கியம் எனப்படாது. தொல்காப்பியம், திருக்குறட் காமத்துப் பால் போல உரிப்பொருளே கூறும் இலக்கியத் தன்மையது என்று மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். பல்சுவையும் இவ்விலக்கண விலக்கத்தில் ஊறுகாய் போல ஒடுங்கியுள.

1. கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கையர் காணின் நன்று (1092)

என்பது எள்ளல் காரணமாகப் பிறந்த நகைச்சுவை.

2. நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலை (1024)

என்பது இழவினால் பிறிட்ட அழுகையுணர்வு.

3. சொல்லெதிர் பெறுஅன் சொல்லியின்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளை (994)

என்பது காமப்பிணியினால் பிறந்த இளிவரற்சுவை.

Koviloor Digital Library

4. வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை (1008)

என்பது ஆக்கம் காரணமாக வந்த மருட்கையுணர்வு.

5. உயிர்செல
வேற்றுவரைவு வரின் அது மாற்றுதற்கண் (1056)

என்பது கள்வர் போலும் ஒருகாரணத்தாற் பிறந்த அச்சவுணர்வு.

6. சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாளணி பெருமங்கலம் (1036)

என்பது கொடையிற் பிறந்த பெருமித மெய்ப்பாடு.

7. செருவகத் திறைவன் வீழ்ந்தெனச் சினைஇ
ஒருவன் மண்டிய நல்லிசைநிலை (1017)

என்பது அலையான் வந்த வெகுளியுணர்வு.

8. ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமுதம் புரையுமால் எமக்கு (1991)

என்பது புணர்வினுல் கிளர்ந்த உவகைச்சுவை.

இலக்கணப்புகழ் சான்ற தொல்காப்பியம் இலக்கியமும் ஆம் என்ற ஒரு புதுப் பாங்கினைப் புலப்படுத்துவதற்கு ஒலி, முரண், சுவை என்ற மூன்று வகைச் சான்றுகளை மட்டும் இச்சிறு கட்டுரையில் தொகுத்துக் காட்டியிருக்கின்றேன். உவமை உருவகங்களாலும், சொல்லாட்சி நடைமாற்றங்களாலும், கற்பனை ஓவியங்களாலும், அறம், அறத்தின் முடிவுகளாலும், காப்பிய விலக்கியம், சிற்றிலக்கியம், நீதியிலக்கியம், புதினவிலக்கியம் என்பனபோல தொல்காப்பியம் இலக்கணவிலக்கியம் என்ற புதுப்பெயர் பெறுந் தகுதியுடையது என்பது என் கருத்து.

Koviloor Digital Library

7. தொல்காப்பிய உரைநயம்

தொல்காப்பியம் இலக்கண நூலாயிற்றே; இதன் உரைகள் இலக்கணவுரைகள் ஆயினவே; இவற்றில் நயங்காண முயல்வது கல்லில் நாருரிப்பது போலாகும்; பல்லில் முத்தெடுப்பது போலாகும் என்று பலர் கருதக்கூடும். சிலப்பதிகாரம் மணிமேகலை சிந்தாமணி இராமாயணக் காப்பியங்களிற் காணும் நயவகைகளைத் தொல்காப்பியத்திற் காண வியலாது. அவ்வகை நயங்கள் இல்லாத காரணத்தால், முந்து நூல்கண்டு முறைப்பட எழுந்த தொல்காப்பியத்தில் எவ்வகை நயமும் இல்லை என்று கூறலாகாது. இனிப்பு மட்டும் சுவையில்லை. உவர்ப்பும் துவர்ப்பும் கசப்பும் சுவைகள் அல்லவா? சுவைகள் பலவாதல் போல நூல்வகைக்கேற்ப நயவகைகளும் பலவுண்டு. ஒவ்வொரு நூலுக்கும் உரிய பார்வை முறையைக் கடைப்பிடித்தால் உள்ள நயங்கள் வெளிப்படும். தொல்காப்பியத்திலும் அதன் உரைகளிலும் நயங்காண்பது ஒரு தனிக்கலை. அத்தகைய நயக்கலையை நாம் பார்க்கவும் வளர்க்கவும் கடமைப்பட்டுள்ளோம். அங்ஙனம் பார்க்கப் புகுமுன் தொல்காப்பியத்தின் ஆற்றலையும் பெருமையையும் உரையாசிரியர்களின் தகுதியினையும் மதிப்பினையும் முதற்கண் அறிந்து கொள்வோம்.

தொல்காப்பியம் சென்ற கால நிகழ்கால வருங்காலத் தமிழினத்தின் பொதுவுடைமை; தமிழர் பெற்றிருக்கும் தொல்

Koviloor Digital Library

பெருஞ்செல்வங்களுள் தலையானது முதன்மையானது தகுதியானது தொல்காப்பியமே. இதுவுண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. பாரதி பாராட்டிய திருவள்ளுவர், இளங்கோ, கம்பர் என்ற முப்பெரும் புலவர்களும் தொல்காப்பியரின் வழித் தோன்றல்களேயாவர். தமிழ்மொழியின் ஒலியியலும், தொடரியலும், தமிழினத்தின் அகம் புற நாகரிகங்களும், தமிழ்மக்களின் மனவோட்டங்களும் கோட்பாடுகளும் எழுத்தாளர் தம் புதிய இலக்கியப் படைப்புக்களும், எவ்வளவு மாறுபாடு வந்துறினும் இன்றும் தொல்காப்பியத்தின் அடித்தலத்திலேயே அகலாது நின்று கொண்டிருக்கின்றன என்ற பேருண்மை ஒப்புமைக் கண்ணுடையார்க்கு திரைப்படவுருவம் போலவும் பெரிய வெழுத்து அரிச்சுவடி போலவும் விளங்கி விடும்.

தொல்காப்பிய இயக்கம்

தொல்காப்பியமும் சங்க நூல்களும் கி. பி. நாலாம் நூற்றுண்டுக்குப் பின் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் கல்வியுலகிற் பரவாதிருந்தன. கி. பி. 11 ஆம் நூற்றுண்டுக்குப்பின் தொல்காப்பிய இயக்கமும் சங்க விலக்கிய மறுமலர்ச்சியும் தோன்றின. இவ்வியக்கத்தின் தலைவர் இளம்பூரணர். உரையாசிரியர் என்ற கீர்த்தியைத் தனக்கே உரிமை கொண்டவர். நேராப்புகழ்மைப் பேராசிரியரும், ஆனுப் பெருமைச் சேனுவரையரும், மெய்யுரை கண்ட தெய்வச் சிலையாரும், உச்சிமேற்புலவர் நச்சினார்க்கினியரும், சொல்லுரை கண்ட கல்லாடனரும் இவ்வியக்கத்தின் படையாளர்கள். இப்பேரியக்கம் மூன்று நான்கு நூற்றுண்டுகள் தொல்காப்பியக் கல்வியைக் கற்றுரிடைப் பரப்பியது. சங்ககால மொழியுணர்வைப் பரப்பியது எனினும் சமயப்பூசல்களாலும் அயற்கலைத் தாக்கத்தாலும் தொல்காப்பியப் பரவல் மீண்டும் குறைந்தது. உரைகளொடும் ஓலைக்குடத்துள் ஒடுங்கிக் கிடந்தது. இந்நூற்றுண்டில் கிளர்ந்தெழுந்த விடுதலையுணர்வாலும், மொழிப்பற்றுலும் தொல்காப்பியம் சங்க

Koviloor Digital Library

விலக்கியம் போன்ற தொல்தமிழ்ப்பனுவல்களும் இளம்பூரணம் நச்சினார்க்கினியம் முதலான தொல்லுரைகளும் பதிப்புப்பெற்று பரந்த படிப்பும் பெற்றுக் குமரிக்கடலில் எழுந்துவரும் காலைச் செங்கதிரவன் போல அறிவுலகில் கதிர்த்துப் பரவின.

இடைக்காலத்துத் தொல்காப்பியவுரைகள் எழுந்தமை போல இந்நூற்றாண்டிலும் அரசஞ்சண்முகனார், வேங்கட ராசலு ரெட்டியார், இளவழகனார், நாவலர் சோமசுந்தர பாரதியார், புலவர் குழந்தை, ஆசிரியர் அருணாசலம் பிள்ளை என்ற பெருமக்கள் பல தெளிவுகளோடு உரை வரைந்துள்ளனர். ஆய்வு நூல்களும், ஆய்வுரைகளும், கருத்தரங்குகளும் பெருகி வருகின்றன. இளைய நல்ல தலைமுறை தொல்காப்பியத்தைப் புரிந்து நாடிச் செல்கின்றது. இத்தனிப் பெரு நூலை அயல் நாட்டவரும் மொழிபெயர்த்து வேகமாக ஆராயத் தொடங்கி யுள்ளனர். "திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்" என்ற பாரதியார் கட்டளைக் கல்லின்படி தொல்காப்பியம் உலக வணக்கத்துக்கு உரியதாகி வருகின்றது. "ஒடுக்கங் கூறார் உயர்ந்தோர் உண்மையின்" என்றார் இளங்கோவடிகள். உயர்ந்த வாழ்க்கைக் கோட்பாடுகள் உண்மையானும், செந்தமிழியற்கை சிவணிய மண்ணிற் பிறந்த உரிமை நூலாதலானும் தொல் காப்பியத்தின் நீடூழி வாழ்வு இனி தடைப்படாது என்று துணியலாம். தொல்காப்பியத்துக்கு முன்னிருந்த அருங்காலம் எங்கோ மறைந்துவிட்டது; இனி வருங்காலம் தொல் காப்பியத்தின் வருங்காலமாகவே இருக்கும் என்ற நன வுலகத்தைக் காண்கின்றேன்.

உரையாசிரியர்கள் சிறப்பு

தொல்காப்பியம் என்னும் தமிழ்மறைநூலைக் காலந் தோறும் மக்களிடைப் பரப்பவேண்டும் என்ற வேணவாவினால் உரையாசிரியர்கள் என்ற அறிவுத் திருக்கூட்டம் எழுந்தது.

Koviloor Digital Library

இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் என்ற பண்டையுரையாசிரியர்கள் தமிழ் நிலைபேற்றுக்கும் தமிழுக்கும் ஆற்றிய தொண்டு தமிழினம் உள்ளளவும் மறத்தற்கரியது. முத்தமிழறிவும் பிற கலைகளின் அறிவும் வாய்ந்த இப்பெருமக்கள், பவணந்தியார், புத்த மித்திரனார், ஐயனாரிதனார், நாற்கவிராசநம்பி போலத் தாமே புதுவிலக்கணநூல் படைக்கவல்ல ஆற்றல் உடையவர்கள். உண்மை கூறப்புகின், பின் எழுந்த இலக்கணநூல்கட் கெல்லாம் கருத்து வழங்கியவை இவ்வுரைகள். ஆதலின் இவற்றை உரை மூலங்கள் என மதிக்க வேண்டும். இவ் வுரையாளருள் நச்சினார்க்கினியர் ஏனையோர் போல் இலக்கண வுரை கண்டதோடு சங்கப்பனுவட்கட்கும், சிந்தாமணிக் காப்பியத்திற்கும் இலக்கியவுரை கண்ட இருதிறனாளர். தமிழ்க் கல்வியுலகில் உரையுலகம் என்பதனைப் படைத்தருளிய புலமைச் சிற்பிகள் இவ்வுரையாசிரியர்கள். நிரம்பிய கல்விப் பெரியவர்களாக இருந்தும் அடக்கத்தின் வடிவுடையவர்கள். தொல்காப்பியம் என்னும் பொதுப் பழஞ் சொத்தைப் போற்றிக் காத்துப் பரப்பி வளர்த்து இந்நெறியை எம் பின்னோரும் கடைப்பிடிக்க என்று நம்மிடம் விட்டுச் சென்ற மூதாதையர்கள். அவர்கள் நூற்பாதோறும் எழுதிய நயங்கள் பலவகைப்பட்டவை. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

நிரல் நயங்கள்

சில செய்திகளை அடுத்தடுத்துச் சொல்லும்போது வைப்பு முறைக்குக் காரணங் காண்பது இலக்கிய நயங்களுள் ஒன்று. திருக்குறளில் 133 அதிகாரங்களின் வைப்பு முறைகளுக்குப் பரிமேலழகர் காரணம் காட்டுவதை நாம் அறிவோம். நிரந்தினிது சொல்லுதல் என்ற திருக்குறளின்படி, முன் னாகவோ, பின்னாகவோ கூறுவதில் சில கருத்துக்கள் உண்டு.

Koviloor Digital Library

கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே (தொல். 7)

என்ற நூற்பாவில் கண்ணிமைத்தலும், கைச்சுண்டுதலும் மாத்திரைக்கு அளவுகளாகக் கூறப்பட்டுள்ளன. இமைத்தல் ஏன் முற்கூறப்பட்டது? சுண்டுதல் செயற்கையாக எப்போதோ நிகழ்வது. இமைத்தல் எல்லாவுயிர்க்கும் எப்போதும் இயற்கை யாக நிகழ்ந்து கொண்டிருப்பது. ஆதலின் இயற்கையளவு முன்னும் செயற்கையளவு பின்னும் மொழியப்பட்டன. இக் கருத்தினைக் கண்ட இளம்பூரணர் "தன் குறிப்பின்றி நிகழ்தலின் இமை முற்கூறப்பட்டது" என வைப்பு நயம் சொல்லுவர்.

கற்பொழுக்கத்திற் கூற்றுக்குரியாரை எண்ணுங்கால் 'பாணன் கூத்தன் விறலி பரத்தை' (தொல். 1446) என்ற வரிசை காணப்படுகிறது. 'வரிசை யறிதலோ அரிதே' என்றார் கபிலர். எனவே வரிசையறிவு வேண்டும் என்பது பெறப்படும். இசைக்குரிய பாணனை முதற்கண் வைத்து, இசைவழிப்பட்டது நாடகமாதலின் கூத்தனை இரண்டாவது வைத்து, பெண்பாலாகலின் விறல்பட ஆடும் விறலியை அடுத்து வைத்து, அவ்வினத்துப் பரத்தையை அதன்பின் வைத்தார் என்பது இந்நால்வர் வரிசைக்குப் பேராசிரியர் கூறும் காரணம் ஆம்.

தானை யானை குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலை (தொல். 1018)

எனத் தும்பைத்திணையில் போர்ப்படைகள் நிரல்பெற்றுள்ளன. இவ்வரிசைக்குக் காரணம் என்ன? ஆசிரியன் மனம் போன போக்கில் எதனையோ முன் பின் வைக்கின்றான். அதுபற்றி நமக்கென்ன கவலை என்று கூறுவது அறிவின் வளைவாகுமே யன்றி அறிவின் விளைவாகாது. நாட்டுத்தலைவர்கள் வானூர்தி யிலிருந்து இறங்கும்போது, முதற்கை கொடுப்பார் யார்,

Koviloor Digital Library

அடுத்த கை கொடுப்பார் யார், பிற்கைகள் யார் யார் கொடுப்பார் என்ற வரிசை முறையை நாம் காண்கின்றோம் அல்லவா? ஆதலின் வரிசை நிரலுக்குக் கருத்துண்டு, கட்டுப்பாடு உண்டு, அழகும் உண்டு. வீரராய் விழுப்புண்பட்டு வீரதுறக்கம் எய்த வேண்டும் என்ற குறிக்கோள் உடைமையால் காலாட்படையை முதலாவதும், மதமும், கதமும் சிறந்து தானும் போர்ப்பயிற்சியுடைய யானைப்படையை இரண்டாவதும், மதமும், கதமும் இல்லாத குதிரைப்படையை இறுதியாகவும் கூறினர் என்பது நச்சினார்க்கினியர் காட்டும் உரை விளக்கம். அதன் மேலும் இவ்வுரையாசிரியர் சிந்திக்கின்றார். இவ்வரிசையில், 'நாற்குணமும் நாற்படையா' என்று புகழேந்தி பாடியாங்கு, நாலாவதாக ஏன் தேர்ப்படை எண்ணப்படவில்லை? குதிரை இழுத்தாலன்றித் தேர் தானே செல்லாது;மரத்தாலாகிய தேர்க்கு மறவுணர்ச்சி இல்லை. ஆதலின் தேர்ப்படை வரிசைக்குரியதன்று என்பர் நச்சினார்க்கினியர்

தெய்வச்சிலையார் உரை அண்மையிற் கண்டுபிடிக்கப்பட்டது. சொல்லதிகாரம் என்ற பகுதிக்கே அவ்வுரையிருந்தாலும் புதிய போக்கு பலகொண்டது. எட்டு வேற்றுமைகளின் வைப்பு முறையைக் காண முயன்ற தெய்வச்சிலையார் "ஒருவன் ஒன்றை ஒன்றனே இயற்றி ஒருவற்குக் கொடுப்ப அவன் அதனை அவனினின்றும் தனது ஆக்கி ஓரிடத்து வைத்தான் கொற்ற' என்று ஒரு தேற்றத் தொடரை அமைத்துக் கொள்வர் அமைத்துக் கொண்டு காரணம் புலப்படுத்துகின்றார். செய்வான் ஒருவன் இல்லாத வழி செயல் எதுவும் நிகழாது. ஆதலின் கருத்தா முதல் வேற்றுமையாகவும், அக்கருத்தா செய்ய வேண்டியது இதுவென முன்பே குறித்துக்கொள்ள வேண்டுதலின் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையாகவும், எண்ணியதைச் செய்து முடித்தற்கு வேண்டும் கருவி மூன்றும் வேற்றுமையாகவும், செய்த பொருளைத் தான் மட்டும் பயன் கொள்ளாது பிறர்க்கும் கொடுக்க வேண்டு

Koviloor Digital Library

மாதலின் கொடைத்தன்மையை நான்காம் வேற்றுமை யாகவும், கொடுக்கும்போது அப்பொருள் தன்னை விட்டு நீங்குமாதலின் நீக்கற்பொருள் ஐந்தாம் வேற்றுமையாகவும், நீங்கினபொருள் இன்னொருவனுக்கு உடைமையாதலின் கிழமைப்பொருள் ஆறும் வேற்றுமையாகவும், இவையெல்லா வற்றிற்கும் இடமும், காலமும் பொதுவாதலின் அவை ஏழாம் வேற்றுமையாகவும் வரிசைப்பட்டன என்பர் தெய்வச்சிலையார். இவர் கூறும் விளக்கத்தில் சுவையும், பண்பும், நெறியும் விளங்குகின்றன. புராண விளக்கம் இன்றி வாழ்க்கை விளக்கமாக அமைந்திருப்பது நம் பகுத்தறிவைக் கவ்வு கின்றது.

அடைமொழி நயங்கள்

தொல்காப்பியம் ஓர் இலக்கணநூல் என்று சொன்ன வுடன், கேட்டவுடன் ஏதோ உயிரெழுத்து, மெய்யெழுத்து, குற்றெழுத்து, நெட்டெழுத்து, வேற்றுமை, அல்வழி, வினைத் தொகை, பண்புத் தொகை, இடைச்சொல், உரிச்சொல், வழாநிலை, வழுவமைதி என்றிவற்றை உலர்ந்த மரம் போலவும், பசுமையற்ற மண் போலவும் வறளக் கூறும் இலக்கணநூல் என்ற கருத்துத்தான் பொதுவாகப் பரவியிருக் கின்றது. எத்தகைய தவறு இது? 'நவில் தொறும் நூல் நயம்' என்ற திருவள்ளுவர் தொல்காப்பியத்தின் நயத்தை உணர்ந்துதான் இவ்வாறு கூறிப் போந்தாரோ என்று சொல்லிக் காட்ட விழைகின்றேன். எதுகை மோனை முதலான தொடைநயம், சொன்னயம், தொடர்நயம், உவமைநயம், உணர்ச்சிநயம், காலங்கடந்த உண்மைநயம், காதலும், வீரமும் கூறும் பொருள்நயம் என நன்னயம் பல செறிந்த இந்நூல் எல்லா மாந்தர்க்கும் வேண்டிய வாழ்க்கை நயம் உடையது. மூலத்தைக் கற்றாலும் உரைகளைக் கற்றாலும் இவ்வுண்மை சிறு கொடிப் பூசணி போல் விளங்கும். எவ் விலக்கணம் கூறினும் அவ்விலக்கணத்தை இலக்கிய நடை

Koviloor Digital Library

களில் கூறும் தனித்தன்மையுடையது தொல்காப்பியம். கவிதைகளிற் போலவே தொல்காப்பிய நூற்பாக்களிலும் பொருள் பொதிந்த அடைமொழித் தொடர்கள் பொருளதிகாரத்தில் மண்டிக் கிடக்கின்றன. இத் தொடர்களின் நயங்களை உரைகள் ஆங்காங்கே எடுத்துக் காட்டியுள.

தலைவன் வரையாமை காரணமாக மிகவருந்திய தலைவி அவனது இயல்புகளைப் பழித்துரைப்பது வழக்கம். இது இயற்பழித்தல் எனப்படும். இதனைச் சொல்லும் தொல் காப்பியர்,

'செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினும்
என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்புதலை யடுத்த வன்புறைக் கண்ணும்'' (1060)

என்ற நூற்பாவில் 'செங்கடு மொழி' என ஈரடை கூறுவர். கொடுங்கடுமொழி என்றால் மனத்திலும் சொல்லிலும் இரண்டிடத்தும் வெறுப்பு என்றாகும். செங்கடுமொழி என்றதனால் செம்மை மனத்தகத்து அன்பையும், கடுமை சொல்லளவில் கசப்பையும் குறிக்கும் என்பர் இளம்பூரணர்.

தலைவனொடு தலைவி உடன்போக்குச் செல்கையில் இடைச் சுரத்துக் கண்ட ஊர்மக்கள் அவர்களை வரவேற்று, பொழுது போயிற்று, வழியஞ்சத்தக்கது, எங்கள் ஊருக்கு வாருங்கள், நீங்கள் செல்ல நினைக்கும் ஊர் நெடுந்தொலையுடையது என்று அன்பொழுகப் பேசுகின்றனர். இப் பொதுமக்களின் நெஞ்சத்தை,

பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவி னாகிய குற்றங் காட்டலும்
ஊரது சார்வும் செல்லுந் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய கிளவியும் (986)

என்ற நூற்பாவில் ஆர்வ நெஞ்சம் என்ற அடைகொடுத்துப்

Koviloor Digital Library

பாராட்டுவர் தொல்காப்பியர். இவ்வுடன்போக்குக் காட்சி பெண்குழந்தை பெற்ற தாயாருக்கெல்லாம் அருள் உண்டாக்கும். ஆதலின், 'ஆர்வம்' என்ற உணர்ச்சியடை கொடுக்கப்பட்டது என்பர் நச்சினார்க்கினியர். ஈண்டு நெஞ்சம் என்பது பெண் நெஞ்சம் என்பது இவ்வுரையாசிரியர் கருத்து.

போர்க்களஞ் சென்ற மறக்கணவன் பெரும் புண் பட்டு இறந்தான். அவனைப் பேய்கள் தீண்டாது மனைவி காத்துக் கொண்டாள். கணவன் தசைகள் சிதறிக் கிடக்கும் அவலக் கோல நிலையில் மனைவியும் தீண்ட முடியவில்லை என்பதனை

இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோற்
நுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சி (1025)

என்று குறிப்பர் தொல்காப்பியர். 'இன்னகை மனைவி' என்ற அடையின் கருத்து யாது? முன்பெல்லாம் சிரித்து விளையாடித் தீண்டி அணைத்த காதலன் உடம்பு இப்போது தொடக்கூட முடியாதபடி மிகவும் சின்னப்பட்டுவிட்டது எனவும், இதனால் நிலையாமை எப்படிப்பட்டது என்ற அழுத்தம் வெளிப் படுகின்றது எனவும் நச்சினார்க்கினியர் நயவுரை பகர்வர்.

தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை உள்ளிய வழியும் (1093)

என்ற கூற்றில் மாயப் பரத்தை என்பர் தொல்காப்பியர். மாயம் என்ற அடை ஏன்? மாயமான், மாய மனிதன் என்றபோது மாயமல்லாத மான்களும் உள. மாயமல்லாத மனிதர்களும் உளர் என்பது பெறப்படும். மாயம் எல்லா மானுக்கும் எல்லா மனிதர்க்கும் இயல்பில்லை. ஆனால் மாயப் பரத்தை என்னும்போது மாயமல்லாத பரத்தைகளும் உண்டு எனப் பொருள் படுமா? எல்லாப் பரத்தையுமே மாய முடையவர்கள்தாம். மாயம் பரத்தைக்கு இயல்பு. அது அவள் பண்பு. பரத்தை என்றாலே மாயமுடையவள் என்பது தெளிவு.

Koviloor Digital Library

ஆதலால் மாயம் என்பது அவள் பண்பு காட்டும் இயல்படை. அந்த அடைமொழி இல்லாவிட்டாலும் பரத்தை என்ற அளவிற் சொன்னாலும் மாயப் பரத்தையே என்பது கருத்து. வெண்ணிலா, கற்புடைமனைவி, அன்புடைத்தாய், சுடும் நெருப்பு, நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று நாம் சொல்லும்போது, அடைகட்கு என்ன பொருள். அதே பொருள்தான் மாயப்பரத்தைக்கும். இவ்விளக்கத்தை எண்ணி, மாயம் என்ற அடை பரத்தைக்குப் பண்பாகி இனஞ் சுட்டாது வந்தது என்று தொல்காப்பிய இலக்கணநெறி நின்று நயம் கூறுவர் இளம்பூரணர்.

எடுத்துக்காட்டு நயங்கள்

எவ்வகை இலக்கணமும் பலருக்கு எளிதாக விளங்க வேண்டுமெனின் உதாரணங்கள் பலர் அறிந்த வழக்காக இருத்தல் வேண்டும். மக்களின் நடைமுறைப் பேச்சுக் களினின்றும் வழக்கவொழுக்கங்களினின்றும் இந்த எடுத்துக் காட்டுக்கள் அமையவேண்டும். தொல்காப்பியவுரையாசிரியர் கள் இவ்வகையில் எளிமையானவர்கள். இலக்கணங் கற் பார்க்கு எளிமையாகப் புரியவைக்கப் பாடுபட்டவர்கள். உதாரணங்களை வழக்காகவும் நயமாகவும் சிறிதாகவும் எடுத்துக்காட்டியவர்கள்.

உண்பது தின்பது என்பன எல்லாரும் அறிந்த வினைச் சொற்கள். உண்டான், உண்டாள், உண்டார், உண்டன, உண்டது, உண்பேன், உண்போம், உண்ட, உண்டு என்றவாறு பல இலக்கண விதிகளை உண்பதை வைத்தே உரையாசிரியர்கள் விளக்கியிருக்கின்றனர். ஒருவர் கேட்கும் கேள்விக்கு நேர்விடையும் கூறலாம், குறிப்பு விடையும் கூறலாம். தேர்வு எழுதுவாயா என்று கேட்டால் எழுதுவேன் என்று கூறுவதும், எழுதமாட்டேன் என்று கூறுவதும் நேர் விடையாகும். தேர்வுப் பணங்கட்டவில்லை என்றோ, படிக்கவில்லை

Koviloor Digital Library

என்றோ சொல்லுவது குறிப்பு விடையாகும். இவ்வகை இலக்கணத்துக்கு உண்ணும் தொழிலை வைத்தே உரையாசிரியர்கள் காட்டுவர். சாத்தா உண்டாயா என்று கேட்டால், பசிக்கிறது என்றோ வயிற்றுவலி என்றோ நீ உண் என்றோ கூறுவது எவ்வளவு எளிய இனிய ஏற்ற வழக்கு.

ஒருவன் வா என்று அழைத்தபோது இன்னும் புறப்படாதிருந்தே இதோ வந்துவிட்டேன் என்று நாம் பழக்கத்திற் சொல்வதில்லையா? இது விரைவு பற்றிச்சொல்லப்படும் வழக்கு. இது கால வழுவமைதி எனப்படும்.

வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள் என்மனார் புலவர் (726)

என்ற காலம் பற்றிய நூற்பாவிற்கும் உண்ணும் வழக்கிலிருந்தே உதாரணம் காட்டப்படுகின்றது எல்லா உரையாசிரியர்களாலும். சோறு இன்னும் வெந்து கொண்டிருக்கும் போது நாம் கூட்டி போக வேண்டிய ஒருவனை உண்டு முடித்தாயா என்று கேட்டால், சோறு இன்னும் வெந்து கொண்டிருக்கின்றது, வெந்தபின் உண்டு வருகிறேன், பொறு என்றல்லவா சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வது வழக்கில்லை. இதோ உண்டு விட்டேன், வந்துவிட்டேன் என்ற விரைவுக்குரலையே அடுப்பங்கரையிலிருந்து கேட்கின்றோம். இதுவே உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டு

உரையாசிரியர்கள் பெரும்புலமையுடையவர்கள். பெருமிதம் வாய்ந்தவர்கள். இழிந்த உதாரணங்கள் காட்டமாட்டார்கள். இழிந்த நடையில் எழுதமாட்டார்கள். உரைகள் வாயிலாக அறங்களையும் நாட்டு மரபுகளையும் கற்பிப்பது அவர்தம் கருத்து. சாத்தன் நன்றாகக் கையெழுது

Koviloor Digital Library

வான் அதனால் ஆசிரியனும் தந்தையும் மகிழ்வார்கள் எனவும், சாந்தி நன்றாகச் சாந்து அரைப்பாள் அதனால் கணவன் மகிழ்வான் எனவும், சாத்தனுக்குப் பெண் கொடுக்க உடம்பட்டார் சான்றோர் எனவும், இன்று இவ்வூரெல்லாம் தைந்நீர் ஆடுப எனவும் கண்கழுவி வருவேன். கால்மேல் நீர் பெய்து வருவேன் எனவும், பல தமிழ்வழக்காறுகள் உரைகளில் கிளைதோறும் இலைக்கொத்துப் போல நூற்பாதோறும் காணப்படுகின்றன. அறஞ்செய்தான் சுவர்க்கம் புகுவான், தாயைக்கொன்றான் நிரயம் புகுவான் என்ற அறவுரைகளும் உள. சாத்தன் உண்டான், கொற்றன் உண்டான் என்ற வழக்கு நடையிலிருந்து ஆசிரியப்பாவும், சாத்தனுறங்கினான், கொற்றன் உறங்கினான் என்பதிலிருந்து வெண்பாவும், சாத்தனையறியாதார் ஒருவனையும் அறியாதார் என்பதிலுருந்து கலிப்பாவும் தோன்றின எனவும், கொச்சகம் என்ற கலிப்பா உறுப்பு கொய்து உடுத்தல் என்ற ஆடை அணியும் வழக்கத்திலிருந்து எழுந்தது எனவும், பேராசிரியர் மக்கள் வழக்கிலிருந்தே தமிழ்ச்செய்யுட்களின் தோற்றங்களை விளக்குவர். இதனால் தொல்காப்பியவுரைகள் மிகவும் வழக்கொடு பொருந்தியன என்பது தெளிவாகும். சிறிது வருந்தி முயன்று நல்ல தமிழறிவு பெறவேண்டும் என்று கற்பார்க்குத் தொல்காப்பியவுரைகள் அமுதசுரபிகளாகும்.

கருத்து நயங்கள்

சொற்சுவை மட்டும் நயமாகாது. இனிமையும், தெளிவும், பொருளும் கூடிய சுவையே ஆக்க நயம் எனப்படும். வாழ்வுக்கு ஊட்டம் தரும் பல்துறைத் தெளிவுகள் தொல்காப்பியவுரைகளிடை மண்டிக் கிடக்கின்றன. விடை கூறும் வகைகளை எண்ணும்போது வாய் வாளாதிருத்தல் அதாவது மறுமொழி ஒன்றும் சொல்லாதிருத்தலும் விடையாகும் என்று அருமையாக மொழிவர் தெய்வச்சிலையார். இதனால் எல்லாவற்றுக்கும் மறுமொழியத்தான் வேண்டும் என்பதில்லை என்பது

Koviloor Digital Library

தெளிவாகும். அரசியலுலகில் செய்தியாளர் கேட்கும் சில பூசலான விஞக்கட்கு அமைச்சர்கள் யாதும் உரையாது கம்மென இருப்பதைக் காண்கின்ரேம். வாதிட்டுத் தோற்ற சமணர்களேப் பாண்டியன் கழுவேற்றியபோது திருஞான சம்பந்தர் வாளாவிருந்தனர் என்பர் சேக்கிழார். துணிந்து கூறவேண்டுமிடத்து விடையைத் துணிந்து கூறவேண்டும் எனவும், மழுப்ப வேண்டுங்கால் மழுப்பிவிடவேண்டும் எனவும், சும்மா இருப்பது நல்லது எனின் அப்படியே இருந்து விடுக எனவும், எவ்வகையான கேள்விக்கு எவ்வகையான விடை பகரவேண்டுமோ அங்ஙனம் பகருவதே விடைநெறி எனவும் தெய்வச்சிலேயார் வாழ்க்கை முறையைத் தெளிவு செய்குவர்.

தொல்காப்பியம் மொழிபெயர்ப்பை நூல் வகையுள் ஒன்ருகக் கூறும். இவ்விடத்துப் பேராசிரியர் என்ற உரையாசிரியர் ஒரு நூலே மொழி பெயர்க்குங்கால் கிடந்தவாறே முழு நூலேயும் மொழி பெயர்க்க வேண்டும் எனவும், அதனைத் தொகுத்தோ விரித்தோ கூட்டியும் குறையவும் செய்வதஞற் பயனில்லே எனவும், பிறிதொரு மொழிப்படுத்தும்போது எவ்வாற்ருனும் பொருள் மாறவே கூடாது எனவும் மொழி பெயர்ப்பு நெறிகளேச் சுட்டிக் காட்டுவர். பன்ஞட்டுத் தொடர்பால் மொழிபெயர்ப்பு ஒரு கலேத் துறையாகி வளரும் இந்நூற்ருண்டிலும் பதின்மூன்ரும் நூற்ருண்டுப் பேராசிரியர் மொழிந்த கருத்துக்கள் எவ்வளவு அரியவை? கொள்ளற்கு உரியவை?

உரையாசிரியர்களுள் நயம் மிகக் கண்டவர் நச்சிஞர்க்கினியர். அதிகாரஞ் செய்தும், பிறரைத் தொல்லேப் படுத்தியும் இரணியனைப் போலத் தேடிக்கொள்ளும் வெற்றி மெய்யான வாகையாகாது எனவும், அறத்தில் திரிந்து பகைவரைப் போர்க்களத்து வஞ்சனேயாற் கொல்லுதலும், தேவர் தந்த வரங்களாற் கொல்லுதலும் தமிழர் கண்ட வீரநெறிகள்

Koviloor Digital Library

அல்ல எனவும் வெளிப்படுத்துவர் நச்சினார்க்கினியர். 'கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்' என்ற நூற்பாவில் கொடை செய்வாரைப் புகழ்வதோடு அமையாது அங்ஙனம் கொடை செய்ய முன் வாராதாரைப் பழிக்கவும் வேண்டும் எனத் தொல்காப்பியர் உணர்ச்சியைத் தூண்டி விடுவர். கொடுப்பாரைப் புகழ்வது தகும். கொடாதாரைப் பழிப்பது நன்மக்கள் செயலாகுமா? இத்தொல்காப்பியக் கருத்துக்கு விடை காண்கின்றார் நச்சினார்க்கினியர். நல்லோர் மக்கட்குப் பயன்பட வாழ்கின்றனர். அங்ஙனம் வாழ வாய்ப்பைப் பெற்றிருந்தும் தீயோர் பயன்படாது செல்கின்றனர் என்பதனைப் புகழ்ந்தும், இகழ்ந்தும், மக்களறிய வெளிப்படையாகக் கூறினால்தான் பழிக்கு அஞ்சியாவது மற்றையோரும் பயன்பட வாழ விரும்புவார் என்பது நச்சினார்க்கினியர் தரும் விளக்கம்.

சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்

எனத் திருவள்ளுவரும் தொல்காப்பியக் கருத்தினைப் பின்பற்றி இருக்கக் காண்கின்றோம்.

பால்நயங்கள்

தொல்காப்பியம் பெரும்பாகம் காதலொழுக்கம் கூறும் இலக்கணப் பால்நூலாதலின், ஆண் பெண் நல்லுறவு பற்றிய நெறிகள் உரைகளிலும் குவிந்து காணப்படுகின்றன. இக் குறிப்புக்கள் பாலெழுச்சியைத் தூண்டுவனவல்ல; பாலறிவைத் தருபவை. இளைய நம்பியர் நங்கையர் எத்துணையோபேர் நாள்தோறும் திரைக்களத்திலும், பள்ளிக்களத்திலும் மருகிலும் தெருவிலும், பொதுவிடங்களிலும், தனியிடங்களிலும், சந்தித்துச் செல்கின்றனர். குமரப் பருவத்தினர் காட்சியெல்லாம் காதலாகி அரும்புவதில்லை. அவை குறிப்பற்ற

Koviloor Digital Library

பொதுப்பார்வைகள். அகத்தில் காதல் நோக்கு இல்லாதபோது எத்துணை முறை கண்கள் கண்களோடு நோக்கினும் அவை பொது நோக்கமேயாம். கடைத்தெருவில் பல பொருள்கள் குவிந்து கொட்டிக்கிடக்கின்றன. எல்லாப் பொருள்மேலும் கண்படுவதில்லை. மனநாட்டம் உள்ள இடத்துத்தான் கண் ணூட்டம் செல்லும். ஏன் பார்த்தோரெல்லாம் காதல் கொள்ள வில்லை என்ற ஐயத்தை எடுத்துக்கொண்டு, ஒருவரை ஒருவர் கண்டபோதெல்லாம் புணர்ச்சி வேட்கை தோன்ருது எனவும், என்ரே: ஒருநாட் பார்வையில் ஊழ்வினை வயத்தால் காதற் குறிப்பு புகுந்துவிடும் எனவும், அதன்பின் காதற்செயல்கள் வளரும் எனவும் அடிப்படையை விளக்குவர் இளம்பூரணர். காதலின் தோற்றத்துக்கு உரைத்த பெரிய விளக்கம் இது.

ஓதற்பிரிவு என்பது தலைவன் பிரிவு வகைகளுள் ஒன்று. தலைவன் படிக்கச் செல்லும் பிரிவு தமிழ்நாட்டிற்குள்ளேயே நிகழுமா? பிற நாட்டகத்து நிகழுமா? இதற்கு விளக்கம் தருகின்ருர் இளம்பூரணர். ஓதற்குப்பிரிதலாவது தமது நாட்டகத்து வழங்காது பிற நாட்டகத்து வழங்கும் நூலுள வன்றே. அவற்றைக் கற்றல் வேண்டிப் பிரிதல் என்பர். இந்நூற்ருண்டிற்கும் இவ்வுரை முழுப் பொருத்தம். மேல் வளர் கல்விக்கும், பயிற்சிக்கும் நம்மவர் அயல்நாடுகளுக்குச் செல்லும் பயணத்தை இந்த அகலப்பிரிவு குறிக்கின்றது. திருமணமானவுடன் நம் நாட்டில் பலர் தம் கல்விக்குப் பொட்டுப்போல் தடித்த முற்றுப்புள்ளி விழுந்து விடுகின்றது. மணத்துக்குப் பின்னும் தலைமகன் பிற மொழி நூல்களைப் பயில வேற்று நாட்டுக்குப் போதல் வேண்டும் என்று தொல் காப்பியம் கழறுவதை நாம் உளங்கொள்ளும்படி விளக்கு கின்ருர் இளம்பூரணர். நூற்கல்வியேயன்றிக் கையாற் பயிலும் தொழிற்கல்வியும், சிற்பக் கல்வியும், படைக்கலக் கல்வியும் வேண்டும் என்பதும் இவ்வுரையாசிரியர் குறிப்பு.

Koviloor Digital Library

தொல்காப்பியம் அன்றும், இன்றும், என்றும் நின்று வாழ் வாழ்க்கை நூல். பீடு நடையும், பாடுநடையும், சான்ற இலக்கிய வனப்பு அமைந்த இலக்கணப்பனுவல். இவ்விலக் கண இலக்கிய நூலைக் காப்பியத்தன்மையுடையதாக மதித்தும் சிந்தித்தும் உரையாசிரியர்கள் பல்வேறு முறையில் நயங்கள் வரைந்துள்ளனர். பொருளதிகாரம் பெயர்வெட்டாத பாத்திரங் களைப் போலப் பொதுமைத்தன்மையுடைய பாத்திரங்களைச் சொல்வது என்பதனைத் தெளிந்து உலகந்தழுவி உரைநயங்கள் எழுதியுள்ளனர். இவ்வுரைகள் இலை, தழை போலத் தொல்காப்பியத்தின் செறிவையும், செழிப்பையும், உரத்தையும் வெளிப்படுத்துவன. உரைகளின்றித் தொல்காப்பியத்தை மதிப்போம் என்பது உடலின்றி உயிரைக் காண்பதை ஒக்கும். அது இயலுமா? உரைகள் தொல்காப்பியத்தின் உடல்கள். அத்தமிழ் உடல்களையும் போற்றுவோம்.

Koviloor Digital Library

8. அவன் என்பது யார்?

அவனணங்கு நோய்செய்தான் ஆயிழை வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி — முகனமர்ந்து
அன்னை அலர்கடப்பந் தாரணியில் என்னைகொல்
பின்னை அதன்கண் விளைவு

இவ்வெண்பாவினை 'முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே' (தொல். 39) என்ற நூற்பாவுக்கு எடுத்துக்காட்டாக இளம்பூரணர், தெய்வச்சிலையார், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் என்றின்ன தொல்காப்பிய உரையாசிரியர் அனைவரும் ஒருமுகமாக எழுதியுள்ளனர். இன்னோரைப் பின்பற்றி நன்னூல் உரையாசிரியர்களும் இவ்வெண்பா வினையே இவ்விலக்கணத்திற்கு எடுத்துக் காட்டுகின்றனர்.

தொடர்நிலையில் வழக்கின்கண் இயற்பெயர் முன்வரும்; சுட்டுப்பெயர் பின்வரும். தொல்காப்பியன் வந்தான் அவனுக்கு விருந்து செய்க என்பது எடுத்துக்காட்டு. செய்யுளாயின் சுட்டுப் பெயர் முன்வருதலும் இயற்பெயர் பின் வருதலும் உண்டு. இச்செய்யுள் முறைக்கு மேற்காட்டிய வெண்பாவினை எடுத்துக் காட்டியிருப்பது பொருந்துகொல்? சேந்தன் என்பது இயற்பெயர் எனவும், அவன் என்பது அவனைக் குறிக்கும் சுட்டுப் பெயர் எனவும், செய்யுளாதலின் சுட்டுப் பெயர் மாறி முன்வந்துள்ளது எனவும் பண்டை உரையாசிரியர் எல்லாம் கருதுப. இதன்படி இப்பாடலின்

Koviloor Digital Library

பொருள், வேலையும் விறல் மிகு தாரையும் உடையவன் ஆகிய சேந்தன் (முருகன்) எனக்கு அணங்கு நோய்செய்தான். அவனது பேரை வாழ்த்தி முகம் விரும்பி நம் அன்னை கடப்ப மாலையை எனக்கு அணிந்தால், அதன் விளைவு என்ன ஆகும்?'

இச்செய்யுள் வெறியாட்டு நிகழுமிடத்துத் தலைவி கூறிய துறையாகும். ஆயிழை என்பது தோழியைக் குறிக்கும். அவன் என்ற சுட்டு சேந்தனைக் குறிக்கும் என்று பொருள் கொண்டால் நடை இயைகின்றதா? அவன் அணங்கு நோய் செய்தான் என்று என ஓர் எச்சம் இடையே வேண்டும், என்று என்பது இல்லாயின் தொடர்விட்டுக் காட்டுதலை அறியலாம். மேலும் சுட்டினை முன் சொல்லி இயற்பெயரைப் பின் சொல்லுதற்கு ஒரு காரணம் வேண்டும், பொருட் சிறப்பு வேண்டும். உரையாசிரியர்கள் கொள்ளும் பொருட்கு அத்தகைய காரணமோ சிறப்போ இல்லை.

வெறியாட்டுப் பாடல்களில் நோய்செய்தான் ஒருவன் இருப்ப, அதனை அறியாமல் முருகனால் வந்தது என்று விட்டார் கருதி வெறியாட்டு எடுக்கின்றனரே என்று நகையாடி மொழிவது தலைவி அல்லது தோழியின் வழக்காகும்.

அருவி யின்னியத் தாடும் நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே (நற். 34)

முருகாற்றுப்படுத்த உருகெழு நடுநாள்...
தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதொறு மெய்ம்மலிந்து

Koviloor Digital Library

நக்கனென் அல்லனே யானே எய்த்த
நோய்தணி காதலர் வரவீண்டு
ஏதில் வேலர்க்கு உலந்தமை கண்டே (அகம். 22)

இவ்வாறு வெறியாட்டுப் பாடல்களில் தலைவி நோய் செய்த காதலனைக் குறிப்பிடுவதும், வெறியாட வெளிவந்த முருகனை இகழ்வதும் செய்யக் காண்கின்றோம். உண்மை சுட்டாமல் வெறியாட்டை மட்டும் சுட்டுவது நயமும் இல்லை, பயனும் இல்லை. ஆதலின், இவ்வெண்பாவில் அவன் என்ற சுட்டு காதலனைக் குறிப்பதாகும். தன்னைக் களவில் மணந்த அவன் நோய் செய்தானாக, அன்னை முருகனது கடப்பந்தாரை அணிந்தால் கற்பின் நிலை என்னும் என்பது இப்பாட்டின் பொருள். வெறியாட்டு கற்புக்கு முரண் என்பதனை,

வெறிகமழ் நெடுவேள் நல்குவன் எனினே
செறிதொடி யுற்ற செல்லலும் பிறிதெனக்
காண்கெழு நாடன் கேட்பின்
யானுயிர் வாழ்தல் அதனினும் அரிதே (அகம். 98)

என்ற வெறியாடிய காமக்கண்ணியார் பாடலால் தெளியலாம். 'என்னைகொல் பின்னை அதன்கண் விளைவு' என்ற வெண்பாவின் இறுதிப்பகுதி அறத்தொடு நிலையைக் காட்டுவதாகும். ஆதலின், அவன் என்பது சேந்தனைக் குறியாது களவுத் தலைவனைக் குறிப்பதாதலின் முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே என்ற நூற்பாவிற்கு இவ்வெடுத்துக் காட்டு, எல்லாராலும் வழிவழி காட்டப்பட்டு மரபாக வரினும், பொருந்தாது.

சுட்டுப்பெயர் இயற்பெயருக்கு முற்பட வந்த இடங்கள் சங்கப் பாடல்களில் மிகச் சிலவே.

ஆர்ப்பெழு கடலினும் பெரிது அவன்களீரே;
கார்ப்பெய லுருமின் முழங்கல் ஆனாவே;

Koviloor Digital Library

யார்கொல் அளியர் தாமே ஆர்நார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
கவிகை மள்ளன் கைப்பட்டோரே (புறம். 81)

சோழன் போர்வைக் கோப்பெருநற் கிள்ளி முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனைப் பொருது அட்டு நின்றானைச் சாத்தந்தையார் பாடியது இப்பாட்டு. ஆத்தி மாலையை யணிந்த கவிகை மள்ளனாகிய சோழன் என்ற இயற்பெயர் பின்வர, அவன் களிறு என்ற சுட்டு முன் வந்திருப்பக் காணலாம்.

யானே பெறுகவன் தாணிழல் வாழ்க்கை
அவனே பெறுகவென் நாவிசை நுவறல்
நெல்லமல் புரவின் இலங்கைக் கிழவோன்
வில்லி யாதன் கிணையேம் பெரும (புறம். 379)

ஒய்மான் வில்லியாதனை நன்னாகனார் பாடிய பாடல் இது. அவன் என்ற சுட்டுப் பெயர் இலங்கைக் கிழவோன் வில்லியாதன் என்ற இயற்பெயருக்கு முற்படவந்துள்ளது.

காக்கக் கடவிய நீ காவா திருந்தக்கால்
ஆர்க்கும் பரமாம் அறுமுகவா
உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா'

என்ற திருமுருகாற்றுப்படை இறுதி வெண்பாக்களும் சுட்டு செய்யுளுள் முற்படக் கிளந்தமைக்கு எடுத்துக் காட்டாகின்றன.

Koviloor Digital Library

9. பொருளே உவமம்

தொல்காப்பியம் தமிழ்மொழிக்கும் தமிழ்நாகரிகத்துக்கும் அடிப்படை நூல்; என்றும் வாழும் இலக்கண நூல். அதற்கு எழுந்த உரைகள் சிறப்புடையனவாயினும், பல நூற்பாக் களின் பொருள்கள் இன்னும் தெளிவு வேண்டியனவாகவுள. பழைய நூலான தொல்காப்பியத்தின் உரைகளில் இடைக் காலக் கருத்துக்கள் மலிந்து கிடக்கின்றன. இளம்பூரணம் முதலான உரைகள் தத்தம் காலத்திற்கேற்ப விளக்கங்காட்டி எழுதப்பெற்ற காலவுரைகள் என்று கொள்ளலாமேயன்றித் தொல்காப்பியர் காலச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்ட செவ்வுரை எனக் கொள்ளுதற்கில்லை. ஆதலின் தொல்காப்பியக் கற்பிகட்கு உரைத்திறனாய்வும் கூடவே வேண்டும். உவமவியலில் வரும் ஒரு நூற்பாவின் உரைகளை ஆய்ந்து பொருள் மதிப்பிடுதல் இக்கட்டுரையின் நோக்க மாகும்.

இளம்பூரணம்

பொருளே உவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும் (தொல். 1229)

என்ற நூற்பாவிற்கு உருவகம் என்றும், இது உவமையின் பாகுபாடு என்றும் இளம்பூரணர் உரைகாண்பர். ‘இரும்பு முகஞ் செறிந்த’ என்ற புறநானூற்றுப் பாடலில் (369) யானை

Koviloor Digital Library

மேகமாக, வாள் மின்னுக, முரசு இடிமுழக்காக, விசைப் புரவி வளியாக அம்புகள் மழைத்துளியாக, குருதி தோய்ந்த போர்க்களம் ஈரமுடைய வயலாக, தேர்கள் ஏர்களாக இவ்வாறு உருவகம் வருவதனை இளம்பூரணர் இந்நூற் பாவிற்கு எடுத்துக் காட்டுவர். புறநானூற்றுத் துறை யாசிரியரும் இப்பாடலை ஏர்க்கள உருவகமுமாம் என்று கூறியிருப்பக் காண்கின்றோம். இந்நூற்பாவிற்கு உருவகப் பொருள் கூறுவது பேராசிரியர்க்கு உடன்பாடில்லை என்பது 'இவற்றை வேறு உருவகம் என்றும் பிறர் மயங்குப' என்ற தொடராற் பெறப்படும். நச்சினார்க்கினியரும் உடன்பட்டிலர் என்பதனைச் சிறுபாணாற்றுப்படையில் அவர்தம் உரையால் அறியலாம். முகமதி என்ற உருவகம் முகமாகிய மதி என விரியும். இவ்வுருவகத்தில் முகம் என்ற பாடுபொருள் பொருளாக உள்ளதேயன்றி உவமையாக மாறி விடவில்லை. யானை மேகமாக, வாள் மின்னுக என்று சொல்லும் போதெல்லாம் யானையும் வாளும் பொருளாகவே நிற்கின்றன ஆதலின் ஏனையுரையாசிரியர்கள் இளம்பூரணத்தை உடன் படாமை பொருத்தமே.

பேராசிரியம்

தொல்காப்பிய உவமவியலுக்கு இளம்பூரணம், பேரா சிரியம் என்ற ஈருரைகளே உண்டு. பேராசிரியர் உரையும் எடுத்துக் காட்டும் வருமாறு:

"உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" என்புழி, உவமம் உயர்ந்துவரல் வேண்டும் என்றான். இனிப் பொருளினை உவமமாக்கி உவமையை உவமிக்கப்படும் பொருளாக்கி மயங்கக் கூறுங்காலும் அஃது உவமம் போல உயர்ந்ததாக்கி வைக்கப்படும்.

'வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை'

Koviloor Digital Library

என்றவழி வருமுலையும், திருமுகமும் ஈண்டு உவமையாகி முகையும், பூவும் பொருளாயின. ஆண்டு முலையும் முகமும் உயர்ந்தவாகச் செய்தமையின் அவையே உவமமாயின'.

முலையும், முகமும் ஆன பொருள்கள் (உவமேயங்கள்) உவமையாகவும், முகையும், தாமரையும் என்ற உவமைகள் பொருள்கள் ஆகவும் மயங்கக் கூறப்பட்டுள்ளன என்று இவ்வுரை கூறும் கருத்து ஆய்ந்து மறுப்பதற்குரியது. உலகில் இவைதாம் பொருளாகி வருபவை, இவைதாம் உவமையாகக் கூற வேண்டியவை என்ற வரையறுத்த பாகுபாடில்லை. 'முருகனன்ன சீற்றம்' என மானுடனுக்குத் தெய்வவுவமையும், 'ஞாயிறு கடற் கண்டாங்கு' எனத் தெய்வத்துக்கு அஃறிணை யுவமையும், 'பாம்பணந் தன்ன ஓங்கிரு மருப்பு' என யாழின் மருப்புக்கு விலங்குவமையும், 'சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி' என நிழலுக்கு நீதியுவமையும் இவ்வாறே பொருள்களும் இதற்கிதுவென்பதன்றி எதற்கு எதுவும் வரலாம் என அறிகின்றோம்.

முதலும் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே (தொல். 572)

என்று முதலும், சினையும் சொல்லுவான் அப்பொழுதைக் குறிப்பை நோக்கியது என்று வரம்பின்மை காட்டினாற்போல இதுபொருள் இதுவுவமை என்பதும் பாடுவான் அப்பொழுதை இலக்கிய நிலையை நோக்கியது எனக் கொள்ள வேண்டும். ஆதலின் உயர்திணையெல்லாம் பொருளாக வரும்; அஃறிணையெல்லாம் அவற்றிற்கு உவமைகளாக வரும் எனப்பேராசிரியர் இருபாற்படுத்திய கோட்பாடும், அதனால் முலை முகம் என்பனவற்றைப் பொருளாகக் கொண்டு ஈண்டு உவமையாக மயங்கி வந்துள என்ற காட்டும் பொருத்தமில.

Koviloor Digital Library

தண்டி

தண்டியலங்காரமும் இன்னபிழையைச் செய்துள்ளது. விபரீத வுவமை என்பது மேற்றெட்டு உவமையாய் வருவதனைப் பொருளாக்கிப் பொருளாய் வருவதனை உவமையாக்கி உரைப்பது என்று இலக்கணங் கூறி,

'திருமுகம் போல்மலரும் செய்ய கமலம்
கருநெடுங்கண் போலும் கயல்கள்'

என எடுத்துக் காட்டுத் தரும். திருமுகம் என்றும் பொருளாகவே வருவது, கமலம் என்றும் உவமையாகவே வரல்வேண்டும் எனவும், மாறி வருவது விபரீதம் எனவும் மொழியும். இவ்வலங்காரக் கொள்கை உலக வழக்கிற்கும் செய்யுள் வழக்கிற்கும் முரணாகும். எனவே உலகப் பொருள்களை உவமேயம் இவை, உவமை இவை என்று அணிக்கிடப்புப் போல எண்ணிய பேராசிரியமும், தண்டியலங்காரமும் மேற் சொல்லிய தொல்காப்பிய நூற்பாவின் மெய்ப்பொருளைக் காட்டவில்லை என்று கருதுகின்றேன்.

மருளறு சிறப்புவமம்

பொருள் என்பது புலவன் பாடற் பொருளாகச் சொல்ல நினைக்கும் கருத்து. உவமை என்பது அப்பாடற் செய்தியை விளக்க மேற்கொள்ளும் கருத்து. சொல்ல நினைக்கும் முதன்மைப்பொருள் உவமை வாய்பாடாகவும் விளக்குவான் மேற்கொள்ளும் கருத்து உவமேய வாய்பாடாகவும் வாய் பாடுகள் மாறி வருதலுண்டு.

இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉங் காதற் றுயிர் (குறள். 940)

இது திருக்குறள் பொருட்பாலில் சூது என்னும் அதிகாரத்து வரும் குறள். சூதாடி, கைப்பொருளை இழக்க இழக்கச்

Koviloor Digital Library

சூதின்மேல் மேலும் ஆசை கொள்ளுவது போன்று உயிர் துன்பத்தில் உழல உழல உடல்மேல் மேலும் பற்றுக் கொள்ளும் என்பது குறளின் கருத்து. அதிகாரப் பொருளான சூதினையே திருவள்ளுவர் இக்குறளில் உவமையாகச் செய்துள்ளனர். அதிகாரத்திற்கு ஏற்ப இதனைப் பொருள் என்று கொள்வதா? சூதே போல என்ற வாய்பாட்டிற்குத்தக உவமை என்று கோடுவதா?

பொருளே உவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவமம் ஆகும்

என்ற நூற்பாவின்படி வாய்பாடு உவமமாக இருத்தலால், மருளறு சிறப்புவமம் எனக் கொள்ள வேண்டும் என்பது தொல்காப்பியக் கோளாகும். சுட்டிக் கூறுவுவமம், தடுமாறு உவமம் போல, பொருளுவமத்தை மருளறு சிறப்புவமம் எனக் குறியீடு செய்யக் காண்கின்றோம்: 'உயிரினது அறியாமை கூறுவார் போன்று சூதினது அறியாமை கூறுதல் கருத்தாகலின் அதனை யாப்புறுத்தற் பொருட்டு உவமமாக்கிக் கூறினார்' என்ற பரிமேலழகர் விளக்கம் என் புத்துரைக்குத் துணையாகும். மருளறு சிறப்பு எனத் தொல்லாசிரியர் மொழிந்த உவமையை மருளுடையதுபோல விபரீதவுவமை எனத் தண்டியாசிரியர் குறியிடுவது எவ்வளவு முரண்.

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய் (குறள். 946)

என மருந்து என்ற அதிகாரத்து வரும் உவமையும்,

உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா உடைமை யான (தொல். 1139)

எனத் தொல்காப்பியக் கற்பியலில் தலைவன் கூற்றாக வரும் உள்ளம்போல என்ற உவமையும் மருளறு சிறப்பின் உவமைகளாகக் கொள்ளற்குரியவை.

Koviloor Digital Library

10 துறையாசிரியர்களின் உரைநடை

தமிழின் உரைநடைவளர்ச்சி இலக்கிய வரலாற்று ஆய்வில் ஒரு பெரும்பகுதியாகும். அண்மையில் வளர்ந்து வரும் உரைநடைவகை பண்டு இருந்ததில்லை என்பது வெளிப்படை. கதைகள் கலைகள் கூட முன்பு பாட்டென்ற ஒரு வடிவிலேயே எழுதப்பட்டன; அவையெல்லாம் இன்று உரைநடை வடிவில் எழுதப்படுவது போல, உயர்ந்தோர் தாழ்வர், தாழ்ந்தோர் உயர்வர் என்பதற்குப் பாட்டின் வீழ்ச்சியும் உரைநடையின் எழுச்சியும் சான்றுகின்றன. எனினும் மக்கள் பேச்சுவழக்கு பாட்டாக இருந்திருக்க முடியாது. சொற்பொழிவுகளும், கற்பித்தலும், பாட்டின் விளக்கங்களும் பாட்டாக இருந்திரா. அதுபோல் இசையொடு பட்டனவும், மனனத்துக்குரியவையும் காலங்கடந்து நிலைக்க வேண்டிய செய்திகளும் கவிகளாகவே தோற்றம் பெறும். ஆதலின் பாட்டும் உரைநடையும் கூடவோ குறையவோ எக்காலத்தும் உடன்பிறப்புப் போல் மொழியின் இருவடிவங்களாக இருந்து வந்திருக்கின்றன. அவையிரண்டும் தழுவிநில்லாத காலமே இல்லை என்று கூறிவிடலாம்.

'நூலினான உரையினான்' (தொல். 1422) எனவும், உரைவகை நடையே நான்கென மொழிப' (தொல். 1430) எனவும் வரும் தொல்காப்பிய நூற்பாக்களால் தமிழில் உரை நடையும் தொன்மைப் பிறப்புடையது என ஐயமறத் தெளிய

Koviloor Digital Library

லாம். இவ்வுரை நடை வரலாற்றை எழுதும் எழுத்தாளர்கள் தொல்காப்பிய நூற்பாக்களைச் சுட்டி, உரைவகை நான்கு வகைப்படும் என்பதற்கு உரைப்பெருமக்கள் கூறிய எடுத்துக் காட்டுக்களையும் தந்து, சிலப்பதிகாரத்தில் பயின்றுவரும் உரைப்பாட்டுமடைகளையும் நினைவுபடுத்தி, இறையனாரகப் பொருளில் விரிந்து கிடக்கும் உரைநடையை விளம்பி, அதன்பின் பல்வேறு இலக்கண இலக்கிய உரையாசிரியர்களின் உரைநடைகளையும் தொட்டுச்சொல்லி, மணிப்பிரவாளக் கலப்பையும் வெளிப்படுத்தித் தற்கால உரைநடை வளர்ச்சிக்கு வந்து சேருதல் மரபுப் போக்காக உள்ளது. இவ்வளர்ச்சியின் சில்வேறு படிகளில் ஒரு படி இதுகாறும் ஏனோ தானோ இடம் பெறவில்லை. அது ஒரு படி மட்டும் அன்று; பின் வந்த உரைநடைக்கெல்லாம் முதுபடி என்று நினைக்கும்போது நாம் பழங்கல்வெட்டுக்களைக் கண்டெடுப்பது போல் இறும்பூது எய்துகின்றோம்.

நூலாசிரியர், உரையாசிரியர், நூலுரையாசிரியர். பாடலாசிரியர், தொகுப்பாசியர் என்ற கூட்டத்தோடு இதுவரை தமிழுலகம் மறந்திருந்த துறையாசிரியர் என ஒரு கூட்டத்தையும் தமிழ்வளர்ச்சியில் நாம் கூட்டிக்கொள்ள வேண்டும். சங்கப் பாடல்கள் தேடித் தொகை பெற்றபோது மூலங்கள் மட்டும் தொகுக்கப்பெற்றனவா? மூலங்களோடு துறைகளும் உடனிருந்தனவா? அன்றித் தொகுத்தகாலைத் துறைக்குறிப்புப் புதுவதாக எழுதிச் சேர்க்கப்பட்டனவா? எப்பொழுது எட்டுத்தொகைகட்குத் துறைகள் எழுதப் பெற்றன? அத்துறையாசிரியர்களின் புலமையும், உரைநடைத் தன்மையும் யாவை? உரைநடை வளர்ச்சிக்கு அத்துறை யாசிரியர்கள் ஆற்றிய தொண்டு எத்தகையது? இன்னோ ரன்னவை — இதுகாறும் ஆய்வாளர் கண்ணிற் படாதவை இக்கட்டுரைச் சிந்தனைக்கு உரியவையாகின்றன.

Koviloor Digital Library

சங்கப் பாடல்கள் தொகுக்கப்பட்ட காலம் கி. பி. மூன்ரும் அல்லது நாலாம் நூற்ருண்டு என்று கருதலாம். அகநானூற்றுக்கும் ஐங்குறுநூற்றுக்கும் தொகுத்தார் தொகுப்பித்தார் பெயர்களும், குறுந்தொகைக்குத் தொகைமுடித்தான் பெயரும்; நற்றிணைக்குத் தொகுப்பித்தான் பெயரும் தெரிய வருகின்றன. கலித்தொகையை நெய்தற்கலி பாடிய நல்லந்துவனர் கோத்தார் என்ப. புறநானூற்றுக்கும், பதிற்றுப் பத்துக்கும், பரிபாடலுக்கும் இப்பெயர்கள் காணப்படவில்லை.

கலித்தொகைக்கு உரையொடு துறையும் எழுதியவர் கி. பி. 14 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த நச்சினர்க்கினியர் பேருரையாசிரியர் ஆதலின் அவர்தம் உரைநடையியல்பு தனியாய்வுக்குரியது. பழந்துறையாசிரியர் இனத்தில் இவர் எண்ணப்பட்டார். பதிற்றுப்பத்துக்கும், பரிபாடலுக்கும், பத்துப்பாட்டுக்கும் உள்ள துறைகள் சிற்சிலவேயாகலின் அவையும் இக்கட்டுரைக்கண் இடம்பெரு. குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு, புறநானூறு என்ற ஐந்துக்கும் ஏறக்குறைய 2100 துறைகள் உள. இத்துறைகளைத் தொகுத்துத் தனிநூலாகத் துறைநடைகள் என்ற பெயரால் பதிப்பிடின் (அத்தகைய ஒரு பதிப்பு ஆய்வுக்கு வேண்டும்) 200 பக்க அளவு வரும். கி. பி. நாலாம் நூற்ருண்டில் தோன்றிய உரைநடை நூல் என அதனைப் போற்ற வேண்டும். அங்ஙனம் போற்றவே தமிழ் உரைநடை வரலாற்றில் இந்நூல் பழமைபெற்று முதலிடம் பெறும் என்பதும் குறுந்தொகைத் துறையாசிரியர், நற்றிணைத் துறையாசிரியர், அகநானூற்றுத் துறையாசிரியர், ஐங்குறுநூற்றுத் துறையாசிரியர், புறநானூற்றுத் துறையாசிரியர் என ஐந்து உரைநடையாசிரியர்கள் இடம் பெறுவர் என்பதும் நினையத்தகும்.

ஈண்டு எடுத்துகொண்ட ஐந்தொகைகளில் முதல் நான்கும் அகத்தொகைகள், துறைகள் கூற்றுவகையால்

Koviloor Digital Library

அமைந்தவை. இவ்வகையில் புறநானூறு வேறுபட்டது. புறநானூற்றுத் துறை என்னும்போது துறையோடு பாடல் எழுந்த நிலைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். "சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக்கு இடுவுழிக் கோவூர்கிழார் பாடி உய்யக் கொண்டது" என்றுங்கு ஒவ்வொரு பாடலுக்கும் வரும். பாடிய சூழ்நிலையையும் துறையின் ஒரு கூருகக் கொண்டு ஆராய வேண்டும். புறநானூறு தொகை பெற்ற பின்னரே திணைதுறையும், சூழ்நிலையும் எழுதப்பட்டன. திணையும் துறையும் அவை எனவும், அவனை அவர் பாடியது எனவும், முன்போந்த செய்யுளோடு தொடர்புபடுத்திக் கூறுவதால் தெளியலாம். இச்சுட்டுநடைகள் திணை, துறை போலச் சூழ்நிலையிலும் வருதலால் இரண்டினையும் எழுதினுர் ஒருவரே எனவும், புறநானூற்று உரைநடையாய்விற்குச் சூழ்நிலைப் பகுதிகளும் உரியவாம் எனவும் நான் கருதுகின்றேன்.

குறுந்தொகைத் துறையாசிரியர்

அகத்தொகைகளுக்கு உரிய துறையாசிரியர்கள் உரை நடையில் சில பொதுமரபுகளைக் காணலாம். அத்துறைகள் தொல்காப்பியம் போன்ற இலக்கண வழிப்பட்டனவாதலின் யார் துறை எழுதினும், இயற்பழித்தல், இயற்படமொழிதல், வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்கு உரைத்தது, மகட் போக்கிய செவிலித்தாய் கூறியது, பருவங்காட்டி வற்புறுத் தியது, பிரிவிடை மெலிந்த கிழத்தி கூறியது, நொதுமலர் வரவுகூறி வரைவுகடாயது, வரைவிடை ஆற்ருளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது, கழற்றெதிர்மறை, காமமிக்க கழிபடர்கிளவி, வாயில்மறுத்தது, தோழி குறை நயப்பக் கூறியது, சிறைப்புறம், பொருள்வயிற்பிரிந்த தலைமகன் இடைச்சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது, தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றது என்றினைய தொடர்கள் இயல்பாக வரும். அன்னமரபுத் தொடர்களை விடுத்து,

Koviloor Digital Library

ஒவ்வொரு துறையாசிரியரிடத்தும் காணத்தகும் தனித் தன்மைகளேத்தாம் இக்கட்டுரை புலப்படுத்த முயல்கின்றது.

குறுந்தொகை நாலடிச் சிற்றெல்லே எட்டடிப் பேரெல்லே யுடையது என்ற பாட்டின் வரம்பை நாம் அறிவோம். அடியளவாற் சிறியதாயினும் இதற்கு எழுதப்பட்ட துறைகள் அகநானூறு, நற்றிணேத் துறைகளேக் காட்டிலும் விரிவும்; விளக்கமும் வாய்ந்தவை. இத்துறை விளக்கத்தால் குறுந் தொகைப் பாடல்களின் சூழ்நிலேகள் பொலிந்து தோன்று கின்றன. வண்டுபடத் ததைந்த கொடியினர் (குறுந். 21) என்ற ஐந்தடிப்பாட்டுக்கு எழுதப்பட்ட துறை: பருவம் வருந் துணேயும் ஆற்றுவித்த தோழி, அவர் வரக்குறித்த பருவ வரவின்கண் இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறு என்று தன்னுள்ளே கவன்ருட்கு அவளது குறிப்பறிந்த தலேமகள் கானம் அவர் வருங்காலத்தைக் காட்டிற்ருயினும் யான் இது கார்காலமென்று தேறேன் அவர் பொய்கூருராகலின் எனத் தான் ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது".

இத்துறைநடையுள் பருவம் வருந்துணேயும் ஆற்று வித்தாள் தோழி; ஆற்றுவிக்குமாறு எவ்வாறு என்று தானே தன்னுள்ளே கவன்ருள்; அவளது குறிப்பை அறிந்தாள் தலேமகள்; அவர் பொய் கூருராகலின் யான் ஆற்றுவேன் என்று கூறினுள் எனப் பல முற்றுப்பொருள்கள் இருந்தும் தோழி கவன்ருட்குத் தலேமகள் சொல்லியது என எச்சங்கள் இடையிடை கலந்த ஒரே முற்றுத் தொடராக இத்துறை ஓடிக் கிடப்பதைக் காண்கின்ருேம். மேலும் செய்யுளின் இறுதி ஈரடிகளேத் துறைக்குள் உரைநடைப்படுத்தி மடுத்திருப்பதை யும், தேறேன் பொய்கூருராகலின் எனக் காரிய காரணநடை செய்திருப்பதையும் காண்கின்ருேம். இங்ஙனம் 2, 26, 30, 91, 121, 130, 141, 244, 267, 282, 289, 313, 353, 380, 388, 398ஆம் செய்யுட்கட்கு எழுதப்பட்ட துறைவிரிவுகளே ஒப்பு நோக்கிடுக.

Koviloor Digital Library

குறுந்தொகைத் துறையாசிரியர் தொல்காப்பியப் புலமை சான்றவர் என்பது துறைக்கிடையே தொல்காப்பிய நூற் பாக்களையும் தொடர்களையும் மேற்கொள்ளுவதால் தெளிய லாம். மெய்தொட்டுப் பயிறல் முதலாயின (குறுந். 2) என்ற துறைப் பகுதி மெய்தொட்டுப் பயிறல் பொய்பாராட்டல் இடம்பெற்றுத் தழால் இடையூறு கிளத்தல் என்ருங்கு வரும் களவியல் நூற்பாவை (1047)க் குறிக்கும். அந்நூற்பாவில் வரும் பலவற்றையும் சுட்டுவான் இத்துறையாசிரியர் 'முதலா யின' என்ற சொற்பெய்துள்ளார். 'உயிர்செல வேற்று வரைவு வரினும் அது மாற்றுதற்கு நிகழ்ந்ததூஉமாம்' என்ற (குறுந். 159) துறையும், 'நாளது சின்மையும் இளமையது அருமையுங்கூறிச் செலவழுங்கியது' என்ற (குறுந். 267) துறையும், இடைச்சுரத்துக் கண்டார் பொழுதுசெலவும் பகை யுங் காட்டி என்ற (குறுந். 390) தொடரும் முறையே தொல் காப்பியத்தின் 1056, 981, 985 ஆம் நூற்பாக்களை நினைவு படுத்துவனவாம். குறுந்தொகை 14ஆம் செய்யுட்கு எழுதி யுள்ள துறையாவது; "மடன்மா கூறு மிடனுமா ருண்டே என்பதனுல் தோழி குறைமறுத்துழித் தலைமகன் மடலேறுவல் என்பது படச் சொல்லியது". இதனுல் தொல்காப்பியத்தின் 1047ஆம் நூற்பாவை அப்படியே மேற்கொண்டார் என்பதும், இவர்தம் குறுந்தொகைத்துறை தொல்காப்பிய வழிப்பட்டது என்பதும் உணரத்தகும். ஏனையத்துறையாசிரியர்கள் இவர் போல் அத்துணைத் தொல்காப்பியத் தடம் பட்டவர்கள் இல்லை என்று ஒப்பிட்டால் அறியலாம்.

அகப்பாட்டுக்குத் துறையென்றளவில் ஒழியாது, துறை நயங் காட்டி உணர்ச்சி மீதூர எழுதும் போக்கு இத்துறை யாசிரியர்பால் உண்டு. பகற்குறிக்கண் காணும் பொழுதினும் காணுப் பொழுது பெரிதாகலின் வேறுபட்ட கிழத்தி (48) என முரண் காட்டியும், சிறிய உள்ளிப் பெரிய மறக்க வேண்டாவோ (104) என அறஞ்சுட்டியும், மேலின்றும் ஆடவர் பொருட்டுப்

Koviloor Digital Library

பிரிந்தாராகலின் நாமும் பொருட்குப் பிரிதும் (267) என உலகியல் மொழிந்தும், காலத்து வந்திலரென்று வேறுபட்டே னல்லேன் ; அவரைப் புரந்தார் கொடியரென்று கூறக்கேட்டு வேறுபட்டேன் (289) என அமைதி கூறியும், அவரோடு பிறந்த நட்பு அழியாத நட்பன்றோ (313) என உழுவலன்பு புலப்படுத்தியும், அவர் பிரிய ஆற்றேனாயினேன் அல்லேன் ; அவர் போயின கானத்துத்தன்மை நினைந்து வேறுபட்டேன் (283) என வருத்தம் உரைத்தும், அவர் வரவு நமக்கு ஆற்றாமைக்குக் காரணமாம் (153) என உண்மை செப்பியும் வரும் துறைக்குறிப்புக்கள் ஆசிரியரின் அகப்பொருள் நுண் மாண் நுழைபுலத்தைப் பகர்கின்றன.

தொடர்களை இடையில் முற்றுப்படுத்தாது எச்சமாக எழுதிச் செல்லும் பெரும்போக்குடைய இத்துறையாசிரியர்பால் உணர்ச்சியைத் தடைப்படுத்த வேண்டிச் சில இடங்களில் இடையிடையே அற்றற்று முற்றாகத் தொடுக்கும் நடைப் பான்மையைக் காண்கின்றோம்.

> "உடன்போயினபின்றைத் தோழி செவிலிக்கு
> அறத்தொடு நின்றாள்; நிற்பச் செவிலித்தாய் நற்றாய்க்கு
> அறத்தொடு நின்றது" (குறுந். 15)

> "பனிப்பருவங் குறித்துப் பிரிந்தான் தலைமகன்; பிரியப்
> பருவ வரவிண்கண் வேறுபடுவாளாயினும்"(குறுந். 380)

என்ற காட்டுக்களில் நிற்பான் நிற்ப எனவும், பிரிந்தான் பிரிய எனவும் வரும் நடைகளைக் காண்க.

தலைவன், தலைவி, செவிலி என்ற சொற்களைக் காட்டிலும் தலைமகன் தலைமகள் செவிலித்தாய் என்பனவே இத்துறை நடையில் பயில்கின்றன. தலைமகற்கு, தலைமகட்கு, பாகற்கு, பாங்கற்கு, :வாயில்கட்கு, தெய்வத்திற்கு, நெஞ்சிற்கு என உகரச் சாரியை இல்லாத வடிவங்களும், அல்லகுறிப்பட்டு

Koviloor Digital Library

மீள்கின்றான், வரைவிடைவைத்துப் பிரிவான், வினைமுற்றினன் என வினையாலணையும் பெயர்களும் பயின்று வருகின்றன.

ஆற்றாயாகின்றது, ஆற்றாளாகிய, தூதுவிடுவாளாக என்றாங்கு ஆகு என்னும் துணைவினைச் சொற்களும், காண்கின்ற காலத்து, ஒழுகாநின்ற என நிகழ்காலம் காட்டும் புதிய இடைநிலைகளும், தலைவனையும், தலைவியையும் குறிக்க முறையே நம்பெருமான், எம்பெருமாட்டி என்ற சொற்களும், இல்லத்தினைக் குறிக்கக் கடிநகர் என்ற சொல்லும் இத்துறை நடையில் காணப்படுகின்றன.

நற்றிணைத் துறையாசிரியர்

குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூற்றுத் துறை யாசிரியர்கள் பாட்டிற்கு உரிய துறையை எழுதும்போது, 'என்பது செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டோர் கூறியது' (குறுந். 7), 'என்பது பிரிவிடையாற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது' (அகம். 1), 'என்பது தோழி செவிலிக்கு அறத்தொடுநிலை குறித்துக் கூறியது' (ஐங். 107) என்றவாறு என்பது என்னும் சொல்லால் தொடக்கஞ் செய் வதைக் காண்கின்றோம். நற்றிணைத்துறையாசிரியரோ 'இது பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது' என்று இது என்ற சுட்டுச் சொல்லால் தொடங்குவர்.

இத்துறையாசிரியரின் உரைநடை சிலவிடங்களிற்றான் நெடிய நடையாகக் காணப்படுகின்றது. ஓர் எடுத்துக்காட்டு. (நற். 386) :

'இது பரத்தையின் மறுத்தந்த தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி தலைமகனை முகம்புகுவலென முற்பட்டாள் தலைமகள் மாட்டு நின்ற பொருமை நீங்காமை அறிந்தும் பிறிதொன்றன் மேல் வைத்துப் பாவியேன் இன்று

Koviloor Digital Library

பேதைமை செய்தேன் எம்பெருமாட்டி குறிப்புணர்ந்து வழிபடுவேன் ஆவேன் மன்னோ எனச் சொல்லியது'

இப்பகுதிக்கண் இவ்வாசிரியரின் உரைநடையியல்புகள் சில வெளிப்படுகின்றன.

மறுத்தந்த, மறுத்தரும், மறுத்தராநின்றான், மறுத்தரா நின்ற எனப் பலவடிவங்கட்கு உரிய மறுத்தரல் என்ற வினைச் சொல்லும், முகம்புக்கது, முகம்புக்க, முகம்புக்களலாய் என வடிவங்கள் பெறும் முகம்புகுதல் என்ற வினைச்சொல்லும்; இல்லத்தைக் குறிக்க மணமனை என்ற சொல்லும்; வற்புறா நின்ற, ஆற்றாளாகி நின்ற, மீதூர்கின்றாள் என்ற நிகழ்கால இடைநிலைகளும்; புக்களலாய், தாங்களலாய், ஆற்றுவிக்கல் லாளாயினாட்கு என அல் எதிர்மறையிடைநிலையும்; முற்றினை எச்சப்படுத்தும் ஆய் என்ற சொற்சேர்க்கையும், எழுவாய் நிலையில் தான் என்ற சொல்லும்; தன்னுள்ளே என்ற சொல் லாட்சியும் இவர் நடையில் வருகின்றன.

குறுந்தொகைத்துறையாசிரியர்போல இவரும் தலைவனை எம்பெருமான், பெருமான் (399) எனவும், தலைவியை எம் பெருமாட்டி (386) எனவும் கூறுவர். தலைமகன் தலைமகள் போலத் தலைவன் தலைவி என்ற சொற்கள் ஒக்கப்பயில்வன வாயின. இடந்தலைப்பாட்டினை இரண்டாங்கூட்டத்து எதிர்ச்சி என்பர் இவ்வாசிரியர்.

பொதுவாகத் துறையாசிரியர்களின் நடையில் ஆகுதல் என்ற சொல்வடிவங்கள் கூடுதலாக வருகின்றன. ஆற்றானைய தலைவன், ஆற்றாதாகிய நெஞ்சு, ஆற்றாளாயதலைவி, ஆற்றாளாயின தோழி, பிரியாராகாரோ, ஆற்றானாயினான், ஆற்றாளாய்நின்ற, ஆற்றுவிக்கல்லாளாயினாள் என்று வரு தலால் இவர்தம் உரைநடையும் அப்பொதுக்கூற்றுக்கு விலக்கன்று என்பது போதரும். ஆறு தன்வினை; ஆற்று

Koviloor Digital Library

பிறவினை. எனினும் ஆற்றுதலைத் தன்வினையாகவும் 'வி' ஈறுசேர்த்து ஆற்றுவி என்பதனைப் பிறவினையாகவும் கொள்ளும் வழக்காறு இடைக்காலத் தொடக்கத்தே வந்துவிட்டது. இவ்வாசிரியர் ஆற்றுவி என்ற வடிவத்தைப் பல இடங்களில் ஆண்டாலும் 'தலைமகளைத் தலைமகன் ஆற்றியது' என்ற (256) ஓரிடத்து ஆற்று என்பதனையே பிறவினைப்பொருளில் ஆளும் தனித்தன்மையைக் காண்கின்றோம்.

அகநானூற்றுத் துறையாசிரியர்

இத்துறையாசிரியர் பலவரிகள்வரத் துறையெழுதியவர் அல்லர். மிகவும் ஆற்றொழுக்காகத் துறைகாட்டிச் செல்லும் இயல்பினர். அகநானூறு, பதின்மூன்றடிச் சிறுமையும், முப்பத்தொன்றடிப் பெருமையும் கொண்ட நெடுந்தொகை யாதலின், துறையை விரித்துக்கூற இவர் விரும்பவில்லை என்று காரணம் கூறலாம். ஏனைத் தொகைகளுக்கு இல்லாத ஒரு சிறப்புக் குறிப்பு இத்தொகைக்கு உண்டு. 'இத் தொகைக்குக் கருத்து அகவலாற் பாடினன் இடையள நாட்டு மணக்குடியான் பால்வண்ணதேவனான வில்லவதரையன்' எனவும், 'நெடுந்தொகை நானூறுங் கருத்தினோடு முடிந்தன' எனவும்,

'கோட்ட மின்றிப் பாட்டொடு பொருந்தத்
தகவொடு சிறந்த அகவல் நடையாற்
கருத்தினி தியற்றி யோனே'

எனவும், வருங்குறிப்புக்களால் இவ்வகநானூற்றுக்குப் பாட்டு வடிவில் கருத்துரையொன்று இருந்தது என்பது தெளிவாகும். இது வேறு எத்தமிழிலக்கியத்துக்கும் இல்லாத புதுமையாதலின், கருத்து என்பதன் அமைப்பை நாம் புரிந்து கொள்ள இயலவில்லை, எனினும் அங்ஙனம் ஒன்று இருந்தமை யினால் இத்துறையாசிரியர் சுருக்கமாகத் துறையெழுதினார் என்றும் கொள்ளலாம். எனினும் மிகச்சில பாடல்கட்கு

Koviloor Digital Library

துறைவிரிவு இல்லாமல் இல்லை. இரண்டு எடுத்துக் காட்டுக்கள் :—

" முன்னொரு காலத்து நெஞ்சினாற் பொருள்வலிக்கப் பட்டுப் பிரிந்தான் தலைமகன்; பிரிந்து இடைச்சுரத்தி னின்று அவள் நலநயந்து மீளலுற்ற நெஞ்சினைக் கழறிப்போய்ப் பொருள் முடித்து வந்த தலைமகன் பின்னும் பொருள்வலிக்கப்பட்ட நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது " (3)

" தலைமகன் தோழியை வாயில்வேண்டி அவ்வளால் தான் வாயில் பெருது ஆற்ருமையே வாயிலாகப்புக்குக் கூடிய தலைமகன் நீக்கத்துக்கண் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது " (26)

தலைமகள் சொல்லியது, தோழி சொல்லியது, தலைவன் சொல்லியது என ஒரேவினைமுற்றுப் பல துறைகளில் திரும்பத் திரும்ப வருகின்றது. சில பாடல்களுக்கு இரண்டாவது துறை காட்டும்போது சொற்றதூஉமாம் என்ற முடிபைக் காணலாம். 'போகாநின்ற தலைமகன்' (239, 279, 280, 287, 289) என்ற தொடரும் பரக்கக் காணலாம். கண்ணுற்று நீங்கும் தலைமகன் (10 90 92 150 162 280), என்ற தொடரில் கண்ணுற்று என்ற சொல்லாட்சி இவர் துறைநடைக்கே சிறப்பாக உரியது.

ஓசைநயம்படத் துறைத்தொடர்கள் எழுதப்பட்ட இடங்களும் உண்டு. 'தலைமகளது போக்கு நோக்கிய தலைமகன்' (198) எனவும், 'உடன்போக்கு உடன் படுவித்த தோழி' (287) எனவும், 'தலைமகட்குப் பாங்காயினுர் கேட்பத் தனக்குப் பாங்காயினுர்க்குப் பரத்தை சொல்லியது' (216) எனவும், 'பிரிவிடை வேறுபட்ட தலைமகளது வேறுபாடுகண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது' (309) எனவும் வரும் நடைகள் ஒலியோட்டம் உடையன.

Koviloor Digital Library

அகநானூறு திணைகாட்டும் எண்வைப்பினாலும், களிற்றி யானைநிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை என்ற முப்பாகுபாட்டினாலும், வில்லவதரையன் அகவலாற் பாடிய கருத்தினாலும்; 90 செய்யுள்வரை பழையவுரை உடைமையாலும் ஏனைத் தொகைகட்கு இல்லாச் சிறப்புடையது. அதன்மேலும் துறையாசிரியர் தரும் ஒரு சிறப்புண்டு. துறையாசிரியர் தொகை செய்தபின் அதற்கேற்பத் துறையெழுதியவர் என்பதனை நினைவு கொள்ளவேண்டும்.

செய்யுள் 39 எண் முறையாற் பாலை. 'போற்றுயாகலிற் புலத்தியால் எம்மே' எனவரும் அடியால் உரிப்பொருளாற் புணர்ச்சி எனக் கொள்ளக்கிடக்கின்றது. இம்முரண்தோற் றத்தை அறிந்த துறையாசிரியர், 'பொருள்முற்றிய தலைமகன் தலைமகளைக்கண்டு சொல்லியது' எனத் துறை வரைந்தபின் 'இப்பாட்டு நிலத்தாற் பாலை' என்றும் காட்டியுள்ளார்.

139 ஆம் செய்யுளில் முல்லைத்திணைக்குரிய முதல் கருப் பொருள்கள் புனையப்படுகின்றன. தொகுத்த முறைப்படி அச்செய்யுள் பாலையாகும். அதற்கேற்ப 'பிரிவிடைமெலிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது' எனத் துறையும் வரைந்து 'இப்பாட்டுத் தொழிலாற் பாலையாயிற்று' எனக் காரணமும் கூறுவர். தொழில் என்பது உரிப்பொருளைக் குறிக்கும்.

செய்யுள் 255 குறிஞ்சிக்குரிய கூதிர்க்கால வருணனை யுடையது. தொகுத்த எண் நிலையால் இது பாலைத்திணையாதல் அறிந்த துணையாசிரியர் 'பிரிவிடை வேறுபட்ட தலைமகள் ஆற்றுமை மீதூரத் தோழிக்குச் சொல்லியது' எனத் துறையும் எழுதி 'இப்பாட்டுத் தொழிலாற் பாலை' எனத் தெளிவுஞ் செய்வர். எண்வழிப்பட்ட தொகைகொண்ட அகநானூறு ஒன்றுக்கே இவ்விடர்ப்பாடு ஆதலின் தெளிவு செய்யும் பொறுப்பு இத்துறையாசிரியர்க்குச் சார்ந்தது.

Koviloor Digital Library

திணைத்தெளிவு மட்டுமின்றி வேறுபல தெளிவுகளும் தரும் கருத்துத்துளிகள் இத்துறையாசிரியர் ஒருவர்பாலே காண்கின்றோம். இப்பாட்டு மருதத்துக் களவு (156) இப் பாட்டு இரவுக்குறி (112) இப்பாட்டு எதிர்காலம் நோக்கிற்று (217) இப்பாட்டு பகலே சிறைப்புறம் (228) எனக் கைகோள் முதலிய விளக்கம் தந்தும், பொங்கழி என்பது தூற்றுப்பொலி (37) இப்பாட்டினுட் புருவை என்பது இளமை (88) இப்பாட்டி னுட் காழியர் என்பது வண்ணாரை (89) இப்பாட்டினுள் அறுமீன் என்பது உரோகிணி (141) என இன்னும் சில சொற்களுக்குப் பொருள் சுட்டியும், சில இடங்களில் (174 194 216 236 238) பாட்டிற்கே முடிவுக்கருத்து வெளிப்படுத்தியும் இத்துறையாசிரி யர் துறையாசிரியர் என்ற அளவில் அமையாது சிறுகுறிப் பாசிரியராகவும் விளங்குவர் 24 இடங்கள் இவ்வாறு அமைந் துள்ளன. இவை 256 பாட்டுவரைதான் காணப்படுகின்றன. அதிலும் 256 ஆவது பாட்டின் குறிப்பு சிதைந்து போயிற்று.

ஐங்குறுநூற்றுத் துறையாசிரியர்

அகத்துறையாசிரியர்களுள் குறுந்தொகைத் துறையாசிரி யரும் ஐங்குறுநூற்றுத் துறையாசிரியரும் தலைசிறந்தோர் ஆவர். அவ்விருவருள்ளும் பின்னவருக்கே முதன்மையுண்டு. துறை விரிவும், நயமும், வளர்ச்சியும், புதுமையும்பட இறுதி வரை எழுதிச்செல்லும் மனப்போக்கும், நடைபல காட்டும் மொழிப்போக்கும் இவர்பால் நிரம்பவுண்டு. இங்ஙனம் இவர் சிறந்துநிற்பதற்கு ஐங்குறுநூற்றின் அமைப்பு ஒரு காரணம். ஒவ்வொரு பொருள்மேல் 10 பாடல்கள், ஒவ்வொரு திணைமேல் 100 பாடல்கள், ஐந்து திணைக்கு 500 பாடல்கள் வரிசையாக உள்ளமையின், பாட்டுத்தோறும் துறைவேறு காட்டி நயப்பிக்க வேண்டிய கடப்பாடு இவரதாயிற்று. முன்னரே பப்பத்தாகப் பொருள் இனம்பட்டுக் கிடந்தமையின் அப்பத்து தம்முள் துறைவேற்றுமை காட்டினாற் போதும் என்ற சூழ்நிலையுதவியும் இவர்க்கு வாய்த்தது. மேலும்

Koviloor Digital Library

பாடிய புலவர் ஐவரேயாதலின் அவர் கருத்தோட்டத் தொடர்ச்சியைக் காண்பது இவர்க்கு எளிதாயிற்று.

சங்க இலக்கியத்துள் அகத்தொகைக்குத் துறை யெழுது வதில் ஓர் இயல்பு காணப்படுகின்றது. பாட்டுக்களின் அடிமிகுந்த அகநானூறு நற்றிணைத் தொகைகளுக்குத் துறைகள் குறைவாக எழுதப்பட்டுள. பரிபாடலில்வரும் நீண்ட அகச்செய்யுட்களும் பத்துப்பாட்டில் வரும் முல்லைப் பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு என்ற நெடிய செய்யுட்களும் சிறிய துறைகளே பெற்றுள. அடிகுறைந்த குறுந்தொகை விரிந்த துறைவளம் உடைய தாகவும், அதனினும் அடிகுறைந்த ஐங்குறுநூறு துறைவளம் மிக்கதாகவும் காணப்படுவ. இதனால் அடிச்சிறுமையை துறைவளத்தால் பெருமைப்படுத்த எண்ணினரோ துறை சியாரியர்கள் எனக் கருத இடனுண்டு.

பல செய்யுட்களின் துறைகள் நெடிய விரிந்த நடை யுடையன. ஓர் எடுத்துக்காட்டு: (ஐங். 53)

> தலைவி தன்னுடன் போய்ப் புனலாடியவழி இது பரத்தை யருடன் ஆடிய துறையென நினைந்து பிறந்த மெலிவை மறைத்தமையையுணர்ந்த தலைமகன் மனைவயிற் புகுந்துழி தெய்வங்கள் உறையுந் துறைக்கண்ணே நாம் ஆடின வதனாற் பிறந்ததுகொல் நினக்கு இவ்வேறுபாடு என்று வினாயினாற்கு அவள் சொல்லியது

இந்நடையில் பல்வேறு முற்றுக்கள் பெயரெச்சமாகவும், வினையெச்சமாகவும் படுத்தப்பட்டு ஒரு நீண்ட தொடராக ஓடுவதையும் பல அகத்துறைகள் ஒருதுறையாக அடங்கிக் கிடப்பதையும் காணலாம்.

மரபுநிலை திரியாமல் புதுப்புதுப் பொருள்களை விரவிக் கொள்ளலாம் என்று மொழிந்த தொல்காப்பியத்தின்படி,

Koviloor Digital Library

ஐங்குறுநூற்றுத் துறைகள் புதுப் பொலிவுடையன; வேறெங்கும் காணற்கரியன. இதனுல் இத்துறையாசிரியனின் படைப்பாற்றலை உணர்கின்ருேம்; துணிவையும் புலமையையும் போற்றுகின்ருேம்.

'அறத்தொடுநிலை பிறந்தபின்னும் வரைவு நீடிற்ருக மற்ருெரு குலமகளை வரையுங்கொல் என்று ஐயுற்ற செவிலி குறிப்பறிந்த தோழி அவட்குச் சொல்லியது' ஐங். (108)

'உடன்போயின தலைமகள் மீண்டு வந்துழி நின் ஐயன்மார் பின்துரந்து வந்தவிடத்து நிகழ்ந்தது என்னை என்ற தோழிக்கு நிகழ்ந்தது கூறித் தலைமகன் மறைதற்கு உதவிசெய்த மலையை வாழ்த்தியது' (ஐங். 312)

'பாசறைக்கண் வேந்தனெடு வினைப்பொருட்டாற் போந்திருந்த தலைமகன் அவ்வேந்தன் மாற்றுவேந்தர் தருதிறைகொண்டு மீள்வாணுகப் பொருந்துழித் தானும் மீட்சிக்குத் தேர்சமைத்த எல்லைக்கண்ணே அவ்வரசன் பொருத்தம் தவிர்ந்து மீண்டும் வினைமேற்கொண்டாணுகச் சொல்லியது' (ஐங். 449)

'புணர்ந்துடன் போகியவழித் தோழி அறத்தொடுநிற்பக் கேட்ட நற்ருய் அதனை முன்னே அறிவித்து நாம் மணம் புணர்த்த ஒழுகாதுபோயினள் என்று நொந்து சொல்லியது' (ஐங். 379)

அறத்தொடு நிலைக்குப்பின் வரைவுநீடிக்க ஐயப்படுதலும், ஐயன்மார் பின்வந்தவிடத்து நிகழ்ந்ததுகேட்டலும், மீண்டும் பொருதுதல் கூறலும், நற்ருய் முன்னமே மணம்செய்ய நினைத்தலும் அகப்பொருளில் மாட்சிமையும், இனிமையும் வாய்ந்த புதுக்குறிப்புக்களாம். இன்னோரன்ன வளர்ச்சிகள் இவர் துறையில் பலப்பல.

Koviloor Digital Library

இத்துறையாசிரியரின் துறைநயத்திற்கு ஒரு காரணம் ஒரு கூற்று வினவ மற்ருெரு கூற்று விடை கூறுவதாக மேற்கொண்ட போக்காகும். எண்ணிறந்த துறைகள் விஞ விடை அமைப்புடையனவே. இவ்வெழுச்சிப் போக்கு இவர்க்கே பெரும்பான்மை உரியது. ஐங்குறுநூற்றின் முதலாவதாம் மருதத்திணையின் முதலாவதாகிய வேட்கைப் பத்துக்கு வரைந்த துறைகள்.

'புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி இது தகாது எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு தலைவியொடு கூடி ஒழுகாநின்ற தலைமகன் தோழியோடு சொல்லாடியான் அவ்வாறொழுக நீயிர் நினைத்த திறம் யாது? என்றாற்கு அவள் சொல்லியது' (1—5) 'களவினிற் பலநாளொழுகி வந்து வரைந்துகொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இங்கு இழைத்திருந்த திறம் யாது? என்றாற்கு அவள் சொல்லியது' (6—10)

இவர்தம் விஞவிடை நெறியால், 'அவன் மார்பை நினைந்து ஆற்ருயாகின்றது என்னை' (14) நின் கண் மலர்ச்சிக்குக் காரணம் என்? (180) மெலிந்துழி நீங்கா நலனுடையவோ இவை? (193) பிரிவுடம்பட்டும் ஆற்ருயாகின்றது என்னை? (431) பிரிவாற்ருமை அவற்கும் உளதன்றே; நீ வேறுபடு கின்றது என்னை? (476) எனப் பெரும்பகுதி கூற்றும் மாற்றமுமாகத் துறைநடை அமைந்திருக்கக் கண்டு பெரிதும் இன்புறுகின்ருேம்.

புதுமைப்படவும், உணர்ச்சிபடவும், மெய்ப்பாடு தோன்றவும் மூலமே எழுதும் ஆற்றலுடையவர் இத்துறையாசிரியர். அவர் துறைகளே கவிதைகள். கவிதைத்தன்மை உரை நடைக்கும் உண்டு என்ற இலக்கியக் கொள்கைக்கு இவர் துறைநடைகள் நிகரில் சான்றுகள்.

Koviloor Digital Library

'தலைமகள் புணர்ச்சி வேட்கையைக் குறிப்பினால் உணர்ந்த தோழி அவள் கொடுமை நினையாது அவன் மார்பை நினைந்து ஆற்றாயாகின்றது என்னை என்றாட்கு அவன் கொடியனேயாயினும் அவன் மார்பு குளிர்ந்த துயிலைச் செய்யும் இனிய சாயலையுடைத்து ஆதலாற்காண் என்று சொல்லியது' ஐங். (14)

'முயக்கம் பெற்றவழிப் பிறந்த வெறிநாற்றத்தால் பண்டையவளவன்றி வண்டுகள் மொய்த்தனவாக இதற்குக் காரணம் என் என்று வினவிய செவிலித் தாய்க்குக் கூறுவாள் போன்று தலைமகன் சிறைப் புறத்தானாகத் தோழி சொல்லியது' ஐங். (93)

'வாயிலாய்ப்புகுந்தார் தலைமகன் குணங் கூறியவழி அவனுக்கு இல்லாதனவே கூறுதலால் இப்பொழுது காண் என்மேனி பசந்தது எனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது' ஐங். (35)

புறத்தொழுக்கம் பற்றிய நுண்குறிப்புக்கள் துறைகளில் மலிந்து கிடக்கின்றன. பரத்தை யொழுக்கத்திற் பன்னாள் சென்ற தலைவன் இது தகாது மனந்தெளிகின்றான் (1—5) சேணிடைப் பிரிந்து வந்த தலைமகனுக்குப் புறத்தொழுக்கம் விரைவில் உளதாயிற்று (15); பரத்தையிற் பிரிதல் ஆடவர்க்கு இயல்பன்றோ என்று கூறுகின்றாள் தோழி (17); நாடு கடந்த பிரிவைப் பன்னாட் பொறுத்திருந்த தலைவி தலைவன் பரத்தையிற் பிரிந்து உள்ளூர்க்கண்ணே உறைதலின் ஆற்றேனாகின்றேன் என்கின்றாள் (19); களவினிற் புணர்ந்து வரைந்தபின் தலைமகனுக்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்று (22); பரத்தையருள்ளும் ஒருத்தியைவிட்டு ஒருத்தியைப் பற்றி ஒழுகுகின்றான் (24); உலகியல்பற்றித் தலைவன் தன்மனைக்கண் ஒருநாளன்று வந்தான் (40); வரைந்த அணிமைக்கண்ணே புறத்தொழுக்கம் ஒழுகினான் (55); வதுவை யயர்ந்தான் ஒரு பரத்தையைச் சின்னாளில் விட்டு மற்றொரு பரத்தையை

Koviloor Digital Library

வதுவையயர்ந்தான் (61); இது மறைத்தற்கு அரிது என உடன்பட்டு இனி என்னிடத்து இவ்வாறு நிகழாது என்ருன் (61) என்றினைய மருதவொழுக்கத் துறைக்கூறுகள் சுவை படப் புலப்படுத்தப்பட்டுள்ளன.

அகப்பொருள் முறைப்படி தலைவியின் தோழியே கூற்றுக்கு உரியவள்; கேட்போளாகவும் இடம் பெறுபவள்; பரத்தையின் தோழிபற்றி எவ்வகைக் குறிப்பும் இல்லை. ஐங்குறுநூற்றுத் துறையாசிரியர் பரத்தைக்கு ஒரு தோழி யுண்டு (37—40) எனக் குறிப்பர். தோழிக்குரைத்த பத்து என்ற பகுதியில் தோழி என்பது இருவரின் தோழியையும் குறிக்கின்றது என்ற புதுவளர்ச்சியை நாம் உணர வேண்டும். தோழி கூற்றுப்பத்து (51—60) என்ற பகுதி முழுதும் தலைவியின் தோழிக்கே உரியதாக வுளது. ஆதலின் பரத்தை தோழி கூற்றுக்கு உரியவள் ஆகாளோ என்ற வினு வெழும். அவளும் கூற்றுக்கு உரியவளே என்பது,

> 'தன்ஞெடு கூடாது தனித்துப் புனலாடுகின்ருன் எனக் கேட்டுத் தலைநின்று ஒழுகப்படா நின்ற பரத்தை தானும் தனியே போய்ப்புனலாடிஞளாக, அவளை ஊடல் தீர்த்தற் பொருட்டாகத் தலைமகன் சென்று தான் அறியான் போல நகையாடிக் கூறிக் கைப்பற்றிய வழி அவள் தோழி சொல்லியது' (ஐங். 79)

என்னும் துறையால் தெளிவாகும். எனவே பரத்தை தோழி அரியவரவினளாயினும் கேட்டற்கும் கூற்றுக்கும் உரியவள் என்ற புது வளர்ச்சியை இத்துறையாசிரியர் தோற்றுவிக்கின்ருர்.

புலந்தவழி, பெற்றுழி என்ற ஈறுகளும்; கேட்குமாற்ருல், என்ஞங்கொல், பொருட்டு, என்னை, பன்ஞள், சின்ஞள் என்ற சொல்லாட்சிகளும்; நான், இந்த, தாங்கள், செலுத்து

Koviloor Digital Library

கின்ற, தொடங்கா நின்ருள் என்ற வடிவங்களும்; அணிமை அணுமை என்ற மாற்று வடிவங்களும்; பசந்தனகாண், வந்தனகாண் என்ற காணீறும்; போர் நிறுத்தம் என்ற பொருளில் பொருத்தம் என்ற சொல்லாட்சியும்; அகம்புகல் மரபின் வாயில்கள், பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவை என்ற தொல்காப்பியத் தொடர்களும், நீர்இனிய வல்ல என்ற பன்மை முடிவும்; பரத்தையொழுக்கத்தைக் குறிக்கப் புறத்தொழுக்கம் என்ற சொல்லும் இவர் துறை நடையிற் குறிப்பிடத்தக்கன.

பல்வகைச் சிறப்பினையும் நோக்குங்காலை ஐங்குறு நூற்றுத் துறையாசிரியர் துறையாசிரியருள் தலையாயவர் என்பதும், அடிகுறைந்த ஐங்குறுநூற்றுக்குச்சிறப்பு துறை யினால் மிகுந்துளது என்பதும், துறையாராய்ச்சிக்கு இங்குக் குறிப்புக்கள் பலவுள என்பதும், உரைநடை வளர்ச்சியில் இவர் துறைநடைத் தொன்மைக்கு இடம் உண்டு என்பதும் நாம் அறியத் தக்கவை. துறையாசிரியர்களுள் இவரை ஓரளவு காலத்தாற் பிந்தியவராகக் கருதலாம்.

5. புறநானூற்றுத்துறையாசிரியர்

முன்னர்க் கூறிய நான்கு துறையாசிரியர்களும் அகத் தொகை சார்ந்தவர்கள். இத்துறையாசிரியரோ புறம்பற்றியவர். புறநானூற்றுத் துறைஎன்று சொல்லும்போது பாட்டின் சூழ் நிலைப் பகுதியையும் கொள்ள வேண்டும் என்ற ஒரு குறிப்பினை முன்சுட்டியுள்ளேன். இஃது எல்லார்க்கும் உடன்பாடாக இராது எனினும் தொன்மையுரைநடை ஆராய்ச்சியில் இப் பகுதியையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும் என்ற கருத்து பலர்க்கு முரணுகாது என்று நம்புகின்றேன்.

அகத்துறையாசிரியர்களிடை இயற்பழித்தல், இயற்பட மொழிதல் என்பது போன்ற மரபு வாய்பாடுகளை ஆளும்

Koviloor Digital Library

பொதுப்போக்கு உண்டு. அங்கு வரும் அகமாந்தர்களும் மரபுவழிப்பட்டவரே. சூழ்நிலைகளும் ஓரளவே விரிவுக்கு உரியவை. புறத்தில் பாடல்தோறும் சூழ்நிலை வேறுபடும். மாந்தர் வேறுபடுவர். புறம்பன்மைசான்ற பகுதிகள் உடையது ஆதலின் புறத்துறையாசிரியருக்கு அரசியலறிவு, வரலாற்றறிவு, குழுவியலறிவு முதலான பல்துறையறிவு இன்றியமையாதவை. புறம் நடைமுறை வாழ்க்கைத் தொடர்பு உடையது ஆதலின் சொல்லாட்சிகள் விழிப்பாகவும், உண்மையாகவும் இருத்தல் வேண்டும்.

சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது, சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் பரணர் பாடியது என வரும் குறிப்புக்களைப் பார்க்குங்கால் அவனை அவர் பாடியது என்ற வாய்பாடு பெறப்படும். செயப்படு பொருள் முன்னரும் எழுவாய் பின்னரும் இவ்வாய்பாட்டில் அமைந்துள. அகத்தொகையில் என்பது, இது என்ற தொடக்கச் சொற்கள் இருப்பக் கண்டோம். இத்தொகையில் அன்ன சொல் யாதும் இல்லை. மேலும் அத்தொகைகள் [கூற்றினவாதலின் தலைமகன் சொல்லியது, உரைத்தது என்ற வினைச் சொற்களால் முடிந்தன. இத் தொகைக்கண் பாடியது என்ற சொல்லே பெரும்பாலும் இறுதி யாக வருகின்றது. பாடியது என்பதற்குப் பாடிய பாட்டு என்பது பொருள்.

எல்லாப் புறப்பாடல்களும் பாடியது என்ற சொல்லால் முடியவில்லை. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் பாட்டு (71) பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் பாட்டு (72) சோழன் நலங்கிள்ளி பாட்டு (73) கணியன்பூங்குன்றன் பாட்டு (192) ஓரேருழவர் பாட்டு (193) எனவரும் இடங்களும் உள. இதனால் பிறர்மேற் பாடப்பெற்ற நிலையில் பாடியது என்ற சொல்லையும் அங்ஙனம் இல்லாத் தன் னிலையில் பாட்டு என்ற கிளவியையும் பயன்படுத்தினர் என்று

Koviloor Digital Library

கொள்ளலாம். இதற்கும் சில விலக்கு (194 – 195) இல்லாமல் இல்லை. மேலும் பாடியது, பாட்டு என்ற இறுதியில்லாமல் நிகழ்ச்சிக்கேற்ற வேறு வினைமுடிவுகள் பெற்ற இடங்களும் உள. மலையமான் மக்களை யானைக்கு இடுவுழி கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது (46) நெடுங்கிள்ளி ஒற்று வந்தான் என்று கொல்லப்புக்குழி கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது (47) கபிலர் பறம்பு நோக்கி நின்று சொல்லியது (114) வெள்ளைக்குடி நாகனார் பாடி பழஞ்செய்க் கடன் விடு கொண்டது (35) சான்றோர்க்கு அவர் வருவார் என்று சொல்லியது (215) தீப்பாய்வாள் சொல்லியது (246) எனவரும் இறுதிகளும் உண்டு. உ. வே. சா.வின் பதிப்பின்படி 269ஆம் செய்யுட்குப்பின் இறுதிச்சொற்கள் பெரும்பாலும் இல.

இயற்பெயர் கூறிப் பின்னர் நிகழ்ச்சியடைப்பெயர் கூறி எழுதும் நடை இத்துறையாசிரியரின் தனித்தன்மையாகும். இது பிற்காலத்து வழக்கு வீழ்ந்தது விழத்தகாததொன்று.

1. அதிகமான் பொருது புண்பட்டு நின்றோனை ஔவையார் பாடியது (புறம். 93)
2. அதிகமான் பொருது புண்பட்டு நின்றபோது ஔவையார் பாடியது
3. பொருது புண்பட்டு நின்ற அதிகமானை ஔவையார் பாடியது

என்ற மூன்று தொடர்களில் முதலது பழங்காலத்தது. இரண்டாவது தொடர் முதற்றொடரின் பொருளை மாறாமல் தருகின்றது. மூன்றாவது தொடர் ஒரு காலத்துப் போர் செய்து புகழ் பெற்ற அதிகமானைப் பின்னொருகாலத்துப் பாடியிருக்கலாம் என்ற பொருள் கொள்ள இடமுண்டு. இன்ன நிகழ்ச்சியின்போது பாடியது என்ற தெளிவுக்கு இறுதித்தொடர் அவ்வளவு பொருத்தமில்லை. பழந்தொடரோ நிகழ்ச்சியையும், நிகழ்ச்சி செய்தானையும் வினையாலணையும்

Koviloor Digital Library

பெயர் முறையில் ஒருங்கிணைத்துக் காட்டுவதை உணர வேண்டும். புறநானூற்றுத்துறையாசிரியர், துயிலெழுந் துணையும் கவரி கொண்டு வீசியானை (50) ஒருங்கிருந்தாரை (58) பொருது புறப்புண் நாணி வடக்கிருந்தானை (65) அதியமான் தவமகன் பிறந்தவனைக் கண்டானை (100) அவன் கோவலூர் எறிந்தானை (99) மூவன் பரிசில் நீட்டித்தானை (209) தீப்பாய்வாள் (246) எனவும் இவ்விடங்களில் நிகழ்ச்சிப் பெயர்நடையை மிகவும் ஆளுவர். இவர் இந்நடையிற் கன்றியவர் என்பது,

> சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும், தாமப் பல்கண்ணனும் வட்டுப் பொருவுழி கைகரப்ப வெகுண்டு வட்டுக் கொண்டெறிந்தானை சோழன் மகனல்லையென நாணியிருந்தானைத் தாமப்பல்கண்ணனார் பாடியது (43)

என்ற நெடுந்தொடராற் பெறப்படும். மலையமான் மக்களை யானைக்குஇடுவுழி (46) எனவும், அடைத்திருந்த நெடுங் கிள்ளியைப் பாடியது (45) எனவும் பிற இருவகைத் தொடர் கள் இவர்தம் துறைநடையில் அருகி வந்துள.

புறத்திணைக்குச் சூழ்நிலை எழுத வந்த ஆசிரியராதலின் அரசியலறிவு இவர்க்கு இன்றியமையாதது. இவர் அவ்வறிவு வாய்ந்தவர் என்பதனைத் துறைநடையால் அறிகின்றோம். வலிதிற் போய்க் கட்டில் எய்தினானை (17) எனவும், பழஞ் செய்க்கடன் வீடு கொண்டது (35) எனவும், ஒற்றுவந்தான் என்று கொல்லப்புக்குழி (47) எனவும், முரசு கட்டில் அறியா தேறிய (50) எனவும், பொருது பற்றுக் கோட்பட்டு (74) எனவும், சோழற்குத் துப்பாகிய தேர்வண்மலையன் (125) எனவும், படைக்கலக் கொட்டில் காட்ட (95) எனவும், அவன் மக்கள் மேற்சென்றானை (213) எனவும் வரும் சொல்லாட்சிகள் இத்துறையாசிரியர்தம் அரசியற்புலமையை நமக்குப் புலப் படுத்துகின்றன.

Koviloor Digital Library

தமிழ் உரைநடை வரலாற்றில் துறையாசிரியர்களின் உரைநடை என்ற ஒரு தொல்பகுதி இதுகாறும் இடம் பெற்றிலது என்பதனைத் தமிழுலகிற்கு முந்துற எடுத்துக்காட்டி அப்பெருமக்கள் தம் புலமை, நடை முதலியவற்றைச் சில கூறளவில் புலப்படுத்துகின்றது இக்கட்டுரை. இப்பொருளில் இதுவே முதற்கட்டுரையாதலின் துறையாசிரியர்கள் பல்வேறு பாங்கினை விரித்துக் கூற இயலவில்லை. அகத்துறை விளக்கத்திலும், வளர்ச்சியிலும் ஒப்பீடு செய்யத் தக்க குறிப்புக்கள் உள. இத்துறைநடைகள் கி. பி. நான்காம் நூற்றூண்டைச் சார்ந்தன என்று கொள்ளக் கிடத்தலின் தமிழ்மொழியின் கூறுகள் குறித்து வரலாற்று முறையில் ஆராயவும் நிரம்ப வாய்ப்புண்டு.

(சங்கத்தொகை நூல்கட்கு ஒருமையோட்டத்தினை அளித்தவர்கள் இத்துறையாசிரியர்கள் என மதிக்கின்றேன். குறுந்தொகை முதலான தொகைச் செய்யுட்களைப் பாடினோர் பலப் பலர். அவை ஒவ்வொன்றும் தனிப்பாடல்கள். தொகை என்பது பலர்பாடிய தனிச் செய்யுட்களின் திரட்டு. இத் தொகைத் திரட்டுக்குத் துறைகள் முதலிலிருந்து இறுதிவரை ஒருவர் எழுதியிருத்தலின் துறையில் இத்தொகை ஒவ்வொன்றும் ஒருமைக்காட்சி எய்துகின்றது. பன்மைக்கிடையே துறை என்ற ஒருமையிழை ஓடுகின்றது.

சமாசம் தொகுத்து வெளியிட்ட சங்கவிலக்கியம் அகர முதல் ஆசிரியர் வரிசைப்படி எட்டுத் தொகை, பத்துப்பாட்டுச் செய்யுட்களை ஒழுங்குபடுத்திக் காட்டுகின்றது. சிலவகை ஆராய்ச்சிக்கு அகரமுதற் பதிப்பு இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை. எனினும் துறையாசிரியர்களின் ஆராய்ச்சிக்குத் தனித் தனித் தொகைப்பதிப்பு என்றும் இருந்து கிடைத்து வருதல் வேண்டும். பழந் தொகைப் பதிப்பும் காக்கப்பட வேண்டியது என்பதற்கு இக்கட்டுரைப்பொருள் ஒரு பெருஞ் சான்றாகும்.)

Koviloor Digital Library

11. இராமயணத்தின் பாடுபொருள் ஒன்று பலவா?

பொதுப்பொருள்

தேவர்கட்கு இடுக்கண் செய்த அரக்கர்களை அழிப்பது இராமயணத்தின் பாடுபொருள் எனப் பொதுவாக நாம் அறிந்திருக்கின்றோம். அறம் வெல்லும், பாவந் தோற்கும் என்பதே இராமயணத்தின் முடிவான அறம் என்பது நமக்குப் புதிய கருத்தன்று. எங்களிடம் பெற்ற வரங்களைக் கொண்டே அரக்கர்கள் எங்களையும் மூவுலகங்களையும் அழிக்கின்றனர் எனவும், நீ அருள் செய்தாலல்லது உய்யும் வழியில்லை எனவும் நான்முகன் முதலான தேவரெலாம் கடல் நடுவில் ஆதிசேடன் மேல் அறிதுயில் கொள்ளும் மழை நிற வண்ணனை திருமாலிடம் முறையிட்டதும் ' கொலைத்தொழில் அரக்கர் தன் கொடுமை தீர்ப்பன் ' என்று துன்புறும் அமரர்கட்கு வாய்மை யளித்ததும் அதனை நிறைவேற்றவே தயரதன் மகனாய்ப் பிறந்ததும் நாடு துறந்ததும் சீதையொடு காடு சென்றதும் அவளைப் பிரிந்ததும் இராவணன் காமுற்றுச் சிறை வைத்ததும் இலங்கைப்போரும் இராவணவதையும் எல்லாம் குடலை இழுத்தாற்போல வரும் தொடர்வினைகளே என்று நாம் அறிவோம்.

Koviloor Digital Library

'கரந்தையருக் கனியனைய சானகியார் பேரழகும்
அவர்தம் கற்பும்
ஏந்துபுயத் திராவணனார் காதலும் அச்சூர்ப்பநகை
இழந்த மூக்கும்
வேந்தர்பிரான் தயரதனார் பணியினால் வெங்கானில்
விரதம் பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற்றம்மா'

என்ற உயுத்த காண்டச் செய்யுளில் காரணப் படிமுறைகள் வெளிப்படையாகச் சொல்லப்பட்டுள; எனினும் சொல்லிய முறையில் தலைகீழ் அமைப்பு உண்டு. தேவர்கள் செய்த பெருந்தவம், இராமன் விரதம் பூண்டு கான் ஏகுதல், சூர்ப்பனகை மூக்கிழப்பு, இராவணன் காதல், சானகியின் கற்பு, அவள் தன் பேரழகு என்பவை வித்தும் முளையும், காயும் கனியும் போலத் தலைமுறையாக எண்ணப்படாமல் கடைமுறை யாக எண்ணப்பட்டுள. மூலகாரணத்தைக் கம்பர் பாட்டின் முடிவில் வைத்துள்ளார்.

இராவணவதம்

திருமால் இராமனாகத் திருப்பிறப்பு எடுத்ததற்குத் தேவர் வேண்டுகோளின்படி இராவண வதமே நோக்கம் என்பதனைக் காப்பியம் வீதிக்கற்போல ஆங்காங்கே நினைவூட்டிச் செல்கின்றது. கன்னிப்போரில் இராமன் தாடகையை வீழ்த்தியது பின்னர் இலங்கைப் போரில் இராவணன் கொடி வீழ்ந்தொழியும் என்பதன் அறிகுறி எனப் பால காண்டத்தின் தொடக்கத்திலேயே இராவண வதத்திற்கு உவமையால் அடிக்கல் நாட்டினர் கம்பர். வேள்வியைக் காத்த இராமனை நன்றியோடு நோக்கிய விசுவாமித்திரர் 'பெரிய காரியம் உள அவை முடிப்பது பின்னர்' என்ற பாராட்டு மொழியிற் கூட இராவணவதைக் குறிப்பு உண்டு. நல்லோரெல்லாம்

Koviloor Digital Library

தீயோராய் மாறும்போது, இம் மாற்றங்கள் தன்னியல்பில் நிகழ்ந்தனவல்ல; தேவர்களின் முன்னைய வேண்டுகோளால் வலிந்து நிகழ்பவை என்ற நோக்கத்தைக் கம்பர் யாண்டும் ஒரு காரண அமைதியாகக் காட்டிக் கற்பவரை ஏற்றுக் கொள்ளச் செய்குவர். இது இவர் கையாளும் உத்தி. இராமன் முடிசூடாமைக்குக் கைகேசியின் புதிய தன்னலம் வெளிப்படையான காரணம் ஆம். இராமனோ கம்பரோ கைகேசியின் தூய நெஞ்சத்தைப் பாராட்டிக் கொண்டிருந் தாலும், தயரதனோ, பரதனோ, இலக்குவனோ, ஊர்மக்களோ அவளைச் சிறிதும் மதிக்கவில்லை. இயற்கைகூட அவள் தன் சூழ்ச்சியை வெறுத்தன. வாழ்நாள் முழுதும் உயிரொன்று போற் காட்டித் தயரதனுக்கு இரக்கமிலாத பெருந் துன்பத்தைச் செய்த கைகேசியின் செயல் கண்டு இரவாகிய நங்கை நாணி அகன்றாளாம். அறிவிலாத மனைவியால் மன்னன் படும் துயரைப் பார்த்து வைகறைக் கோழிகள் சிறகினால் வயிற்றில் அடித்துக் கொண்டனவாம். வைகறைப் பறவை யொலிகள் நினைத்தற்கரிய கேடு சூழ்ந்த கைகேசிக் கயத்தியை வைவன போன்றனவாம். தீய பெண்ணொருத்தி யின் சிந்தை யறிந்து ஏனைப் பெண்கள் வாயடங்கினபோலக் குமுதங்கள் காலையிற் குவிந்தனவாம். இங்ஙனம் கணவன் முதலான உறவினோர் கைகேசியை வசை மொழிந்தாலும், உயிரியற்கையும் உயிரில் இயற்கையும் அவளைப் பழித்துக் கூறினாலும், அவ்வாறு கூறுவதாகப் புலவரே புனைந்திருந்தா லும், தன் கூற்றாக வரும்போது இராமனைப் பின்பற்றிக் கைகேசியைப் பூசிமெழுகிப் பாராட்டுகின்றார்.

'தீயமந்தரை யிவ்வுரை செப்பலும் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியின் இமையோர்
மாயையும் அவர்பெற்ற நல்வர முண்மை யாலும்
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தாலும்'

Kovilmoor Digital Library

'அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூய்மொழி மடவாள்
இரக்கம் இன்மை யன்றே இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புக ழமுதினைப் பருகுகின்றதுவே'

கைகேசி தூய சிந்தையும் நல்லருளும் தூய்மொழியும் இரக்கமும் இயல்பிற் பெற்றவள் எனவும் தேவர்தம் வரத்தால் அவள் தன் அருங்குணங்களைப் பலியிட்டாள் எனவும், அந் நல்லாளிடத்து அத்தகைய குணக்கேடு விளைந்திராவிட்டால் இராமன் புகழ் பாடும் வாய்ப்பு புலவர்க்கும் அதனை அள்ளிப் பருகும் வாய்ப்பு உலகர்க்கும் வந்திரா எனவும் கம்பர் ஒரு தீய வினையிலிருந்து பல நல்வினைகள் விளைந்த புதுமையைத் தன் புலமை மதுகையால் புலப்படுத்துகின்றார். இராவண வதம் அவரை இவ்வாறு பாடச் செய்கின்றது. தன் பிறப்பின் நோக்கம் இதுவாதலால், இராமன் ஒரு நாளும் கைகேசியை ஊறுபடப் பேசியதல்லை; பிறர் பேச விட்டதும் இல்லை; இவ் வுள்ளத்தை நன்கு புரிந்து கொண்ட சீதை அசோக வனத்தில் துயருற்ற காலையும் 'சிறக்கும் மாமியர் மூவர்க்கும் சீதை யாண்டு இறக்கின்றாள் தொழுதாள்' என்று வேறுபாடின்றிப் போற்றியுரைப்பதைப் படிக்கின்றோம்.

போர்க்கோலம் பூண்டு வில்லேந்திச் சினந்த இலக்குவனை 'ஈன்றாளை வென்றே இனி இக்கதம் தீர்வது' என இராமன் அடக்கிவிடுவதையும் காண்கின்றோம்.

'நீயினம் இருந்தனை யானும் நின்றனென்
ஏயெனும் மாத்திரத்து எற்று கிற்றிலென்
ஆயகன் முனியுமென் றஞ்சினேன் அல்லால்
தாயெனும் பெயரெனைத் தடுக்கற் பாலதோ'

பெருங்கேடு இழைத்த தாயைக் கொல்லலாம் என்று நெஞ்சோடும் பரதனை இராமன் நினைவு தடுக்கின்றது.

Koviloor Digital Library

எனவே கைகேசி காப்பியம் முழுதும் காப்பாற்றப் படுகின்ருள். அதற்குக் காரணம் இராவண வதம் என்ற இராமன் பிறப்பு நோக்கத்திற்கு ஓர் உயர்ந்த நற்பலி தேவை. அப்பலிப் பொருளே கைகேசியின் இரக்கம்; இராமனையே மகனாக நினைத்தவள் மந்தரையால் அந்நினைப்பைக் கைவிட்டமை.

காப்பிய இலக்கணம்

இதுகாறும் விளக்கியபடி தேவர்வேண்டுகோள் என்ற இராவணவதம் இராமாயணத்தின் பாடுபொருள் என்பது வெளிப்படை. இது ஒன்றுதான் காப்பியப் பொருளா? வேறு பல பாடுபொருள்கள் சொல்லக்கூடாதா? சிறுதனிப்பாடலுக்கு ஒரு பாடுபொருள் இருக்கலாம். செய்யுட்பன்மையும், பாத்திரப்பன்மையும் கொண்ட தொடர்நிலைக் காப்பியத்துக்கும் பாடுபொருள் ஒன்று என்றுதான் முடிக்க வேண்டுமா? 'நாற்பொருள் பயக்கும் நடை நெறித்தாகி' என்பது தண்டியலங்காரம் கூறும் காப்பியவிலக்கணம். வீடு சிந்தையும் மொழியும் செல்லா அப்பாலாதலின் அறம், பொருள், இன்பம் என்ற ஏனை மூன்றுமே நூல்களாற் கூறப்படுவன என்பது பரிமேலழகர் விளக்கம். அறம் முதலாகிய மும்முதலும் பொருளாகலாம் என்பது தொல்காப்பியம். சிலப்பதிகாரம் அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்ருதல், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டல் என்ற மூன்று அறங்களை நூற்பொருளாக வடித்துக் காட்டுகின்றது. ஆதலின் தலைப்பெருங்காப்பியம் ஆன இராமாயணம், இராவணவதம் என்னும் ஒரு பொருளே நுதலுவது என்ற கருத்து மறுபார்வைக்குரியது.

தெய்வப் பிறப்பு

இராமன், கம்பரின் அன்புப்படி, தெய்வப் பிறப்பாகும். இதனை யாண்டும் நிறுவிக் கொண்டு செல்வது அவர் குறிக்கோள். தாஞட்டித் தனுஅது நிறுத்தல் என்பது இலக்கண

Koviloor Digital Library

நெறி மட்டுமன்று; இலக்கிய நெறியும் ஆம் எனக் கம்பர் படைப்பால் அறிகின்றோம். இராமனது பிறப்பு நோக்கம் தேவர்கட்கு இராவணவதமாக இருக்கலாம். கம்பரின் படைப்பு நோக்கம் மக்களாகிய நமக்கு எது? குணங்களால் உயர்ந்த இராமனைத் தொழுந் தெய்வ வழிகாட்டியாகப் படைப்பது. 'யாவர்க்கும் தொழுகுலமாம் இராமன்' என்று பரதன், குகன் முன்பு சுட்டவில்லையா? சூழ்ச்சியாற் கொலைப் பட்ட வாலியும், நிற்கின்ற செல்வம் வேண்டி நெறிநின்ற பொருள்கள் எல்லாம் இவன் தன் நாமத்தைத்தானே ஓதுகின்றன என்று பாராட்டிக் கொண்டு மடியவில்லையா? அநுமனை இராமனுக்கு ஆழ்ந்த அன்பன் ஆக்குவதுதானே இக் காப்பியத்தின் நெடும் போக்கு. எத்துணை வசைமொழி மொழிந்தாலும், வஞ்சகம் செய்தாலும்,

'வாசவன் மாயன் மற்றை மலருளோன் மழுவாளங்கை
ஈசன் என்றினைய தன்மை யிளிவரும் இவராலன்றி
நாசம் வந்துற்றபோது நல்லதோர் பகையைப்
பெற்றேன்'

என்று நேர்பகைஞனை இராவணனும் இராமனைப் புகழுமாறு முடிப்பது கம்பரின் நோக்கம். ஆதலால் இராவணவதஞ் செய்யப் பிறந்த இராமனை மக்கள் வணங்கும் தெய்வப் பிறப்பாக பண்பெலாம் ஒரு வடிவெடுத்த மானிடத் தோன்றலாகப் பாடிப், பரவி மகிழ்கின்றார் கம்பர். இராமயணத்தைத் திவ்வியப் பிரபந்தமாக்குகின்றார். காசில் கொற்றத்து இராமன் கதையை ஆசை பற்றி ஆதிசேடன் தலைபோல் விரித்துப் பாடுகின்றார். இதுவும் அவர் காப்பியத்தின் ஒரு பாடுபொருள் என்று கொள்ள வேண்டும்.

பல்பொருள்

ஒரு பெரு நாட்டிற்குப் பல வீதிகள் உண்டு. வானுற ஓங்கிய மாளிகைக்குப் பல மாடங்கள் உண்டு. நாடகப்

Koviloor Digital Library

பேரரங்குக்குப் பல திறப்புக்கள் உண்டு. யாக்கைக்குப் பல வாயில்கள் உண்டு. பேராற்றுக்குப் பல வாய்க்கால்கள் உண்டு. ஒரு பெரு நாட்டிற்குப் பல மொழிகளும், பலவினங் களும், பல மதங்களும் உண்டு. அதுபோல் பெருங்காப்பி யத்துக்கும் பாடுபொருள் பல இல்லாமல் இயக்கம் நிகழா. திருமால் பிறப்பான இராமன் இராவணவதஞ் செய்ய இத்துணை நிகழ்ச்சிகளும் ஏற்பாடுகளும் அல்லல்களும் போர் களும் வேண்டுங்கொல்; தேவர்கட்குத் தொல்லை செய்தான் என்பது ஒன்றே கொண்டு இராவணனொடு போர் தொடுத்து அவனைக் கொல்லக்கூடாதா? முனிவர்களின் வேள்விக்கும், தவத்துக்கும் இடையூறு செய்தனர் என்பது ஒன்றே கொண்டு இராமன் அரக்கர்களைக் கொன்றிருக்கின்றானே. இராவண வதத்திற்காகக் கைகேசியைத் தீயவளாக்கித் தந்தையை உயிர்விடுக்கச் செய்து நாடு துறந்து காடேகி அருந்ததியனைய சீதையைப் பறிகொடுத்து, பிறன் மனையைக் கவர்ந்தான் என்ற புதியதொரு குற்றத்தை இப்பிறப்பில் இராவணனுக்கு உண்டாக்கி, தான் தெய்வப் பிறப்பாக இருந்தும், மானிடப் பிறப்புக் கூட இல்லாத குரக்கினத்தை நட்பாக்கிப் பல்வேறு மாயங்கட்கு உள்ளாகி அழுது புலம்பி முடிவில் இராவணனை வதஞ்செய்து தேவர்தம் இடுக்கண்தீர்த்தான் என்று இத்துணை நிகழ்ச்சிக் கோவை செய்ய வேண்டுமா? ‘எடுத்தது கண்டனர் இற்றது கேட்டனர்’ என்ற திறங் காட்டிய இராமபிரானுக்கு இராவணவதம் ஒரு பொருட்டோ? ஆதலின் இராமாயணக் காப்பியம் தேவர்க்காக எழுந்தது என்ற கருத்து வலுவுடைத் தன்று. அது இராமன் பெருமைக்குச் சிறப்புத் தருவதுமன்று. தெய்வ இராமனை மக்களுட் சிறந்தானாகப் படைத்து மக்கள் உறும் இன்ப துன்பமெல்லாம் அவனுக்கும் உறுவித்து, தன் மனைவியைப் பிறன் கவர விடுத்த பெருந்துயரை அவனும் அடைந்தானாகக் காட்டி, எந்நிலையிலும் சீதை கற்பு நெறி நீங்காத் தமிழக் குறிக்கோளை நிலை நிறுத்தி, இவ்வுலகில் இல்லற மாட்சிகளை மக்கட்கு அறிவுறுத்துவதே இராம

Koviloor Digital Library

காப்பியம். இத் தொடர் நிலையில் எத்துணையோ பாடு பொருள்கள் பின்னல்போல ஒன்றையொன்று மடுத்துக் கிடக்கின்றன. பாத்திரங்கள் பலவாகும்போது காப்பியத்தின் பாடுபொருளும் விருந்தில் உணவு வகைபோலப் பலவாகியே தீரும். பாடுபொருள் ஒன்று என்று ஒற்றைக்கண் கொண்டு ஆய்வார்க்குக் காப்பிய முழுமை மறைந்து நிற்கும்.

இருவகைப்பாகுபாடு

காப்பியங்களின் பாடுபொருளைப் பொதுவாக இருவகைப் படுத்தலாம். 1. புலவன் தன் எண்ணத்தைப் பொருளாகக் கொண்டு பாடுவது. 2. பாத்திரங்களின் எண்ணங்களை அல்லது நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்டு பாடுவது. முன்னது சிறிய அளவாக வரும். பின்னதுதான் காப்பியத்தின் பெரும் பகுதியாக இருக்கும். எனினும் முன்னதாகிய புலவன் எண்ணம் நூல் முழுதும் கலந்து வரும் எனவும், அவ் வெண்ணம் கலவாமல் பாத்திர நிகழ்ச்சிகள் பக்குவ மணம் பெரு எனவும் இலக்கியப் போக்கை உணர வேண்டும். நாட்டு நகர அரசியற் படலங்களில் கம்பர் தாம் காணும் சமுதாயப் பொருளைக் கற்பனையுலகில் நின்று பாடுகின்ருர். இப்படலங் களில் கதை நிகழ்வுகள் இல்லை. உயர்ந்த நல்வாழ்வுக் கருத்துக்களே செய்யுட் பொருளாக உள. கம்பர் இப்படலங் கள் அளவில் தன் உறவை நிறுத்திக் கொள்ளவில்லை. காப்பியத்தில் வேண்டுமிடந்தோறும், பாத்திரந்தோறும் தான் நேராக, மறைவாக நின்று பல உத்திகளில் உறவு கொள்கின் ருர். புலவன் கலந்து உடனுகி உறவு கொள்ளாக் காப்பியம் உரயிற்ற சாப்பியம் ஆகும்.

'கொல்லாத மைத்துனனைக் கொன்ரு யென்றது
குறித்துக் கொடுமை சூழ்ந்து
பல்லாலே யிதழதுக்குங் கொடும்பாவி நெடும்பாரப்
பழி தீர்ந்தாளோ'

Koviloor Digital Library

என்ற வீடணன் புலம்பலில் சூர்ப்பனகையின் நெடுநாள் வஞ்சகக் கிடக்கையைக் கம்பர் இடம்பார்த்துப் பாத்திரத்தோடு நின்று வெளிப்படுத்துகின்ருர்.

'மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்'

வாலி காணும் பகழி யாருடையது என்பதனைக் கம்பனே புலமையுணர்வு பிற்படத் தெய்வவுணர்வு முற்பட முன்னின்று அப்பகழிக்கு உரியானை அறிமுகஞ் செய்கின்ருர், இத்தகைய இடங்களில் புலவன் உறவு எவ்வளவு பெருமிதத்தை விளைக்கின்றது!

ஏனைவகையான பாத்திரப் பொருள் காப்பியத்திற் பல வாகும். இராவணனுக்குப் பிறன்மனைக்காமமும், சுக்கிரீ வனுக்கு அரசுமனைமீட்சியும், அனுமனுக்கு இராமனது அன்பும், கும்பகருணனுக்கு உடன்பிறப்புப் பற்றும், தயரத னுக்கு இராமன் மேற் காதலும், சீதைக்குத் தவக்கற்பும், இராமனுக்கு மனைமீட்சியும், ஒற்றுமையும், கைகேசிப் பற்றும், பரதனுக்கு இராம பற்றும், சூர்ப்பனகைக்குக் காதலும், இலக்குவனுக்குத் தொண்டும், வீடணனுக்கு அரசு வேட்கை யும், மேகநாதனுக்கு மாயையும் என்று இவ்வாறு வரும் பாத்திரங்களின் பொருளெல்லாம் ஒன்றிப் பிணைந்த கூட்டுப் பொருளே காப்பியப் பொருளாம். காப்பியம் ஒரு கல்லில் செய்யும் குடைவரைக் கோயிலன்று; ஒரு கோபுரமுடைய கோயிலுமன்று. கல் பல அடுக்கிய உள்ளும் புறமும் கோபுரங்கள் கொண்ட வானளாவிய கட்டுமானக்கோயிலாகும்.

Koviloor Digital Library

12. மறைமலையடிகளின் தூய தமிழியக்கம்

தமிழ் மொழியில் இலக்கியம் படைக்கும் எழுத்துப் பெருமக்கள் தமிழ் ஒரு மொழி, அதற்கும் ஏனைய மொழிகட்குப் போல் ஒரு வரம்பு உண்டு என்றுணர்ந்து அந்நல்வரம்புக்கு உட்பட்டு எழுத வேண்டும். என்று பிறந்தவள் என்று உணர கில்லாத் தமிழுக்கு ஓர் ஆற்றலுண்டு. அந்த ஆற்றலை எழுத்தாளர்கள் பெற வேண்டும்; அதனை மெலிக்காது மேன் மேலும் காலந்தோறும் வலுவாக்க வேண்டும்.

தன்னேரில்லாத் தமிழ் தனித்தியங்கும் இயற்கையது என்பதனைத் தொல்காப்பியம் முதலான அவைய நூல்களும், பின்னர்த் தோன்றிய பெருங் காப்பியங்களும் எண்பிக்கின்றன. தமிழ் குமரிமொழி என்று போற்றப்படினும் அஃது ஒரு முது மொழி. அதனை அது வளர்ந்து வந்த இயற்கைப்படி வளர்க்க வேண்டும். ஐம்பது அகவை கொண்ட ஒரு முதியவர்க்கு மாற்ற வாரா, மாற்றிக் கொள்ள இயலாச் சில வாழ்க்கை மரபுகள் இருப்பது மான, தமிழுக்கும் பல வரம்புத்தடங்கள் ஏற்பட்டுவிட்டன. அத்தடங்கள் அடிப்படையிற்றான் அதனைத் தழைப்பிக்க வேண்டும்.

தனித்தியங்கும் வன்மையினால் ஒரு மொழி பெருமை யுடையது என்றோ, அயன் மொழிச் சொற்களின் கலப்பினால்

Koviloor Digital Library

ஒரு மொழி சிறுமைத்து என்றே புகழ் பழி கூறுவது வேண்டாததொன்று. இம்மொழி தனித்து நடக்கும் இயற்கை சான்றது. அம்மொழி கலந்து செழிக்கும் இயற்கை வாய்ந்தது என இரு பாலினையும் அவ்வம்மொழியியற்கையாகவே கருத வேண்டும்; கருதி அவ்வண்ணம் வளர்க்க வேண்டும். தமிழ் ஞாலத் தொன்மொழியாதலானும் பலமொழிகள் ஞாலத்திடை தோன்றுவதற்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே தோன்றி வளர்ந்து இலக்கண இலக்கியம் கண்ட செம்மொழியாதலாலும், ஒரு குடும்பத்துக்கு ஒரு மகவு போல் உடன் பயில் மொழி யாதுமின்றித் தனித்து ஓடிவிளையாடி உரம்பட்ட செல்வ மொழியாதலானும் அதனைத் தன்னியற்கைப்படி வளர்ப்பதுவே நெறி. ஆங்கிலம், இந்தி முதலான பன் மொழிகள் ஏராளமான மொழிகள் வழங்கிய உலகக் காலத்துப் பிறந்தன; கலப்பிற் பிறந்தன; கலப்பிலே வளர்ந்தன. கலப்பிலே வளரும் பெற்றியன ஆதலின் அன்னமொழிகளை பிறந்த சூழற்படி வளர்ப்பதுவே நெறி. இவை மொழியியற்கை யாதலின் பெருமை சிறுமை என்ற ஏத்துக்கும் ஏச்சுக்கும் இடம் யாண்டுண்டு.

ஒரு மொழி தனித்தியங்கும் இயல்பிற்று எனக் கிளக்குங் காலை அம்மொழியில் எந்த அயற் சொல்லும் நுழையாது நுழையக்கூடாது என்பது கருத்தன்று. ஒருநாடு உரிமைநாடு. விடுதலைபெற்ற தனிநாடு என்றால் பொருள் என்னைகொல்? பிறநாடுகளொடு பொருளாதாரத் தொடர்போ, தூதுத் தொடர்போ, போக்குவரத்துத் தொடர்போ, மக்கள் தொடர்போ இல்லை என்று பொருள் கோடல் உண்டா? இத்தொடர்பெலாம் இருப்பினும் அவற்றின் ஆதிக்கம் இல்லை. தன் குடிமக்கள் நலனுக்கு உகந்த கொள்கைகளைத் தீர்மானிக்கும் உரிமை தனக்குண்டு என்பதுவே ஒரு நாட்டின் உரிமைக்குச் சான்று. நம் இந்தியப் பெருநாடு பிற நாடுகளின்மேல் ஆதிக்கஞ் செலுத்த விரும்பவில்லை;

Koviloor Digital Library

அயல்நாடுகள் தன்மேல் ஆதிக்கஞ் செலுத்துவதை விரும்புவதும் இடங்கொடுப்பதுமில்லை. இந்நிலையைத்தான் அரசியலில் தனித்தியங்கும் உரிமை என்று கொள்கின்றோம். தமிழ் இன்னொரு மொழியை ஆதிக்கஞ் செய்ய விரும்பிய தில்லை. இராசராசன் கடல் கடந்து ஆட்சி செய்த காலையும் தமிழ் மொழியை ஆதிக்க மொழியாகப் பரப்பவில்லை என்பதை நினைவு கொள்ளுங்கள். இன்னொரு மொழி தன்னை ஆதிக்கஞ் செய்வதைத் தமிழ் என்றும் விரும்பியதில்லை. எஞ்ஞான்றும் விரும்பப்போவதுமில்லை. இது தமிழ் வரலாறு காட்டும் பார்வை.

கறந்த தனிப்பாலைக் காய்ச்சும்போது சிறிதுளி தண்ணீர் ஊற்றுவது கலப்பாகாது. அது இயற்கை முறையாகும். காய்ச்சும் அளவுக்கு நீர் ஊற்றுது, பாலைப் பெருக்கும் அள வுக்கு நீரைச் சாய்க்கும்போது, வேண்டாத, தண்டிக்கதக்க கலப்படம் என்ற பெயர் பெறுகின்றது. வானத்தில் இருந்த போது காரென்று பேர் கொண்டாய், நிலத்தில் விழுந்தபின் நீர் என்ற பெயர் கொண்டாய், விற்பனை செய்யும் இந்த இடைச்சியர் கைப்புகுந்தபின் மோர் என்று பேர் பெற்று விட்டாயே என்று ஓர் இடைக்காலப் புலவன் கலப்பின் மிகையை நகையாடப்படிக்கின்றோம். தனித்தமிழில் எழுதுமின், பேசுமின் என எம்மனோர் வேண்டுங்காலை ஓர் அயற்கிளவி கூடப் புகலாகாது என்று இராவணன் கோட்டைபோல மொழித்தடை செய்வதாகக் கருத்துக் கொண்டால், உண்மை யல்லாத அவ்வீம்புக்கு தெய்வச்சிலையார் உரைப்படி வாய் வாளாதிருப்போம். தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார்,

'மொழிகள் ஒன்றோடொன்று கலக்கப் பெறுதற்கு அவற்றை வழங்கும் மக்களின் நாகரிகமே வழியாயிருத் தலால் நாகரிகம் வாய்ந்த எந்த மொழியும் பிறமொழிக் கலப்பில்லாமல் இருத்தல் இயலாது. இது மக்களியற்

Koviloor Digital Library

கையினையும் அவரது வாழ்க்கையின் இயல்புகளையும் அமைதியாக ஆராய்ந்து பார்ப்பவர்க்கல்லாமல் மற்ற வர்க்கு ஒரு சிறிதும் விளங்கமாட்டாது. தமிழ் மக்கள் பண்டு தொட்டே நாகரிகத்திற் சிறந்தவராய் இருந்த தனால் அவரொடு பல மொழி பேசும் பலநாட்டவரும் கலந்து பழகவே மற்ற மொழிகளின் சொற்களிற் சில தமிழிலும் காணப்படுவன ஆயின. இங்ஙனம் காணப் படுதல் தமிழ் மொழியின் நாகரிகச் சிறப்பினையும் அதன் வளப்பத்தையும் காட்டுகின்றதேயல்லாமல் அதற்கு அது தாழ்வாதலைக் குறிக்கின்றதில்லை'

என்று தெளிவுபடுத்தியிருப்பதை உணர வேண்டும். கறிக்கு உப்புப்போல, கலவிக்குப் புலவிபோல, கண்ணுக்கு மைபோல; இதழுக்குச் செவ்வை போல கருத்துக்கு வலுவூட்டும் சில அயன்மைகள் ஒருமொழியிற் கலப்பதைத் தனித்தமிழ்க் கோளிகள் மறிக்காது என்றும் வரவேற்பர். பாத்தி வாய்க்காலி லும், வாய்க்கால் ஆற்றிலும், ஆறு கடலிலும் கலப்பதுபோல இக்கலப்பை இயற்கை வரவாக ஏற்றுக் கொள்வர். தனித்தமிழ் என்னும்போது இச்சிறு பனிக்கலப்பை உட் கொண்டே சொல்லுகின்றேம் என்பதை மீண்டும் வற்புறுத்து கின்றேன். ஆதலின் தொல்காப்பியத்தில் சில 'வடசொல் இல்லையா! சங்கப்பனுவல்களில் சில வடசொற்கிளவிகள் இல்லையா? என்று காட்டித் தனித் தமிழியக்கத்தைச் சாடுவது பொருந்தாது. 'பொய்யோ எனும் இடையாள்' என்று கம்பர் பெருமான் பாடியாங்கு, இல்லையோ என்று சொல்லு மளவுக்குச் சில வடசொற்கள் உளவேயன்றி அவற்றின் ஆதிக்கம் பரப்பு யாதுமில்லை. தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் அயன்மொழி வரவை மறிக்கவில்லை என் பதும் அவ்விருந்தின் வருகைக்கு செவ்விய விதிகளை வகுத்துக் காத்தன என்பதும் நினையத்தகும்.

Koviloor Digital Library

தமிழ் தனித்தியங்க வல்ல மொழியாண்மை உடையது; அதனைத் தன்னியற்கைப்படி வளர்க்க வேண்டும் என்பதுவே அன்பர்களின் குறிக்கோள். இவ்வெளிய இயல்பான மொழிக் கோளைச் சாதி, சமய, அரசியல்களோடு பின்னிப் பிறழ வுணர்தலும் உணர்த்தலும் பண்பாகாது. 'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர் வாழிய பாரத மணித்திருநாடு' என்ற பாரதியின் மும்மணிகளை இயல்பாங்குக் கொள்ளாது ஏனைய மொழிகள் ஆழிய, ஏனையினத்தார் ஆழ்க, ஏனைய நாடுகள் வீழிய என்று எதிர் குதிர்ப் பொருள் கொள்வார் உளரேல், அவரைக் காணின் விலகியோடுவதல்லது வேறென் செய்வோம்.

தனித்தமிழ் வேண்டும் என்ற கோட்பாட்டை அவ்வளவில் ஆராய வேண்டுமேயன்றி ஓரினத்தொடும், வடமொழி யொடும், நாட்டன்பொடும், பொதுநோக்கொடும் வைத்துத் திரிபு செய்யலாகாது. தனித்தமிழை ஓர் இயக்கமாக உருவாக்கிய அடிகளாரின் மொழிக் கொள்கையை தேர்வுக்குப் படிக்கும் மாணவன் நிலையில் ஆராய்ந்தால் அப்பெருந் தமிழனின் உள்ளம் புலப்படா. எவ்வினத்துக்கும் எம்மொழிக் கும் இந்தியவொருமைக்கும் அடிகளார் குறுகிய நெஞ்சினர் அல்லர்.

> 'இவ்வாறெல்லாம் இவர்கள் (சிற்றரசர்கள், மடத் தலைவர்கள்) கையில் முடங்கிக் கிடந்து அவியும் பெரும் பொருட்குவியல்கள் எல்லாம் இவர்களை விட்டு நீங்கிப் பொது மக்கட்குப் பயன்படும் நிலைமையை அடையுமானால் இவ்விந்திய நாட்டில் வறுமையும், நோயும் அறியாமை யும் தலைகாட்டுமா? இப்பெரும் பொருள் கொண்டு நூறுயிரக் கணக்கான கல்விச்சாலைகளை நாடெங்கும் திறப்பிக்கலாம்... ஏழையெளிய பிள்ளைகட்கு உண்டியும், உடையும், நூல்களும் வாங்கிக் கொடுத்துச் சம்பளம் வாங்காமல் கல்வி கற்பிக்கலாம்.... இந்தியர்கள் தாமே

Koviloor Digital Library

தமது பொருள் கொண்டு புகைவண்டித் தொடர்கள், மின்வண்டிகள், வானவூர்திகள் முதலியன வெல்லாம் அமைத்துக்கொள்ளலாம்...... பொதுமக்கட்குப் பயன்படுந் துறையில் இறங்கி முயலாமல், நம் நாட்டுப் பொருள் மேல்நாட்டுக்குப் போய் விடுகின்றதே என்று சொல்லி ஆராய்ச்சியறிவு சிறிதுமில்லாத, சாதி வேற்றுமைச் சமய வேற்றுமைப் படுகுழியினின்றும் ஏற விருப்பமில்லாத நம் இந்திய மக்களை வீணே கிளப்பிவிட்டு இந்நாட்டுக்குப் பலவாற்ருற் பெருந்தீமைகளை உண்டுபண்ணுதல் நன்ருகுமா?'

இந்த ஒரு பகுதியிலிருந்து அடிகளாரின் இந்திய நோக்கும் பொதுமக்கள்பால் அன்பும் எளியவர்கட்குச் சம்பளம் வாங்காமற் கல்வியளிக்க வேண்டும் என்றஎதிர்காலப் பார்வையும் இன்னபிறவும் தெளிவாகின்றன. ஆதலின் தனித்தமிழை நாட்டன்புக்கு மாருகத் திரித்தல் என்னுனும் ஒவ்வாது.

மறைமலையடிகளார் தனித்தமிழில் வீரநெஞ்சினராயினும் வடமொழியில் ஈரநெஞ்சினர்; அதன் பெருமையை நன்கு கற்று அறிந்தவர்; சாகுந்தல நாடகத்தில் தனிப்பற்றுக் கொண்டவர்; அதனை மொழி பெயர்த்ததோடு தனி ஆய்வும் எழுதியவர். அதனாலன்ரோ தவத்திரு காஞ்சி காமகோடிப் பெருமகனூர் அடிகளின் மொழி பெயர்ப்புச் சாகுந்தலத்திற்குப் பரிசுத் திட்டங்கள் வகுத்தருளினூர். இவ்வொப்புதல் ஒன்றே அடிகளின் வடமொழியன்புக்குச் சாலுங்கரியாகும். சாகுந்தலத்தை மேனூட்டு முறையில் ஆயும் வேட்கை தமக்கு எங்ஙனம் எழுந்தது என்பதனை அடிகள் ஓர் ஆங்கில முகவுரையிற் பின்வருமாறு கூறிகின்ருர்.

"Years ago I happened to hear an English Lecture delivered by an able brahmin scholar on this drama of Kalidasa. After dwelling on some of the excellences of

Koviloor Digital Library

the play, when he came to speak of the character study of the poet, he, instead of going right through the speeches, manners and actions of each dramatic personage and trying to exhibit whether or not there were special features in each, summarily dismissed it by saying that Kalidasa was sadly wanting in his delineation of character and is therefore no peer of Shakespeare the Prince of the dramatists. That sweeping remark of the learned lecturer kindled in me a burning desire to make a comparative study of the dramatic art of the two poets".

இந்திய நாடகப் பெருங்கவியான காளிதாசனைக் குறை கூறியது பொருத அடிகளார் கொதித்தெழுந்து செகப்பிரியரின் திறனாய்வுகளையெல்லாம் கற்று, எங்காளிதாசனும் செகப்பிரியருக்கு இணையான நாடகப்புலவனே என்று நிலைநாட்டிய பெற்றியைக் கண்டு இறும்பூதெய்துகின்றோம் உரிய தமிழ்ச் சொற்கள் இருக்கவும் வடமொழிச் சொற்களை வேண்டுமென்றே திணித்தல், அதனால் இருமொழிப்புலமை பெற்றது போலக் காட்டல், பழகு தமிழ்ச் சொற்களை ஆளாது இறக்கச் செய்தல் என்றினைய காரணங்களால் ஆசிரியர் அவ்வெழுத்தாளர்களைத் தாக்குகின்றாரேயன்றி வடமொழியை அயன் மொழி என்றளவில் தாக்கவில்லை. வடமொழி வாழ்வுக்கு அப்பெருமகனார் பகைஞர் அல்லர். வாழும் நற்றமிழில் வடமொழியைக் கலக்காதீர்கள்; வடமொழியைத் தனியே முழுதும் உயிர்ப்பிக்க முயன்றாலும் அதனைச் சிறிது பயனுடையது என்று சொல்லலாம் என்பது அடிகள் கருத்து. அவர்தம் நெடு நோக்கின்படி, சில திங்களாக இந்திய வானொலியில் நாட்செய்திகள் வடமொழியிலும் சொல்லப்பெறுவதைக் கேட்கின்றோம்.

Koviloor Digital Library

தனித்தமிழ்த் தளபதியாம் அடிகளார் வேறுஅயன்மொழி களை எல்லாம் ஏற்றுக்கொண்டு வடமொழியொன்றை மட்டுமே மறுக்கின்ருர் என்று மயங்க வேண்டா. ஆங்கில முதலான பிறமொழிச் சொற்களையும் கடிவதில் அவர் பின்னடைய வில்லை. பன்னூருண்டு ஒன்றி வந்த வடமொழியளவில் கலப்பு நேர்ந்திருந்தால் தனித் தமிழியக்கம் என ஒன்று தோன்றி இவ்வளவு வேகமாக வளர்ந்திராது. அரசியலாலும், கல்வி யில் ஆதிக்கத்தாலும் ஆங்கில மொழிக் கலப்பு மண்டி வந்தமையின், தமிழுக்கு இருந்த கல்வியிடங்களும், சொல் வழக்குகளும் குறைந்து ஒழிந்தமையின், இவ்வியக்கம் உயிர்ப்பும், உரமும் பெற்றது. இக் கலப்புச் செய்தவர் ஓரினத்தார் அல்லர். தமிழகத்தில் எல்லா இனத்தாரும் கலப்பே பெருமை என்று சூதாடிகள் போல வாய்க்கும் எழுத்துக்கும் வந்தவற்றையெல்லாம் தமிழ் என்ற மொழியின் பேரால் சுமத்தலாயினர். தமிழின் உருவத்திற்கேற்பக் கூடத் திரித்துப் பிற சொற்களை வழங்காமல், வேற்ருெலியும், வேற்றெழுத்தும்படக் கிடந்தாங்கு வழங்கலாயினர். 'வட சொற்களையும், ஆங்கிலச் சொற்களையும் தமிழுக்குப் பொருந்தத் திரிபுபடுத்தாமல் இனிய மெல்லிய தமிழ்ச் சொற்களின் இடையே அவற்றை அங்ஙனமே எழுதிஞல் அவை தமிழின் இனிமையிலும், அருமையிலும் பழகிஞர்க்கு எவ்வளவு அருவருப்பாய்த் தோன்றுகின்றன என்று அடிகளார் பெருங்கவல் வுறுவதைப் பார்க்கின்ருேம்.

மறைமலையடிகளின் தனித்தமிழியக்கம் தமிழ்த் தாயின் நெஞ்சு புரையோடாதும் தமிழர் அறை போகாதும் காத்தது. தமிழின் உதரத்திலிருந்து முன்பு பல திராவிட மொழிகள் இணைந்து அதன் பரப்பைச் சுருக்கியது போல, மீண்டும் தமிழகத்துக்கு ஒரு புதிய திராவிட மொழி பிறந்து தமிழை இன் னும் குன்றிக் குலையாதவாறு தடுத்தது. இன்று பாட நூல்கள் பெரும்பாலும் தமிழ் வடிவாக வருகின்றன. ஒரு சார் இளைஞர்

Koviloor Digital Library

கூட்டம், எழுத்தாளர் கூட்டம் குடிநீரைத் தூயநீராகக் காத்தல் போலத் தமிழைத் தூய தமிழாகக் காத்து வருகின்றன. கலப்பு மிகுதியிருந்தாலும் பல செய்தித் தாள்கள் தமிழ்த் தூய்மையையும் முடிந்தளவு பேணி வருகின்றன. சொற்பொழிவுகள் நல்ல தமிழில் கேட்கப்படுகின்றன. வாழ்த்துக்கள், வரவேற்புக்கள், அழைப்பிதழ்கள் எல்லாம் நல்ல தமிழ்ப் பைங்கூழ் வளரும் பைந்நிலங்களாக மிளிர்கின்றன. இந்நன் மாற்றங்களையெல்லாம் மறைமலையடிகளைப் பெற்றமையால் தமிழ்த்தாய் பெற்ருள். அத்தவமகன் அடிச் சுவட்டை அன்புச் சுவடாகப் போற்றிப் பாலின் தூய்மை போலத் தமிழின் தூய்மையைக் கடைப்பிடித்து வாழும் இளைய மறைமலைகள் இன்று பல்கிவருப. ஆதலின் தமிழ், தனித்தடத்திற் செல்லும் புகைவண்டி போலப் பழைய புதிய தன் சொற்களைக் கொண்டே விரைந்து இயங்கி முன்னேறும் என்று உறுதி கொள்வோம்.

தனித் தமிழியக்கம் தோன்றிய இந்த அரை நூற்றுண்டுக்குப் பின்னும் கூடுதலான மொழிக் கலப்பே தமிழ் வளர்ச்சியென எண்ணி எழுதிக் கொண்டு வரும் எழுத்தாளர்கள் ஒருபாற் பெருகி வருவதையும் நாம் காணுமல் இல்லை. இவ்வெழுத்தாளர்கள் வடசொற் கலப்பினும் மிகுதியாக ஆங்கிலத்தை தொடர் தொடராக, ஏன் பக்கம் பக்கமாக மாயமான்போலத் தமிழ் எழுத்திற்குள் கலக்கின்றனர். முன்பெல்லாம் தமிழ்க் கட்டிடத்தில் அயற் செங்கற்கள் இடைமடுத்தன. இப்போது அக்கட்டிடத்தின் தளங்களும், சுவர்களும் முகடுகளும் அயல்மொழியுருவமாகவே உள்ளன. அக் கட்டிடத்தில் தமிழ் எதுவென்று அறியுமாறில்லை, எதில் எது கலப்பு என்று சொல்வதற்கில்லை. பாலில் நீரா ? நீரில் பாலா ?

தமிழின் பேரால் எழுதும் இவ்வெழுத்துப் பெருமக்கட்கு மறைமலையடிகளின் வாழ்க்கை காட்டும் ஒரு துணிவுண்டு. அடிகளார் வேதாசலம் என்னும் பேரால் பல ஆண்டுகள் வட

Koviloor Digital Library

மொழி கலந்து கலந்து நூல் எழுதியவர், அறிவுரைக் கொத்து, சிந்தனைக் கட்டுரைகள், குமுதவல்லி, நாகநாட்டரசி, மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை என்ற அவர்தம் நூல்களின் முதற் பதிப்பெல்லாம் கலப்புத் தமிழில் ஆகியவை. தம் நாற்பதாம் அகவையில் தமிழ்மொழிக்குத் தாம் செய்யும் கேட்டினை உணர்ந்தார்; சங்க காலமுதல் தமிழியங்கி வந்த தனித்தன்மையை உணர்ந்தார். நாமமது தமிழரெனப் பெற்றிருந்தும், தம்மானை அறியாத சாதியுளரோ என்றபடி, தமிழின் தூய்மையை அறியாது தமிழ்ப் போலி நூல்களை இயற்றினேனே என்று அவலக் கவலை கையாறு அழுங்கினர். அடிகள், வேற்றுமதத்திலிருந்து தம் மதத்திற்கு மீளுவது போல, மொழித் தூய்மையின்மையிலிருந்து மொழித் தூய்மைக்கு மாறினர். மாறி என்ன செய்தார்? எழுத்தாளும் பெருமக்களே எண்ணுங்கள்! கழுவாய் செய்வார்போல, இரண்டாம் பதிப்புக்களில் தம் நூல்களைத் தூய்மைப் படுத்தினர்; தமிழ் நூல்கள் என்னும் பெயருக்குத் தகத் தமிழ்மையாக்கினர். இதுவன்றோ வீரம்; இதுவன்றோ புகழ்; இதுவன்றோ மொழிநெறி. சிந்தனைக் கட்டுரைகளின் மூன்றும் பதிப்பின் முகவுரைக்கண் அடிகள் தாம் தமிழ்த்தூய்மைக்குத் திரும்பிய நற்றமிழ் மாற்றம் பற்றி ஏதுக் காட்டுகின்றார். வேண்டுகோள் விடுக்கின்றார்.

" இந்நூல் இயற்றப்பட்டு முப்பதாண்டுகள் ஆயின. முப்பஃதாண்டுகட்குமுன் இந்நாட்டில் தமிழ்ப் பயிற்சியிருந்த நிலைமையோடு இப்போதிருக்கும் அதன் நிலைமையினை ஒப்பிட்டு நோக்குங்கால், இனித் தமிழ்மொழிப் பயிற்சி எங்கும் பரவும் என்றெண்ணி மகிழ வேண்டுவதாகின்றது. இந் நூலின் முதற் பதிப்பிலும், அக்காலத்தில் இயற்றப்பட்ட எம்முடைய நூல்கள் பிறவற்றிலும் வடசொற்கள் கலந் திருந்தன. தமிழறிஞர் பலர் அக்காலத்தியற்றிய நூல்களிலும், கட்டுரைகளிலும் வடசொற்கள் ஏராளமாய்க் கலந்திருந்தன.

Koviloor Digital Library

அங்ஙனம் வடசொற்களும், பிற சொற்களும் தமிழிற் கலத்தலால். நாடோறும் வழக்கில் உள்ள நிலம், நீர், நெருப்பு, சோறு, ஒளி, கோயில், குளம் முதலான எத்தனையோ பல தமிழ்ச் சொற்களும் வழங்காமற் போதலையுணர்ந்து, பிற மொழிக் கலப்பைத் தமிழினின்றும் அறவே ஒழித்தற்கு முயலத் துவங்கினேன்.

அதனால் இற்றைக்குப் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன் வெளிவந்த இந்நூலின் இரண்டாம் பதிப்பு முற்றுந் தனிச் செந்தமிழ் நடையினதாகச் செய்யப்பட்டது. அங்ஙனமே எம்முடைய மற்றைய நூல்களும் தனிச் செந்தமிழ் நடையினவாகச் செய்யப்பட்டன ; செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு செய்யவே இப்போது தனிச் செந்தமிழ்நடையே பெரும்பாலும் எங்கும் வழங்கி வருகின்றது. தமிழ் வல்லவர்கள் எல்லாரும் இனித் தனிச் செந்தமிழில் திருத்தமாக எழுதினலன்றி அவர்களுடைய நூல்கள் மணம் பெரு என்பதனை உள்ளத்திற் பதித்து அவர்கள் தமிழன்னையை ஓம்பி நலம் பெறுவார்களாக.

அடிகளாரின் திருந்திய மொழிவீறும், மறுபதிப்பிற் செய்த மொழியாண்மையும், புதினம் சிறுகதை நாடகம் என்றினைய கால இலக்கியங்களைப் படைக்கும் தமிழ் எழுத்துப் பெருமக்களின் உள்ளத்திற் பிறக்குமாக. இப்பெருமக்கள் தம் நூல்களின் மறுபதிப்பை மறுவற்ற தமிழ்ப் பதிப்பாக ஆக்குவார்களாக. 'போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்ற ஆண்டாள் திருமொழிக் கிணங்க பழம் பதிப்பைப் பிழையின்றியும் புதிய நூல்களைப் பிழை புகுதாமலும் தனித்தமிழ் வளம் பெறச் செய்து தமிழ்த்தாயின், தமிழினத்தின் நல்லருளை இப்புது வெழுத்தாளர்கள் பெறுவார்களாக. பொருள் எத்துணைச் சிறப்புடையதாயினும் கொள்ளும் பாத்திரம் தூயதாக இருத்தல் வேண்டும். 'நன்பால் கலந் தீமையால் திரிந்தற்று' என்று விழிப்புறுத்துவர் வள்ளுவர்.

Koviloor Digital Library

ஆதலின் புதிய படைப்புக்கள் வழிவழி நிலைபெற்றுச் செல்ல வேண்டுமேல் மொழித் தூய பதிப்புக்களாக மாற்றுங்கள், அமையுங்கள், நிலைபெறுமாறு எழுதுங்கள் என்று ஆக்க எழுத்தாளர்களை வேண்டுகின்றேன். மறைமலையடிகளாரின் நூற்றாண்டு விழாவில் தமிழ் எழுத்தாளர் எனப்படுவார் கடைப்பிடிக்க வேண்டிய குறிக்கோள் இது.

Koviloor Digital Library

13. என் ஆசிரியர்

'என் ஆசிரியர்' என்ற தொடரை நினைக்கும்போது இவ்வுடம்பொடு கூடிய தெய்வத் தோற்றங்கள் கண்முன் நிற்கின்றன. அச்சங்கலந்த பணிவும், அறிவுகலந்த நன்றியுணர்வும் தோன்றுகின்றன. மாசினை நீக்கி ஒளி தருபவன் ஆசிரியன். அதனாலன்றோ ஆசிரியனைக் குரு என்று வணங்குகின்றோம். குரு என்ற தமிழ்ச்சொல்லுக்கு நன்னிறம் அல்லது ஒளி என்பது பொருளெனத் தொல்காப்பியத்தால் அறியலாம். ஒளியில்லாத் தன்மையைக் குருடு என்று சொல்லும் எதிர்மறைக்கிளவியினால் இச்சொல்லின் பொருள் தெளிவாகும்.

ஒரு மாணவர் பலபாடங்களையும் ஒரே ஆசிரியர் வாயிலாகக் கற்பது பழைய குருகுல வழக்கம். ஆங்கிலக் கல்வி முறையும் அதன் வழிப் பள்ளிகளும் வந்ததற்பின், ஒரு மாணவர்க்கே ஆசிரியர்கள் பலராயினர். ஆதலின் என் ஆசிரியர் என ஒருவரை மட்டும் இக்காலத்துக் குறிப்பது பொருந்தாது. எழுத்தறிவித்த ஆசிரியர் முதலாக இலக்கியம் அறிவித்த ஆசான்கள் பலரையும் நினைவுகூர்கின்றேன்.

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் தொடக்கப்பள்ளியில் எனக்கு வகுப்பாசிரியராகவும், தனியாசிரியராகவும் இருந்தவர் திரு. நடேசஅய்யர். 75 வயதுடைய அவர் இன்னும் நன்னலத்தோடு அச்சபைக்குத் தொண்டு செய்து வருகின்றார்.

Koviloor Digital Library

பாடங்களை வகுப்பில் சொல்லெழுத்திடுவார். வீட்டுப் பாடமும் கொடுப்பார். ஒவ்வொரு நாளும் முதல் பணியில் திருத்தித் தருவார். பாடங்களை வாய்விட்டுப் படிக்கச் செய்வார் தமிழும் ஆங்கிலமும் பிழையின்றி ஒலிக்கவும், எழுதவும் அடிப்படையிட்டவர் இவர். மாணவர்கட்கு இவரிடத்து மிக்க அச்சம் எனினும் இந்த உணர்வு, ஒழுங்கையும் நல்லறிவையும் தந்தது. இவர் பெருந்தமிழ்ப் புலவர்களோடு பழகி நல்ல தமிழறிவும் வாய்ந்தவர். ஊர்மக்களொடு கலந்து உற வாடுபவர்.

கல்லூரி இடைநிலை வகுப்புக்கும் பி. ஓ. எல். வகுப்புக்கும் உரிய ஆங்கிலப் பாடங்களை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராக இருந்த ஆசிரியர் கோபாலன் நாயரிடம் படித்தேன். சிறு தொடர்களால் ஆங்கிலத்தை விளக்கும் ஆற்றலுடையவர் இவர். இன்முகத்தோடும் அன்போடும் கற்பிக்கவல்லவர். பின்னர் கேரள மாநிலத்தில் பொதுக்கல்வி இயக்குநராக உயர் பதவி பெற்றுத் திகழ்ந்தவர். நான் ஓரளவு இந்தி மொழியறிவு பெறத் துணை செய்தவர் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் இந்தித் துறைத் தலைவராக இருந்த ஆசிரியர் மு. கோ. வேங்கடகிருட்டிணன். இந்தியில் சில புதின நூல்களையும் எனக்குச் சொல்லித் தந்தார். இவர் தமிழ். வடமொழி, ஆங்கில அறிவும் உடையவர் சிலப்பதிகாரத் தைச் சுருக்கமாக இந்தியில் எழுதியவர். திருச்சிராப்பள்ளி அன்பர் வன்மீகநாதரின் தூண்டுதலால் திருக்குறள் முழுவதை யும் தோகாயாப்பில் இந்தியில் மொழிபெயர்த்தவர். இப் பணிக்காக நடுவணரசு இவர்க்குப் பரிசு வழங்கிற்று. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிவரும் ஆசிரியர் பி. சி இராமானுசாச்சாரியார் ஓரளவு எனக்கு வடமொழிக் கல்வி தந்தவர். இவர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்களின் கௌடில்ய மொழி பெயர்ப்புக்குத் துணையாக இருந்தவர். பிரெஞ்சு மொழி கற்க

Koviloor Digital Library

வேண்டும் என்ற என் விழைவைத் தூண்டியவர் இப் பல்கலைக்கழகப் பிரெஞ்சு மொழிவிரிவுரையாளர் சிவப்பிரகாசம். ஆங்கிலமொழி தமிழ்மொழி யமைப்புக்களோடு ஒத்திட்டுப் பிரெஞ்சினைக் கற்பிக்க வல்ல திறமுடையவர். ஓரளவேனும் பிற மொழிச்செல்வங்களை நான் ஈட்டிக் கொள்ளத் துணைபுரிந்த நல்லாசிரியர்களை என் ஆசிரியப் பட்டியலில் சேர்க்காது மறப்பது தகுமா?

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1936—40 வரை தமிழ் வித்துவான் வகுப்பிற் பயின்றகாலை எனக்கு ஆசிரியர் களாக இருந்த பெருமக்கள் பலர். அன்னாரிற் சிலர் இந்த நூற்றாண்டில் தமிழ் ஞாலத்தில் முடிசூடா மன்னர்களாகக் கீர்த்தி பெற்றவர்கள். நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் சங்கத் தமிழ் நடை கைவந்த சான்றோர். முற் போக்குக் கருத்தினர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பிரவேச, பால, பண்டிதம் என்ற மூன்று தேர்வும் ஒரேயாண்டில் எழுதி முதற்பரிசு பெற்றவர். அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற பண்டையிலக்கியங்கட்கு உரை வரைந்த பெற்றியர். நிமிர்ந்த நோக்கும், நேர்மைப் பெருமிதமும் சான்றவர். தண்டியலங்காரம் என்ற அணிநூலைப் பாடம் நடத்திய அவர் ஒருமுறை தேர்வில் அந்நூலில் இல்லாத செய்யுட்களைத் தந்து அணிகள் என்ன என்று புதுமுறையாக வினவியிருந்தார். ஒவ்வொரு அணியின் இலக்கணமும் செவ்வனே தெரிந்திருந்தால்தான் இவ்வகை வினாவுக்கு விடையிறுக்க முடியும். இத்தாளில் முதன்மையாக 80 மதிப்பெண் பெற்ற என்னை மிகவும் பாராட்டினார் நாட்டார். என்வகுப்பு மாணவரெல்லாம் வாரந்தோறும் ஒன்றுகூடி எங்களுக்குள் நாங்களே தேர்வு நடத்தி விடைகளை ஆராய்வோம். இப்பொது முயற்சியையும் பாராட்டினார் நாட்டார். மாணவர்களை ஊக்கப்படுத்தும் ஆர்வம் இப் பெருந்தகையிடம் இருந்தது.

Koviloor Digital Library

மகாவித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள் பல்துறை யறிவுடைய பெருந்தமிழ்ப்புலவர். வெண்பாவால் பாரிகாதை பாடிய கவிஞர், குறுந்தொகைக்குச் சிறந்த உரை வரைந்தவர், தமிழ்வரலாறு என்ற அரிய நூல் எழுதியவர். உரைகளில் நிகரற்ற பயிற்சியினர். கையில் நூல் இல்லாமலே உரைகளில் நுட்பமான இடங்களைச் சொல்ல வல்லவர். எங்கள் வகுப்புக்குப் பாலைக்கலியை நச்சினார்க்கினியர் உரையொடு நடத்தினார். உரையில் வரும் சில ஆரியக் கருத்துக்களைப் பற்றி ஒரு சில மாணவர்கள் குறும்பாகக் கேட்டனர். குறும்பாகக் கேட்கின்றார்கள் என்று எண்ணாமலே அறியாமை யால் விளங்கிக் கொள்ளக் கேட்கின்றனர் என இயல்பாக எடுத்துக் கொண்டு விடை சொல்லும் பெருந்தகையாளர் இவ்வாசிரியர். வகுப்பு முடிந்தபின்னும் அவர்கள் இருப்பிடம் வரை உடன் சென்று விட்டு வருவோம். நடக்கும்போதே பல கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு செல்வார்கள். தமிழ்ப் புலமைக்கு உரைகளிற் பயிற்சி மிக இன்றியமை யாதது என்ற எண்ணத்தை ஊட்டியவர் மகாவித்துவான்.

சர்க்கரை இராமசாமிப் புலவர் சேது சமத்தான வித்துவானாக இருந்தவர். 'தருகை நீண்ட தயரதன்' என்றபடி தானளவு நீண்ட கையும், மலையனைய மார்பகலமும், வானுயர் தோற்றம் வாய்ந்த உருவினர். இடைக்கால நூல் களிலும் சிலேடைகளிலும் நல்ல பயிற்சியினர். இயற்கையைப் புனைந்துரைக்கும் சங்கமரபில் அவ்வளவு ஈடுபாடில்லாதவர். யாப்பருங்கலக்காரிகைப் பாடம் நடத்தினார். களிக்கும் முறையில் செய்யுட்களை விளக்குவார். அன்று துணைவேந்தராக இருந்த சர். அரங்கநாதனொடு தோழமை பூண்டவர் எனவும், மாலையுலாவிற்குத் துணைவேந்தர் இப்புலவரை உடனழைத்துச் செல்வாரெனவும் இவர் பெருமை பற்றிக் கூறுவதுண்டு.

ஆசிரியர் ரா. கந்தசாமி யாரும் மதிக்கத்தக்க துறவியார். அருட்டிரு விபுலானந்த அடிகள் இவர் மறைவு பற்றி அவல

Koviloor Digital Library

மிக்க கையறு நிலைப் பாடல் பாடினர் என்பதே இவர் பெருந் துறவுக்கு ஒரு சான்று. இவ்வாசிரியர் தணிகைப்புராணத்துக்கு உரையும். சேனவரையத்துக்குக் குறிப்புரையும் எழுதியவர். பாடங்களை நன்கு விளக்கும் வன்மை இவர்பால் குறைவெனினும், பரந்து ஆழ்ந்த புலமை இவர் சொல்லும் மேற்கோள்களால் புலனாகும். தொல்காப்பியத்தில் நச்சினார்க்கினியர் உரையை இவர்பால் கேட்டோம். மரத்து நிற்றலால் மரமெனப் படுமே என்பது தொல்காப்பிய நூற்பா என ஒரு மாணவர் இட்டுக் கட்டிச் சொல்லியபோது, இந்தப் புனைகயிற்றைத் தொல் காப்பியம் முழுதும் படிக்காத ஆசிரியனிடம் விட்டுப்பார் என்று வகுப்பு முழுதும் கலகலக்கும்படி வேகமாகச் சொன்னார். இவர் தன்விளம்பரம் விரும்பாதவர், பொதுவாக ஆசிரியர் குழுவில் ஒதுங்கியே வாழ்ந்தவர். மாணவர் கொண்டாடும் பிரிவு விழா நிழற்படங்களுக்கு வரமாட்டார். புதிய மாணவர்கட்கு முதல் நாள் பாடம் எடுக்கும்போது ஒரு செய்யுள் ஒப்பிக்கவும், பிரிக்கவும், பொருள் சொல்லவும் செய்து இலக்கணக் குறிப்பெல்லாம் கேட்பார். ஒரு மாணவர் எல்லாம் நன்றாகச் சொன்னாலும் பாராட்டமாட்டார். அகத்தியன் போலவும், தொல்காப்பியன் போலவும் தன்னை நினைத்துக் கொள்கின்றான் என்று சொல்வார். துறவியாதலின் மாணவர்க்கு ஆணவம் உண்டாகக் கூடாது என்பது இவர் தம் நோக்கம். சிறந்த மாணவர்களும், துறையாசிரியர் களும் இவரிடம் தனி மதிப்பு வைத்திருந்தனர். என்னிடம் இப்பெருந் துறவி காட்டிய பேரன்பு மறக்கவொண்ணாதது.

ஆசிரியர் ஆ. பூவராகன்பிள்ளை இலக்கண இலக்கிய அறிவோடு உலகியலறிவும் உடையவர். செய்தித்தாள்களை ஆர்வத்தோடு படிப்பவர். திரைப்படங்கள் பார்க்கும் விருப்பமும் உண்டு. புலவர் உள்ளம், திருவாய்மொழி விளக்கம் என்ற நூல்களின் ஆசிரியர். சேனவரையத்துக்கு விளக்கவுரை செய்தவர், வைணவராயினும் சமயக் காழ்ப்பு இல்லாதவர்.

Koviloor Digital Library

எடுத்துக் கொண்ட கருத்தினைச் சொற்சுருக்கமாகவும், அளவாக வும், பாடஞ்சொல்லும் தனியாற்றல் இவரிடம் இருந்தது. மாணவர்கள் எதிர்த்து வினாக்கள் கேட்பதை வரவேற்கும் குணமும் இவருக்கு உண்டு; கணீரென்ற குரலும், சிரித்த தோற்றமும் வாய்ந்தவர்.

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் என் ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர். அன்றிருந்த ஆசிரியர்களிடை மிகவும் இளைஞர். வேண்டும் குறிப்புக்கள் வைத்துக் கொண்டு பாடஞ் சொல்லும் சிறந்த பழக்கத்தை இவர் ஒருவர்பாலே கண்டோம். எதையும் குறித்து வைத்துக் கொள்ளும் காரணத்தால் மறத்தல் என்ற குறைபாடு இவர்கள்பால் காண்பதற்கில்லை. இலக்கியத்தை நயமாகப் பாடஞ் சொல்லும் ஆற்றலும், இலக்கணங்களை எடுத்துக்காட்டோடு பொருத்திக் காட்டும் முறையும், ஒப்புமை தோன்றச் சொல்லும் சிறப்பும் உடையவர். ஆட்சித் திறமை பெரிதும் உடையவர். இசைப்புலவர்களோடு நெருங்கிய தொடர்புடைய ஓர் இயற்றமிழ்ப்புலவர் இவர் ஒருவரே. கட்டுரைக்கோவை, தொல்காப்பியச் செல்வம், பத்துப்பாட்டு வளம், அண்ணாமலையரசர் முதலிய பல நூல்களை எழுதிய பெருமையுடையவர். இவ்வாசிரியரிடம் அன்று முதல் எனக்கு நெருங்கிய உறவுண்டு.

என் மதிப்புக்குகந்த ஆசிரியர் குழுவில் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் ஒருவர். நல்ல ஆங்கிலப் புலமையும் உடையவர். டாக்டர் சோமசுந்தர பாரதியாரின் தலைசிறந்த மாணவர். மேலவை உறுப்பினராகப் பணி யாற்றிய தனிப்பெருமை இவருக்கு உண்டு. யாப்பு வளர்ச்சி பற்றி ஆய்வுக் கட்டுரையெழுதி டாக்டர் பட்டம் முதலிற் பெற்றுத் தமிழாசிரிய உலகிற்கே வழிகாட்டிய தோன்றல். இலக்கிய வரலாறு, மொழிவரலாற்றுப் பாடங்களை ஆய்வு

Koviloor Digital Library

நோக்கொடு கற்பிப்பர். எதனையும் செம்மையாகக் காலத்தில் முடிக்கும் ஆட்சி மதுகையினர். முன்பனிக் காலம், தமிழோசை, இளங்கோவின் இன்கவி, பெரியார் மன்றோ என்றினைய நூல்களின் ஆசிரியர். வினைச்சொல் பற்றி எம். ஓ. எல் பட்டத்துக்கு யான் எழுதிய ஆய்வுநூலை மேற்பார்வை செய்துதவியவர். குழந்தைப் பேறில்லா இவர் என் முதல் மகன் தொல்காப்பியனைத் தூக்கி வைத்துக்கொண்டு மகிழ்வார். டாக்டர் சிதம்பரனார் சொல்லுக்குத் தமிழுலகிலும், அரசியல் உலகிலும் நன்மதிப்பு உண்டு. இவர் மறைவதற்கு ஒரு வாரத்துக்கு முன் மதுரைத் திருநகரில் இவர்தம் இல்லத்தில் கண்டேன். மெலிந்த நிலையிலும் அன்போடு வரவேற்று விருந்தோம்பிய காட்சி இன்றும் பசுமையானது.

ஆசிரியர் மு. அருணசலம்பிள்ளை தமிழ்ப்புலவர் மரபில் வந்தவர். மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையில் ஆசிரியராக முதலில் இருந்தவர். பல்வேறு இலக்கிய இலக்கணங்களில் முறையான பயிற்சியினர். விரைந்து கவிபாடும் ஆற்றல் இவருக்கு இருந்தது. வள்ளல் அண்ணாமலையரசர் மேல் பல பாடல்கள் இயற்றியுள்ளார். எளிய இனிய பண்பாளர்; தீமைக்கு அஞ்சும் பண்பினர். உரைகளை வரி வரியாகப் படித்தும், மேற்கோட் பாடல்களின் பொருளை விளக்கிப் பொருத்தியும் எல்லா மாணவர்களும் புரிந்து கொள்ளும்படி வாஞ்சையோடு பாடஞ்சொல்லுவார். புரிகின்றதா என்று இடையிடையே கேட்டுக் கொள்வர். இவர் வகுப்பு கலகலப்பாக இருக்கும். உரைகளில் வரும் பிழைகளையும் பாடமாறுகளையும் குறித்துக் கொள்வர். ஓர் உரை சொல்லும் போது ஏனையுரைகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பார். தொல் காப்பியச் செய்யுளியலை அவரிடம் பாடங்கேட்டோம். பல குறிப்புக்கள் தொகுத்து வைத்திருந்தார். மதுரைப் பல்கலைக் கழகம் அருணசலம்பிள்ளை அவர்களின் தொல்காப்பிய அகத் திணையியல் விளக்கம் என்னும் உரையை வெளியிட்டிருப்பது

Koviloor Digital Library

அவர்தம் புலமைக்கு ஓர் அடையாளமாகும். பிள்ளை அவர்கள் தமிழுலகிற் சிறந்த ஓர் ஆசிரியப் பெருந்தகை என்று பலராலும் நன்மதிப்புப் பெற்றவர். பண்டிதமணி அவர்கட்கு உற்ற துணைவராகத் தொண்டு செய்தமை குறிப்பிடத்தகும்.

இசையொடு பாடம் நடத்தும் ஆசிரியர் தெ. பொ. பழநியப்பப்பிள்ளை, சிற்றிலக்கியப் பயிற்சி வாய்ந்த ஆசிரியர் பண்டித அமிர்தலிங்கம்பிள்ளை, வடமொழிப் புலமையும் சான்ற ஆசிரியர் வி. மு. சோமசுந்தரம்பிள்ளை, கவிபாடும் ஆற்றல் வாய்ந்த ஆசிரியர் வரதராச அய்யர் என்றினைய பெருமக்கள் என் நன்றிக்கு உரியவர்கள்.

மெய்ப்பொருள் துறைப் பேராசிரியர் இராமானுசாச்சாரி மறதி என்ற குற்றமே இல்லாதவர். விடுதிக் காப்பாளராக இருந்தபோது ஒவ்வொரு மாணவரையும் நன்கு நினைவில் வைத்துக் கொள்ளும் நிகரற்ற திறம் கொண்டவர். சுறு சுறுப்பு வடிவானவர். இவர் வித்துவான் முன்னிலை வகுப்பில் நான் படிக்கும்போது அப்பளச்சாரியார் மொழி பெயர்த்த தருக்க நூலைப் பாடம் நடத்தினர். ஏனைவகுப்புகட்கு மட்டம் போடும் மாணவர்கள் கூட இவர் வகுப்பென்றால் ஓடிவருவர். அவ்வளவு ஆர்வத்தோடு, நடைமுறை எடுத்துக் காட்டுக்களோடு சுவைபடத் தருக்கம் நடத்தினர் இப்பேராசிரியர். முன்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் படிப்பவர்கட்கு உயர்நிலைப் பள்ளிக்குரிய ஓர் ஆங்கிலச் செய்யுட் பாடம் இருந்தது. இது தேர்வுக்குரியதில்லை எனினும், ஆங்கிலத்துறையில் விரிவுரையாளராக இருந்த ஆசிரியர் மயிலேறு வந்து நடத்தினர். இவர் நாடக நூல்கள் எழுதிய ஆசிரியர். தாம் நடிக்கவும் செய்வர். தமிழ் வழியாக ஆங்கிலப் பாடத்தை நடத்தியதனால் இவர் வகுப்பு மாணவர் பலரை ஈர்த்தது.

Koviloor Digital Library

இதுகாறும் சிறுபள்ளியிலிருந்து பல்கலைக் கழகம் வரை எனக்குக் கற்பித்த ஆசிரியர் பலரின் தகுதிகளையும் உறவையும் ஒருவாறு குறிப்பிட்டேன். நான் இத்தலைப்பில் முதன்மையாகக் குறிப்பிட வேண்டிய ஓர் ஆசிரியரை, பல்வேறு சிறப்பும் தொடர்பும் நோக்கி இறுதியாகக் குறிப்பிட வைத்துள்ளேன். அப்பெருந்தகைதான் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள். ஆசிரியராகவும் அறிவுத் தந்தையாகவும், வாழ்வின் ஞாயிறாகவும் என் வாழ்வுப் பயிர் விளையும் தமிழ்நன்செய்யாகவும் என் நெஞ்சத் தாமரையில் குடிகொண்டிருக்கும் தெய்வமாகவும் இப்பெருமகனைப் போற்றுகின்றேன். என்படிப்புக்கும் என்பதவிக்கும் உற்றுழி யெல்லாம் உதவி செய்தவர். இத்தொடர்பு நீண்ட தனிக் கட்டுரைக்கு உரியது எனினும் சிறந்த சிலவற்றை இங்குச் சுட்டுவேன். நான் 18 ஆவது வயதில் பருமாவிலிருந்து வந்த பின் தமிழ் படிக்க எண்ணினேன். பண்டிதமணிக்கும் என் ஊரான மேலைச்சிவபுரியில் உள்ள சன்மார்க்க சபைக்கும் பெருந்தொடர்பு இருந்தது. என் விருப்பத்தைப் பண்டிதமணி யவர்கட்குத் தெரிவித்தேன். அவர்களின் உதவியால் காரைக் குடி சொக்கலிங்க ஐயா நிறுவிய மெய்கண்ட வித்தியாசாலை யில் படிப்பும் உண்டியும் உறையுளும் கிடைத்தன. வித்துவான் இறுதி நிலையில் சொல்லதிகாரச் சேனாவரையர் உரையைப் பண்டிதமணி பாடம் நடத்தினர். அவ்வுரையை நான் படிப்பேன், எல்லா வரிக்கும் விளக்கம் சொல்லுவது அவர்தம் வழக்கமன்று. சிக்கலான இடங்களையே விளக்கிச் சொல்வார்கள். கூர்மையுடைய மாணவர்களே அவர்தம் சொல் முறையைப் பின்பற்றிப் புரிந்து கொள்ளமுடியும். அப் பாடத்தில் 96 விழுக்காடு நான் பெற்றேன். இவ்வுரையில் இவ்வளவு மதிப்பெண் வாங்கியிருக்கிறாய் என்று என்னிடம் அள்ளூறமொழிந்தனர். நான்கு மதிப்பெண் ஏன் குறைந்தது என்று பணிவொடு கேட்டேன். விடைத்தாளில் ஓரிரு இடங் களைச் சுட்டிகாட்டி இவ்விடங்களில் எழுதிய விளக்கம் போதா

Koviloor Digital Library

என்று கூறினார்கள். இங்ஙனம் மாணவர்தம் விடைத்தாளைப் படித்துக் குறைவான இடத்தைக் கோடிட்டுத் திருத்தும் ஆசிரியவுலகை இனிக் காண முடியுமா? என்று ஏங்குகின்றேன்.

சேனாவரையர் பாடம் நடத்தும்போது ஒரு சுவையான நிகழ்ச்சி. சேனாவரையர் மாணவன் வினவுவது போலத் தாமே சில வினாக்களை எழுப்பிக் கொள்வர். நன்று சொன்னாய் என்று பாராட்டி விட்டு விடைகூறப்புகுவர். தொல்காப்பியம் 92, 115, 120, 182 என்ற நூற்பாக்களில் இவ்வகைப்பட்ட உரை முறையைக் காணலாம். பண்டிதமணி அவர்கள் சில சமயங்களில் அவ்வினாவை மாத்திரம் படித்து நிறுத்தி விடுவர். வரிவிடாது படித்தல் நன்மாணாக்கன் இலக்கணமாதலின் 'நன்று சொன்னாய்' என்று அடுத்த தொடரை நான் படிப்பேன். பார்வைக்குப் பண்டிதமணி அவர்கள் மாணவன் போல வினவுவதாகவும், 'நன்று சொன்னாய்' என்று நான் சேனாவரையர் போலப் பாராட்டுவதாகவும் தோன்றும். இதனை உணர்ந்த மாணவர்கள் சிரித்தபோது பண்டிதமணி என்ன என்று கேட்டார்கள். அச்சத்தால் ஒருவரும் வாய் திறக்கவில்லை. உண்மையைச் சொல்லியிருந்தால் நயம் உணரும் பண்டிதமணி அவர்களும் சேர்ந்து சிரித்திருப்பார் கள்.

ஆசிரியப் பயிற்சி படிக்குங்கால் இப்பெருந்தகை கைம் மாற்றாகப் பொருளுதவி செய்தனர். ஆராய்ச்சி மாணவனாக வரவும் துணைபுரிந்தனர். பல்கலைக் கழகம் நிறுவிய பெரு வள்ளல் அண்ணாமலை அரசரிடம் என்னை அழைத்துச் சென்று தமிழ்த்துறையில் ஆசிரியப் பணியும் பெற்றுத் தந்தனர். இந்நன்மைக்கு ஈடு ஏது? பண்டிதமணி நினைவாக என் இல்லத்திற்குக் கதிரகம் என்ற பெயர் வைத்தேன். என் இரண்டாவது மகனுக்குப் பூங்குன்றன் என்று பெயரிட்டேன். அவர்களின் நூல்கள் தொடர்ந்து பதிப்பாகி வர ஆவன செய்கின்றேன் பண்டிதமணி அவர்கள் பல்கலைக்கழகத்தி

Koviloor Digital Library

லிருந்து ஒய்வு பெற்று தம்மூரான மகிபாலன்பட்டியில் இருந்தபோது காரைக்குடி அழகப்பா கல்லூரியிற் பணியாற்றி வந்த நான் வாரந்தோறும் சென்று உடனிருந்து அவர்கள் இட்ட பணியைச் செய்துவந்தேன்.

பண்டிதமணி இலக்கியச்சுவையில் நயங்காணும் புதிய உத்திகளைக் கண்டவர்கள். உ. வே. சா. அவர்களைப் பதிப்புத் தந்தை எனவும், மறைமலையடிகளாரை உரைநடைத் தந்தை எனவும் கூறுமாப்போலப் பண்டிதமணியாரை தமிழ் நயத் தந்தை என்று நாடு பாராட்டியது. பாட்டு முழுமையும் ஒப்பிப்பது இவர்தம் சொல்முறையன்று. முழுப்பாடலை மனத்தில் வைத்துக்கொண்டு இலக்கிய நாடித் துடிப்புடைய இடங்களை மட்டும் நோக்குமுறையில் சுவைபடக் காட்டுவர். இவர்தம் உரையிலும், எழுத்திலும் வடமொழியோடு ஒப்பீடு நிரம்ப வரும். வடமொழிப் புலமைக்கு மகாமகோபாத்தியாய என்ற அரசுப்பட்டம் பெற்றிருந்தாலும், தமிழைத் தமிழாகவே எழுதும் இயல்பு இவர்கள்பால் என்றும் இருந்தது. உரை நடைக் கோவைகள், திருவாசகக் கதிர்மணி விளக்கம், மண்ணியல் சிறுதேர், சுக்கிரநீதி, சாணக்கியரின் பொருள் நூல் என்ற நூல்களால் நிலையான தமிழ் வளத்தைப் பெருக்கியவர் பண்டிதமணியார்.

பண்டிதமணி வரலாறு சிலரால் எழுதப்பட்டிருப்பினும் அவையெல்லாம் நிரம்பியனவல்ல. அவர்கள் வரலாற்றை அவர் வாயிலாகக் கேட்டே எழுதுவதென்றே சிலநாள் கூட இருந்தேன். பிணி நோய்த்தாக்கலால் சில குறிப்புக்களையே சொல்லினர். ஆங்கிலப் பெரும்புலவர் சான்சனுக்குப் பாசுவல் எழுதிய வரலாறு போலப் பண்டிதமணியார்க்கும் எழுத வேண்டும் என்பது என் விருப்பம். இவ்வெழுத்துருவமே என் நன்றியின் உருவகமாக இலங்கும்.

227

Koviloor Digital Library